இளங்குமரனார்

# தமிழ்வளம்

## 28

1. ஈரோடு வேலா (வரலாறு)

2. குணநலத் தோன்றல் குப்பு முத்து ஐயா

*ஆசிரியர் :*

*முது முனைவர்* **இரா.இளங்குமரன்**

**வளவன் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **இளங்குமரனார் - தமிழ்வளம் 28** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| பதிப்பு | : 2010 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 16 + 264 = 280 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **260/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : செவன்த்சென்ஸ் கம்யூனிகேசன்ஸ் |
| அட்டை ஓவியம் | : ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

# பதிப்புரை

இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர் **அய்யா இளங்குமரனார்** அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.

இப்பெருந்தமிழ் அறிஞர் எழுதிய படைப்புகளை 20 தொகுதிகளாக (1 முதல் 20 வரை) அவரின் 81-ஆம் ஆண்டு நிறைவையொட்டி கடந்த 2009 ஆம் ஆண்டில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தோம். பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர் தம் அறிவு விளைச்சலை **21 முதல் 40 வரை** 20 தொகுதிகளை 83-ஆம் ஆண்டு (2012) நிறைவையொட்டி தமிழுலகம் பயன்கொண்டு செழிக்கும் வகையில் வெளியிடுகிறோம். அவர் தம் அருந்தமிழ்ப் பணியை வணங்கி மகிழ்கிறோம்.

இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.

இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர். தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ

*அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.*

*தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப்பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற் குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு. வி. க. வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழிநூல் கதிரவன் பாவாணரையும், தமிழ் மொழிக்காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ்நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்ச் சான்றோராக விளங்கும்* **ஐயா இளங்குமரனார்** *வாழும் காலத்திலேயே அவர் எழுதிய நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத்தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.*

> **“ சலுகை போனால் போகட்டும் - என்**
> **அலுவல் போனால் போகட்டும்**
> **தலைமுறை ஒருகோடி கண்ட - என்**
> **தமிழ் விடுதலை ஆகட்டும்.”**

*பாவேந்தர் வரிகளை நினைவில் கொள்வோம்.*

***- பதிப்பாளர்.***

# பெறும் பேறு

**வளம்** எங்கே இருக்கிறது?

வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!

வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?

வளத்தைத் தேடும் **உளம்** இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?

வளத்தின் அளவு என்ன?

**வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!**

உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!

வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?

கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?

கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம். **(உரி.7)** உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்; "**வளம் பட** வாழ" வேண்டாதார் எவர்? **வளம் பெற** வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு, "**அளந்து கடை அறியாவளம்**" என்பது **(25:33-34)***

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்! **எளிமை, இனிமை, இறைமை, நிறைமை** என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

***வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.** ஆனால்,*

*வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!*

*பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன!* ***பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தர்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!***

*புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,*

> **"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
> **ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

*என்னும்* ***நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!***

*என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.*

*பிறந்தநாள் :* ***30.01.1930***

*ஆசிரியப் பணி ஏற்ற நாள்:* ***08.04.1946***

*கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால்* ***1949, 1950, 1951*** *ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர் இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ* ***43***

ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!

புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன். பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச் செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ,சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ,சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

"அன்பும் அறிவும்" என்னும் நூல் தொடங்கிச் 'செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம்' எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப்பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்** (ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது.

அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம் அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பதே, **"இளங்குமரனார் தமிழ்வளம்"** என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பலபல; தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். "நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா" என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

*இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!*

*"நெல்லுக்கு உமியுண்டு"*

*"நீருக்கு நுரையுண்டு"*

*"புல்லிதழ் பூவுக்கும் உண்டு"*

*"குறைகளைந்து நிறை பெய்து"*

*"கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை"*

*இன்ப அன்புடன்,*

**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்


பதிப்புரை ........ iii

பெறும் பேறு ........ vi


## நூல்

## ஈரோடு வேலா (வரலாறு)


நூலாசிரியன் நுவல்பு ........ 1

வரலாற்றாளர் வரைவு ........ 4

கனவு நனவாக! ........ 10

1. அன்புப் பண்பு ........ 29

2. திருக்குறள் பேரவை ........ 97

3. தமிழ்வழிக் கல்வி இயக்கம் ........ 167

அ. இனநலம் ........ 179

இ. உரை வீச்சு ........ 188

நாம் பெறும் தெளிவுகள் ........ 202

உரைவீச்சில் சாயும் உடலங்களை மீளச் செய்வது ........ 204

யாருக்கு வாக்கு? ........ 205

மதிப்பியலில் குறைவானவர்களே ........ 206

**இணைப்பு –1**

வாழ்வுக் குறிப்புகள் – சில ........ 207

**இணைப்பு –2**

வேலாவின் பொதுப் பணிகள் – சில ........ 208

**இணைப்பு –3**

வேலா அவர்கள் செய்த குறளாயப் பணிகள் ........ 209

**இணைப்பு –4**

வேலா வரைந்த குறளாயக் குறிக்கோள் உரைகள் ................ 212

**இணைப்பு –5**

அறிஞர்கள் அன்பர்கள் பெருமக்கள் வேலாவைக் குறித்துரைத்த நன்மொழிகள் ................ 214

## குணநலத் தோன்றல் குப்பு முத்து ஐயா

முன்னுரை ................ 219

1. குணநலத் தோன்றல் குப்பு முத்துஐயா ................ 225
2. உலகை உயர்த்தும் உயர்வர லாறே! ................ 260

குறிப்பு ................ 264

# நூலாசிரியன் நுவல்பு

*வள்ளுவர், வாழ்வியல் வகுத்துத் தந்த வாழ்வியல் அறவோர். அவர்தம் நூல், வாழ்வார்க்கு 'வாழ்வியல் இன்ன' தெனத் தெளிவாய் வகுத்துத் தந்த நூல். அதன் வழியே வாழ்வும் அரசியலும் பொருளியலும் இயலல் வேண்டும் என்பதை வலியுறுத்தவும் ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் ஒருவர் வேண்டி இருந்தது. அவர் தாம் ஈரோடு வேலா!*

*'திருக்குறள் நம்மறை - நெறி' என்றவர் - என்பவர் - வேலா! அக்கொள்கையை நடைமுறைப் படுத்திக் காட்டுவதற்கே, தம் பிறவிப்பேறு வாய்த்ததாக உணர்ந்து பூரிப்பவர் வேலா! அதன் பரப்ப முரசு குறளியம்; நடைமுறைப் படுத்தும் இயக்கம் குறளாயம்!*

*குறளையும் வேலாவையும் பகுத்துக் காண இயலுமா? குறளையும் குறளியத்தையும் குறளாயத்தையும் பகுத்துக் காண முடியாமை போல வேலாவையும் பகுத்துக் காண இயலாது. நடமாடும் வள்ளுவமாகத் தம்மை ஆக்கிக் கொள்ள ஒருப்பட்டுள்ள ஒருவரை எப்படிப் பகுத்துக் காண இயலும்!*

*வேலா தொடர்பு குறளிய இதழால் முதற்கண் எனக்கு உண்டாயது; குறளாயத்தால் பின்னர் அது செறிந்தது; இரண்டற்ற ஒருமையுள்ளத்தால் மேலும் ஒன்றியது. அவர் தம் உணர்வுக்கும் உரைக்கும் வேறுபாடு இல்லை என்பது உடனாக்கியது! அவர்த தம் வரலாறு - தனி மாந்தர் வரலாறு அன்று! திருக்குறளை வாழ்வியலாக்க விழைவார் - எதிர் காலத்து எழுவார் - அனைவர்க்கும் எடுத்துக் காட்டாம் இயக்க வரலாறு. அவ்வரலாறு எளியது; இயல்பினது; ''ஓ ஓ! 'ஆ ஆ'! என்னும் கோலங்களோ - வாண வேடிக்கைக் காட்சிகளோ அற்றது; இயல்பான குடியில் பிறந்து, இயல்பாக வளர்ந்து, இயல்பான குடியில் பிறந்து, இயல்பாக வளர்ந்து, இயல்பான முயற்சியால் தம்மை வரலாற்றில் பதித்துக் கொள்ளத் தக்க தொண்டின் ஊற்றம் கொண்ட ஒருவரைப் பற்றியது!*

*“சலவைச் சட்டை போடும் வாய்ப்பில் எம் குடியில் முதலாமவராக விளங்கியவர் எம் தந்தையார் வேலாயுதனாரே. தொடக்கப்பள்ளிக் கல்வியில் கருத்துக் கொண்டதும் பாட்டனார் காலத்தேதான்” எனக் கூறும் வேலாவின் திறந்த உள்ளம் - எளிய இனிய உள்ளம் - எவ்வெவர் முயற்சி முன்னேற்றங்களுக்கும் தூண்டுதலாகத் திகழும் என்னும் துணிவும், திருக்குறள் தொண்டரை இனங்காண உதவும் என்னும் வேட்கையும் இவ்வரலாற்றை எழுதத் தூண்டினவாம்!*

*முற்படவே குறிப்புகளைத் தொகுத்துச் சுருக்க நூலாக்கும் முயற்சியில் ஈடுபட்ட பெருமக்கள் இருவர். ஒருவர், என் இளந்தைக் கால உடன்பயில்வாள உழுவலன்பர் பாவலர் பொதிகைச் செல்வனார்; மற்றொருவர் குறளாயப் பொதுச் செயலாளர் பெரும் புலவர் மு. தங்கவேலனார்!*

*ஈரோட்டில் இருந்து சென்னை வரை வேலா அவர்களின் உடன் வந்த இரண்டு செலவுகளில், கேட்டும் உரையாடியும் பெற்றுக் கொண்ட கருத்துகளும் குறளியத்தின் 120 (1990 சூலை வரை) இதழ்களும், யானே பல்காலும் நேர்காணலால் அறிந்து கொண்ட செய்திகளும் ஆகிய முப்பால் வைப்புகளே இவ் வரலாற்றின் மூலப் பொருள்களாம். வேலாவால் குறள் வளமுறுகிறது; வாழ்வியலாகிறது; குறள்வழி அரசு காணத் தூண்டப் படுகிறது!*

*குறளால், வேலா வாழ்கிறார்; வளர்கிறார்; வளமும் வளமார் உளமும் பெறுகிறார்; திருக்குறள் மறைவழிக் குடும்பமாகக் கொண்ட தம் குடும்பச் சார்பு உடையாரும், இயக்கச் சார்புடையாரும் திருக்குறளை நம்மறை எனப் போற்றுகின்றனர்; பொருந்தி வாழ்கின்றனர். இவ்வியக்கம் அமைந்த இயக்கம்; பரபரப்பற்ற இயக்கம்; ஆனால் படிப்படியாய்ப் பற்றிப் படர்ந்து பாராளவல்ல இயக்கம். இவ்வியக்கத்தின் வித்து வேலா!*

*தொண்டர் வரலாற்றுக்குத் ‘தொகை’ ‘வகை’ ‘விரி’ உண்டு! இத்தொண்டர் வரலாற்றுக்கும் ‘தொகை’யுண்டு: வகை இது; விரி வரும். தொகை தந்தவர் எவர்? ஒரு மாணிக்கர்! ஒரு மாணிக்கத்தை மற்றொரு மாணிக்கம் மதிப்பிட்ட மாணிக்க மதிப்பீடே அது!*

*அம்மாணிக்கம் தமிழ்க் காதல் -வள்ளுவ -வ.சுப. மாணிக்கம். என்மறை திருக்குறள்’ என்ற எழுச்சி மாணிக்கம்.*

*மாணிக்கத் தொகை இரண்டே இரண்டு வெண்பாக்கள். அவை ஈரியல்கள் ஆகின்றன. அன்புப் பண்பு, அறப் பயன் என்பன அவை.*

"செந்தமிழே, நம்தாய்; திருக்குறளே, நம்மறை;
நந்தா ஒழுக்கமே, நம்படை; - உந்து முனை
வேலாவே, நம் தலைவன்; வெள்ளைக் குறளியமே,
தோலாத நம்முரசுத் தூண்."

"வேலா அரசன்; வெறிதமிழ் அந்தணன்; முப்
பாலார் குறளின் பரப்பாளி; - மேலார்
குறளாயங் கண்டான்; குறளியமும் கண்டான்;
திறலாக வாழ்க திளைத்து."

*இத்தொகை, வகையாதல் இந்நூலைக் கற்பார்க்கு வெளிப்படை விளக்கமாம். குறளியம் சிறக்க! குறளாயம் வெல்க! வேலா வாழ்க!*

*பாவாணர் ஆய்வு நூலகம்* *தமிழ்த் தொண்டன்*
*திருநகர், மதுரை - 6* **இரா. இளங்குமரன்**
*625 00618-4-90.*

# வரலாற்றாளர் வரைவு

*யான் எளியன்; அது மட்டுமன்று; கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், பொருள் ஆகியவற்றில் முறையாக - முழுமையாக - திட்டமிடப்பட்டுக் குற்றுயிராக்கப்பட்டுப் பட்டுப் போன சில பல தலைமுறைகளின் அடிவாழை! தந்தை பெரியாரால் புத்துணர்வு பெற்ற தமிழ்நாட்டினருள் - அவர் தம் கருத்துகளைச் சிக்கெனப் போற்றிக் கொண்டவருள் - நாடளாவியிருந்த எங்கள் சுற்றத்தார் முதன்மை உற்றனர்.*

*எங்கள் குடும்பங்களில் வழிவழியாக விளங்கி வந்த வேத மறுப்புக் கொள்கை, கடவுளர் பலர் என்பதன் மறுப்புக் கொள்கை, உழைப்பு, அன்பு, அருள், அறம் என்பனவே வாழ்க்கையின் குறிக் கோள்கள் என்னும் வாழ்வியல் கொள்கை, சிவம் என்னும் பேரா இயற்கையே கடவுள் நிலை என்னும் இறைமைக் கொள்கை ஆகியவற்றைக் கொண்ட வீர சைவத்தை மீளவும் ஆழ்ந்து நோக்கவும் தன்மானத்தை மீளவும் பெறவும் தந்தை பெரியாரின் சிந்தனைகள் எங்களுக்கு உந்துகோலாய் அமைந்து உயர் வழிகாட்டி ஆயின. இவற்றின் விளைவே, 'திருக்குறள் நம்மறை' என்னும் முடிபும் முழக்கமும் ஆயின.*

*மறை என்பது பழஞ்சொல். பாதுகாப்பு என்னும் பொருளது. நமக்குப் பாதுகாப்பாம் நூல் தமிழில் இல்லையா? மறை நூல் நமக்கு இல்லையா? திருக்குறள் நம் மறையாகாதா? பொதுமறை, தமிழ்மறை எனப்படும் அது நம் மறையாகாதா? என்னும் வினாக்கள் அடுக்கடுக்காய் எம் நெஞ்சில் பல்கால் எழுந்தன. திருக்குறள் நமக்கு எத்தகு பாதுகாப்பு அருளும் நூல்! ஏன் நமக்கு மட்டுமா? மன்பதை முழுமைக்குமே பாதுகாப்பு அருளும் நூல் அல்லவோ! என்னும் நயனார்ந்த உண்மை எம் நெஞ்சை வருட வருடப் பிறந்ததனவே - குறளியமும்; குறளாயமும்; திருக்குறள் நம் மறை என்னும் குறிக்கோளுமாம்!*

*'திருக்குறள் நம் மறை' என்பதைப் பலாரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை! பொறுத்துக் கொள்ள முடியவில்லை! அவர்களால் மாறுபார்வை பார்க்கப்பட்டேன்; புறந்தள்ளவும்*

பட்டேன்; "பொதுமறை எனக் கொண்டால் பலரும் ஏற்பர்; நம் மறை என்பதால் இற்றைச் சூழலில் பெயரும் புகழும் பொருளும் பிறவும் எய்துதல் இயலா" என்று நன்றுரைப்பார் போல் உரைத்து நழுவிக் கொண்டனர்.

காலத்தை ஒட்டிப் பிழைப்பவர்களே மிகப் பலர். காலத்தை வென்று வழிகாட்டுவார் மிக அரியர். அவர்கள் நாளையுலகில் ஈகியராய் எண்ணப்பெறினும் நடைமுறையில் நலிக்கப்படுவர்; இது வரலாற்றுச் சான்று. இந்நிலை, எளிய எமக்கும் எம்மைச் சார்ந்தவர்களுக்கும் உள்ளமை அறிகின்றோம். எனினும், சிலச் சிலர் சிந்தனைக்கு இடமாகி வரும் பேறு வாய்க்கும் போதெல்லாம் அஃது உயிர்க்கு ஊதியமாகவே தோன்றுகிறது.

வாழ்வாங்கு வாழும் வணக்கத்திற்கரிய தெய்வம் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், அமரர் மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் ஆகிய பெரு மக்கள், எம்மையும் திருக்குறள் நம்மறை என்றும் கொள்கை யினரையும் வரவேற்று, நம் பாதையே செம்பாதை, செந்தமிழ்ப் பாதை எனக் கூறி வழிகோலியமை எமக்கு உண்டாகிய எதிர்ப்புகளை எதிரிட்டுச் செல்லும் துணிவையும் உறுதியையும் வழங்கின.

சங்ககாலச் செந்தமிழ்ச் சான்றோர் இன்றும் உளர் என்ப தற்குச் சான்றாக நாளும் வாழ்ந்து, எம் சிந்தனை கட்கெல்லாம் விருந்தாகும் இலக்கியச் செம்மல் மதுரை இளங்குமரனார்; 'இனி எம் வாழ்நாளெல்லாம் குறளிய குறளாயத் தொண்டுக்கே' எனப் பெருந்துணையாகிய பெரும்புலவர் பட்டுக்கோட்டை மீ. தங்கவேலனார்; செம் பொருள் நுகர்வே இறைவழி பாட்டிற் குரிய இனியவழி என்பதன் சான்றாகிய - புலவர்குழு உறுப்பினர் - தனித்தமிழ் அரிமா - சித்தோட்டுப் பாவலர் ஈவப்பனார்; 'இயற்கையே இறை; திருக்குறளே நம் மறை' என வாழ்ந்து திருக்குறள் வழியிலேயே திருமணம் முதலிய சடங்குகளையும் பணிகளையும் நடத்தி வரும் புரட்சிக்கனல் திருவள்ளுவர் குருகுலம் கு. இரகுபதி; 'திருக்குறள் குமுகாய மலர்ச்சியே எம் குறிக்கோள்' என ஓயாமல் ஒழியாமல் கடனாற்றி வரும் படைமேல்நர், திருவண்ணாமலை த. சாமிநாதன் ஆகியோரும், தொண்டுள்ளத்துடன் ஊற்றமாகக் குறளாயப் பணியில் தம்மை ஆட்படுத்திக் கொண்டு நெஞ்சார்ந்த கடனாற்றி வரும் நேயத்தினர் பலப்பலரும் செய்து வரும் திருக்குறள் பணிகள் இந்நூற்றாண்டுப் புகழ் வரலாற்றின் ஒளிமிக்க வரிகளாம்.

என் பேச்சிற்கும் மூச்சிற்கும் உற்ற வாழ்க்கைத் துணை நலமாக யான் பெற்ற சந்திரா அம்மையார், கொடிப் பெயர் மக்கள் மூவர், இனிய மருகர் சக்திவேலர், வளர்மகன் செந்தில் ஆகியோர் எம் பணிவளர்ச்சிக்கு ஊற்றங்கால்ளாக அமைந்தவை எம்பேரா கூழாகும்.

மொழியால், மதத்தால், சாதியால், கட்சியால், உடையால், பழக்கவழக்கங்களால், பண்பாட்டால் சிதைவுற்று மாறித் தன்னை மறந்து போனது தமிழினம். அது தன் மேம்பட்ட நிலைகளைக் கண்டுணரவும் முடியாத தாழ்நிலைக்கு ஆட்பட் டுள்ளது. திருக்குறள் வழிக் குமுகாயமும். திருக்குறள் வழி அரசும் என்று அமைகின்றனவோ அன்று தான் தமிழ் கோலோச்சும்; தமிழ்நெறி கோலோச்சும்; நம் மறை உலகு ஆளும்! இவையே நம் முடிபுகள்!

இத்தகு நெடுவழிப் பேருலாவைத் தொடங்கியுள்ள எளிய எமக்கு ஒரு வரலாறு அரும்புவதை எளிய எம் உளம் ஒப்ப வில்லை; அஞ்சியது. எனினும் அன்பும், செந்தமிழ் அறிவும், வழிகோலிய தெய்வமும் எம் உறுதியைத் தளர்த்தின. எம் தந்தையார் அ. வேலாயுதனார் மறைந்த பின் அவர் பெட்டிகளைச் சரி பார்த்தபோழ்து அழகிய கட்டமைப்புக் கொண்ட அருமைக் குறிப்பேடு ஒன்று காணப்பட்டது. அதில் ‘வேலா குடும்ப வரலாறு’ எனத் தலைப்பிட்டுச் சில பக்கங்களும் அரிய குறிப்பு களும் பொறித்திருந்தார். தம் குடும்பங்களைப் பற்றிய முன் பின் செய்திகளைச் சேர்க்க அவாவியிருந்தார். அவர் கனவு நனவாவதென என்னையும் அறியா இறும்பூது எய்திற்று.

ஆம்! ... தமிழ்ச் சான்றோர் இளங்குமரனார் சிந்தனையில் பட்டவை பலப்பல, நமக்கும் வழிவழி மக்களுக்கும் வயிரமணி களாகி வருகின்றன. இருநூறுக்கும் மேற்பட்ட நூல்கள் யாத்தவர்; குண்டலகேசி படைத்தவர்; இலக்கண வித்தகர்; சொல்லாய் வறிஞர்; பெரும் பாவலர்; உரைவல்லார். அவர் எம் வரலாற்றையும் வரைந்தார். நான் வியந்தேன். எம்மையும் தம் எழுத்தால் வரலாற் றாளனாகச் செய்துள்ள செந்தமிழ்த் திறங்கண்டு, தமிழன்னை காலம் காலமாகப் பெற்று வரும் நன்மகப் பேற்றின் அருமை உணர்ந்தேன்; உவந்தேன்.

என் வரலாறு மட்டுமா இது! எங்கள் குடும்ப வரலாற்றின் ஒரு துளி! திருக்குறள் இயக்க வரலாற்றின் ஒரு துளி! நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய நெறிகளின் முகைளின் சிலச்சில

*துளிகள்! எளிமையில் பிறந்து எளிமையில் வளர்ந்து எளிய தொண்டனாக வாழ்பவனும் வரலாற்று உலகுக்கு வேண்டும் ஒரு சிறு வளத்தை வழங்க முடியும் என்பதற்கொரு சான்று!*

*'திருக்குறள் நம்மறை' என்னும் கொள்கையில் ஊன்று நின்று வாழ்வியல் மேற்கொள்ளும் பேறு வாய்த்தது எம் பிறப்பின் பெரும்பேறு!*

*தமிழ்வழிக் கல்விக் கொள்கையில் யாம் ஈடுபட்டுப் பாடுபட நேர்ந்துள்ளமை மற்றொரு பெரும்பேறு! இவற்றினும் உயர் பேறு உண்டோ? இப்பேற்றைக் கொண்டபேறைக் கொண்ட பேற்றைக் காட்டவே இவ்வரலாறு எபந்ததோ? அன்றி எழுதத் தூண்டியதோ! நான் படித்துச் சுவை கண்ட செய்திகளை நீங்களும் படித்துச சுவைக்க வேண்டும் என்பதற்கே இந்நூல் வெளியீடு! 'எனைத்தாக' இருப்பினும், 'அனைத்தாக' நலந்தானே!*

*இந்நூலை இவ்வழகிய வடிவில் அச்சிட்டுத் தந்த அருமையர் மூவேந்தர் முத்து ஆவர். அவர்க்கு நன்றி உடையேம்.*

*ஈரோடு*
*7-7-90*

**வேலா அரசமாணிக்கம்**

# குடும்ப வழி

## அர்த்தநாரியார் - பாப்பாயம்மாள்

- செல்லம்மாள்
- சின்னம்மாள்
- பொன்னுசாமி
- ஆறுமுகம்
- கெங்கையன்
- வேலாயுதம் (வெங்கட்டம்மாள்
  - சிவலிங்கம் (கமலம்)
  - வேலா அரசமாணிக்கம் (சந்திரா)
  - சரஸ்வதி (சித்தையன்)
- செல்லையன்

## வேலா அரசமாணிக்கம் - சந்திரா

- வேல் பூங்கொடி (சக்தி வேலர்)
  - வேல் அரசு
- வேல் மலர்கொடி
- வேல் சுடர்க்கொடி

# திருக்குறள் நம் மறை

*திருக்குறளுக்குத் தனி நிறமுண்டு; குணமுண்டு; மணமுண்டு.*

*திருக்குறளே நம் மறை என ஏற்று, நம்பி, நம்மிடம் தொற்றியுள் பிற வழிகளை அறுத்துத் திருக்குறளே வாழ்வியல் என்ற உட்பாடு, வெளிப்பாடுகளே சொல்லும் செயலும் ஒன்றென உணர்த்த வல்லவை ஆகும்.*

*அதை விடுத்துத் தாம் கொண்ட பிற வரிகட்குத் திருக் குறளைத் துணையாகக் கொள்வோரை என்னென்பது?*

*உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் பிறமொழிக் கலப்பில் தான் வளரும் எனக் கூறும் அறிவிலிகள் கூற்றுப் போன்றதுதான் திருக்குறளை உயர்தனிச் செந்நெறி முழு முதல் நூல் என்று அறியாது கூறுவார் நிலையும்.*

*திருக்குறள் - குறளாயம் எதன் சார்பிலும் பிறப்பதன்று. உயர் தனிச் செந்நெறியுடையது. அதனால்தான் பொதுமறை, உலகமறை, வான்மறை, தெய்வமறை, ஐந்தாம்மறை, தமிழ்மறை என்ற பொய்யுரைகளை மறுத்துக் குறளாயம் - "திருக்குறள் நம் மறை" என அறிவிக்கிறது. நாம் அறிவோம் நாளை நமதே என்று.*

*- வேலா*

# கனவு நனவாக!

வேலாவும் அவர் தம் நண்பர் நால்வரும் அமெரிக்க நாட்டிற்குத் தனி வான்ஊர்தியில் பயணமாகிறார்கள். அகத்திலும், முகத்திலும் ஏதோ ஒரு விறுவிறுப்பும், பரபரப்பும் கொண்டு ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொள்கிறார்கள். ஏனெனில் அவர்களின் உறுதி தளர்ந்தோ, குலைந்தோ போய்விடக் கூடாது என்பதால்.

எப்புதுமையையும் விரைந்து வரவேற்பதும், வரவேற்பதைத் துணிந்து மேற்கோளாக்கிக் கொள்வதும், மெய்யெனப்பட்டதை எங்கும் எந்நிலையிலும் பரப்புவதுமாகிய உரிமைச் சிந்தனை மிகுந்தது அமெரிக்க மண். அம்மண்ணிற்குச் சென்று, "திருக்குறள் ஒன்றே ஈடு இணையற்ற தன்மான வாழ்வியல் நூல் என்றும், இதற்கு இணையான தோர் நூல் இதுவரை உலகில் தோன்ற வில்லை என்றும் முழக்கமிட வேண்டும். இதுவே எங்கள் நோக்கம்."

அமெரிக்காவின் நியூயார்க் நகரம். ஆங்காங்கு மக்கள் கூடிக்கூடி நாளிதழ்களில் வந்த சிகப்புக் கட்டமிட்ட செய்தி களைப் படித்துக் கொண்டுள்ளார்கள்.

அமெரிக்க மக்களே! சிந்தியுங்கள்!!

* நீங்கள் இதுகாறும் நம்பி வாழ்ந்த மதங்களும், அம்மத நூல்களும் உங்களை மனிதனாக வாழ வைத்ததா? இல்லை.

* நீங்கள் நம்பித் தொழுத கடவுள்கள், தெய்வங்கள் உங்களை அச்சப்படுத்தி, மதவெறியர்களின் அடிமைகளாகத் தானே வைத்துள்ளது, மறுக்க முடியுமா?

* அறிவுக்கும், மதத்திற்கும் தொடர்பில்லை என்பது தானே இன்றைய நிலை.

மாந்தன் மாந்தனாக வாழும் வழி, அறம் என்பது என்ன? பொருள் என்பது என்ன? இன்பம் என்பது என்ன? இறைமையின் உண்மை நிலை ஆகிய இவைகளை எல்லாம் தெரிந்து கொள்ள

*ஆவலுடையவர்கள் எங்களைச் சந்தித்து நாங்கள் கொணர்ந்த பெட்டகத்திலுள்ள அறிவுச்செல்வத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.*

*இவ்வாறு செய்தி வந்த நாளே ஆயிரக்கணக்கான மக்கள் எங்களைச் சூழ்ந்தனர். தொலைக்காட்சி, வானொலி, இதழ்கள் அனைத்திலும் இதே செய்திகள். திருக்குறள் தந்த அறிவுச் செய்திகளால் அறியாமை நீங்கித் தெளிவுற்றனர். "திருக்குறள் நம் மறை" என முழங்கிப் பின்பற்றி மகிழ்ந்தனர். உலகெலாம் இச்செய்தி பரவுகிறது.*

*திருக்குறள் குமுகாயம் தோன்றுகிறது; திருக்குறள் பேராட்சி மலர்கிறது. உலக மக்கள் ஒன்றாகின்றனர். மாந்தன் மாந்தனாகிறான். தமிழ்மண் உலக மக்கட் கெல்லாம் புனித மண் ஆகிறது. தமிழ் மொழியும், தமிழ் இனமும் உலக மக்களால் போற்றப்படுகிறது.*

*நாங்கள் வெற்றிச் சிரிப்பு சிரிக்கிறோம் ..... இல்லை இல்லை..... நான் மட்டும் சிரிப்பதாகப் படுகிறது. எதிர் நின்று என் ஆருயிர் வாழ்க்கைத் துணைநலம் சிரிக்கிறது; கனவு கலைகிறது.*

**- வேலா**



**வேலாவின் பாட்டியார் இலிங்கம்மாள் என்னும் பாப்பாயம்மாள்**



வேலாவின் தந்தையார் அ.வேலாயுதனார்



வேலாவின் தந்தையார், தாயார் வெங்கட்டம்மாள்
தங்கை சரசுவதி, தங்கையின் மூத்த மகள்
சித்தேசுவரி (சுகுணா)



தளத்தில் : அசோக்குமார், கீதா, வேல்மலர்க்கொடி, வேல்பூங்கொடி, செல்வராணி.
இருக்கையில் : ஆ.சித்தையன், சரசுவதி, வெங்கட்டம்மாள், சிவலிங்கம், வேலா.
நிற்றல் : சம்புலிங்கம், செந்தில்குமார், சித்தேசுவரி, தனக்கோடி, கமலம், சந்திரா.





**வேலா - பதினாறாம் அகவையில்**

**வேலா - நாற்பதாம் அகவையில்**



வேலாவின் திருமண நிகழ்ச்சி

அளியர் பி.எம்.இராசு, வேலா, சந்திரா, அக்கையார் இரத்தினம்



வேலா குடும்பம்

அமர்ந்திருப்பவர் : மகள் ச.வேல்பூங்கொடி, வேலா, சந்திரா அம்மையார், மருகர் சக்தி வேலர், பெயரன் வேலரசு. ************



அமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம்
அவர்களுடன்
கல்லூரி மாணவர் தலைவர் வேலா



முத்தமிழ்க் காவலர்
அவர்களுடன் வேலா



திருக்குறளார் அவர்களுடன் வேலா





தமிழக முதல்வர் பொன்மனச் செம்மலுடன் வேலா



தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர்
கலைஞர் அவர்களுடன் வேலா



பேராசிரியர். திரு.க.அன்பழகனாருடன் வேலா



குறளியம் அறிவாண்மைத் திங்களிதழ் வெளியீடு
தவத்திரு. குன்றக்குடி அடிகளார், வேலா, திரு.கு.ச.ஆனந்தனார்,
அமைச்சர் திரு.கா.காளிமுத்து




சென்னையில் குறளாய விழா

பாவலர் ஈவப்பனார், பெருங்கவிக்கோ, வா.மு.சே.வேலா, திருக்குறளார்,
பாவலர் சுரதா, முனைவர் அமிர்தலிங்கம், பெரும்புலவர் மீ.தங்கவேலனார்






**ஈரோடு கருங்கல் பாளையத்தில் வேலாவுக்குக் 'குறள் நெறிக் காவலர்' என்னும் விருது வழங்கு விழா.**

**மேலே : ஈரோடு பெரியண்ணர், முத்தமிழ்க் காவலர், மாவட்ட ஆட்சியாளர் திரு. குப்புராசு இ.ஆ.ப.,**

**கீழே : வேலா மாவட்ட ஆட்சியாளர், பெரியவர் குப்புமுத்து ஐயா, வீ.செ.கந்தசாமி, பொதிகைச் செல்வனார்.**



| | | |
|---|---|---|
| செயலாளர் | : | பட்டுக்கோட்டை மீ.தங்கவேலனார் |
| தலைமை அமைப்பாளர் | : | ஈரோடு வேலா |
| இணை அமைப்பாளர் | : | மதுரை இளங்குமரனார் |

# 1. அன்புப் பண்பு

**வேலா :**

"வணக்கம்; வேலா பேசுகிறேன்."

"வணக்கம்."

"மறைமலை நகர்த் தொடர் வண்டி நிலையப் பெயர் மாற்றம் குறித்த தங்கள் அறிக்கை உரை ஆகியவற்றைப் படித்தேன். ஒரு தமிழ்ச் சான்றோர் பெயரை மாற்ற வேண்டும் என்று தாங்கள் கொண்டுள்ள நடவடிக்கையை விடுதல் நன்று. தமிழ், தமிழ் நாட்டினர் அனைவர்க்கும் பொதுச் சொத்து; தமிழ் அறிஞர்களும் அப்படிப் பொதுச் சொத்தானவரே; புகழ் வாய்ந்த தமிழ்ப் பெருமகனார் பெயரை மாற்ற வேண்டும் என்று பழியைத் தேடிக் கொள்ள வேண்டாம். பேராயக் கட்சி தமிழுக்கு எவ்வளவோ தொண்டு செய்த துண்டு. அவற்றை யெல்லாம் மறந்து பழிக்கு ஆளாக்கிவிட வேண்டாம்."

"பெருந்தலைவர் பெயரை மாற்றக் கூடாது என்கிறோம். மறைமலையடிகளை நாங்களும் மதிக்கிறோம். அவர் பெயர் நிலையத்திற்கு வைக்கப்படவில்லை. நகர்ப் பெயரை நாங்கள் மாற்றச் சொல்லவில்லையே."

"நகர்ப்பெயர்த் தொடர்பால்தானே நிலையப் பெயர் அமையும். அதுதானே வழக்கம். ஒருநாள் நடைபெற்ற மேடைப் பெயர் நிலைத்த பெயர் ஆகுமா? பெருந்தலைவர் பெயரால் மாவட்டம் உண்டு; பல்கலைக்கழகம் உண்டு; நகரங்கள் சாலைகள் நினைவகசங்கள் உண்டு! ஆனால், மறைமலையடிகள் பெயரால் அமைந்த நகரத்தோடுவிளங்கும் நிலையத்தை மாற்றி அமைக்கப் போராடத் துணிவதும், அந்நிலையத்தில் உள்ள தமிழ் எழுத்தைத் தார் கொண்டு அழித்ததும் மாறாப்பழியும் களங்கமும் ஆகும். பெருந்தலைவர் மேல் நாங்கள் கொண்டுள்ள மதிப்பைக் குறைப்பது போல் எளிய பொருளாக்கிவிட வேண்டாம்."

*"அரசியலில் பெருந்தலைவர்; தமிழக முதல்வராக இருந்தவர்; அனைத்திந்தியத் தலைவராகத் திகழ்ந்தவர்; அவர்பெயரை மாற்றி விட்டதே தவறு; அரசியல் சூழ்ச்சிக்குத் தமிழாசிரியர்களும் தமிழ்ப் பற்றாளர்களும் இரையாகி இப்படிக் கூறுகிறீர்கள். நாங்கள் எங்கள் போராட்டத்தை விடப்போவ தில்லை. அதுநேர்மையான உறுதி யான போராட்டம்."*

*"தோற்கப் போகிறீர்கள்; பழிக்கு ஆளாகப் போகிறீர்கள்; அரசியலில் எவ்வளவு பெரிய தலைவராகவும் இருக்கலாம். ஆனால், அவர் ஒரு தமிழ்ச் சான்றோர்க்கு இணையாகார்; காமராசர் எனினும் சரி; அறிஞர் அண்ணா எனினும் சரி; அவர்கள் மறைமலையடிகள் போலும் தமிழ்ச் சான்றோர் களோடு இணைத்துச் சொல்லத் தக்கவர் அல்லர். அவர்கள் பெயரை நிலையத்திற்கு வைக்க முயன்றாலும் எதிர்த்துப் போராடவே செய்வோம். சான்றோரை மதித்துப் போற்றாத நாடு, தன் தகுதியை இழந்து போகும். தாம் வாழுவதற்காகப் பாடித்திரியும் அரசியலாளி போல்பவர் அல்லர் மறைமலை யடிகள் போலும் சான்றோர்; தமிழ்நாடு வாழ. தமிழ் வாழ, தமிழினம் வாழப் பாடித் திரிந்த குயில்கள் அவர்கள்! ஏன் உங்களுக்குத் திறம் இருந்தால் வடநாட்டில் ஒரு நிலையத்தின் பெயரைப் பெருந் தலைவர் பெயராக்குவதற்குப் போராடுவது தானே தமிழ் நாட்டுப் பெருந்தலைவர் பெயர் வடநாட்டிலும் உள்ளது என்று தமிழர்கள் உங்களைப் பாராட்டுவார்களே!*

*"நாங்கள் எடுத்த முடிவு முடிவேதான்."*

*"தமிழனத்தின் வசையை வாங்கிக் கட்டிக் கொள்ள முடிவெடுத்து விட்டீர்கள்! உங்கள் போராட்டத்தைத் தமிழ் உணர்வாளர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். தீய விளைவுகளை உண்டாக்க வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் இது நல்லதன்று; நன்றி."*

*"டொக்."*

*- இது 12-2-90 இல் மாலை 5 மணிக்கு நிகழ்ந்த வேலா தொலைபேசித் தொடர்பு ஒன்று. தமிழ்ச் சான்றோர் பெயரை எதிரிட்டு நிற்பாரை நேருக்கு நேர் அழைத்துக் கூறிய அறை கூவல் செய்தி இது! உடனிருந்து கேட்ட செவிகள் ஆகலின்,*

*இப்பொழுதும் அச்செய்திகள் பளிச்சிடுகின்றன! வேலாவின் உணர்வு 'படக் காட்சி' காண்பது போல் இப்போதும் அக் கண்ணில் ஒளிர்கின்றது.*

*இவ்வீறு எப்பொழுது அரும்பியது?*

*ஈரோடு மாசன உயர்நிலைப் பள்ளி!*

*பத்தாம் வகுப்பு!*

*இடைவேளை நேரம்!*

*ஒரு மாணவனை மற்றொரு மாணவன் ஓங்கி அறைந்து விட்டான்!*

*பள்ளிக்குள் நடந்த நிகழ்ச்சி!*

*உடனே தலைமைக்குச் சென்றது; அடிப்பட்டவன் கண்கலங்கி நின்றான். அடித்தவன் 'இவ'னெனக் கூறினான்.*

*"கொண்டுவா அவனை" என ஆணை பறந்தது!*

*அடித்தவன் அழைத்துச் செல்லப்பட்டான்: அடிபட்டவன் சினமாறாது நின்றான்!*

*"ஏன் அடித்தாய்?" - பிரம்பு விளையாடும் என்பது அவனுக்குத் தெரியும்! ஆயினும், துணிந்து கூறினான் அடித்தவன் : "நான் அவனை அடித்தேன்; உண்மை! ஆனால், அவன் என் நெஞ்சில் அறைந்தானே அதைத் சொன்னானா?"*

*"நெஞ்சில் அறைந்தானா?"*

*தலைமையாசிரியர் பார்வை, அடிப்பட்டவன் பக்கம் திரும்பிற்று! அவன் நடுங்கினான்! "இல்லை! பொய்" என்றான். அடித்தவன் பக்கம் திரும்பினார் தலைமையாசிரியர்" என் மார்பில் கையால் அடித்திருந்தால் பொறுத்திருப்பேன்: ஆனால் நாவால் - சொல்லால் - என் நெஞ்சில் அறைந்தான்.*

*"என்ன சொன்னான்?"*

*"தமிழைப் பழித்தான்; தடுத்தும் பழித்தான்."*

*"பழித்துச் சொன்னாயா?"*

*தலை தாழ்ந்தான் அடிப்பட்டவன்!*

*"தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேல்" என்று நான் எத்தனை முறை வகுப்பில் சொல்லியிருக்கிறேன்!*

*"குற்றத்திற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொண்டாய் போகலாம்."*

*இத்தலைமையாசிரியர் பெருந்தலைவர் காமராசரின் ஒன்றுவிட்ட தங்கை மகனார் சண்முகனார் என்பார். அவ்விளைய மாணவர் வேலா அரச மாணிக்கனார்!*

*1990இல் காணும் வீறு, 1952 இல் அரும்பியதன் சான்று இது!*

**முந்தையோர் :**

*ஆந்திர நாட்டுத் திருப்பருப்பதத்தில் (ஸ்ரீசைலத்தில்) இருந்து வெளியேறிய வீரசைவக் குடும்பத்தவர் (இலிங்காயதர்) கும்பகோணம், மதுரை, காஞ்சி, திருப்பரங்குன்றம், சென்னை, சேலம், திருச்சி, தஞ்சை, கோவை,புதுவை முதலிய இடங்களுக்கு வந்தனர். அவர்கள் முதற்கண் வந்து அமைந்ததும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழம் பெருமையுடையதும் கும்பகோணம் மடம் என்பர். அது இன்றும் 'பெரிய மடம்' என்னும் பெயரா லேயே வழங்கப்படுகிறது. இங்கு வந்த வீரசைவர்கள் சங்கமர் எனப்படுவர். 'சங்கமர்' என்பார் 'சமயப்பரப்புநர்'. கும்பகோணம் மடமும், அதனைச் சார்ந்த வீரபத்திரர் கோயிலும் சோழ மன்னர்களால் கட்டப்பட்டவை என்பர்.*

*சங்கமர் சென்னை முதல்கன்னி வரை வெவ்வேறு பெருநகர்களிலும் சிற்றூர்களிலும் பரவினர். 50, 100 வீடுகள் சேர்ந்த குடியிருப்பும் உண்டு. 4,5 குடிகள் தங்கிய ஊர்களும் உண்டு. அவர்களுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களும் கொண்டு கொடுத்தல் உறவு கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் சாதி வகையில் ஒருமைப்பட்டமை போலவே, தமிழ் மொழி வகையிலும் பெரும்பாலும் தமிழராகவே ஆகிவிட்டனர். புதிதாக வீரசைவ நெறியை ஏற்றுக் கொண்டவர்கள் எனினும் அவர்களைத் தனித்துப் பார்க்கும் பார்வை விடுத்தனர்.*

*வீரசைவக் குடும்பங்களுள் சில நாமகிரிப் பேட்டை, ஈரோடு - அவினாசி சாலையிலுள்ள பள்ளகவுண்டன் பாளையம், பவானி,*

சேலம் ஆகிய இடங்களுக்குச் சென்று உப்பு, பருப்பு வாணிகமும், சமுக்காள நெசவும் செய்து வாழ்ந்தனர். வேலாவின் ஓட்டனார் பள்ளகவுண்டன் பாளையத்தில் இருந்தவர். வேலாவின் பாட்டனார் காலத்தில்: மொடக்குறிச்சி விளக்கேத்தியைச் சார்ந்த திட்டுக்காட்டூரில் தங்கினர். தாத்தா பாட்டனார்) அர்த்தநாரி என்பார். அவர் பிறப்பியம் எழுதுவதிலும், கணியம் கூறவதிலும் தேர்ச்சி மிக்கவர்.

ஊர்ப் பெரிய கவுண்டர் ‘இன்ன நாளில் இறந்து விடுவார்’ என்று கணியர் சிலர் உறுதியாகக் கூறினர். அர்த்தநாரியார், “இறப்பு இல்லை; உறுப்புக் குறை உண்டு” என்றார், அதன்படி கால்கை இயக்கக் குறை ஏற்பட்டது. இறப்பு இல்லாது ஒழிந்தது. அதனால் அவர் வாழ்ந்த காலமெல்லாம் வீட்டுக்கு வேண்டும். நெல் வழங்க நிலம் ஒதுக்கினார் பெரிய கவுண்டர்.

அர்த்த நாரியார் கணியத்தில் வல்லார் எனினும் அதனைக் காசாக்கக் கருதினார் அல்லர். உப்பு பருப்பு அரை செலவு (சில்லறைச்செலவு)ப் பொருள் வணிகமே செய்தார். உப்பு, உள்ளூர் விளைவன்று; கடல் விளைவு; பருப்பு, ஆந்திர நாட்டில் இருந்து தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டது; ஆதலால். உள்ளூர்ப் போட்டியில்லாத வணிகத்திலே சங்கமர் ஈடுபட்டிருந்தனர். ஆகலின் அர்த்த நாரியாரும்அவ்வழியே மேற்கொண்டார். பட்டுச் சமுக்காளம் நெய்யும் நேர்த்தியால் ‘சமுக்காள சங்கமர்’ என்னும் பெயரும் உண்டு. இத்தெழிலும் அர்த்த நாரியார் சார்ந்த பல குடும்பத்தவர் மேற்கொண்டதேயாம். அர்த்த நாரியாரின் துணைவியார் இலிங்கம்மாள் என்பார் பவானியில் பிறந்தவர்.

**தந்தையார் :**

அர்த்த நாரியார் - இலிங்கம்மாள், இல்வாழ்வுப் பயனாக மக்கள் எழுவர் தோன்றினர். மகளிர் இருவர்; ஆடவர் ஐவர். இவருள் நான்காம் மகனாகப் பிறந்தவர் வேலாயுதம் எனப்படும் வேலாயுதனார்! வேலாஅரச மாணிக்கனாரின் தந்தையார்! இவர் பிறந்த நாள் 6-10-1904.

வேலாயுதனார் பள்ளிப் படிப்புப் படித்த அளவில் தந்தையாருடன் வணிகம் செய்ய வேண்டியவரானார். உப்பும் பருப்பும் கொண்டு ஏழுநாள்களுக்கும் ஏழு ஊர்களில் நடை

பெறும் சந்தைகளுக்குச் சென்று வாணிகம் செய்வர். ஒருநாள் இவர்கள் கடைக்குப் பக்கத்திலே, கும்மி அம்மானை ஒப்பாரி தாலாட்டு முதலாய சிறுசிறு நூல்களையும், விக்கிரமாதித்தன் கதை, அல்லியரசாணிமாலை முதலான பெரிய எழுத்து நூல்களையும் பரப்பி வைத்து வணிகம் செய்து வந்த பெரியவர் ஒருவர் அர்த்தநாரியாரிடம் "எனக்கு முடியவில்லை; இந்த நூல்களையெல்லாம் எடுத்துக் கொண்டு ஒரு தொகை தாருங்கள்" என்று அவற்றை வைத்திருந்த, பெட்டியுடன் ஒப்ப டைத்தார். அர்த்தநாரியார் தம் வணிகத்திற்றுத் துணை வேண்டு மென்று பள்ளிப் பருவத்திலேயே தம்மகனை ஈடுபடுத்தியிருக்கும் இக்கட்டான சூழலில், 'இரட்டை வணிகமா?' எனத் திகைப்போடு எண்ணினார். ஆனால், பெரியவர் நிலையும், அவர் சொல்லும் - அர்த்த நாரியாரை இளக்கின. ஒரு தொகையைத் தந்து அப்படியே எடுத்துக் கொண்டனர். என்ன செய்வது?

நூல்களைக் கட்டி வைப்பதா? கட்டி வைத்தால் விற்க வகை என்ன? ஒரு நொடியில் முடிவுக்கு வந்தார்!

"வேலாயுதம் நூல்களை நீ பார்த்துக் கொள்; நான் இதனைப் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

**ஒரு கடை இரு கடை :**

வேலாயுதம் தனிக்கடை வணிகரானார்; பின்னே தோன்ற இருக்கும் தோற்றங்களுக்கெல்லாம் அந்த நொடிப் பொழுதே அவர்க்கு மூலமும் முதல் வைப்பும் ஆயிற்று! "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதை நூல் வணிகராகப் புகுந்த அப்பொழுதிலேயே புலப்படுத்தி விட்டார்! எப்படி?

வேலாயுதனார்க்கு நல்ல குரல் வளம் உண்டு! எவரும் விரும்பிக் கேட்கப் பாடுவார்! நூல்கள் சூழப்பரவிக் கிடக்க, அதன் சூழலில் மலர்க் குவியல் இடையே புகுந்து இசைமிழற்றும் தும்பியாய் - சுரும்பாய் - தேனீ யாய் - மாறினார். தும்பிசேர் கீரனார் என்னும் சங்கப் புலவர் பெயரை மெய்ப்பிப்பார் போலாயினார் வேலாயுதனார்!

வகைக்கு ஒரு நூலாக எடுத்துக்கொண்டு, சந்தையர் எல்லாரும் தம்பால் திரும்பிக் கேட்கும் அளவில் இசை எழுப்பிப் பாடினார்! "புல்லாங்குழல்" ஒன்று, குழந்தை வடிவில் நின்று இசைக்கும் இசையென மயக்கிய இசைக்கு மயங்கியவர், தம்மை

மறந்து பாடலில் ஊன்றினர். படிக்கத் தெரிந்தவர்கள், கையில் வைத்துப் பாடும் நூலைக் காசு தந்து பெற்றனர்; இளைஞர்கள் வடி வந்ததும்,. தேடி வந்தும் பாடல் கேட்டனர். மகளிர்கூட்டம் மூக்கில் விரல் வைத்து நோக்கியது! அர்த்தநாரியார் எண்ணியும் பாராத விந்தை அன்றைச் சந்தையில் நிகழ்ந்து விட்டது! சந்தை இடந்தோறும், சந்தை நாள் தோறும் தந்தையும் மைந்தரும் 'இரட்டைக் கிளவி' யெனப் பிரிதலின்றி வணிகம் செய்தனர்! பள்ளியில் பயிலாக் கல்வியை அறிஞர் 'சாக்ரடீசர்'போலச் சந்தையிலே பெற்றும் பரப்பியும் வந்தார், இளைஞர் வேலாயுதனார்!

பெரியவரிடம் விலைக்குப் பெற்ற நூல்கள் எவ்வளவு காலத்திற்கு இருக்கும்! புது நூல்கள் விற்பனைக்கு வேண்டுமே! திருச்சிக்கும் மதுரைக்கும் சென்னைக்கும் சென்று நூல்களைச் சிப்பம் சிப்பமாகக் கொணர்ந்தனர் நம்பிக்கையூட்டியது அந்த நல்ல வணிகம்.

நூல் புகுந்த இடத்தில் செம்மை புகும்! எப்படி? மரத்தை நேராக்க - கல்லை நேராக்க - சுவரை ஒழுங்காக்க -நூல் உதவுதலை நேரில் காணலாமே! நூல் வணிகம் போலும் மேல் வணிகம் உண்டா? கல்விக் கண்ணொளி மட்டும் தான நூல் தருகிறது! உள்ளொளி ஊற்றுக்கண்ணும் நூலேயன்றோ! ஒரு கல்விக் கூடம் திறந்தால் ஒரு சிறைக் கூடம் அடைபடும் என்பர். அக் கல்விக்கூட மூலப் பொருள் உருவாக்கம் ஆகும் நூலின் மதிப்பை அதன் மங்கலம் என்னும் பொருளே விளக்கும்! பொருள் தேடும் வழிகள் பலப்பல கண்கூடாக இருந்தும் உலகுக்கு ஒளியூட்டும் நூல்வணிகத்தில் ஈடுபடுமாறு ஆட்படுத்திய பெரியவர் -நூல்களை விற்றுச் சென்ற பெரியவர்- மெய்யாகப் பெரியவரே! அவர் செயன்மைச் சீர்மை எப்படியெல்லாம் விரிவதாயிற்று!

**கூடிவந்த வேலை :**

ஒரு நாள் சென்னிமலையை அடுத்த சிவகிரியிலே சந்தை! இளைஞர் வேலாயுதம் குயிலெனக் கூவியிசைக்கிறார்! அவ ரொத்த இளைஞர் ஒருவர் தம் செவியைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டு கேட்கிறார். கேட்டுக் கேட்டுக் கிளு கிளுப்பும் கிறுகிறுப்பும் அடைகிறார்! இந்த இளைஞரின் குரல் மட்டும்

*எனக்கிருந்தால் எப்படி இருக்கும்! இப்பொழுதும் என்ன? இந்த இளைஞரையே கேட்டு விடலாமே!*

*"நீங்கள் பாடும் பாட்டுகளைப்போல்நிறைய இயற்றி இருக்கிறேன்; இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் இயற்றித் தருவேன்; இந்தப் பாட்டோடு சேர்த்துப் பாடுகிறீர்களா?"*

*"தாராளமாகப் பாடுவேன்."*

*"சந்தைக்கு வந்த இளைஞன் தன்னை மறந்து பூரித்தான். என்பாட்டையும் இவன் இப்படி இசையோடு பாடுவானா! கேட்கக் கேட்க எப்படி இருக்கும்!" தன்னுள் எண்ணினான். அடுத்த சந்தையில் இளைஞர் இருவரும் சந்தித்தனர். அச்சந்திப்பு வாணாள் அளவும் தொடரும் சந்திப்பு ஆயிற்று! அச்சந்திப்பே* **இராவண காவியக் குழந்தையார் சந்திப்பும் சிவலிங்க நூற்பதிப்புக் கழக வேலாயுதனார் சந்திப்பும்** *ஆயிற்று! எண்ணிப் பார்க்கும் வாழ்வில், எண்ணாத விந்தைகள் எத்தனை எத்தனை!*

**நிலையம் கோலல் :**

*வேலாயுதனார் வளர்ந்தார்! தந்தை அர்த்த நாரியார் தம் முதுமையால் தளர்ந்தார்! உப்பு பருப்பு, வணிகம் சுருங்கிற்று; பொத்தக வணிகம் பெருகிற்று; வேலாயுதம் பொத்தகங்கள், சந்தையைத் தேடாமல் நகரத் தெருப்பார்வையைச் சந்திக்க அவாவின! பொத்தக நிலையமாகும் நாளை எதிர் நோக்கின!*

*எண்ணுவதெல்லாம் எய்துதல் எளிதா? எல்லார்க்கும் எளிதா? "எண்ணிய எண்ணியாங்கு, திண்ணியர் எய்துவர்" என்பது வள்ளுவம்! திண்ணிய எண்ணமுடைய வேலாயுதனாரின் நெஞ்சில் இருப்பதை எப்படி அர்த்தநாரியார் அறிவார்? அவர்தாம் வேலாயுதரைத் 'தந்தவர்' அல்லரோ! தேர்ந்த கணியரும் அல்லரோ! அவர் கூறினார்: "என் காலத்திற்குப் பின்னால்எவரும் இத்திட்டுக்காட்டூரில் இருத்தல் கூடாது. பங்காளிச் சண்டையும்பிணக்கும் பிளவும்கொண்ட இவ்வூர் வாழ்வு என் குடும்பத்துக்குத் தொடர்தலைச் சிறிதும் விரும்பேன்; நிலமும் வீடும் விற்றுத் தருகிறேன்; எங்குச் சென்றும் பிழைத்துக் கொள்ளுங்கள். ஆனால், என் காலம் இத்திட்டுக்காட்டிலே தான்" என்றார்.*

'குடிபெயர்தல்' போன்றதாயினும் மக்கள் ஏற்றுக் கொண்டனர். அவரைப் பிரிதல் கருதியே வருந்தினர். எனினும், அணிந்துள்ள ஊர்களில் தங்கி அடிக்கடி பார்த்துக் கொள் ளலாம் என உறுதி கொண்டனர். வேலாயுதனார் எண்ணம் ஈரோட்டை நாடியது. நேதாசி வீதியில் கடையமைந்தது! வாடகைக் கடையே அது. வாழ்க்கைச் சிறப்பை வழங்கிய தலைக்கடை அதுவாயிற்று. வேலாயுதனார் 'நாநயமானவர்; நாணயமுமானவர்; கடையின் வளத்திற்குத் தலையாயவை இவை! ஆதலால், நம்பிக்கை மிக்க வணிகராக வேலாயுதனார் இளமையிலேயே விளங்கினார். பேரேடு சிட்டை குறிப்பு இன்னவும் பிறவும் பொத்தகத்தொடு சேர்ந்து விரிந்தன.

**பாட்டி வழி முறையும்; பாட்டனார் வழிமுறையும் :**

பாட்டியின் வகையினர் பவானியில் வாழ்ந்தனர். அவர்கள் நல்ல வளமுடையவர்கள்; வணிகம், சந்தை ஒப்பந்தம் ஆகிய வற்றிலும் சிறந்து விளங்கியவர்கள். ஆதலால், வேலாயுதனார் உடன் பிறந்தார், கொண்டு கொடுப்பு பாட்டியின் வழியையே சார்பதாயிற்று. பாட்டனார் வழியையே சார்வதாயிற்று. பாட்டனார் வழியினர் திருப்பூரையடுத்த குன்னத்தூரில் இருந்தனர் அவர்கள் வறுமையராய் இருந்தனர். பாட்டனாரின் தங்கை மகள் வெங்கட்டம்மாள் என்பார். அவரைத் தம்மகன் வேலாயுதத்தின் வாழ்க்கைத் துணையாகக் கொள்ள அர்த்த நாரியார் விரும்பினார்! உள்ள நிறைவு வெள்ளமெனப் பாயுமானால் செல்வமென்ன? வறுமை என்ன? "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என்று தெளிந்த மனத்திற்கு என்ன குறைதோன்றும்! வேலாயுதனார்க்கு அப்பொழுது அகவை பதினெட்டு!

**முகவர்:**

வேலாயுதனார் முயற்சி கடையளவில் அமையவில்லை. விரிந்தது; தினமணி, எக்சுபிரசு (விரைவான்) முதலிய இதழ் களுக்கு முகவராகக் கடமை புரிந்தார்.

**பதிப்பகம் :**

சந்தையில் சந்தித்துச் சிந்தையில் இடம் கொண்ட புலவர் குழந்தை எழுதிய இசைப்பாடல்களை அச்சிட்டார். ஈரோடு வந்தபின் சிவலிங்க நூற்பதிப்புக் கழகம் என்னும் பதிப்பகத்தைத்

தொடங்கினார். பாட நூல்களும் துணைநூல்களும் உரை நூல்களும் வாய்பாடு தேசப் படம் முதலியனவும் வெளியிட்டார்.

**புலவர்கள் அரங்கம் :**

பொத்தகக் கடை -நூல் வெளியீடு - என்பன எவ்வளவு நெருக்கமாக வேலாயுதனார் நெஞ்சில் இடங் கொண்டனவோ அவ்வளவு இடங் கொண்டது தமிழ்ப் புலவர்கள் தொடர்பு. ஒவ்வொரு நாள் மாலையும் பொத்தகக் கடை, புலவர்கள் அவைக் களமாகவே திகழ்ந்தது.

செங்குந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் சிவ. குப்புசாமியார், ஈரோடு ஆசிரியர் சிவ சங்கரனார், புலவர் குழந்தையார், புலவர் ஆறுமுகனார், கோவை சுந்தரராசனார், முனைவர் சி. இலக்குவனார், தெய்வ சிகாமணியார், கரு. காசி, ஈரோடு கலைமகள் பள்ளித்தாளாளர் மீனாட்சிசந்தரனார் சிக்கையா ஆகியோர் அரங்கமாகச் சிவலிங்க நூற்பதிப்புக் கழகமும் விற்பனையகமும் திகழ்ந்தன. அந்த நெருக்கம் நூல் வெளியீட்டால் உண்டாயது என்பதனினும், ஒரு குடும்ப உறவாக விளங்கிய இன்ப அன்பால் உண்டாயது என்பது தகும்.

வேலாயுதனார் பொங்கல் கொண்டாடுவார்; பொங்கலுக்குப் புலவர் பெருமக்களையெல்லாம் அழைத்துப் பூரிப்பார்; சீர்செய்து பாராட்டுவார்; எப்புலவர்க்கேனும் இடர்! பொருள் முடை! கேட்டது கேட்டபடி தருவார்! கேளாமல், தாமே கேட்டும்தருவார்! கணக்குப் பார்த்துக் கடன் பார்த்துத் தரும்மரபைப் போற்றினார் அல்லர்! தக்கபோதில் உதவும் தாதாவாகத் திகழும் ஒருவரைத் தேடித் தேடிப் புலவர்கள், தம் வணிக நிலையமென உணர்ந்து போற்ற மாட்டார்களா! அதனால், பாடநூல்கள் பல வெளிப்பட்டன. பாடமாக விளங்கின. பணத்தையும் தேடித் தந்தன. அதன் விளைவு பிறிதொரு நலத்தைத் தந்தது! வினையால் வினையாய விழுப்ப விளைவு அது.

**நூல் வெளியீடு :**

பாடநூல்களின் வருவாய் சமய நூல்களை வெளியிட உதவிற்று. விலையாகும் நூல் வளத்தால்தானே, விலை போகா நூல்களை வெளியிட்டு அந்நூல்களைக் காக்கவும்பரப்பவும் முடியும்! முன்னதன் வளமின்றேல், பின்னதன்விளைவு அரிதாகி விடுமே!

**கொடை நலம் :**

*நல்லுள்ளமுள்ளோர் பெறும் நலம், நாட்டு நலமாம்! அதுவே உள்ளூர்ப் பழுத்த பயன் மரமுமாம்! வேலாயுதனார் செல்வத்தில் ஓரளவு பெருகி வருங்காலத்திலேயே, அவ்வரு வாயின் ஒரு பகுதியை ஏழை எளிய மாணவர்களுக்குக் கற்பலகை குறிப்பேடு, புத்தகம் முதலியன வழங்குதற்கும் கல்விக் கட்டணம்கட்டுதற்கும் செலவிட்டுள்ளமையை எண்ணினால் நல்வணிகர் கடமைஇனிது விளங்கும். கோடைக்காலத்தில் மோர்ப்பந்தல் அமைத்தலைக் கடனாகக் கொண்ட செயலால், அவர்தம் பொதுப்பணி ஈடுபாடு விளங்கும்.*

**திருவளர்கை :**

*வேலாயுதனார்க்கு இன்னொரு தனிப் பெருமை; அது காலமெல்லாம் பெருகி வந்த பெருமை! "அவர் கையில் இருந்து வாழ்த்துடன் பேரேடு சிட்டைகளைப் பெற்றுப் புதுக்கணக்குப் போட வேண்டும்" என்பதாம். கைராசிக்காரர் கடை எனப் பெயர் பெற்று விட்டமையால் அதுவே வணிகத்திற்கு நல்ல விளம்பரமாக விளங்கியது.*

**ஆகூழ் :**

*தந்தை பெரியார் வீட்டுக்கு அடுத்த வீட்டிலே வேலாயுதனார் குடியிருந்தார். அது ஒற்றிக்கு உட்பட்ட வாடகை வீடு. அவ்வீட்டுக்கு உரியவர்க்குப் பொருள் நெருக்கடி! வேலாயுதனாரிடம் சொல்லி அவ்வீட்டை விலைக்கு எடுத்துக் கொண்டு பணந்தருமாறு கேட்டு வந்தார் அவர். அவரைத் தந்தை பெரியார் பார்த்து விட்டார். பக்கத்துவீட்டுக்காரர் அல்லரோ!*

*"அடிக்கடி காண்பதில்லையே! இன்று வந்ததென்ன?" என்றார் பெரியார். பக்கத்து வீட்டுகாரர் தம் பாட்டைப் பாடினார்; "நீர், வேலாயுதனாரைப் பார்க்க வேண்டாம். நானே வீட்டை எடுத்துக் கொள்கிறேன்; இரும்," என்று சொல்லி உடனே எழுதும் ஏற்பாட்டில் தலைப்பட்டார். ஒரு சொல் அவரிடம் சொன்னால் நல்லது; குடியிருப்பவராயிற்றே என்றிருக்கிறார், இரக்கம் கொண்ட அண்டை வீட்டார்.*

*"வாடகைக்குத் தானே இருக்கிறார்; வேறு வீடு பார்த்துக் கொள்வார்; வீடு பார்க்குமளவும் இங்கே இருக்கட்டும்" என்று*

வலியுறுத்தி விட்டார். பெரியார் உடனே ஆவணம் எழுதிப் பதிவும் முடிந்தது! பேராயச் சார்பில்நகராட்சித் தலைவராகப் பெரியார் இருந்த காலம் அது அப்பொழுது நாகம்மையாரும் இருந்தார்.

"என்றும் வராத அண்டை வீட்டுக்காரர் வந்ததென்ன? அவரோடு காதோடு காதாகப் பேசுவதென்ன?" எனப் பெரியாரிடம் வினா வினார் அம்மையார்! "அவர் வீட்டை விலைக்குப் பேசி முடித்தோம்; எழுதியும் ஆயிற்று என்றார்."

"நமக்கென்ன வீடா இல்லை! எத்தனை வீடுகள் உள்ளன! நமக்குப் பக்கத்து விட்டுக்காரர்கள் நல்லவர்கள். அவர்களை உடனே வேறு வீடு பாருங்கள் என வெளியேற்றுவது நமக்கு அழகாக இருக்கிறதா? அவர்கள் நமக்கு என்ன கெடுதி செய்தார்கள்? நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப்போகிறது என எண்ணினேன்; அப்படியே ஆயிற்று! இந்த ஆசையும் கெட்ட எண்ணமும் வேண்டாம்" என்று கூறினார் அம்மையார்! வீடு எழுதியாயிற்றே! என்ன சொல்லி, என்ன ஆவது?

நண்பகல் உணவு முடிந்து பெரியார் அமர்ந்திருந்தார். நாகம்மையார் மனக்கவலை மாறிற்றறில்லை! "கூட்டைப்பிரித்துக் குஞ்சுகளோடு குருவியை ஓட்டும்" கொடுமையைச் செய்ய அத் தாய்உள்ளம் பொறுக்கவில்லை! சொல் கேட்பார் என்ற நம்பிக்கையும் இல்லை! அந்நிலையில் காவல் துறையினர் இருவர் பேராயக் கட்சித் தலைவர் பெரியார் முன் வந்து நின்றனர். உங்களைச் சிறைப்படுத்த ஆணையுள்ளது" எனக் காட்டி நின்றனர். வீட்டுக்கு ஆவணம் எழுதி முடித்து, இரண்டு மணிப் பொழுதும் ஆகவில்லை! ஆங்கில அரசாணை சிறைப்படுத்துமாறு வீடு தேடிவந்து நின்றது.

நாகம்மையார் நல்லுள்ளம்படபடத்தது! "நீங்கள் காலையில் செய்த செயல் நல்ல செயல் இல்லை. அதற்கு மாலைப் பொழுது வரைக்கும் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல் உடனே தண்டனை வந்து விட்டது. அந்த வீடு வேண்டாம்; அவர்களைக் குடியெழுப்ப வேண்டாம்; இப்பொழுதாவது அவர்களுக்கு அவ்வீட்டைத் தருவதாக உறுதி சொல்லுங்கள்" என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கூறினார். பெரியார் சிறைப்படுத்தப் படுகிறார் என்னும் கவலையினும், அண்டை வீட்டுக்காரர்

அப்புறப் படுத்தப்படுகிறார் என்ற கவலையே மிஞ்சி நின்றது. பெரியார் உள்ளம் இளகியது; இரங்கியது. "உன் விருப்பம் போலவே வீட்டை அவர்களுக்கே எழுதித் தந்து விடுகிறேன். நான் கொடுத்த விலையைத் தந்தாலே போதும்! இது உறுதி!" என்றார். அந்த இடரான பொழுதிலும் "நல்லதொன்று செய்தோம்" என்னும் நிறைவில் நாகம்மையார் மகிழ்ந்தார். பின்னர்ப் பெரியார் தம் சொற்படியே அவ்வீட்டை வேலாயுத னார்க்கே எழுதித் தந்தார். அந்தநன்றியை இன்றும் அவ்வீட்டின் ஒவ்வொரு கல்லும் செங்கல்லும் சொல்லும் அளவில் அரச மாணிக்கனார் குடும்பத்தவர் நினைந்து பாராட்டு கின்றனர். பெரியார் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் என்று கூறுவ தென்ன? பெரியார் வீட்டுக்காரர்கள் தாமே அவர்கள்! பெரியாரிடம் இருந்து ஒருவர் இவ்வாறு விலைக்கு வாங்கியது பெரிய விந்தையான செய்தி என்பதில் ஐயமிருக்க முடியாது!

**வறடிக்கல் சுற்றல்**

அன்பு நெறியில் தழைக்கும் வேலாயுதனார்க்குத் திருமண மாகிப் பன்னீராண்டுகள் ஆகியும் மக்கட்பேறு வாய்த்திலது! உடன் பிறந்தார் பிள்ளைகளை, உரிமையால் வளர்த்தார். வேலாயுதனார் பிள்ளைகளின் மேல் பெரு வாஞ்சையர்; ஊரார் பிள்ளைகளையும் ஊட்டி வளர்க்கும் உருக்கத்தால் எப்பொழுதும் எந்நாளும் பக்கத்து வீட்டுப்பிள்ளைகளும், தெருப்பிள்ளைகளும் தாமரை பூத்த குளம்போலக் குடும்பத்தில் திகழச் செய்தார்; அவர்கள், கூடியுண்ணும் புறாக்குடும்பம் என மகிழ்வித்தனர். எனினும் தமக்கெனப் பிள்ளை வேண்டும் என்று வேட்கை இல்லாமல் போகுமா? "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற"என்பதை எண்ணிஎண்ணித் திளைப்பவர் அல்லரோ வேலாயுதர்! அன்றும் இன்றும் திருச்செங்கோட்டு உச்சியில் உள்ள வறடிக் கல்லைச் சுற்றி வந்தால் மகப்பேறுண்டாம் என்பது பெருவழக்காக இருந்தது, இருக்கிறது. (வறடி - மலடி; மகப்பேறில்லாள்)

மலை உச்சியில் நிற்கும் ஒற்றைக்கல்! சுற்றி வருவதற்கு இடரான இட்டடி இடம்! காற்று வெருட்டியடிக்கும்! தடுப்பிலா உயரம்! கீழே தலையறுந்து போகும் பள்ளத்தாக்கு! வெங்கிட்டம் மையார் வறடிக்கல்லைத் துணிந்து சுற்றியிருக்கிறார்! "தம் உயிர் தந்தும் தாம் பிறிதுயிரை வயிறு வாய்க்க வேண்டும்" என்னும்

ஆர்வம் அத்தகையது! அவர் வேண்டுதல் வீண்போக வில்லை. ஆண் மகவொன்று பிறந்தது; அதுவே சிவலிங்கனாராம் வேலா அரசமாணிக்கனாரின் தமையனார். அடுத்துப் பிறந்தவர் வேலா. அரசமாணிக்கனார்; பின்னே பிறந்தவர் தங்கை சரசுவதியார், சிவலிங்கனார் சிவலிங்க புத்தக சாலை உரிமை யாளராய், தந்தையார் தொடங்கிய கடையில் பொத்தக வணிகராகத் திகழ்கின்றார். அவர்க்கு ஆண்மக்கள் மூவருளர்.

தங்கை சரசுவதியார் திருச்செங்கோட்டில் அ. சித்தையனார் வாழ்க்கைத் துணையாய் நன்மக்கள் நால்வர்க்குத் தாயாய்த் திகழ்கின்றார்.

**வேலா பிறந்தார்**

அரச மாணிக்கனார் 20-12-1937 ஆம் நாள் திங்கள் கிழமை பகல் 12-20 மணிக்குப் பிறந்தார். அவர்க்கு, அர்த்தநாரி எனப் பாட்டனார் பெயர் சூட்டப்பட்டது. ஆனால், பாட்டியார் ,ராச மாணிக்கம் என வழங்கினார்! பாட்டியார் ஆர்வப் பேருள்ளம் எத்தகைத்து என அப்பெயர் சூட்டு அமைகிறது!

அந்நாளில் சேலம் நகரில் இராவ் பகதூர் (S.P.) இராசமாணிக்கம் என்பார் ஒருவர் இருந்தார். அவர் உறவினர்; சிறந்த தொண்டர்; வீரசைவத் தோன்றல்; நீதிக்கட்சியின் சீர்த்தியர்; மாவட்ட ஆட்சிக் கழகத் துணைத் தலைவர், இவர்தம் குடும்ப இல்லங்களில் காந்தியடிகள் தங்கிய பேறுண்டு. இவர் பெயரை நினைந்தே தம் பேரர்க்குப் பேர் சூட்டினாராம் பாட்டியார்! அவர் தம்பேருள்ளப் பெருக்கன்றோ இது!

'பீரம் பேணிற் பாரம்தாங்கும்' என்பது கொன்றை வேந்தன். பீரமாவது தாய்ப்பால்; பீரம்பேணலாவது தாய்ப்பால் நிரம்பவுண்டு வளர்தல். பாரம் தாங்கும் என்பது பொறுப்புக் களை யெல்லாம் தன்மேல் அள்ளிப் போட்டுக் கொண்டு சுமந்து வாழும் என்பது!

அரசமாணிக்கம் இளமையிலே ஆட்டம் பாட்டம் சுறு சுறுப்பு - துறுதுறுப்பு! இவற்றைக் கண்ட அன்னையார் உள்ளுள் பூரிப்பார்!

"ஒன்றரை, ஒன்றேமுக்கால் அகவை வரை பாலுண்ட பய" னெனப் பல்கால் உரைப்பார்!

குழந்தை முட்டினால் என்ன? மோதினால் என்ன? பெற்றோர்க்கு அவை பேரின்பமே!

குழந்தை உளறினால் என்ன? குழறினால் என்ன? இனிய மழலைத் தேனாம் பெற்றோர்க்கே!

குழந்தை உருண்டாலும் புரண்டாலும் உதைத்தாலும் பொய்ச்சினம் அன்றி மெய்ச்சினம் வருவதில்லையே பெற்றோர்க்கு? சுறுசுறுப்பு மிக்க பிள்ளை, பெற்றோர்க்கு ஒவ்வொரு நொடியும் அச்சமூட்டும்! அலக்கணூட்டும்! பதைக்க வைக்கும்! திகைக்க வைக்கும்! ஆனாலும், உள்ளுள் ஓர் உவகை ஊற்றெடுக்கவே செய்து விடும்!

**தொடக்கக்கல்வி**

ஆடிப்பாடி அழகு காட்டித் திரிந்த அரசமாணிக்கம் அந்நாள் வழக்கப்படி ஆறாம் அகவையில் ஈரோடு சி.எசு.ஐ. இலண்டன் பள்ளியில் சேர்க்கப் பெற்றார். முதல் ஐந்து வகுப்புகள் அங்கே பயின்றார். சிறந்த தேர்ச்சியும் பெற்று வந்தார்.

**உயர்நிலைக்கல்வி**

ஐந்தாம் வகுப்பு முடித்தபின் மாசன உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். அங்கே தமிழார்வமிக்க தலைமையாசிரியர் சண்முகனார் இருந்தார். அவர் ஆர்வமும் அரவணைப்பும், "வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிதல்" போலப் பயன்பட்டது. மாணவர்கள் தமிழ் உணர்வுடன் விளங்கினர். அரசமாணிக் கனார் தமிழ் உணர்வுச் சான்றொன்று முன்னரே சுட்டப் பெற்றது!

அந்நாளிலேயே வகுப்புத் தலைவராகவும், கட்டுரைப் போட்டி பேச்சுப் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசு பெறுபவ ராகவும் விளங்கி உள்ளார்.

உயர் நிலைப்பள்ளி வகுப்புகளில் அரசமாணிக்கனார் வகுப்புத் தலைவராக இருந்த துடன்பள்ளியின் தமிழ் இலக்கிய மன்றச் செயலாளராகவும் விளங்கினார். தமிழ் ஆங்கில நாடகங்களில் நடித்துப் பரிசும் பாராட்டும் பெற்றார்.

'இளங்கன்று பயமறியாது' என்பது பழமொழி; வாய்த் துடுக்காக எதையும் பேசும் கைத்துடுக்காக எதுவும் செய்யும் என்பதை விளக்கும் பழமொழி இது. 'கட்டுக்குள் இளமை நில்லாது' என்பதே இதன் குறிப்பு. ஆனால் அரசமாணிக்கர்

இப்பழமொழிக்குக் கட்டுப்பட்டவர் அல்லர். துணிவு உண்டு; ஆனால், முரட்டுத்தனம் அன்று! கட்டுப்பாடு உண்டு. ஆனால் அது அடிமைப் பட்டது இல்லை! தமக்குத் தாமே கட்டொழுங்கு கொள்ள வேண்டும் என்பது அரசமாணிக்கர் இளமை உறுதி. தாம் எவர்க்கும் மதிப்புத் தந்து பேசுதல் வேண்டும் அவ்வாறே அவர்கள் மதிக்குமாறு நடந்து மதிப்புப் பெறுதல் வேண்டும் என்பது தமக்குத் தாமே கொண்டொழுகிய நெறி. தாம் எவ்வளவு இளைஞரையும்அடே, போடா, வாடா என அழைப்பது இல்லை என நோன்பு கொண்டவர் அவர்! பன்னீரைத் தெளித்தால் பன்னீர் தானே தமக்கும் தெளிக்கப் பெறும். அதனால் இளமை தொட்டே அவரை அவ்வாறு அழைத்தாரும் இலர்! இளைஞர் வாழ்வுக்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

**விளையாடல் :**

சுறுசுறுப்பு மிக்கவர்களுக்கு விளையாட்டு என்பது இன்பப் பொழுதுபோக்கு. அரசமாணிக்கனார் இளமைக் கிளர்ச்சி 'வாளா' இருக்குமோ? அதிலும் மாணவர் குழுவின் தலைமையுடையார் ஒதுங்கி நிற்கவும் கூடுமோ? பள்ளி விளையாட்டுகளில் பெரிதும் ஆர்வம் கொண்டார். விளை யாட்டுப் போட்டிகளிலும் பரிசும் பாராட்டு இதழும் பெற்றார். குறிப்பாக உதைபந்து ஆட்டத்தில் தனித் தேர்ச்சி காட்டினார். ஒரு நன்மாணவர்க்கு உடல், உள்ளம், மூளையாகிய மூன்றும் செவ்விதிற் பயிற்சியுற வேண்டும்! இம்மூன்றையும் ஒருங்கே வளர்த்துக் கொள்வார் அரியர்! அவ்வரியருள் ஒருவராக விளங்கினார் அரச மாணிக்கனார்.

**குடியின் பெருமை :**

மாணிக்கம் உயர்நிலைப் பள்ளியில் கால் வைத்த காலம். தந்தை பெரியார் வீட்டில் அவரும் பெரியாரின் தமையனார் மகன் கசபதியும் சில சிறுவர்களும் சேர்ந்து விளையாடிக் கொண்டி ருந்தனர். அங்கே சில பிராமணர்கள் கூட்டமாக வந்தனர். அவர்கள் பெரியாரிடம், "எங்கள் இனத்தை நீங்கள் இழித்தும் பழித்தும் பேசுவது முறையா?" என வருந்தியுரைத்தனர். அப் போதில் பெரியார் மாணிக்கத்தைச் சுட்டிக் காட்டி "இப் பையன் வீரசைவன். வீரசைவத்தலைவர் பசவேசர். அவர் ஒரு பிராமணர்; அவரை விடவா நான் பிராமணர்களைப் பழித்துச் சொல்லி விட்டேன்?" அவர் சொல்லிய அளவில் நூற்றில் ஒரு பங்கு கூட

நான் சொன்னதில்லையே என்றார். இந்நிகழ்ச்சி மாணிக்கத்தின் நெஞ்சில் பசுமையாய்ப் பதிந்தது. வீர சைவக் குடிப்பிறப்பின் பெருமை மகிழ்வூட்டியது; பின்னே செய்த வீர சைவத் தொண்டுக்கு அமைந்த தூண்டல் ஈதென்பது தகும்.

**இந்தி எதிர்ப்பு :**

உயர்நிலைப்பள்ளியில் பயின்ற நாளில் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டார். இவரே மாணவர் இலக்கிய மன்றச் செயலராய் இருந்து, இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தினார். அவ்வூர் வலம் கடைத் தெருவழியாக வந்தது. கடைத் தெருவிலேயே தங்கள் பொத்தகக் கடையும் உள்ளது. அங்கே தந்தையார், இருப்பர்; அவர் கண்டிப்பு மிக்கவர்; தண்டிக்கவும் தயங்காதவர்; ஆதலால் அதனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு ஊர்வலத்தை நடத்தி வந்தார். அதற்குள் தம் மைந்தரே ஊர்வலத்தைத் திரட்டிக் கொண்டு முழக்கத்தோடு முன்னால் வருவதை வேலாயுதனார்க்குச் சொல்லி விட்டனர். அவர் ஊர்வலம் வரும் வழியில் விழிவைத்து நின்றார். மாணவர் முழுக்கமும் வரிசையும் மெய் சிலிர்க்கச் செய்தன! இவர்களுக்கு இத்தனை துணிவா? இதன் தலைவன் என் மகனா?" என எண்ணி ஊர்வலத்தின் முன்னும் பக்கமும் கண்ணோட்ட மிட்டார். மாணிக்கத்தை முன்னும் காணவில்லை! பக்கங்களிலும் காணவில்லை! பின்னும் காணவில்லை பின் எங்கே?

"என் பிள்ளை இவ்வூர்வலத்தில் பங்கு பெறவில்லை" என்ற அமைதியில் வேலாயுதனார் திரும்பினார். அடுத்த தெரு முகப்பில், அரச மாணிக்கர் முன் வரிசையில் சென்று ஊர்வலத்தில் ஏறுநடை கொண்டார்! "தந்தையார் தம்மை ஊர்வலத்தில் கண்டால் மேலே செல்ல விடமாட்டார்; பல பேர் முன்னி லையிலும் கண்டிப்பார், தண்டிக்கவும் செய்வார்; அச்செயல் எனக்குப் பழக்கப்பட்டது. எனினும் ஊர்வலத்திற்கு இடை முரிவாகவோ தடையுற்றதாகவோ ஆகிவிடக் கூடாது" என்பதால் தம் கடைப்பகுதி வருவதற்கு முன்னரே வேறொரு தெரு வழியே ஒதுங்கிச் சென்று கடைப்பகுதி முடிந்த தெருவில் தலைப் பட்டுச் செல்லும் உத்தியைக் கொண்டார். எடுத்த பணியைத் தொடுத்து முடிக்கும் சூழ்ச்சித் திறம் இளமையிலேயே வல்லார் இவர் என்பதன் சான்றுச் செய்தி இது!

*பள்ளி இறுதி வகுப்பில் இவர் பயிலுங்கால், “வாழ்வாங்கு வாழ” என்னும் தலைப்பில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதர் பேசிய பேச்சு வயப்படுத்திற்று; வாழ்வியல் வழி இதென விளக்கிற்று. அதுவே திருக்குறள் மீது ‘தீராக் காதலை’ உண்டாகிற்று!*

**கல்லூரி இடைநிலைக் கல்வி**

*பள்ளியிறுதிவகுப்பு முடித்த அரசமாணிக்கனார் ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் இடைநிலை வகுப்பில்* (Inter Mediate) *சேர்ந்து பயின்றார். கல்லூரியின் மாணவர் தலைவராக ஆனார். அப்பொழுது தமிழ்ப் பேராசிரியராகத் தமிழ் அரிமா சி. இலக்குவனார் இருந்தார். அவர் இருக்குமிடம் தமிழ் உணர்வு வீசும் என்பது நாடறிந்த செய்தி. இயல்பாகவே தமிழுணர்வில் தளிர்த்த அரசமாணிக்கர்க்கு இலக்குவனார் தொடர்பு உண்டா கியது யாப்பினுள் (வரப்புள்) அட்டிய (நிரப்பப்பட்ட) நீர் ஆயிற்று! அந்நாளிலே பெரியார், கி.ஆ.பெ. விசுவநாதம், பாவாணர், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் இலக்கிய மன்ற நிகழ்ச்சி களுக்கும் கல்லூரி விழாக்களுக்கும் அழைக்கப்பட்டனர்.*

**நூல் வெளியீடும் தூண்டலும்**

*வீரசைவ அழுத்தமிக்க வேலாயுதனார்க்குத் திருவள்ளுவர் மேல் அளவு கடந்த பற்றுண்டு. வணக்கத்திற்குரிய சிவப்பிரகாச அடிகளாரே, “எம் அடிகள் வெண்குறள் நேரடியிரண்டும் எம் தலையில் இருத்தும இறை” என்று பாராட்டும்பெற்றியது திருக்குறள் என்பதை உணர்வார். ஆதலால், திருக்குறள் மூலத்தை வெளியிட்டார். புலவர் குழந்தையைக் கொண்டு “வள்ளுவர் வாசகம்” என வகுப்பு நூல் வரிசை உண்டாக்கினார். “வள்ளுவர் இலக்கணம்” என வகுப்பிலக்கண வரிசையும் உண்டாக்கினார். இவை அகத் தூண்டலாய் இருப்பினும் “வாழ்வாங்கு வாழ வாய்த்த நூல் வள்ளுவம்” என்னும் கருத்தை கி.ஆ.பெ.வி. மொழிந்தமை அரசமாணிக்கர்க்குப் பசுமையான கருத்தாயிற்று. கடைப்பிடியாகக் கொள்ள வேண்டும்என்னும் தூண்டுதலும் ஆயிற்று!*

**அந்த ஒரு மணி**

*கல்லூரி மாணவர் தலைவராக மாணிக்கம் இருந்தார். அவர் தலைமையேற்க அமைச்சர் சி. சுப்பிரமணியனார்*

பொழிந்தார். கூட்டத் தலைவர் கூட்டம் முடியுமுன் கிளம்ப முடியுமா? கூட்டத்திற்கு வந்த விருந்தினரை அனுப்பாமல் புறப்பட முடியுமா? விழா இடத்தை ஒழுங்குபடுத்தாமல் உடனே போய்விடவும் முடியாதே! விழா ஏற்பாட்டுக்கு ஆகும் பொழுதில் ஒரு பாதியாவது விழா முடிவுக்குப்பின் ஒழுங் குறுத்தப்பொழுது ஆகுமே! அரசமாணிக்கர்க்குத் தந்தையார் இட்டுள்ள நிலையாணை, எக்கரணியம் கொண்டும் மாலை 5 மணிக்குள் கடைக்கு வந்து தீர வேண்டும் என்பது. இது புதுவதன்று; ஆறாம் வகுப்புக் காலம் தொட்டே நிலைபெற்று வரும் திட்டம்!

சுப்பிரமணியனார் கூட்டம் நிகழ்ந்த அன்று அரசமாணிக் கனார் கடைக்கு வர மாலை 6 மணியாயிற்று. ஒவ்வொரு நொடியும் விரைவுபடுத்திக் கொண்டும், தந்தையார் ஆணையையும், அவர் கடுமையையும் எண்ணிக் கொண்டும் கடனாற்றியும் ஒரு மணிப் பொழுது காலத் தாழ்வாயிற்று. காரணம் சொல்லுதல் என்பது வேலாயுதனார் விரும்புவதில்லை! கட்டளை ஒன்றே குறி!

மாணிக்கர் வரும்போது நாலைந்து மாணவர் கடையில் பொருள் வாங்கிக் கொண்டு இருந்தனர். மாணிக்கரை, "ஏன் பிந்தி வந்தாய்?" என்றார் "தனியே கண்டிக்கலாம்"; என்றோ, காரணம்கேட்டுத் தண்டிக்கலாம் என்றோ எண்ணி அமைந்தா ரல்லர்; பளார் பளார் என ஓங்கி அடித்து விட்டார்; எப்பொழுதும் அடித்தால் இடக்கை அடிதான்! அடிபட்ட மாணிக்கர்க்கு அவ்வலியினும் உள்வலியே மிக்காயிற்று! "என்னை உடன் மாணவர்களின் முன் அடித்து விட்டார்" என எண்ணினார்! கடையை விட்டார்! வீட்டுக்குப் போதலைத் தவிர்ந்தார்! கல்லூரி விடுதிக்குப் போய் விட்டார்! அங்கேயே நண்பர் களோடு உண்டு, அவர்களோடு தங்கிவிட்டார்!

வீடுசென்ற வேலாயுதனார் மைந்தனைக் கண்டிலர்; அவர்தம் அன்னையாரே வீட்டில் இருந்தார். இனிய துணைவியார், மனநோய் கொண்டு சென்னையில் மருத்துவமனையில் இருந்த காலம் அது! அதனால் செய்தியறிந்த பாட்டியார் துடித்தார். "ஆறாம் சினமும் எடுத்ததற்கெல்லாம்கண்டிக்கும் கண்டிப்பும் தண்டிப்பும் எங்கே கொண்டு போய்விடுமோ? என் ஏங்கினார்! எங்கும் தங்கமாட்டானே, எவ்வீட்டுக்கும் போக மாட்டானே," இந்த இரவில் எங்கேதான் தேடிக்காண்பது" எனத் திகைத்தார்.

*கல்லூரி விடுதியைத் தேடிவந்து அவர் கால்கள் நின்றன! மாணிக்கரைக் கண்டு கண்ணீர் பெருக்கினார்! மாணிக்கரும் பாட்டியின் கண்ணீரில் நனைந்து கண்ணீர் பெருக்கினார். "பாட்டியின் அன்புக்கு அளவே இல்லை! காலமெல்லாம் ஊட்டி வளர்த்த கை அந்தக் கை! பாசம் பொழியும் பல்நெஞ்சம் அவர் நெஞ்சம்" என்று இன்றும் பாராட்டும் மாணிக்கர், அந்த இக்கட்டான பொழுதில் எப்படித் தேம்பியிருப்பார்!*

*பாட்டியும் பேரனும் வீட்டையடைந்தனர். வீடு கவலை இருளில் கப்பிக் கிடந்தது. ஆக்கிய கறிகள் அப்படி அப்படியே இருந்தன! எவர்க்குப் பசி! எவர்க்கு நீர் வேட்கை! எவர்க்கு உறக்கம்! தீராக்கவலை இவற்றையெல்லாம் ஒரு சேரத் தீர்த்துக் கட்டிவிடும்போலும்!*

*தந்தையார் தம் செயலை எண்ணினார் போலும்! அமைதிப் பிழம்பாக இருந்தார். தம் அறியாச் சிறு சினத்தை யெல்லாம் 'படையல்' இடுவது போலவும் மாணிக்கரைத் தழுவினார். அண்ணார் சிவலிங்கம், தங்கை சரசுவதி, பாட்டி, தந்தை ஆகியவர்களுடன் அரச மாணிக்கர் அமர்ந்து ஒருங்கே உண்டார்! எந்த ஒரு நிகழ்ச்சியும் நல்ல படிப்பினையாக அமையுமானால், வரவேற்கத் தக்கதுதானே? "சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும், ஏமப் புணையைச்சுடும்" என்பதை வேலாயுதனார் தெளிவாக அறிந்து கொள்ளற்கே இந்நிகழ்ச்சி நடந்தது போலும்! ஏனெனில் அதன் பின்னர் அவர் இடக்கை, தம் மக்களைத் தண்டிக்க நீண்டதில்லை!*

**வணிகத்திற்குத் துணை**

*அரச மாணிக்கனார் இளம்பருவம் முதலே வணிகத்திற்கு உதவியாக இருக்க வேண்டிய குடும்பச் சூழலில் இருந்தார். காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று பொழுதுகளிலும் தந்தை யார்க்கு ஓய்வு தந்து உணவுக்குச் சென்றுவர உதவும் கையாளாக இருக்கும் கட்டாயம்நேர்ந்தது. அதனால், பள்ளிப் பாடங்களையும்சரி, கல்லூரிப் பாடங்களையும் சரி - வகுப்பில் பாடம் கேட்கும்போது ஊன்றிக் கேட்கும் கேள்வித் திறத்தாலும், தேர்வன்று படிக்கும் படிப்பாலுமே தேர்ச்சி பெற்று வந்தார்!*

*பருகுவன் அன்ன ஆர்வத்தனாகிக் கேட்டல் ஒரு கால்பங்குத் தேர்ச்சியாம்என்றும், நன் மாணவர்களுடன் பயிலும் பயிற்சியால் மற்றொரு கால்பங்குத் தேர்ச்சி அமையும்*

என்றும் இலக்கண நூலார் கூறுவர். மாணிக்கர்க்கு வகுப்பில் தேர்ச்சி மிக்க மாணவர் கூட்டுறவும், ஆர்வமாக வகுப்பில் கேட்கும் கேட்பும் ஆகிய இரண்டும் இணைதலால் ஐம்பது விழுக்காடு பெறுதலில் குன்றாதிருந்தார். பள்ளியிறுதி வகுப்பில் இவர் தம் விளையாட்டுத் தோழர்கள் பலரும் தோல்வி யுற்ற போதும் இவர் வென்றமை, "ஒற்கத்தின் ஊற்றாம் துணை" என்னும் கேள்விச் சிறப்பை விளக்கும்.

"எப்படியும் இவன் கடைக்கு வந்துதானே ஆக வேண்டும்? என்ன படித்தாலும்தான் என்ன? வாணிகக் கல்விதானே வேண்டும்" என்னும் திண்ணிய முடிவுக்கு வந்துவிட்ட வேலாயுதனார் இவர்க்கு வணிகப் பயிற்சி தரும் கருத்தையே மேற்கொண்டார்!

**வணிகப் பயிற்சி**

எட்டாம் வகுப்புப் படிக்கும் காலத்திலேயே தனியே சென்னைக்கு அனுப்பி வேண்டும் பொருள்களை வாங்கி வரச் செய்வார் தந்தையார் தொகை சிறு தொகையா? ஒரு முறை ஒன்பதாயிரம் உருபா தந்து அனுப்பினார்! எவ்வளவு நம்பிக்கை அது! தன் மகன்மேல் கொண்ட தெளிவு எத்தகையது! மாணிக்கனார்க்கு எப்படி அத்துணிவும் தெளிவும் உண்டாயின?

வேலாயுதனார் கணக்கு வகையில் மிகமிகக் கண்டிப்பானவர்! சிற்றுண்டி உண்டு வரப் பத்து உருபா, ஐந்து உருபா என்றே தருவார். ஆனால் கால் உருபா, அரை உருபாவுக்கு மேல் செலவிட வேண்டியிராது. ஏன்? அத்தொகையையே தந்து அனுப்பலாமே! அதைச் செய்வதில்லை வேலாயுதனார். "கொண்டு சென்ற தொகை, உண்டவகைச் செலவு, எஞ்சியது, கணக்கெழுதி ஒழுங்காக ஒப்படைக்கப்படுகிறதா?" என்னும் கண்காணிப்பு! இவற்றுக்கு, வேண்டும் அளவுச் சில்லறை பயன்படாவே! பணம் நிரம்ப இருக்க வேண்டும்! இருக்கும் போதில் சிக்கனம் பேண வேண்டும் செலவுக்குக் கட்டாயம் கணக்கு எழுதியாக வேண்டும் சல்லியாக இருந்தாலும் சரி; கணக்கு கணக்கே! இந்தக் கல்வி ஏட்டால் கிட்டுமா? கணக்கை மறந்தால் தவறாக எழுதினால் ஏடு கண்டிக்காதே! தண்டிக்காதே! இவற்றையுடைய தந்தையார் அல்லரோ பயிற்றுகிறார்.

கோயிலுக்குப் போவார் - குளத்திற்குப் போவார்; தேர்த் திருவிழாக்களுக்குப் போவார் வேலாயுதனார்! அப்பொழு

*தெல்லாம் மூத்த மைந்தர்சிவலிங்கனாரை அழைத்துச் செல்வார்! சந்தைக்குப் போக, கடனைக் கேட்க, கடனைக் கொடுக்க - ஏவுவார் மாணிக்கரை! செல்வம் கொடுத்துச் சீராட்டி வளர்த்தார் மூத்தவரை! கண்டிப்பில் வளர்த்தார் இளையவரை! ஏன் - வேலாயுதனார் தந்தையன்பில் வேற்றுமையுண்டோ? இல்லை! பின் ஏன்? இரண்டும் அன்பே! இருவேறு தனிவகை அன்பே - என்பதை உணர்வார், உணர்வார்!*

**ஒரு பாராட்டு**

*இராசமாணிக்கர்க்கு ஒரு பாராட்டுக் கிடைத்தது; தந்தையார் செவி குளிரக் கிடைத்தது; தாம் செய்து வரும், 'செயற்பாட்டின் விளைவு செவ்விதே' என்னும் நம்பிக்கை ஏற்படும் வகையில்கிடைத்தது. "உங்கள் பையன் வணிகத்தில் உங்களையும் வென்று விடுவான்; விளையும் பயிர் முளையிலே என்பது விளங்குகின்றதே!" என்று தாம் மதிக்கும் பெரும் பெரும் வணிகரும் பாராட்டும் சிறப்பைக் கேட்டார். அதனினும் ஒரு தந்தைக்கு இன்பம் தரும் செய்தி என்ன? 'முந்தியிருக்கச்' செய்த பேறு தாம் செய்ததே அன்றோ! அதனைப் பற்றி மகிழாமல் இருக்க முடியுமா?*

**ஒரு மதிப்பு**

*ஈரோட்டில் ஒரு பெருஞ்செல்வர்; இசுலாமியர்; பெரு வணிகர்; அவர்க்கோர் மைந்தர்; அரச மாணிக்கரும் அவரும் கெழுதகைத் தோழர்; அவ்வன்பால், வாய்த்த பொழுதுகளில் அரச மாணிக்கர், அவர்கள் இல்லம் சென்று உரையாடி வருவது வழக்கம். இவ்வழக்கத்தை வேலாயுதர் விரும்பினார் அல்லர்; "போகக் கூடாது" என மைந்தர்க்குத் தடைவிதித்தார்; தந்தை சொல்வழி நின்றார் மைந்தர்; இருபது நாள்கள், அந்நண்பர் வீட்டுக்குச் செல்லவில்லை! என்ன நிகழ்ந்தது?*

*அரசமாணிக்கரைத் தேடிக்கொண்டு வந்து விட்டார்! எவர், அவர்தம் நண்பரா? இல்லை! நண்பரின் தந்தையார் ஆகிய பெருஞ்செல்வர்! அவர் வருகை எளிதன்று! அவ்வருகை வேலாயுதரை வியப்பில் ஆழ்த்தியது! வரவேற்று என்ன? என வினாவினார். "நாங்கள் என்ன தவறு செய்தோம்; என் பிள்ளை என்ன பிழை செய்தான்; அரசமாணிக்கம் 20 நாள்களாக எங்கள் வீட்டுக்கு வரவே இல்லை. அவனைக் காணாமல் வருந்துகிறோம். எங்கள் பிள்ளை, நல்ல பிள்ளை. ஒருவனோடு உறவாடுகின்றான்*

என்று மகிழும் எங்களுக்கு அவன் பாராமை மிக வருத்தமாக உள்ளது; என்ன சொல்கிறீர்கள்?" என்றார்.

எதிர்பாராத இவ்வுரை கேட்ட வேலாயுதர் விதிர்விதிர்த்தார்! தம்மகனைக்குறித்து உள்ளுள் வியந்தார். "சரி; வேறொன்றும் இல்லை; வேலை மிகுதி; ஓய்வு ஒழிவு இல்லை; இனித் தடை யில்லமல் வரச் சொல்கிறேன்; பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்லி வழியனுப்பினார்.

மறுநாள், "நீ உன் நண்பன் வீட்டுக்குச் சென்று பேசி விட்டுவா" என்று தந்தையார் தாமே போகச் சொல்லியது மாணிக்கர்க்கு வியப்பாயிற்று! தடுத்தவர் அவரல்லரோ? விடுப்பவர் அவர் ஆகின்றாரே! அன்பர் வீட்டுக்குச் சென்ற போது தான் உண்மை விளங்கிற்று!

இக்குடும்ப அன்பு என்ன செய்தது? இந்நண்பரின் தந்தையார் அன்னையாரை மக்க மாநகர்க்கு அழைத்துச் செல்லுதற்குத் தாழ்த்தபோது, "நீங்கள் அழைத்துச் செல்லா விட்டால் என் பிள்ளை இராசமாணிக்கத்தை அழைத்துக் கொண்டு செல்வேன்" என்று தாய்மையுரை கூறச் செய்தது. அரசமாணிக்கர் திருமணத்திற்குத் தம் அன்னையார் மக்காநகரில் இருந்து வாங்கிக் கொண்டுவந்திருந்த புனித வளையலைத் தம் துணையுடன் வந்து வழங்கிச் செல்லும் ஊர் வியக்கும் ஒரு பெரும் புரட்சிச் செய்கையை ஆக்கிற்று! அன்பு நண்பு என்ன தான் செய்யாது? என வியப்புறுத்தும் குடும்ப நட்பாக என்றும் திகழ்வதாயிற்று.

## இடைநிலைத் தடை

இடைநிலை பயின்ற அரசமாணிக்கர் தேர்வுக்கு முன்னரே படிப்பை நிறுத்தி வணிகத்தில் தந்தையாருடன் இணைய நேர்ந்தது. அப்பொழுது இவர்அகவை பதினெட்டே. தந்தையார் உடல் நலக் குறைவு இத்தடையை ஆக்கிற்று எனினும் கல்வி என்பது நான்கு சுவர்க்குள் மட்டும் அடங்கியதில்லையே. நூல் வெளியீட்டுப் பணி என்பது கல்வியின் மூலப்பணியும், முழு நிறைவுப் பணியும் அல்லவோ!

## தந்தையார் தகவுகள் :

வேலாயுதனார் வட்டி வாங்குதலை விரும்பினார் அல்லர். எவ்வளவு தொகை இருப்பினும் அதனை வைப்பகத்தில் போட்டு

வைத்தாலேயன்றி வணிகர்க்கோ பிறர்க்கோ வட்டிக்குத் தருதலை விரும்பினார் அல்லர். இக்கடைப்பிடியால் அவர்க்கு வேண்டும் போதெல்லாம் தட்டில்லாமல் பணத்தை எடுத்துக் கொள்ளவும், நாணயமாக நடந்து கொள்ளவும் முடிந்தது.

அவர்தம் மற்றொரு கருத்து 'எளிமை' யாகும். "எளிய வாழ்வே இனிய வாழ்வு" எனத் தெளிந்து தேர்ந்தார். "இடம்பட வீடெடேல்" என்னும் ஔவை மொழியைப் போற்றினார். பெரிய வீடு என்றால் கூட்டிப் பெருக்க வேலையாள் வேண்டும்; இடம் பெருகின் தேவையற்ற பொருள்களை வாங்கி நிரப்பும் இடர் உண்டாம். வேண்டாப் பொருள்களை விலைக்கு வாங்கி வைப்பது வீண்; இவற்றுக்கு அடிப்படை பெரிய வீடு; ஆதலால் சிறியவீடே போதுமென வாய்ப்பு இருந்தபோதும் அமைந் திருந்தார்.

**வணிகவிரிவும் உயர்வும் :**

வணிகத் தேர்ச்சியும் தமிழ்ப்புலவர் தோழமையும் வணிகர்கள் நம்பிக்கையும் பொதுமக்கள் நல்லெண்ணமும் ஒருங்கே கொண்ட வேலாயுதரின் வணிகம் ஈரோட்டில் நடந்தாலும் சேலம் கோவை மாவட்ட அளவும் விரிந்து சென்றது. கிளை வணிகர்களும் உருவாகி மொத்தமாக வாங்கி விற்பனை செய்யும் நிலையும் உண்டாயிற்று.

ஒரு சொல் ஒருவர் சொல்லுமாறு நடந்து கொள்ள மாட்டார் வேலாயுதர். பழிச்சொல்லுக்கு மிக நாணும் அவர் "ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல நாணுடைமை மாந்தர் சிறப்பு" என்னும் குறளுக்குச் சான்றாக விளங்கினார்.

எப்பொழுதும் தம் பொறுப்பிலே உள்ள ஓர் அறையின் திறவையை (சாவியை) யும், தூவலையும் வைத்துப்பழகுதல் வேண்டும்; திறவு தூவல் இல்லாமல் இருத்தல் கூடாது என வலியுறுத்துவார். அவ்வாறே அவர் வாழ்ந்த நாளெல்லாம் அதனைப் போற்றினார்.

**பாட்டியார் பிரிவு :**

தம் அன்புத் துணைவியார் வெங்கட்டம்மாள் மனநோய் வாய்ப்பட்டுப் பத்தாண்டுகளாக மருத்துவ மனையில் இருக்க நேர்ந்தது. அந்நிலையில் முதிய பாட்டியாரின் சமையலை நம்பி வீடு இருந்தது! வீடு என்றால், 'வீட்டார்' மட்டும் உடைய

வீடன்றே! எந்நாளும் விருந்தும் வேற்றும் புலவரும் வணிகரும் வந்து செல்லும் மனை ஆயிற்றே! முதிய பாட்டியார் என்ன செய்வார்?

“இப்படி எவ்வளவு நாள்தான் இவன் காலம் தள்ளப் போகிறானோ! நான்தான் எவ்வளவு காலம் உழைப்பேனோ? இவன் இன்னொரு திருமணத்தைச் செய்து கொண்டால் என்ன?” என்று பலரிடமும் கூறிக் கூறி அலுப்புற்றார்! நேரிலும் கூறினார்! பெண்ணும் பார்த்துவிட்டார்! வேலாயுதனார் உள்ளம் அசையவே இல்லை!

ஒருநாள் இரவு - கற்பலகை (சிலேட்டு) செய்யும் ஒரு குழுமத்தைச் சேர்ந்தவர் நேரங் கடந்து வந்தார். உணவை முடித்து அனைவரும் படுத்து விட்டனர். வந்தவர் உண்ணாமல் வந்தார். பாட்டியார்தாம் எழுந்து ஏதாவது செய்ய வேண்டும்! எழுந்து தோசை போட்டார். போட்டுக் கொண்டே சொன்னார்; “பெண் இல்லாத வீடு இது; இவனை ஒரு பெண்டாட்டி கட்டிக் கொள்ளச் சொல்வதுதானே! இவ்வளவு நேரங் கடந்தும் உரிமையோடு வருபவர், இவனுக்கு இந்த அறிவுரை கூறலாமே! என்ன சொன்னாலும் கல்லாக இருந்து அசைய மாட்டேன் என்கிறான்” என்று தம் வெப்பத்தை யெல்லாம் தோசை சுடும் வெப்பத்தோடே கொட்டித் தீர்த்தார்! வேலாயுதர்க்குக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன செய்தி! “அவர்கள் பாடு அவர்களுக்கு” என்று அமைந்தார்! தாம் பெற்ற மக்களை உயிரெனக் கருதிய அன்புள்ளம் தாயின் வேண்டலை ஒதுக்கி உறுதியுடன் வாழ்ந்தது அக்காலத்தில் அரிதினம் அரிதாம்.

**செல்லையாவும் நல்லையாவும் :**

வேலாயுதர்க்குத் தம்பியார் செல்லையா என்பார். அவர் பேராயக் கட்சி சார்ந்தவர்; அழுத்தமான தொண்டர்; இயக்கப் பணியில் ஈடுபட்டு அரசியல் குற்றவாளியாய், ஈரோட்டில் இருந்து அலிபூர் சிறைக்குச் செல்லும் தண்டனைக்கு ஆட்பட்டார். ஈரோட்டில் இருந்து சென்னை வந்து நடுவண் நிலையத்தில்வண்டி யேறி அலிபூர் செல்ல வேண்டும். வேலாயுதரும் சென்னை வரை தம்பிக்காகத் தனியே உடன் சென்றார். தம் தம்பிக்கும் அவரைச் சேரந்தவர்க்கும் தாம் ஒரு வேளை உணவு தர வேண்டும் என விரும்பினார். தம் விருப்பைச்

சிறையாளர்களைக் கொண்டு செல்லும் காவல்படைத் தலைவரிடம் உரைத்தார். "அரசு சிறைப்படுத்திக் கொண்டு செல்லும் சிறையாளர்களுக்குப் பிறர் வழங்கும் உணவை ஏற்பது இல்லை" என மறுத்தார்அவர். ஆனால், வேலாயுதனார், "தம் தம்பி சிறையாளர்களுள் ஒருவர்; அவர்க்கு உடன்பிறந்தார் என்னும் நிலையில் உணவளிக்க விரும்பும் நான், அவரோடு சிறையுற்றவர் அனைவரையும் உடன்பிறப்பாகக் கருதுதல் முறைமை; ஆதலால் அருள் கூர்ந்து உதவ வேண்டும். உணவுக்கு நீங்களே ஏற்பாடு செய்யலாம்; அத்தொகையை முழுமையாக யான் வழங்கி விடுவேன்" என்று உறுதியுடன் தெளிவாகக் கூறினார்.

வேலாயுதனாரின் தோற்றப் பொலிவு அருள் தவழும் சொல்லும் அலுவலரை வயப்படுத்தின. அவர் விருப்பம் போலவே உணவு வழங்க ஆணை தந்தார்; உணவையும் அவ்வுணவை வழங்கும் அருமையையும் உணர்ந்து இப்படியும் பேருள்ளம் உண்டோ! உண்டோ? என்று புரிப்புடன் பாராட்டினார்! சிறையுற்ற செல்லையா ஆங்கிருந்தோர் அனைவராலும் நிறையுற்ற பேற்றாளராம் சிறப்புற்றார்! தமையனார் செய்கை தம்பியார்க்கு எத்தகைய பெருமையைச் சேர்த்து விட்டது! வீட்டு வாழ்வின் விழுப்பத்தால் கட்டப்படும் மாளிகையே நாட்டு வாழ்வு என்பதை வேலாயுதர்தம் செய்கையால் மெய்ப்பித்தார். 'ஈத்துவக்கும் இன்பம்' காணும் உள்ளம், 'ஒரு பொட்டலத்தை, வாங்கி, ஒருவர்க்கும் தெரியாமல் தந்து, மறைந்து கொண்டு உண்ணுமாறு வைக்குமோ?'

**வழிவழி நல்லையா :**

அதே சென்னையில் ஒரு பால்; நாள் : 10-9-1989. பாவாணர் நினைவு நூலகத்தில் குறளாய விழா! அவ்விழாவில் கலந்து கொண்டோர் - பொழிவாளர்கள் மட்டுமோ - கேட்பாளரும் கூடிய அனைவருக்கும் பெருவிருந்து! சிறந்த விடுதியிலே ஏற்பாடு! சில ஆயிரம் செலவு! ஒவ்வொருவர் இலையையும் பார்த்து ஒவ்வொரு வர் முகத்தையும் பார்த்து ஆரா அன்பில் ஊட்டும் தாயென உண்பிப்பு! வேலா அரச மாணிக்கனார் செயல் இது!

ஒருவர் சொன்னார்: "எதிர்பார்த்தற்கு மேல் வட்டம்! எதிர்பார்த்தற்கு மேல் செலவு"

“திருப்பதியில் கட்டுக் கட்டாகப் பணத்தாள் போடுகிறார்கள்! அவர்களுக்கு வேண்டுமானால் நிறைவாக இருக்கலாம்; இப்படி அகமும் முகமும் மலர உண்கின்ற இன்பத்தைக் காண முடியுமா? இந்த இன்பத்தை நோக்க, இது ஒரு செலவாகுமா? இப்பேறு கிடைக்க வேண்டமே” என்றார். எவர்? அரசமாணிக்கர்! வேலாயுதர் எட்டடி! அரச மாணிக்கர் பதினாறடி! சரிதானே!

**இராவண காவியம் :**

1925- இல் தந்தை பெரியார் தன்மான (சுயமரியாதை ) இயக்கம் தொடங்கினார். அதில் ஆர்வத்தால் சேர்ந்து பெரியாரின் அணுக்கத் தொண்டராக விளங்கியவர் புலவர் குழந்தை. வேலாயுதனார்க்கும் குழந்தைக்கும் அகவை வேறுபாடு ஈராண்டுக்கு உட்பட்டதே. வேலாயுதனார் மூத்தார்; குழந்தையார் இளையார்; இவர்கள் தொடர்பு உண்டாகியதும் வளர்ந்ததும் அறிந்தனவே.

புலவர் குழந்தை ‘இராவண காவியம்’ இயற்றினார். தன்மான இயக்கத் தூண்டலின் விளைவாக அமைந்த நூலைத் தந்தை பெரியாரிடம் எடுத்துச் சென்றார். கம்பன் பாட்டுப் போலவே அமைந்திருந்த இராவண காவியத்தைக் கண்ட பெரியார் உவந்தார் அல்லர்; உவர்ப்புற்றார்; கையிலே எடுத்த சுவடியைக் கீழே போட்டு விட்டு, “கம்பன் எழுதிய இராமாயணம் செய்து வரும் தீமையை ஒழிக்கவே பெரும் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. இந்த நிலையில் இது வேறு வேண்டுமா? வேறு ஏதாவது எழுதக் கூடாதா?” என்றார்.

‘அழகு! அழகு!’ எனத் தாம் பெற்ற பிள்ளையைக் கொண்டு போய் வாழ்த்துக் கேட்ட இடத்திலே, இதன் முஞ்சியைப் பார் என்று முகத்திலே அறைந்ததுபோல் ஆயிற்று குழந்தையார்க்கு! அதனால், சோர்ந்த முகத்துடனும் தளர்ந்த நடையுடனும் வேலாயுதனார் பொத்தகக் கடைக்கு வந்தார்.

“என்ன முகவாட்டத்தோடு இருக்கிறீர்களே” என்றார் வேலாயுதர். நிகழ்ந்ததைக் கூறினார் புலவர்; அவர் நிலைக்கு வருந்திய வேலாயுதரிடம் நீங்களாவது வெளியிடுங்கள் என்றார் புலவர். “நான் வீரசைவன்”; இராவண காவியத்தை வெளியிட்டால் உலகம் என்ன பேசும் என்று தயங்கினார். உடனிருந்த புலவர் சிவ. குப்புசாமியார், இராவண காவியத்தை நீங்கள் வெளியிடாமல் எவர் வெளியிடுவது? இராவணனைப் போல ஒரு வீர சைவன் உண்டா? அந்தவீர சைவன் நூலை வீர சைவன் வெளியிடுவது

தானே பொருத்தமானது; இதனை மறுத்துக் கூறுவார் எவர்?" என்று கூறி வேலாயுதரை நூல் வெளியிடத் தூண்டினார். இராவணன் வீரசைவன் என்பதை அறிந்து கொண்டதாலும், புலவர் குழந்தையின் கவலையைத் தீர்க்கக் கருதியதாலும், குப்புசாமியார் வற்புறுத்தலை மறுக்க விரும்பாமையாலும், தாமே நூலைவெளியிட ஏற்றுக் கொண்டார். காருவாப் போதிலே , வெள்ளுவாக் காலூன்றியது போல் களிப்புடன் சென்றார் புலவர்.

இராவண காவியத்தை அச்சிட வேண்டும் தக்கவர்களிடம் முன்னுரை வாங்க வேண்டும். இரண்டு கடமைகளும் முன்னின்றன!

பணமிருந்தால் அச்சிடற்கு என்ன? என்று தோன்றலாம்! பணம் இருந்தால் மட்டும் சில செயல்களைச் செய்துவிட முடியாது!

கம்பன் புகழ், கொடி கட்டிப் பறக்கும் தமிழகம்! இராம வழிபாடு, வீடுதோறும் வீதிதோறும் உலாவரும் தமிழகம்! அந்த இராமன் புகழைக் குறைப்பது மட்டுமல்லாமல், 'இரக்கமிலா அரக்கன் என இகழப்படுபவன் ஆகிய இராவணன் இரக்க முடையான் என்றும் இராமனே இரக்கமிலா அரக்கன் என்றம் சொல்லும் இராவண காவியத்தை எத்தனை பேர் துணிந்து அச்சிட வருவர்?

'பிராமணர்கள்' இதனை வெளியிட மாட்டார்கள்; 'வீரத் தமிழர்களே வெளியிடுவார்கள்' என எழுந்த நம்பிக்கையால் எத்தனை எத்தனை அச்சகங்களில் ஏறி இறங்கினர்! அச்சிட ஏற்பார்இல்லை! நம்பிக்கையற்றுப் போய்ச் சோதி அச்கம் என விளங்கிய ஓரச்சகத்திற்குச் சென்றனர். இராவண காவியம் என்றனர். "இராம காவியம் ஆயினும் சரி; இராவண காவியம் ஆயினும் சரி; அச்சிட்டுத்தருகிறேன்" என்றார் அச்சக உரிமையாளர் ஐயர்! நம்பாமல் தலை சுற்றியது வேலாயுதர்க்கு! தம் காது கேட்கச் சொல்லும் சொல்லை - கடமை உணர்வோடு சொல்லும் சொல்லை - நம்பாமல் என்ன செய்வது! முன் பணம் கொடுத்தார்! வேலை தொடங்கியது! விரைந்து முடிந்தது.

திருப்பூரிலே ஓரன்பர்; வேலாயுதர்க்கு வேண்டியவர்; கழக ஈடுபாட்டாளர். இராவண காவிய வெளியீட்டுப் பொருளுதவிக்கு முன் வந்தார். "நம்புகழ் எஃ. ஆர். சுப்பிரமணியன்" என்று பாவேந்தர் பாராட்டுப் புகழாளரானார். இடர் ஒவ்வொன்றாய்

*விலகினாலும், அறிஞர் அண்ணாவினிடம் முன்னுரை வாங்க வேண்டாம் என்னும் எண்ணத்தில் காலம் சென்றது.*

*அண்ணா சென்னையில் இருந்தார். புலவர் குழந்தையும் வேலாயுதரும் மீண்டும் சென்னை சென்றனர். மூன்று நாள்கள் தங்கினர்; அண்ணாவுக்கு ஓய்வு ஒழிவு இல்லை. புலவர் குழந்தை மட்டுமே மூன்றாம் நாள் அண்ணாவைப் பார்த்துப் பேசினார். மறுநாள் பார்க்கலாம் என்றார் அண்ணா! புறப்பட்டுப் போகும்போது, "நீங்கள் மட்டும் தானே வந்தீர்கள்" என்றார் அண்ணா. இல்லை. வேலாயுதனாரும் வந்துளார்; அவர்தாம் நூலை வெளியிடுகிறார் என்றார் குழந்தை.*

*தந்தை பெரியார் இல்லத்தில் அண்ணா தங்கியிருந்த போது, அடுத்த வீட்டில் இருந்த வேலாயுதனாரை அறிவார், அவர், சுறுசுறுப்பான வணிகரே! அவரைக் காக்க வைத்தால் வணிகத்திற்கு நல்லது இல்லையே! உடனே எழுதித்தருகிறேன். வாங்கிக் கொண்டு செல்லுங்கள்" என்றார். அவ்வாறே அன்றே எழுதித்தந்தார். எல்லாம் இனிதாய் நிறைய ஈரோடு திரும்பினர்.*

*1946-இல்இராவண காவியம்வெளிவந்தது. 1948- இல் தடையுண்டது! புகழ் பரப்பும் வழிகளுள் ஒன்று தடைப்படுத்துதல் போலும்!*

**தீரன் சின்னமலை**

*வேலாயுதனார் கடைக்கு ஒரு நாள் 6 அடி, 6 அடி உயரமுள்ள இருவர் வந்தனர். இருவரும் அண்ணன் தம்பியர்; எவரையும் எறிட்டுப்பார்க்க வைக்கும் தோற்றப் பொலிவு; கடையில் வேலாயுதனார் இருந்தார்.; புலவர் குழந்தையும் இருந்தார். அவர்களுக்கு இவர்கள் இருவருமே பழக்கம் உடையவர்களே! அவர்கள் இருவரும் தீரன் சின்னமலையின் வழி முறையைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் ஒருவர் "இந்தப் புலவன் எதற்கும் ஆகாதவன்" என்றார்! புலவரும் வேலாயுதரும் திகைத்தனர். அவர் தொடர்ந்தார்: "வெள்ளைக்காரனை எதிர்த்தவன் தீரன் சின்னமலை; வெள்ளைக்காரனைப் புகழ்ந்து வாழ்ந்தவன் பட்டக்காரன்; அவன் சின்னமலையின் புகழை வெளிப்படாமல் மறைத்து விட்டான். இவன் பட்டக்காரனைப் புகழ்ந்து பாடுகிறான். சரியான புலவன் என்றால்சின்னமலையை அல்லவா பாட வேண்டும்" என்றார். "சின்னமலையைப் பாடிப் புத்தகம் போட்டால் விலை போகுமா?" என்றார் புலவர். "விற்றுப்*

பிழைப்பதற்காகவா பாடுவது? வீரம் வேண்டாம்" என்றார் வளர்ந்தார்!

வேலாயுதனார் உள்ளத்தில் ஓர் ஒளி பளிச்சிட்டது! "இவர் சொல்வது சரிதான். தீரன் சின்னமலை என்னும் பெயரால் ஒரு வரலாற்று நூலை எழுதுங்கள். நாம் அதனைத் துணைப் பாட நூலாக்கிப் பரப்பலாம் என்றார். அப்படியே நூல் எழுதப்பட்டது. துணை நூலும் அயது! நாடு தழுவிய அளவில் பாடமாக விளங்கியது. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் இந்நாள் இயங்குவதன் மூலச் செய்தி, இப்படி முகிழ்த்தாம் :

**இங்கும் அங்கும்**

தந்தையார் ஈரோட்டில் இருப்பார்; மகனார் பெரும்பாலான காலம் சென்னையில் இருப்பார் ஏன்?

நூல் அச்சீட்டுப் பொறுப்பை எல்லாம் ஏற்றுக் கொள்ளும் கடமை மைந்தர்க்கு உண்டாகியது! பள்ளிப் பாடநூல்களை, பொது நூல்கள், என்பனவெல்லாம் அச்சிடல், மெய்ப்புப் பார்த்தல் என்னும் பணிகளுக்குத் தம்மை ஒப்படைத்துக் கொண்டார். இப்பணிக்கு உற்ற உதவியுடனும் உழுவலன் புடனும் விளங்கியவர் அறிஞர் மா. இராசமாணிக்கானரின் அளியர் புலவர் பு. செல்வராசனார் என்பார்.

பள்ளிப்பாட நூல்கள், துணை நூல்கள், இலக்கண நூல்கள் என நூற்றுப் பதினேழு நூல்கள் வெயிட்டுத் தனி ஓர் இடத்தைப் பற்றிக் கொண்ட 'சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்' இராவண காவியத்தை மட்டும் வெளிப்படுத்திற்று இல்லை. திருக்குறள் குழந்தையுரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் குழந்தையுரை, நீதிக் களஞ்சியம், யாப்பதிகாரம், தொடையதிகாரம், கொங்கு நாடும் தமிழும், கொங்குக் குலமணிகள், குழந்தைப் பாடல்கள் எனப் பலவற்றை வெளியிட்டது. அரசியலரங்கம் என்னும் நூல் வேலா அவர்களே புலவர் குழந்தை அவர்களைத் தூண்டி எழுதிய நூலாகும். அறிஞர் வி. பொ. பழனி வேலனார் எழுதிய வேலா பிறமொழி தமிழ் அகர முதலியையும் எழுதி வெளிக் கொண்டு வந்தது. சிந்தனைச் செம்மல் ஆனந்தனாரின் வடிவிழந்த வள்ளுவம். வள்ளுவர் பொருளியல் கொள்கை முதலியவற்றையும் பிற்காலத்தில் வெளியிட்டது.

"அச்சப்பணியோ நச்சுப் பணியோ" என்பது பழமொழி. அப்பழமொழி மெய்ப்புப் பார்த்தல்சிக்கலால் ஏற்பட்டதாகும்.

*ஆனால் அப்பணியை நச்சும் பணியாக ஆக்கிக் கொண்டவர் வேலா. அத்தனை மெய்ப்புகளையும் தாமே பார்க்கவும், பிறர்க்கு வழிகாட்டவும் தேர்ச்சி பெற்றார். நூலாசிரியர்கள் பேரா சிரியர்கள் விடும் சொற்றொடர்ப் பிழை, சந்திப்பிழை முதலிய வற்றைத் திருத்தும் தனிப்பெரும் திறமும் பெற்றார். தாம் சென்னையில் தங்கிய காலத்தில் அகராதி முதலிய கருவி நூல்களைக் கையகமாகக் கொண்டிருந்தமையால் அவை பிறர்க்கும் உதவியாய் அமைந்தன.*

**திருமணம்**

*அரசமாணிக்கர்க்கு அகவை 24. அவர்க்குத் திருமணம் செய்து அவாவினார், வேலாயுதனார். குடும்பத்திற்கும் பொறுப்பு ஏற்று நடத்தத்தக்க பெண்மணியார் வேண்டியிருந்தது. தக்க இடத்தைக் கருதினார். தம் பெரியப்பா மகளும் அத்தையின் மருமகளுமாகிய செல்லம்மாள் பவானியில் இருந்தார். அவர்தம் அருமைத் துணைவர் வீ.ந.சிட்டிலிங்கம் என்பார். இவர், ஓட்டன் காலந்தொட்டே கொடுக்கல் வாங்கல் கொண்ட உறவுக் குடி உரிமையினர். இனிய அன்பினர்; அறத்தின் வாழ்வினர்; வழிவழித் தொடர்பினர்; அவர்கள் செல்வியார் சந்திரா என்பார். குடிவழிச் சீரெல்லாம் ஒருங்கு கொண்டவர்; எட்டாம் வகுப்பு வரையும் கற்றுத் தெளிந்தவர்; தம் குடும்பத்துக்குத் தக்க குணச் செல்வியர்; அவர்க்கும் அரச மாணிக்கர்க்கும் சீருற மணம் நடாத்திச் சிந்தை மகிழ்ந்தனர். திருமணம் நிகழ்ந்த நாள் 19-11-1961.*

**மனை நலம்**

*மனைக்கு விளக்காகிய சந்திரா அம்மையார், சமையல் திறத்திலும் தேர்ச்சி மிக்கு விளங்கினார். பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து பழகியமையால் வருவிருந்தோம்பும் தகைமையில் தலை நின்றார்! வீட்டுப் பொறுப்பை முழுமையாக ஏற்று நடத்தும் பொறுப்பமைந்த புகழ்த்துணை வாய்க்குமானால், ஆடவர் தம் கடமைகளில் முழுமையாக ஈடுபடலாமே! தலைநிமிர்ந்து நடக்கும் தகவு, வாழ்க்கைத் துணை வழங்குவதால் ஏற்படுவதே என்னும் வள்ளுவம் எத்தகைய தேர்ச்சிமிக்கது!*

"உடம்போ டுயிரிடை என்னமற் றென்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு"

*என்னுமாறு இல்லறம் இனிதின் இயல்வதாயிற்று.*

*கணவன் மனைவியர் வாழ்வில் எத்தகைய முழுதன்பு ஊடகமாக இருப்பினும் கருத்து வேறுபாடு இல்லாமல் தீராதே. அத்தகு வேளைகளில் உண்டாகும் வாழ்வமைதியை மாணிக்கர் கூறுகிறார். அம்மா நீ இப்படி எண்ணுகிறாய்; நான் அப்படி எண்ணுகிறேன்; இவற்றுள் எது சரி என்பதை உன் தோழியர், உறவாட்டியர் என இன்னார் இன்னார் உள்ளார்களே நாம் அவர்களிடம் கேட்டுக் கொள்ளலாம் என்பேன்; வேண்டாம்; வேண்டாம்; யாரிடமும் கேட்க வேண்டாம்; சொல்ல வேண்டாம்; இது நம்மிருவர் தொடர்பான செய்தி. நீங்கள் சொல்வதேசரியானது என ஒப்புக் கொள்கிறேன்; இனி எதற்கு மற்றவர்களிடம் கேட்க வண்டும்? என்பார்; அவ்வேளையில் "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று" என்னும் வள்ளுவத்தின் முழுதுறு விளக்கமும் கிட்டிய தளிர்ப்பு உண்டாகும் என்கிறார்.*

**வேலாயுதர் பெரும்பிரிவு**

*பாட்டியாய் இருந்தாலும் தாயின் தாங்குதல்அனைத்தும் தாங்கிய இலிங்கம்மாள் 18-12-60 ஆம் நாள் இயற்கை எய்தினார். குடும்பத் தந்தையாய் - தாயாய் - ஆசானாய் - வழிகாட்டியாய் - விளங்கிய வேலாயுதனார்க்கு அகவை 60 ஆம் தொடக்கம். ஒரு சிறு மூதாளரே அகவையால்! பெருமூதாளர் அல்லர்! துணை வியார் மனநலம் சீர் பெற்றுக் குடும்பப் பொறையைத் தாங்கும் ஆற்றலும் பெற்று மகிழ்வு தந்தார் அந்நாள். ஆயினும் அம்மகிழ்வு குடும்பத்தில் ஞநடா வகையில் 9-11-1963 ஆம் நாள் பிறந்தது! அந்நாள், வேலாயுதர் 'பேரா இயற்கை' யுற்ற நாள் ஆயிற்று. ஒளிமிக்க இந்தக் கட்டுடல் எப்படி வீழ்ந்தது. என்று திகைக்கும் வகையில் வீடுபெற்றால் வேலாயுதனார். அரச மாணிக்கனார் அகவை அப்பொழுது 26!*

**தொழில் நிலை**

*சிவலிங்கப் புத்தக விற்பனை நிலையக் கட்டடம் அண்ணார் சிவலிங்கனார் உடைமை ஆயிற்று.*

*குடியிருந்த வீடு அரசமாணிக்கனார் உடைமையாயிற்று. வணிக நிறுவனம் வேண்டுமே! வேலாநிறுவனம் 1965இல் எழுந்தது. அப்பொழுது அரசமாணிக்கனார் அகவை 28. குடும்பத் தொழில் அச்சீடு; புத்தகம், பேரேடு சிட்டை முதலியன உண்டாக்கம்; விற்றல்; நாட்காட்டி வெளியிடல் என ஒரு நிலை*

சார்ந்த பல நிலையாய் விரிந்து; அப்பணித் திறத்தோடே பொதுப் பணியும் தொண்டும் ஊடையும் பாவுமாய் உருவாகலாயின!

வேலா அரசமாணிக்கனார் நிறுவனம் தந்தையார் பெயரால் 'வேலா' ஆயது. பெயர் சூட்டப்படுபவர் பேரன், பேர்த்தியர்; தந்தை பெயர்கொண்ட அரசமாணிக்கனார் இனி 'வேலா எனவே சுட்டப்பெறுகிறார்.

வேலாவின் பெயரை இதுகாறும் அரசமாணிக்கர் எனக் கூறிவந்தோம். அவரது பள்ளிப் பெயர் ஈ.வே. இராசமாணிக்கம் என்பதுஅவர் தனித்தமிழ்ப் பற்றாளர்களால் அரசமாணிக்கம் என வழங்கப் பெறுகிறார். அவர்க்கமைந்த பள்ளிப் பெயர்க்கு மன்னர் ஒரு பெயர் உண்டு. பிள்ளைப் பெயராகச் சூட்டிய பெயர் அது; தாத்தாவின் பெயர்; அப்பெயர் 'அர்த்த நாரி' என்பது. பெரியவர் பெயரைச் சொல்லி அழைக்கும் வழக்கம் எக்குடும்பத்திலும் இல்லை. அதனால், பள்ளிக்குச் சுட்டப்பட்ட பெயரே நிலைத்தது. அப்பெயரும் தனித்தமிழ் ஆர்வலரால் தமிழ் வடிவுற்றது. அது 'வேலா' நிறுவனம், வேலா நிலையம் வேலா அங்காடி, வேலா பதிப்பகம் என்னும் பெயரீடுகளால், ஆகுபெயர் சார்த்தி அரசமாணிக்கனாரைக் குறிப்பதாயிற்று. இப்பொழுது வேலா என்றால் சாலும். நூல் தொடக்கச் செய்தியே வேலா தானே! வேலுக்கும் வெற்றிக்கும் உள்ள தொடர்பு எத்தகைய தொடர்பு! வேலும் வெற்றியுமாக அல்லவோ பொருளுணர்ந்து புறப்பட்டது குறளியம்!

**செயல் திறம்**

பெயர்க்குறிப்பு நிற்க, நாம் வாழ்வுக்குச் செல்வோம்.

வேலா சுறுசுறுப்புக்கு இணை, அவர் சுறுசுறுப்புத்தான்! சோர்வு என்பது அவர் கண்டறியாதது. ஊணை மறப்பார்; உறக்கம் மறப்பார்; ஓய்வை மறப்பார்; உழைப்பிலே ஊன்றுவார். எவரும் அறிந்த,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என்பதற்கு ஒருமொத்த எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் வேலா!

*அவ்வுழைப்பின் பயன் நிறுவன வளர்ச்சியாய், பெருக்கமாய், கொடை வளமாய் - குலவி வருதல், நெருங்கினார் அனைவரும் அறிந்து கொண்டுள்ள செய்தி!*

**பொதுப்பணி**

*தம் முப்பத்தைந்தாம் பிறந்த நாளிலே ஒரு தெளிந்த முடிவு எடுக்கிறார் வேலா.*

*“வணிகப் பணியோடு பொதுப்பணியிலும் ஈடுபடுதல் வேண்டும். இதுகாறும் என் வாழ்வில் நிகழ்ந்தன எவை? நிகழ வேண்டுவன எவை? அல்லவை அகற்றி நல்லவை கொள்ளலே என் கடைப்பிடி! அவர் எப்படி? இவர் எப்படி? என்று எண்ணு வதன்று என் கடன்! எவர் எப்படியாயினும் நான் எப்படி இருத்தல் வேண்டும் என்பதே என் குறிக்கோள். பிறரினின்று என்னைத் தனித்துக் கொள்ளுதல் நோக்கமன்று. தனித்தன்மையுடையனாக என்னை நிலைபெறுத்தல் வேண்டும்” ஒவ்வோர் ஆண்டுப் பிறப்பும் ஓராய்வுப் பொருளாய் அமைந்தது. இதனை விட்டு விட வேண்டும் என்று வேண்டாப் பழக்கங்கள் ஒவ்வொன்றாய் விடவிட, அவ்விடத்து வேண்டும் நல்லவை புகப்புகக் கண்டு களித்தார். ஒளி புகப் புக இருள் அகன்றோடுதல் போல், மனமாசு அகல அகலத் தூய்தன்மைகள் நிரம்புதல் தெளிந்தார். பின்னாளில் “மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்” எனவும், “நன்றின்பால் உய்ப்ப தறிவு” எனவும் சொல்லும் மறை மொழி களுக்குரிய மூலப்பகுதிஇப்படி முளையிடுவதாயிற்று.*

**அன்னையார் பிரிவு**

*1977 இல் தந்தையார்க்கு நினைவு ஏற்பாடு! அன்னையார் தம் அருமைத் துணைவர் புதைவிடத்திற்கு இரண்டு நாள்களின் முன்னர்ச் சென்று வழிபாடு செய்து வருகிறார். நினைவு நாள் அன்று காலையில் குளிப்பறைக்குப் போய் நீராடி வருகிறார்! பொழுது காலை 5 மணி. தம் உயிர் கொண்டு தம் கணவரைத் தேடிச் சென்று விட்டார்! சரியாகப் பதினான்கு ஆண்டுகளின் பின் கணவர்மறைந்தஅதே நாளில் தேய்பிறை ஒன்பான் (நவமி) ஓரையில் மறைந்தார் அன்னை வெங்கிட்டம்மாள்! அவரை விடுத்து எவரையும் வாழ்க்கைத் துணையாக நினைக்கவும் மறுத்த வாழ்க்கைத் துணைக்கு வாய்த்த வாழ்க்கைத் துணை என்பதை மெய்ப்பித்தநாள் அது. அந்நாள் 5-11-77 ஆகும்.*

**காவியத் தடை நீக்கம்**

*1946- இல் வெளி வந்த இராவண காவியம் 1948-இலேயே தடை செய்யப் பெற்றதே! தடை செய்த ஆட்சி, அகன்றது; முகவுரை வழங்கிய அண்ணாவின் ஆட்சி மலர்ந்தது. அந்நூலின் தடை நீக்கப்பட வேண்டும் என வேண்டுகை விடப்பட்டது. கலைஞர் ஆட்சிக் காலம் அது அவர் தடை நீக்ம் செய்ததுடன் ஆராய்ச்சி அணிந்துரையும் வழங்கினார். 1971 இல் இராவண காவியத்தின் இரண்டாம் பதிப்பு வெளி வந்தது. முதற்பதிப்பு தந்தையார் செய்தது; இரண்டாம் பதிப்பு மைந்தர் செய்தது முன்னவர் அச்சுக்குப்பட்ட தொல்லையை பின்னவர்பட்டதும் உண்டு.*

*இராசன் மின் அச்சகம் என்னும் பெயரில் அச்சகத்தில் (சென்னை) அச்சிடச் சென்றனர். அச்சக அலுவலகத்தில் நாமம் போட்ட முதலியார் படம்! அப்படத்துக்கு உரியவர் மைந்தரே அச்சகம் நடத்தி வந்தார். அவர் இராவணகாவியம் அச்சிடப் போகிறார் என்பதைத் தெரிந்த சிலர் அவர் தந்தையாரின் நாமத்தை (இராமத்தை)க் காட்டி, இந்த நூலை இங்கு அச்சிடலாமா? இவர்க்கு ஏற்குமா? என்றெல்லாம்கூறினர். ஆயினும் "நல்ல வேலைக்கு நாலு இடைஞ்சல்" என்று நினைத்துக் கொண்டு, எடுத்து வைத்த காலை இடறாமல் நடையிட்டுப் பதிப்பித்துத் தந்தார். ஒரு புதிய பார்வை பார்க்க வேண்டுமென்றால், எத்தனை பழைய பார்வைகளையெல்லாம் வெற்றி கொள்ள வேண்டியிருக்கின்றது!*

*வணிகக் கடமைகளோடு வேலாவின் பொதுப் பணி நாட்டமும் பெருகியது! 1976 இல் குழந்தைகள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார். அதே ஆண்டு பொங்கல் விழாவைச் சிறப்பாக எடுத்தார். முத்தமிழ்க் காவலரை அழைத்துப் பொழிவு செய்ய வைத்தார். பசவேசர்க்குப் பெரு விழா எடுத்தார். அது இலக்கிய விழாவாகவும், வீரசைவ விழாவாகவும் பொலிவு பெற்றது. பவானியில் பெருமாநகாடு நடத்தினார். வீரசைவ உலக குருக்கள் ஓரைவர்ஒருங்கு கலந்து கொண்ட மாநாடாயிற்று அது. பெங்களூர் அனைத்திந்திய பசவர் சங்கச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார் வேலா. தேர்ந்தெடுத் தவர் இந்தியத் துணைத் தலைவர் மாண்புமிகு சட்டி அவர்கள். கருநாடக மாநில மாநாட்டுக்கும் சென்று தனிச் சிறப்புப் பெற்றோர்வேலா.*

**பட்டம்**

*1-3-78 இல், மூவாயிரம் சைவ மடங்களின் தலைமை நிலையமாக விளங்கும் கூப்ளி மூடு சாவிரத் திருமடத்துத் தலைவர்நிரஞ்சனசகத்குரு கங்காதரர் பத்தாயிரம் பேர்கள் கூடிய ஒரு பெரு மாநாட்டில் "வீரசைவக் கதிரோன்" எனப் பட்டம் வழங்கிப் பாராட்டினார்.*

*வீரசைவம் சாதி மத மறுப்புக் கொள்கையினது; இன வேறுபாடு கருதாதது; வேத முறைக்கு எதிர்க்களமானது இக்கொள்கைப் பிடிப்பே வேலாவை ஈர்த்து வீரசைவத் தொண்டில் ஆழ்த்தியது. இக்கொள்கைகளில் ஒருமையுற்றவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். ஆதலால் அவர் வழியில் தொண்டாற்றும் ஆர்வம் எழுந்தது. திராவிட கழகக் கொள்கை களிலும் இறைமைக் கொள்கை நீங்கலாக எஞ்சியவை ஒத்து வந்தன. ஆதலால், அதனைப் பற்றிக் கருதவும் தலைப்பட்டார் வேலா. தி.க. மாநாடுகளிலும் பங்கு கொண்டார்.*

*வேலாவின் நாற்பதாம் பிறந்த நாள் விழா 1977 இல் வந்தது. அந்நாளில் தந்தையார் தமக்கென வைத்துப் போன பொருள் அனைத்தையும் கணக்கிட்டார். அவர் வைத்துச் சென்ற தொகை அனைத்தையும் அறசெயல்களுக்கும் பொதுப்பணிகளுக்குமே செலவிடுவது எனத் தீர்மானித்தார். 'அறத்தால் வருவதே இன்பம்' என்பது இல்லற வாழ்க்கையோடு நல்லற வாழ்க்கை குறிப்பது தானே!*

*தந்தையார் பெயரால் ஈரோட்டில் விளங்கும் உயர் பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றில் தமிழ்ப்பாடத்தில் முதன்மை பெறுவார்க்குப் பரிசு வழங்கிப் பாராட்டும் வகையில் அறக்கட்டளை ஏற்படுத்தினார். அவ்வறக்கட்டளை வட்டித் தொகை கொண்டு இடையறவு படாமல் தந்தையார்நினைவுப் பரிசு வழங்கச் செய்த ஏற்பாடு,*

> "தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க் கெல்லாம் இனிது."

*என்பதை மெய்ப்பிப்பதாம்! தம் உழைப்பையும், உழைப்பால் உயர்வையும், வேலா என்னும் தந்தை பெயருள் இணைத்துக் கொண்ட உணர்வாளர் அல்லரோ வேலா! அதனால் எவ்வெவ்வறச் செயல்களைத் தந்தையார் கொண்டிருந்தாரோ*

அச்செயல்களையெல்லாம் தொடர்ந்து செய்தார். தம் உற்றார் உறவினர்கள் ஆகிய சுற்றத்தார் சுற்றப்பட் ஒழுகுதலை வழக்கமாகக் கொண்டார். படிப்புவகை, ஊண்வகை, உடைவகை மருத்துவம் ஆகிய உதவிகளையும் இல்வாழ்வுக் கடமையாகக் கொண்டார். இவ்வகைகளுக்கெல்லாம் மனைவி மக்கள் உறுதுணை இல்லாமல் இயலுமா? தம் மக்கள் தம் உடன்பிறப்பு என்னும் உணர்வு உண்டாகித் திகழும் போதுதானே புகழ் புரிந்த இல்லறமாகத் திகழும் போதுதானே புகழ் புரிந்த இல்லறமாகத் திகழும்! குழந்தைப் பருவம் தொட்டே வளர்ந்து கல்வியிலும் வணிகத்திலும் பயிற்சி பெற்றுத் தொழில் துறையில் உடனாகித் திகழும் செல்வர் செந்தில்குமார்ஒரு சான்று! அம்மையார் அவர்கள் தங்கை மகனார் அவர்.

ஊரவருள்ளும் ஒரு பழமொழி வழக்குண்டு அது, "வாழாத பிள்ளையை வேலாவினிடம் விடு" என்பது.ஏனெனில் வேலா தரும் பயிற்சியாலும் கண்டிப்பாலும் தக்க திறமையைப் பெற்று விடுவான் என்பதே அது.

இதற்குச் சான்றாகப் பலர் உளர்.

**சமயப்புரட்சி :**

1977 - இல் ஈரோட்டில் பொங்கல் விழாவை சிறப்பாக நடத்தினார் வேலா. தவத்திரு அடிகளார் பங்கு கொண்டார். அடிகளார் 1974-இல் திருக்குறள் பேரவையைத் தோற்றுவித்துச் செல்லுமிடமெல்லாம் கிளைகளை உண்டாக்கித்தழையச் செய்து வந்த காலம். ஈரோட்டில் மாவட்டக் கிளையைத் தோற்றுவித்தார். வேலாவைப் பேரவை மண்டலச் செயலராக அமர்த்தினார். அதன்பின் சமயக் கூட்டங்களுக்கும் செல்லத் தலைப்பட்டார் வேலா. திருச்சியில் நடைபெற்ற சமயக் வட்டத்தில் பங்கு கொண்டார். அப்போதில், வழிபாட்டுக் இடைத்தரகர் கூடாது; அம்முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று தம் கருத்தை முன் வைத்தார் 'காலம் கனியட்டும்' என்று அடிகளார். மேலும், "சைவத்தில் சாதி கூடாது என்பதையும் வீரசைவக் கொள்கை காட்டி வலியுறுத்திப் பேசினார் வேலா. பின்னர் தருமபுரி, ஈரோடு. கோவையில் நிகழ்ந்த வட்டங்களிலும் சமயப்புரட்சி வேண்டும் என்னும் கருத்தை மிக வலியுறுத்தினார்.

வேலாவுக்கு ஏன் சமயப் புரட்சி நாட்டம் உண்டாயது? "பிறப்பொக்கு எல்லா உயிர்க்கும்" என்னும் குறள், வேற்று

மையற்ற ஒருலகை ஒளி செய்து காட்டியது! அதனை வழி செய்து காட்டியது வீரசைவம்!

வீரசைவர் வீட்டுத்திருமணங்களில் தாலி கட்டும் போது மணியடிக்கப்படும். அதன் பின், பூணூல் போட்டிருப்பவர் எவராவது இருந்தால் அவர்கள் வெளியே போய் விடுக” என்று சொல்வர். இவ்வழக்கம் ஐம்பாண் ஆண்டுகளின் முன் வரைதமிழ்நாட்டிலும் நிகழ்ந்து வந்ததே இப்பொழுது, மணியடிப்பும் உண்டு! துணி மறைவிட்டுத் தாலி கட்டும் வழக்கும் உண்டு. ‘எழுந்து செல்க’ என்பது நாகரிகம் ஆகாது என்னும் எண்ணத்தில் தோன்றிய மாற்றம் இது. வேத நெறி, வருணநெறி, அதனை ஒழிக்கத் தோன்றியது பசவர்கொண்ட வீரசவை நெறி இந்நெறிவேலாவின் முன்னோர் வழிவழியே போற்றிய நெறியுமாம்.

பவானியில் வீரசைவக்குடி சார்ந்த ஒருவர்; படையாட்சி குடும்பச் சார்பை விரும்பினார்; காதலும் முற்றியது; வீரசைவர் குடியினர் வேலாவினிடம் என்ன வழி என வினவினர். இக்கலப்பு இயற்கையானது; தவறெதுவும்அற்றது. இவ்வாறு உண்டாகிய ஒரு கலப்பு மணத்தைப் பெம்மான் பசவர் நடத்தியுள்ளார். மணமகன் தாழ்த்தப்பட்ட இனத்தவன்; மணமகள் பிராமண வகுப்பு, இவர்கள் இலிங்கம் எப்பொழுது கட்டிக் கொள்கிறார் களோ அப்பொழுதே ஒத்த குடியாய் விடுகின்றனர். பிறகு, கலப்பு - ஏற்றத் தாழ்வு-என்றேபேச்சுக்கு என்ன இடமுண்டு“ என்றார். அத்தீர்ப்பே இம்மணமக்களுக்கும் உரியது என்றார் வேலா. இருசார்பினரும் ஏற்றுப் போற்றினர். இவ்வாறே சேலத்தில் வீரசைவக் குடியொன்றும் கிறித்துவ சமயக்குடி ஒன்றும் காதலாயிற்று.

இவ்வாறே பிற பிற இடங்களிலும் நேர்ந்த துண்டு. அவற்றுக்கெல்லாம் பசவர் செய்ததீர்ப்பே பண்பட்ட தீர்ப்பென வேலா முன்னின்று நெறிப்படுத்தினார்.

**பிற பொதுப் பணி :**

ஈரோட்டில் ஆசிரியர் குடியிருப்பு தோன்றியது. அதில் வீட்டு வசதிக் கூட்டுறவு சங்கம் என்பதோர் அமைப்பு உருவாயிற்று. அதன் இயக்குநராக வேலா தொண்டாற்றினார்.

*அரிமா அமைப்பிலும் உறுப்பாண்மை கொண்டு கடனாற்றினார். ஆனால் இத்தகைய பணிகள் எல்லாம் திருக்குறள் பணியில் ஊன்றுமுண் நிகழ்ந்தவை. வள்ளுவ நெறியை வாழ்வு நெறியாகக் கொள்ள வேண்டும் என்னும் குறிக்கோள் உண்டாகிய பின்னர், இதனை நிலைப்படுத்தித் தொண்டு செய்வதே குறியாகக் கொண்டார். வீரசைவப் பிணைப்பையும் விடுத்துக் குறளியத் தொண்டிலேயே தலை நிற்கலானார்.*

**நாட்காட்டி நற்கொடை:**

*1967-இல் திருக்குறள் திங்கள் காட்டி வெளியிட்டார் வேலா. அதில்திருக்குறளுக்கு மிக எளிமையான வகையில் நெஞ்சம் கவரும் முறையில் உரை அச்சிட்டிருக்கக் கண்டார் ஒருவர். இவ்வளவு சுவையாகத் திருக்குறள் உரையைத் தரக் கூடுமா என வியந்தார். அக்காட்டியை வெளியிட்டவரைக் கண்டு பேச விரும்பினார். தம் நண்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு வேலா நிலையத்திற்கு வந்தார்! உணர்வு மிக்க உள்ளங்கள் ஒரே கருத்தில் உரையாடின.*

*கிறித்தவ மறைக்கும் இசுலாமிய மறைக்கும் உயர்நூல் திருக்குறள். கருத்துச் சிறப்பு மிக்க தாய்க் கனிந்தது. எனினும் அதனைப் பரப்புவார் இல்லாமல்மறைந்து கிடக்கிறது. அதனைப் பரப்ப நாம் துணிந்தால் பத்துப் பேர் துணைக்கு வருவர்; சிலர் உறுதியாக நிலைப்பர்; இராம கிருட்டிணர் பரப்பம்போலவும் விவேகானந்தர் பரப்பம் போலவும் பலர்க்கு வாழ்வைத் தரும் அமைப்பாகவும் அமையும்.*

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்"

*- ஆம்! இதனைச் சிந்தித்து உலகியலை மாற்றி அமைக்க வேண்டும்.*

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

*என்பதால் பிறப்பு வேற்றுமை, தொழில் வேற்றுமை இரண்டும் அற்றது திருக்குறள்.*

"ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு"

- வள்ளுவர் கண்ட பொதுமைத் தனிச்சிறப்பு இது.

இவ்வாறு வந்தவருடன் அலசினர்! உணர்வை உணர்வை மதித்தது! உணர்வு உறவானது பின்னே குறளியத்திற்கு உறுதித் துணையும் ஆனது. தேடி வந்து வேலாவைக் கண்டது சிந்தனைச் செம்மல்கோபி. கு.ச. ஆனந்தனார்!

**குறளியம்**

பசுமைப் பணி மன்றம் என்பதோர் அமைப்பு அவ்வமைப்பு நிறுவனர் வேலா. பொங்கல் விடுதி நிலவுக் கூட்டம் ஆகியவற்றை நிகழ்த்தி வந்த மன்றம். அதன் பொருட் பொறுப்பு அனைத்து வேலாவையே சார்ந்து இருந்தது. அதன் 1979-ஆம் ஆண்டுப் பொங்கல் விழாவின்போது, 'குறளியம்' என்னும் பெயரில் திங்கள் இதழ் ஒன்று தொடங்க வேண்டும் என்னும் கருத்து வேலாவுக்கு எழுந்தது. முன்னரே ஆனந்தர் அணுக்கம் உண்டாயிற்றே! அவர் அரசியல் ஈடுபாட்டாளராக மட்டும் இருந்த காலம் அது. அவர் தம் மூளைக் கூர்ப்பும் ஆற்றலும் திருக்குறள் வழிக்குத் திருப்பப் பட்டால் எத்துணையோ நல்விளைவுகளை நாடும் பொழியும் பெறக் கூடுமே என எண்ணினார். அவ்வெண்ணத்தால், அவ ரொடும் கலந்து குறளியம் தொடங்குதலை உறுதிப்படுத்தினர். வேலா ஆசிரியராகவும், ஆனந்தர் சிறப்பாசிரிரயராகவும் கடனாற்றுவதெனவும் முடிவு கொண்டனர். முதல் இதழைச் சிறப்பாகக் கொண்டு வரவேண்டும் என்றும், அதன் வெளியீடு சீரிய விழாக் கோலம் கொண்டு விளங்க வேண்டும் என்றும், ஆட்சியாளர் அறிஞர்கள் வாழ்த்துரைகளும் கட்டுரைகளும் திகழ வெளிவர வேண்டும் என்றும் திட்டமிட்டனர். ஆள்வோரைக் காணுதற்குச் சென்னைக்குச் சென்றார் வேலா.

குறளியத்திற்குத் திருக்குறளார் துணை வேண்டும் என விரும்பினார் வேலா. அவரைக் கண்டு அவரோடு தலைமைச் செயலகம் சென்றார். அமைச்சர் முத்துசாமியைக் காண வேண்டும் என்பது கருத்து. முதற்கண் அந்நாள் சட்டமன்றத் தலைவர் இராசாராம் அவர்களைக் கண்டு உரையாடிக் கொண்டிருக்கும் போதே, முதல்வர்ம.கோ.இரா. அவர்கள் எதிர்பாராத வகையில் ஆங்கு வந்தனர். அவரைப் பல்கால் பார்க்க வாயாத வாய்ப்பு, தானே வந்தது கண்ட திருக்குறளார் தனி மகிழ்வுற்றார். சட்டமன்றத் தலைவர் முதல்வர்க்கு அறிமுகம் செய்து வைத்ததுடன் 'குறளியம்' இதழ் தொடங்க இருப்பது

குறித்தும் கூறினார். மகிழ்ந்தார் முதல்வர். வாழ்த்தும் கூறினார்; குறளிய வெளியீடு சென்னையில் இருந்தால் தாம் கலந்து கொள்வதாகக் கூறினார். வேலாவின் உள்ளெண்ணம் குறளிய இதழ் வெளியீடு ஈரோட்டிலேயே நிகழ வேண்டும் என்பதாக இருந்தது. ஏனெனில் தந்தை பெரியார் தொடங்கிய குடியரசு எப்படி ஈரோட்டில் தொடங்கப்பட்டதோ அப்படியே இருக்க வேண்டும் என்னும் எண்ணமேயாகும்; முதல்வர் தமக்கு ஈரோட்டுக்கு வந்து வெளியிடும் நிலையில் பணிநிலை இடம் தாராமையால் இனிய வாழ்த்து உரைத்து அரசின் சார்பில் அமைச்சர் காளிமுத்து, முத்துசாமி ஆகியவர்கள் கலந்து கொள் வதற்கு அவரே முன்னின்றுரைத்தார்.

வள்ளுவர் கோட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருக்குறள் பணி குறித்தும் கலந்துரையாடினார். திருக்குறளார் தம் கருத்து களையும் கேட்ட முதல்வர் திருக்குறள் மையம் தொடங்க முடிவு செய்தார். அற்றைச் சந்திப்பும் கலந்துரையாடலும் வேலாவுக்குப் பெருமகிழ்வைத் தந்ததுடன், திருக்குறளாரின் வள்ளுவர் கோட்டத் திருக்குறள் பரப்பாண்மைப் பணியமர்த்த வாய்ப்புக்கும் ஏந்தாயிற்று! அதன் பின்னர்த் தோன்றியதே திருக்குறள் நெறி பரப்பு மையம்!

15-8-1980 வெள்ளி மாலை 6-30 மணிக்கு ஈரோடு பெரியார் மன்றத்தில் திருக்குறளார் தலைமையில் குறளிய வெளியீட்டு விழா நிகழ்ந்தது. தவத்திரு அடிகளார், அமைச்சர்கள் கா. காளிமுத்து, சு. முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். திருவாளர்கள் (எஸ்.எஸ்.எம்.) சுப்பிரமணியம், செங்கோட்டையன், பழனி சாமி, கந்தசாமி, முருகு சுந்தரம் ஆகியோர் வாழ்த் துரைத்தனர். வேலா வரவேற்றார். ஆனந்தர் நன்றியுரைத்தார்.

குடியரசு இதழ் தொடங்கி வைத்தவர் தவத்திரு ஞானியார் அடிகள் என்பதை வேலா அறிவார். அதனால் தம் காலத்து ஞானியார்அடிகளாகவும் அப்பரடிகளாகவும் விளங்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரே இதழைத் தொடங்கி வைக்க வேண்டும் என்று அவாவினார். அவ்வாறே நாட்டு விடுதலை எனப் பெயரளவில் பெற்றிருந்தாலும் மூளைச் சலவை செய்யப் பட்ட தமிழ் மக்கள் அறிவு விடுதலையோ, வாழ்வியல் விடுத லையோ, சாதிமத விடுதலைகளோ, கண் மூடிப் பழக்க விடுதலை களோ பெறாமையால் அவற்றைப் பெறத்தக்க குறிக்கோளை

*நினைவுறுத்தும் வகையில் நாட்டு விடுதலை நாளாகிய 15-8-80--ஆம் நாளையே குறளியம் இதழ்த் தொடக்க நாளாகக் கொண்டார். எங்கு ஒன்றையும் பொருந்த எண்ணிப் பொருள் நலம் சிறக்கச் செய்ய வல்ல செய்நேர்த்தியர் வேலை என்பதை நினைவுறுத்தும் செயற்பாடுகள் இவை.*

"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்"

*என்னும் குறிக்கோளை முன்வைத்து, கலை இலக்கிய அறிவாண்மைத் திங்கள் இதழ் குறளியம் வெளிவந்தது. அதன் ஆண்டு 'வேல்' என்றும், திங்கள் 'வெற்றி' என்றும் தொடங்கப் பெற்றது.*

*முதல் வேல் எவர்க்குப் படைக்கப் பெற்றது. வேலாயுதர்க்கே படைக்கப் பெற்றது. "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்லெனும் சொல்" யன்றோ!*

"கடமையை உணர்த்தும் கலங்கரைவிளக்கம்
உழைப்புக்கு ஊன்றுகோல் ஊக்கத்தின் திறவுகோல்
மூளும் அறப்பணிக்கு முன்னிருக்கும் நடை
நெறிதந்த தந்தையார் நீத்தார்"

**அ. வேலாயுதனார்**

*நினைவுக்குக் குறளியத்தின் முதல் மலரைப் படைக்கின்றோம்"*

*என்பது படையல் மொழி!*

*"குறளியம் பிறந்தது... எப்படி?" என்பதை முதல் இதழிலேயே விளக்கமாக வரைகிறார் வேலா (15-8-1980).*

*மாசனப் பள்ளியில் படித்தது, அதன் தலைவராகப் பெரியார் இருந்தது, முத்தமிழ்க் காவலர் பொழிவு கேட்டது, வேலாயுதனர்க்கு அன்பராக விளங்கிய புலவர்கள் தொடர்பு, பேராசிரியர் இலக்குவனார் அன்பு, நாற்பதாம் அகவை முதல் செய்யத் தொடங்கிய பொதுத் தொண்டு, குறளுக்கோர் இதழ் வேண்டுமென்னும் அடிகளார் வலியுறுத்தல் - இன்னவையெல்லாம் குறளியம் பிறக்கச் செய்த தூண்டல்கள் என்பதை விளக்குகிறார். தம் உள்மனச் சுட்டலையும் இன்னதென்ன விரித்தெழுதுகிறார்!*

“பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலகிலேயே மூளைச் சலவைக்கு ஆட்பட்ட மக்கள் யாரெனில் நம் இந்திய மக்கள் தாம். அவர்களை அந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் யாரெனில் கல்வி அறிவும், மதிநுட்பமும் பெற்ற நம்மவர்களே. அவர்கள் மற்றவர்களுக்கு வழி காட்டியாக அமையாததுடன், அவர்களை என்றும் அடக்கியாள ‘வருணாசிரமம்’ என்னும் மூளைச் சலவை முறையைக் கையாண்டனர். அதனின்று மீள முயன்ற வரலாறுகளில் முகிழ்த்தவர்கள் தாம் வடபுலத்து மகாவீரர், புத்தர், குருநானக், தபீர்தாசர்; விவேகானந்தர் ஆகியோரும், தென்புலத்துத் திருமூலர். பதினெண் சித்தர்கள், கபிலர், சர்வக்ஞ பசவர், வேமண்ணர், நாராயண குரு, வள்ளலார் ஆகியோரும் ஆவர்,

ஆனால், இவர்கள் அனைவரும் வருணாசிரமத்தை எதிர்த்தும் கூடத் தம் கொள்கைகளை நிலை பேறுடையவையாக ஆக்கவில்லை. நமது பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் கொள்கையை அன்று ஏற்றுக்கொண்ட இலட்சக்கணக்கான தொண்டர்களில் இன்று ஆயிரக்கணக்கில் கூட எஞ்சி நிற்க முடிய வில்லையே! ஏன்?

அவரது அடியொற்றிப் பின் பிரிந்தவர்கள், வழி தெரியாமல் இன்று வருணாசிரமத்தின் சாயலில் ஒய்ந்திருப்பதைப் பார்க்கிறோம் அல்லவா! வள்ளலாரின் நெறிகளைப் பரப்புபவர்களே வருணாசிரம ஒலிகளை எழுப்பி வேள்விகளை நடத்தும் வேடிக்கை அல்லவா இன்று நிகழ்கிறது!

“ஏன் இந்நிலை? இவர்கள் கொண்ட கொள்கைகளில் தவறில்லை. ஆனா, இக் கொள்கைகளுக்குத் தக்க மூலங்களைத் தேடினாரில்லை. அக்கொள்கைகளின் மூலமாகத் திருக்குறள் இருந்தும் அம்மூலத்தைச் சரிவரப் பற்றினாரில்லை.

“இதோ... என்னுடைய இந்தத் தலைமுறையில்தான் மூளைச் சலவையின் வேகம் குறைந்துள்ளது, இதுவே மூலத்தை உணரச் சரியான நேரம்.” என்று என் உள்மனம் சுட்டிக் காட்டியது என்கிறார் வேலா.

“விவிலியம் பிறந்தது; அந்நெறி விரைந்து வளரவில்லை; பிறகு அரசின் சமயம் ஆயிற்று! உலகம் முழுவதும் பரவிற்று.”

"புத்தகக் கொள்கைகளை ஏற்றவர்கள் மிகச் சிலரே; பேரரசன் அசோகன் அதனைஆட்சி மதம் ஆக்கினான். பல நாடு களில் பரவியது.

"கன்பூசியசின் கருத்துகள் தொடக்கத்தில் வெறும் குமுகாயக் கருத்துக்களாகவே இருந்தன; பின் சீன அரசு அவற்றைத் தழுவியது; நாடெல்லாம் பரவிற்று; ஒரு மதமாகப் பதினைந்து நூற்றாண்டுகள் நிலைத்து நின்றது."

தமிழகத்தின் சமணத் தாக்குதல் அரச குலத்தில் இருந்து விரவிப் பரவிற்று. சோழப் பேரரசு காலத்தில் சைவம் கோலோச் சியது; கிருட்டிண தேவராயர் தழுவலால் வைணவம் வெற்றி நடையிட்டது.

உருசிய அரசின் ஆட்சி அமைப்பிற்கு மார்க்கசியக் கொள்கைகள் வழி வகுத்தன. ஆனால் உருசிய அரசு இன்றேல் மார்க்கசியம் இன்றிருக்காது! நூலகத்தில்தான் இருந்திருக்கும்.

கோனாட்சிகளிலும் குடியாட்சிகளிலும் திருக்குறள் அரியணையில் அமர்த்தப்படவில்லை. அரசுகளின் கண்ணோட் டத்தைப் பெறவும்இல்லை.

- என்று உலகளாவிய சமயங்களின் பரவுதலை ஆயும் வேலா, "உலகின் மற்ற மக்களெல்லாம்விலங்குகளாய்த் திரிந்த காலை ... மெய்யுணர்வை அறிய அக அமைவைக் கண்டறிந்த முத்த முதல்வரான என் முந்தையர்க்கும் முந்தையரை நினைந்து நாளும் நான் மேற்கொள்ளும் அக அமைவால் பெற்ற உறுதியுடன் குறளியம் பிறந்துள்ளது" என நிறைக்கிறார்.

தொடக்கக் குறளிய முன்னுரையிலே "தமிழகத்தின் வாழ்வு இயக்கமாக் குறளியம் இடம் பெற்றாக வேண்டும். தமிழகத்தின் வாழ்வியலாகக் குறளியம் இடம்பெறும் பொழுது தான் சாதி வேற்றுமைகள் நீங்கும். வாழ்க்கை வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்கும். மனித உலகத்தின் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக இருக்கும் வைதீகக் கொள்கைகள் நீங்கும்."

நாளையும் கோளையும் வழிபடும் மூட பழக்கங்கள் தொலையும், மருட்டுகின்ற மத தலைவர்களின் கொட்டம் ஒடுங்கும். பொய்யும் கற்பனையும் போயகலும்! வாய்மை வந்த டையும்" என்று கூறும் தவத்திரு அடிகளார், " தமிழினம் தனது தனித் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளவும் உலகம் தழுவி

வாழ்வும் அதன் வாழ்வியல் வரிச் சட்டமாகக் குறளியமே இடம் பெறவேண்டும். இந்த நோக்கம் நிறைவேறுமானால், குறளியம் வெற்றிபெற்றதாக அமையு" மென வெற்றிவழி இன்னதெனச் சுட்டுகிறார்.

அமெரிக்க நாட்டிலே ஒரு பெருமகனார் சான்னி என்பார்; அவர் எங்குச் சென்றாலும் ஆப்பிள் விதையோடு செல்வார். காண்பார் அனைவர்க்கும் ஆப்பிள் விதையைத் தருவார்; தாமே நட்டும் செல்வார்; அவரை அந்நாள் வாழ்த்தியவர் உண்டு; வசை கூறியவர்களும் உண்டு. ஆனால், இந்நாள் அவர் 'ஆப்பிள் சான்னி' யாகத் திகழ்கிறார் "குறளியம் - அப்படி ஓர் இயம் இயலுமா? கவலற்க! நாம் இன்று நாடெல்லாம்தூவி நடும் விதைகளோ பயனுடைய - வள்ளுவப் பெருமான் வழங்கிய - உதவிய - குறளிய விதைதான்! அவை கண்டிதமாக ஒரு நாள் பூத்துக் குலுங்கிக் கனிகளாய்த் தொங்கும்.

நம்நாட்டினர் மட்டுமல்லர். உலகினரெல்லாரும் துய்த்து மகிழ்வர்; இஃது உறுதி" என்பது வேலாவின் மூன்றாம் இதழ் ஆசிரிய உரை. எத்துணை உறுதி! நம்பிக்கை!

திருக்குறள் பேரவை, குறளியம், குறளாயம், தமிழ் வழிக் கல்வி என்பன தனித்தனி ஆய்வு விளக்கப் பகுதிகளாக வருமாகலின் குறளியச் செய்தி இவ்வளவில் இவண் அமைகின்றது.

வேலாவின் பொதுப்பணி தம் தொழிற்பணிக்குத் தடையாக அமைந்ததில்லை. பொதுப்பணியால் தம் தொழிற் பணி சிறக்கவும், தொழிற்பணியால் பொதுப்பணி சிறக்கவும் ஒன்று ஒன்றற்குச் சிறப்பாகவும் துணையாகவும் அமைந்தன. ஆகலின், வணிகமும் தொழிலும் வளர வளரப் பொதுப்பணியும் வளர்ந்து பெருகலாயிற்று.

**வெளிச் செலவு**

வேலா அண்டை மாநிலங்கள் அல்லாமல் இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் சென்றுள்ளார். ஈழநாட்டிற்கும் சென்றுள்ளார். ஈழ நாட்டிற்குச் சென்றிருந்தபோது அந்நாட்டு வானொலி நிலையத்தில் குறளாயம் குறித்த நேர்காணல் நிகழ்ந்து, அஞ்சல் செய்யப்பட்டது. ஈழகேசரி முதலிய இதழ் களிலும் செய்திகள் வந்தன. கோவை வானொலியில் குறள், குறளாயம் குறித்துப் பல்கால் உரையாற்றியுள்ளார். சென்னைத்

தொலைக்காட்சியில் குறளாய நேர் காணல் நிகழ்ச்சி இடம் பெற்றது. கேரள மாநிலத்துத் தட்டாம்படி சென்று திருவள்ளுவர் ஞானபீட நடைமுறைகளைக் கண்டு மகிழ்ந்ததுடன் அதன் நிறுவனர் சிவானந்தருடன் உரையாடி இன்புற்றார். பின்னர் அவரைக் குறளாயச் சார்பில் ஈரோட்டுக்கு அழைத்துச் சிறப்புச் செய்தார்.

**சிறப்புப் பணியில் பொதுப்பணி**

தந்தையார் காலத்தே சிற்றாறாக இருந்த நிறுவனம் பேராறாகச் சிறந்தது. அவர் காலத்தில் வெளியே அச்சகம் நாடிச் செல்ல வேண்டியிருந்த இடர், இல்லையாய் வேலா அச்சகம் உருவாயிற்று! அச்சகத்தின் ஒரு பகுதிதானே அட்டை கட்டுதல்! ஆகவே, நினைக்குமாறெல்லாம் அச்சிடவும் அட்டை கட்டவும் ஏந்துகள் வாய்ந்தன. திங்கள் காட்டி, நாள் காட்டியாகவும் அக்காட்டிகளும் பலவாகவும் விளங்கின. தாம் உயிர்க் கொள்கை யாகக் கொண்ட குறளியப் பரவுதலுக்கு நாள்காட்டியும் திங்கள் காட்டியும் குறிப்பேடுகளும் விளம்பரக் களங்களாயின. ஒவ்வொன்றிலும் திருக்குறள் மணி மணியாய் விளக்கமுற்றன.

1. கற்றவர்முன்
கற்காதவர்
பேசாது
இருத்தல்
நன்று : தீயநட்பை விடுக

2. பழியற்ற
செல்வம்
சேர்க்க தீமைகண்டு அஞ்சாதே

3. அரிய
செயல்களைச்

செய்பவர்
பெரியார் பயனில பேசாதே

4. திருட்டுச்
சொத்து தீங்கு
செய்யும் காமம் உயிரின்பம்

5. தூய்மை
துணிவு
வாய்மை
நினைவு — சினமில்லாரே துறவி

6. இன்சொல்
இனிது
வன்சொல்
கொடிது — ஒழுக்கம் நல்லோரைத் தரும்

7. ஊக்கம்
இல்லைஎனில்
செல்வம்
நீங்கி விடும் — தெளிவில்லாததைத் தவிர்

8. கண்
கருத்தொத்த
காதலர்
வாழ்க — சொல்திறன் மதிப்புறும்

9. அன்பு பண்பு
தரும்; அறம்
பயன் தரும் — ஆசையற்று நிலைபெறு

10. சினத்தை
உடையவர்
நலத்தை
யடையார் — நினைவு வெற்றி தரும்

இப்பத்துத் தொடர்களும், சிறு தொடர்களும் எந்நூற் செய்தி! திருக்குறள் பிழிவுச் செய்தி அல்லவோ! இவை நூலில் இடம் பெற்றவையா? நூலில் இடம்பெறுதல் வழக்குத்தானே! ஆங்கும் இப்படி நறுக்குத் தெறித்தாற்போல் இடம் பெறுவ தில்லையே! பின் எங்கே இடம் பெற்றவை! இவை, வேலா வெளியிடும் காவிரி நாள்காட்டியில் இவ்வாண்டு (1990) ஏப்பிரல் முதல் நாள் முதல் பத்தாம் நாள் முடியும் அளவும் உள்ள இதழ்களில் பெரிதும் சிறிதும், இதழுக்கு ஒவ்வொன்றாய் மேலும் கீழும் தனித்தனி இடம் பெற்றவை. ஒவ்வொரு நாளும் இரண்டு குறள்களின் பிழிவை வாங்கிக் கொள்ளும் உத்தியைக் கொண்டு திட்டமிட்டு அமைக்கப்பட்டவை.

குறளியம் திங்கள் காட்டி கி.பி.1990 சனவரி 'உச்சி' என்ன சொல்கிறது : "அறநெறிப்படி உலகில் வாழ்பவன் தெய்வமாக மதிக்கப்படுவான்" என்கிறது.

**இதோ ஒரு விளம்பரம் பாருங்கள்**

திருக்குறளை ஓதித் தெய்வம் தொழுவோம்

திருக்குறளை ஓதித் திருமணம் செய்வோம்

திருக்குறளை ஓதிப் புதுமனை புகுவோம்

திருக்குறளை ஓதிக் கல்வி கற்போம்

திருக்குறளை ஓதித் தொழில் தொடங்குவோம்

திருக்குறளை ஓதிப் பொருள் செய்வோம்

திருக்குறளை ஓதி நீத்தார்கடன் நிகழ்த்துவோம்

திருக்குறளை ஓதி எல்லோரும் எல்லாம் பெறுவோம் திருக்குறளை ஓதி

இது விளம்பரச் செய்தியா? வாழ்ந்து விளக்கமுறக் கூறும் செய்தியா? வாழ்வியல் விளங்கக் கூறும் செய்திதானே இது திருக்குறளை ஓதி இது, பிறர்க்குக் கூறி அமைவதா? தாமும் கொள்வதா? தம் நடைமுறைக்குக் கொண்டு வந்து நலம் பெற்ற பட்டறிவால் நாடும் நானிலமும் அதனைப் பெற வேண்டும் என்னும் நயனார்ந்த நெஞ்சில் இருந்து புறப்பட்டதே என்பதை வேலாவுடன் தொடர்புடையவர் எவரும் அறிவர்; "யாம் பெற்ற பேறு பெறுக வையகம்" என்பதன் முழக்கமே இச்செய்தி.

**ஒரு வேண்டுகோள்**

இந்த நாள் காட்டியில் புதுமைகளைப் பார்த்தீர்கள். இவை தவிர ஏதேனும் குறிப்புகள் இருக்க வேண்டும் என்று நீங்கள் கருதினால் எங்களுக்கு எழுதுங்கள்.

- இவ்வேண்டுகோள் செய்தியால் விளங்குவது என்ன?

"வேலா நிறுவனம் வளரும் நிறுவனம்;

வளர்க்க விரும்பும் நிறுவனமுமாம்" என்பதன்றோ!

கிழமையில் புதனும் சனியும் தமிழ்ச் சொற்கள் இல்லை; அச்சொற்கள் வேலா நாள் காட்டிகளில் எப்படி இடம் பெறும்?

அறிவன், காரி என இடம் பெறும். பாவாணர் சுட்டிய சொற்கள் இவை.

1990 ஆம் ஆண்டு திங்கள் காட்டி என்ன சொல்கின்றது?

'திருக்குறள் நம்மறை - நெறி' என்கிறது.

"அறவோரே அந்தணர்; இவரோடு சேர்வதே நம் வாழ்வுக்கு வெற்றி" என்கிறது சனவரி.

அதன் நாள் வெற்றிடங்கள் நான்கு. அவை என்ன சொல்கின்றன; சான்றோரின் சொற்களே அழியாத மந்திரச் சொற்கள் (கு.27).

யான் எனது என்ற செருக்கை விடுபவரே வானோரினும் உயர்ந்தவர் (கு.346)

இறப்பு வருமுன் நல்ல செயல்களை விரைவு செய் (கு.335)

பேரா இயற்கைபெற ஆரா இயற்கை அவா நீக்குக (கு 370).

- கு. என்பது என்ன? திருக்குறள். எண், அளவெண். அப்பாடலின் திரண்ட கருத்து இது.

தாளின் கீழ்வரி - ஒரு முகவரி, தூய அறிவினைப் பின்பற்று; இன்றேல் கற்றும் பயனில்லை

-இவ்வேறுபாடு என்ன?

குறள், நாள்காட்டி திங்கள் காட்டிக்காக.

திங்கள் காட்டி, நாள் காட்டி குறளுக்காக - இன்னும் ஒரு வகையால் குறளுக்கு வணிகமா? வணிகத்திற்காகக் குறளா? ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத ஒன்றை என்ன செய்யலாம்! வள்ளுவர் சொற்படி,

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம்"

எனலாம்.

இவற்றுக்கு முன் வழிகாட்டி உண்டே உண்டே! அவர் கழக ஆட்சியாளர் தாமரை செல்வர் வ. சுப்பையா அவர்கள். திருக்குறள் நாள்காட்டி, திருக்குறள் நாட்குறிப்பு என்பனவற்றை 1932 - இலேயே தொடங்கி விட்டார். எங்கம் குறள்! எதிலும் குறள்! எல்லாம் குறள்! என்பதே வேலாவின் முற்றத் தெளிந்த முழுதுறு முடிவு.

குறளியம் என்ன? குறளாயம் என்ன? முழு நிலா முற்றம் என்ன? குறளாய மாநாடு என்ன? வட்டமென்ன, விருந்தென்ன, அழைப்பென்ன, அலைவென்ன - அசைக்காமல் விடுமா? குடும்பத்து உறுப்பில் இப்படி எண்ணம் எழாமல் இராதே! ஒரே ஒரு முறை எழத்தான் செய்தது! விளைவு வினையாக வில்லை! விளைவு - பெரு விளைவே ஆக்கிற்று!

“நான் திருக்குறளைப் பரப்பி வாழ்வியலாக்க முனைகிறேன். என் வாழ்வே அதற்கெனக் கொள்கிறேன். அதனை எண்ணிய நாள் முதல் தூயனாகி வாழ்தலை உணர்கிறேன்; அத்தூய்மை பெருகிப் பெருகிச் - சிறக்கக் காண்கிறேன். வாழ்வும் வளமும் மேலும் மேலும் பெருகவே காண்கிறேன். வரும் அல்லல் களெல்லாம் கதிர் முன் பனியென அகல்தல் அறிகிறேன்; இவை நல்லனவா! என்னைப் போலவே தொழிலில் புகுந்து, என்னளவும் தேடாததுடன், அந்த, விடுதி இந்த விடுதி, அந்த வீடு இந்த வீடு, குடி கும்மாளம் என இன்னார் இன்னார் இருக்கிறார்களே; அப்படி இருப்பது நல்லதா? முடிவு செய்து சொல்லுங்கள்! எந்த வாழ்வு உங்களுக்கும் எனக்கும் குடும்பத்துக்கும் வழிமுறைக்கும் பெருமையும் பேறும் சேர்ப்பன? என்ற வினாமேல் வினாவாக்கி விளக்கியதன் விளைவு, குறளாயப் பணி, வேலா பணியன்று! வேலா குடும்பப் பணி என்னும் விரிவுடன் திகழ்கின்றது! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத - செய்யாத - வேலாவின் வெற்றி இது என்பதற்குத் தடை யென்ன?”

வேலாவினும் செல்வர் இலரோ? உளரே!

வேலாவினும் அறிவர் இலரோ? உளரே?

வேலாவினும் வணிகர் இலரோ? உளரே!

வேலாவினும் தொழிலர் இலரோ? உளரே!

வேலாவினும் இதழர் இலரோ? உளரே!

- ஒருவர் இருவரா உளர்! பன்னூற்றுவர் பல்லாயிரவர் உளர்! வேலாவின் உணர்வினர் - திருக்குறள் உணர்வினர் - திருக்குறள் நம்மறை எனும் உணர்வினர் - செல்வருள் - வணிகருள் - அறிவருள் - தொழிலருள் - இதழருள் எவருளர்? இவ்வெல்லாம் வடியவருள் எவருளர்?

“உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே”

என்ற தேர்ச்சியுரை பல்லாயிரவருள் ஒருவரைக் கண்டு தெளிந்துரைத்ததே யன்றோ!

**தூண்டித் துலக்குதல்**

வேலாவின் ஆழ்ந்த சிந்தனையும் அச்சிந்தனை வழிப்பட்ட தூண்டலும் வியப்பில் ஆழ்த்தும். அப்படிப் பட்டவற்றை எண்ணினால் மிகப்பல. அவற்றுள் ஒன்று, அவர் எழுத்தால் வருவது:

“இருபதாம் நூற்றாண்டின் பாரகாவியம் எனப் புகழப்படும் இராவண காவியத்தின் ஆசிரியர் பெரும் புலவர் குழந்தை அவர்களுடன் நான் 1970-இல் உரையாடிக் கொண்டிருந்த போது ஒரு வேண்டுகோள் விடுத்தேன். எவ்வாறு நம் மக்களைப் புராணங்கள் எழுதி மூடர்கள் ஆக்கினார்களோ அவ்வாறே அதன் சான்றுகளைக் கொண்டே காவியம் படைத்துப் புராணப் புளுகுகளை நீக்கி மடமைகளை நீக்க வேண்டும் என்று கூறினேன்.”

“தமிழ் நாட்டிற்குச் சரியான பழம் வரலாறு இல்லாத குறையைப் போக்க நான் விடுத்த வேண்டுகோளின்படி அரசிய லரங்கம் என்ற பாவியத்தை இயற்றினீர்களே! அதேபோல் புராணப் புளுகுகளைப் போக்கும் பாவியம் வேண்டும்” என்ற சிந்தனையை அவரிடம் ஏற்படுத்தினேன்.

இதையொட்டிய சிந்தனைகளில் தம் முழு நேரத்தையும் ஈடுபடுத்தலானார் பெரும் புலவர். ஏராளமான புராணங் களையும் வரலாற்று நூல்களையும் வேத இதிகாசங்களையும் திரும்ப திரும்ப ஆய்ந்து ஒரு கதை அமைப்பால் உருவாக்கி விட்டார். அதை என்னிடம் முதன் முதலாக (இராவண காவியம் இரண்டாம் பதிப்பு அச்சாகிக் கொண்டிருக்கும் ஞான்று) ஒரு நாள் இரவு கூறத் தொடங்கி அதன் பல அமைப்பு முறை களையும் விவரித்துக் கூறிக் கொண்டு வந்தார். அன்று அக் காவியத்தின் தலைப்பை சொல்லும் போது மறுநாள் விடிந்து விட்டது. அதன் பெயரே திராவிட காவியம்.

“சென்னையில் என்னுடன் தங்கியிருந்த போதும் சரி, அதற்குப்பின் காலமாகும் வரை இக்காவியச் சிந்தனைதான் அவருக்கு எந்நேரமும். இதன் உரைநடைச் சுருக்கத்தை ஒழுக செய்வதற்கே இரண்டு ஆண்டுகள் அவருக்கு பிடித்தனவாம்.”

இதைப்பற்றிப் பவானியில் வாழும் மகள் திருவாட்டி மு.சமரசம் க.மு.ப.இ. அவர்கள் கூறியதாவது: அய்யா அவர் இராவண காவியத்தை எழுதி முடிக்கச் சரியாக ஒரு மாத காலம்தான் ஆனது. திராவிட காலத்தின் உரைநடை அமைப்பை முடித்தவுடன் பாடல்களை எழுதத் தொடங்கினார். மொத்தமாகப் பல நாள்களில் இக்காவியத்தில்மூன்றில்ஒரு பகுதியை எழுதிவிட்டார். இன்னும் 15 நாட்கள் மட்டும் உயிருடன் இருந்திருந்தால் இப்பெரும் பணி முடிந்திருக்கும். நாங்கள் பார்க்கும் பொழுதெல்லாம் இந்நூலிற்காக இரவு பகல் பாராது படித்துக் கொண்டோ எழுதிக் கொண்டோதான் இருப்பார். தம் வாழ் நாளின் இறுதிப் பணியான இக்காவியத்தை மிகச் சிறப்பாக எழுத வேண்டும் என அயராது உழைத்தார். அவ்வேலைப் பளுவே அவர் உயிரை 22-9-72-இல் குடித்து விட்டது."

இதனைக் குறிக்கும் ஆசிரியர் வேலா, "இப்பெருங் காவியத்தின் மூன்றில் இருபகுதியை முடித்துத் தரவல்ல பகுத்தறிவு உள்ளமுடைய பாவலர் எங்குள்ளாரோ? முன் வருவாரோ?" என வினாவுகிறார். இவ்வினா அவர்தம் தூண்டித் துலக்கும் திறத்தின் வெளிப்பாடேயாம்.

குறளியம் தொடங்கிய நாளிலேயே அதனை அறிந்தவர் யான். அதன் தொடக்க நாளிலேயே "குறளியப் புகுவாயில்" எழுதினேன் (1:4:8) பின்னரும் எழுதினேன். பதிப்பகத் தொடர்பு அதற்கு முன்னரே ஏற்பட்டது. எனினும் வேலாவை 1985 முதல் தான் நெருங்கிய தொடர்பு கொள்ளவ வாய்த்தது. அவ்வாய்ப்பு, குறளியத்தொடும் குறளாயத்தொடும் அணுக்கனாக்கிற்று. அவ்வப் போது ஆய்விலும் பொழிவிலும் தனியே கலந்துரை யாடலலும் யான் திருக்குறளுக்குக் காணும் புத்துரைகள் சிலவற்றை வேலா அறிய வாய்த்தது. அவர்தம் வாழ்வியல் புத்தாக்கப் பார்வையும் என்னுள் புகுந்தது.

இரண்டும் நிரந்து கலந்ததன் விளைவாகத் தெரிந்தெடுத்து ஒரு நூறுகுறள்களுக்கேனும் உரை வரையவேண்டும் என்னும் எண்ணம் என்னுள் எழுந்தது. அதனால் செந்தமிழ்ச் செல்வியில் சில குறள்களுக்குப் புத்துரை விளக்கம் எழுதினேன் குறளியத் திலும் எழுதினேன். நூலுக்கு முற்றாக உரை எழுதவேண்டும் என்னும் எண்ணம் எனக்கு உண்டாகவில்லை. முழுமைக்கும் முதற்கண் உரையும், பின்னே விளக்கவுரையும் வரைய வேண்டும் என்று தூண்டியவர் வேலா அவர்களே ஊடே ஊடே உரையைக்

கேட்டும் கருத்துரைத்தும் சிக்கலான இடங்களில் குறளாயப் புலவர்கள் அன்பர்கள் ஆகியவர்களுடன் கலந்துரையாடவும் முன்னின்றவரும் வேலா அவர்களே!

நூலுரை வருவதற்கு முன்னரே அவ்வுரை பற்றி விரிந்த நல்லுரை கூறியதுடன், முன்னோட்டமாக முன்னுரையை வெளிப்படுத்திக் குறளிய வாசகர்களும் குறளாயப் பெருமக்களும் ஆர்வலர்களும் அறிஞர்களும் கருதும் கருதுகோள்களை அறிந்து கொள்ள விரும்பிக் குறளாயத்தில் வெளியிடவரும் வேலா அவர்களே கூட்டந்தோறும் ஓரிரு குறள்களுக்கேனும் யான் காணும் புத்துரைகளைக் கூறுதல்சிந்தனையைக் கிளர உதவும் என்று கருத்துரைத்து அவ்வாறு வழி நடத்தியவரும் வேலா அவர்களே!

இவ்வாறு முன்னின்று முடித்து வைப்பார் மிக அரியர் என்பது வெளிப்படை. குறளியம் வாழ்வியல் நூல்; மறை நூல்; நம் மறை நூல்- எனின் குறளும் அக்குறளின் உரையும் கருவிகள் அல்லவோ! அக்கருவியைக் குறளயாம் தருதல் கடப்பாடே அல்லவோ! இவ்வுணர்வுகளே வேலாவின் உள்ளத்தில் இருந்த இயக்க, புத்துரை நூலாக வெளிப்பட வாய்த்துள்ளது! இஃது அவர் தம் தூண்டித்துலக்கும் செயற்பாட்டுச் சீர்மைக்கு வாய்த் துள்ள எத்துணையோ சான்றுகளுள் ஒன்றாகும்.

**மக்கள் - குடும்பம்**

வேலாவின் இன்ப அன்பு வாழ்வுப் பயனாக அரும்பிய அமிழ்த முளைகள் மூன்று. அவை வேல் பூங்கொடி, வேல் மலர்க்கொடி, வேல் சுடர்க்கொடி மூவர்க்கும் ‘வேல்’ உண்டோ! ஆம்! வேல் வெற்றிப் பொருள் தருவதைக் கண்ட பின்பு, வேல் இணைக்கப் படாமல்விடப்படுமோ?

மூத்த மகளார் வேல்பூங்கொடிக்கு 5-11-82 இல் திருமணம் நிகழ்ந்தது. துணைவர் எவர்? வாழ்வாங்கு வாழும் மாணிக்க - பங்கயக் குடிக்கு ஒரு மகனாகத் தோன்றிய திருவாளர் மா. சக்திவேல். வேலொடும் பெயராலும் இணைந்து விட்ட அவர், வேல் குடும்பத்தொடும் இரண்டற இணைந்தார். வேல் நிறுவனங்களொடும் இணைந்தார்.; மாமனார் செய்து வரும் பொதுப் பணியொடும் இணைந்தார்; மாமனார் பொதுப் பணிக்கு ஏந்தாகும் வகையில், அவர் செய்துவந்த வணிக - தொழில்- குடும்பப் பொறுப்புகளுக்கு தூணாக விளங்கி வருகிறார்.

கொடிக்கு ஏற்ற கொழு கொம்பாம் கொழுநராகத் திகழ்கிறார் சக்திவேல்.

இவர்கள் அன்பு வாழ்வில் முகிழ்த்த அருமைச் செல்வன் வேலரசு!

சக்திவேலர், புகுமுகம் படித்த அளவில் அமைந்து, வணிகத்தில் புகுமுகமாய், வேல்குடும்பத்துப் புகுமுகமானவர்.

வேல்பூங்கொடி பத்தாம் வகுப்புப் படித்து அமைந்தவர்; அடுத்தவேல்மலர்க்கொடியும்அப்படியே. வேல்சுடர்க்கொடி பயின்று வருகிறார். பேரனும் வீட்டிலே மழலை பொழிந்த மழலைப் பள்ளியிலும் பொழிகின்றான்.

**குறளாயக் குடும்பம்**

வேலாவின் தனிக்குடும்பச் சிறு குறிப்புகள் இவை. இவர்தம் குறள்வழிக் குடும்ப வரலாறு வாழ்வியலும் சுருங்கிய தாமோ? சுருங்கா அதனையும் சுருக்கியே சொல்ல வேண்டும். ஏனெனில் நூன்முறைகளுள் தலையாயது சுருங்க சொல்லல்; அடுத்தது விளங்க வைத்தல்; நவின்றோர்க்கினிமை; நன்மொழி புணர்த்தல் இன்ன! இவற்றைக் கருதித்தானே கூறவேண்டும்!

ஒருவர் மேல் நிலை ஆய்வில் தலைப்படுகிறார். குடும்ப நிலையின் பொருளுதவி போதவில்லை! அரசின் உதவியும் ஏற்ற அளவில் இல்லை! ஓராண்டுக்குத் திங்கள் ஒன்றுக்கு இருநூறு உருபா வாய்த்தால் இடையீடு இன்றி எடுத்த ஆய்வு நிறைவுறும்! வேலா உதவிக் கை நீள்கிறது! ஓராண்டும் உதவுகின்றது! உதவி பெற்ற நன்னெஞ்சம், நன்றி நெஞ்சம்! பின்னே நன்றிக் குறியாக ஒரு நூலைப்படைத்து மகிழ்கின்றது. அதனை நோக்கியா உதவிக்கு முந்தியது கை! அதனை நோக்கவில்லை என்பதற்காக நன்றியறிதலைத் துறந்து விடுமா நன்னெஞ்சம்!

ஒருவர் வாழும் வீட்டின்மேல் வரிக்கடன் பல்லாண்டுக் கடன்! அடுத்த நாள், தவணையின் முடிவு நாள்! நம்பிய இடங்கள் நற்றுணையாக வில்லை! நற்றுணையாம் இடம் தோன்றவு மில்லை.

உள்ளூரா? பக்கத்தூரா? முந்நூறு அயிரத்திற்கு (கிலோ மீட்டருக்கு) அப்பாலாம் ஊர்; வந்து கேட்டு வாங்கிச் செல்லவும் இயலா நிலை! எதை நம்பி உறுதியாக வருவது! ஆனால் தம்முள் எழுந்த ஓர் நம்பிக்கை தொலைவரிச் செய்தியில் வருகிறது

குறிப்பு! தொலைவரியிலேயே பறந்து போய் நிற்கிறது தொகை! எண்ணிப் பார்க்க முடியுமா? எண்ணி விதிர் விதிர்க்காமல் இருக்க முடியுமா?

காலமெல்லாம் அழுந்திய சமயப் பணியில் தோய்ந்த பெருமகனார் ஒருவர்; திருக்குறள் தொண்டிலும் திளைத்தவர்; அவர்க்கு மணிவிழா போகலாம்; உலகியல் வழக்கப்படி பொன்னாடை என்னும் பெயரால் துணியாடை போர்த்தி வரலாம்! ஆனால் வேலா உணர்வு அத்தகைய தன்றே! பொன்னாழி செய்து பூட்டிப் பாராட்டுகிறது. இப்படி ஒருவர்க்கா இருவர்க்கா?

பள்ளியில் பணி செய்கிறார் ஒருவர்; ஆனால் வரலாற்றுத் தோய்வில் அழுந்தியவர்; வரலாற்று நூல் தொகுப்புக்கு - வரலாற்று ஆய்வுச் செலவுக்கு - ஒரு பெருந்தொகை வேண்டும்! அத்தொகை வாய்த்தால் நாட்டுக்கு நற்பயனாம். அதனைத் தம் பொறுப்பிலே தாங்கும் வீட்டு வாய்ப்பு இல்லை! தம் குடி நலம் காத்தல் அளவுக்கு எதிர்பாராமையே சிறப்பு நிலை! அந் நிலையில் வேலா முன்வருகிறார் முன்பரத்தக்காரை அணுகு கிறார். முன்னேற்றத் தக்காரை முன்னேற்றுவதற்கு முன்னிற்றல் தானே முன்னிற்றல்! அதனை வேண்டுமாற்றால் செய்தார் வேலா!

நாடு அறிந்த நல்ல தமிழறிஞர்; முது பேரறிஞர் அவர்க்கு எண்பான் விழா! அவர் ஊரிலே - அவர் வீட்டிலே - நிகழ்ச்சி இருக்குமே! அங்கே போய் தலைகாட்டி வந்தால் போதாதோ? உலகியல் அப்படித்தானே பெரும்பாலும் இருக்கிறது! ஆனால், விலக்கு வேண்டுமே! விலக்கு வேலா வடிவில் பளிச்சிட்டது. ஈரோட்டில் பிறையாயிரப் பெருவிழாவாக எடுத்தார்! பின்னே எண்பத்து ஐந்தாம் ஆண்டு விழாவும் தொண்ணூறாம் விழாவும் எடுத்தார். ஒருவரைப் பார்க்கிறார், உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடை பெற இருக்கிறது; குறளாயத் தூதாகச் சென்று வருக; உங்கள் பெயரைப் பதிவு செய்து விடுகிறோம்; போக்குவரவுத் தொகையைக் குறளாயம் தந்து விடும்; போய் வருக" என்கிறார் வேலா! உதவி வேண்டினாரா? இல்லை! வேண்டாமலே, வேண்டிக் கூறிய வேட்கையுரை! சொல்வது என்ன? சொல்லளவில்நிற்பதா? செய்தது தானே! நினைத்தலும் செய்தலோடு ஒக்கும் என்பதன்றோ வள்ளுவம்! நாங்கள் குறளாயத் திருமணம் நடத்துகிறோம்; மெத்த மகிழ்ச்சி; நாங்களே வந்து நடத்தி வைக்கிறோம் குறளாயத் திருமணமாகவே

*நிகழும்! வேலா முன்னிற்பார்! குறளாயம் சூழநிற்கும்! வாழ்த்தும் உரைக்கும்! விழாவும் சிறக்கும்! எந்தச் செலவும் குறளாயத்திற்காக மணவீட்டினர்க்கு நேராது. ஆனால் வரவு வருதல் தவறாமல் வாய்க்கும்!*

*குறளாயச் செலவு என்பது என்ன? வேலா செலவே! எதனால் வேலா இப்படிச் செய்கிறார்! படிப்பவரா, ஆய்பவரா, மணிவிழாவினரா, ஆயிரம் பிறையினரா, மணவாளரா, மணமகளரா - வேலா தம்குடும்ப உறுப்பாகவே குறளாயக் குடும்ப உறுப்பாகவே பார்க்கிறார்! அப்படிப் பார்த்து பார்த்துப் பழகிப் போய் விட்டார். அப்படி பாராமல் வேறு வகையில் பார்க்க முடியாது என்னும் வகையில் தழும்பேறிப் போய் விட்டார். குறள் வழி நெஞ்சம் எப்படி இருக்கும் - இருக்க வேண்டும் - என்பதை நிலைநாட்டி வருவதும்-பல்ல பல செயல்களாலும் நிலைநாட்டி வருவது வேலாவின் நெஞ்சம்! தனித்தனியே பெயர் சுட்டி விளக்கம் சுட்டிச் சொல்ல வேண்டும் செய்திகளுக்குப் பொதுச் சுட்டு வழி மிக மிக ஏற்றது. ஏனெனில் ஒரு பொதுக் குறிப்பு என்பது பல சிறப்பு குறிப்பு அல்லது தனிக்குறிப்குகளின் தொகுதி அன்றோ! வள்ளுவர் படைத்த பிறிதுமொழி பன்னூற்றை ஒன்றால் சொல்வதன்றோ!*

**இயற்கையை ஒறுத்தல் :**

*“யான் இயற்கையை ஒறுத்தேன்; இயற்கை என்னை ஒறுக்கிறது இப்பொழுது” என்ற திரு.வி.க. அவர் தடமும் இடமும் காண வியலாத நோயராகிய நிலையில் கூறிய மணிமொழி இவர் ஏன் கூற வேண்டும்! தாம்படும்பாட்டைப் பிறர்படக் கூடாதே! என்னும் பேருள்ளம் கூறத்தான் செய்யும்!*

*வேலா இயற்கையை ஒறுத்தார்; ஒறுத்து வருகிறார்; இயற்கை தன் முனைப்பைக் காட்டி ஒறுக்கத் தவறுமா? அது ஒறுக்கத் துணிந்த பின்னும் அதனை ஒறுக்கத் துணிகிறார்; ஒறுக்கிறார்! இதனைப் பாராட்டவும் முடியாது! பாராட்டாமல் இருக்கவும் முடியாது! இரண்டும் கெட்டான் நிலை அவர்தம் அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆர்வலர்களுக்கும்!*

*எட்டு மணி நேர வேலையையும் தட்டில்லாமல் - தயக்கம் இல்லாமல் - அதற்கே செலவிட்டோம்” என்று கூற மனச்சான்று உடையவர்கள் எத்தனை பேரால் இயலும்! வேலைக்களத்திற்கு - அலுவலகத்திற்குச் - செல்வதே ஓய்வு கொள்வதற்கு எனத்*

*துணுக்குப் போட்டுப் பாராட்டும் சீராட்டும் நடத்தாத இதழ் ஒன்றைக் காண இயலுமா? துணுக்கே வெளியிடாத இதழ் என்றால், கதையிலே இடம் பெறும்; கட்டுரையிலே இடம் பெறும்; தலைப்புரையிலே இடம் பெறும்! அவ்வளவு பேர் போன கடமை வீரர்கள் பல்கிப் பெருகும் பெருமைக்குரிய பெரு நாடு இது. இந் நாட்டில் வேலா போலவும் சிலர் சிலர்!*

*வேலா எத்தனை மணிப் பொழுது உழைக்கிறார்? உண்ணும் வேளைக்கு உண்டதுண்டா? உறங்கும் வேளைக்கு உறங்கியதுண்டா? ஒரே வேளையிலே எத்தனை வேலை! அத்தனையும் அமைந்தவேலையா? எத்தனை எத்தனை சிக்கலானவேலை! தம்மை மறந்து - இனி முடியவே முடியாது - படுத்தே ஆகவேண்டும் என உடல் அலுப்பு - அயர்வு - படுக்கையில் தள்ளினால் அல்லாமல் அவர் உறங்குவது இல்லை! ஓய்ந்து அமர்வதோ அறவே இல்லை! இவை இயற்கையை ஒறுப்பவை இல்லையா?*

*உடலும் ஒரு 'பொறி' தானே! நுண்ணிதின் நுண்ணிய பொறி அல்லவோ உடல்! எந்தப் பொறியாவது - எப்படித்தான் திறத்தோடு செய்யப்பட்டது எனினும், அதற்கு வேண்டும் ஊட்டம் தவறாது தருதலும், ஓட்டத்திற்கு ஓய்வு தருதலும், உறுப்புகளைச் சீர் செய்து போற்றுதலும் இல்லாமல் இயலுமா? பொறியாக இருக்கமா?*

*அப்பொறிக்குரிய விதிமுறையிலும் சீரிதிற்பேண வேண்டிய விதிமுறையுடையதன்றோ உடல்! வேலாவின் தொழில் வணிகப் பணிகளும் பொதுப்பணிகளும் அவர் பொழுதை எல்லாம் பற்றிக் கொள்கின்றன! அவற்றுக்கு உடந்தையாக வேலா காலமெல்லாம் இருந்து விட்டார்! அதன் விளைவு அவரை நோயர் ஆக்கிற்று! மருந்தர் ஆக்கிற்று! சிறுநீரகங்களை மாற்றிப் பொருத்தும் கடுமருத்துவத்திற்கு ஆட்படுத்திற்று! அவ்வறுவை மருத்துவத்திற்கு இனிப்பு நோய் கூடுமோ? அதுவும் இருந்தது! இனிப்பு நோயை ஒடுக்கால் நீரகமாற்றுச் செய்ய இயலுமோ? எல்லாம் செவ்வையாய் முடிந்தன! சீராய்த் தேறினர்! புன்முறுவலுடன் மருத்துவ மனைக்குப் போய் - புன்முறுவலுடன் மீண்டார்!*

*சென்னை விருந்தினர் (Gust) மருத்துவமனையில் சேர்ந்தார் வேலா; பலவற்றை நாடித் தேடி ஆய்ந்து நிறைவில் கண்ட*

நிறைவிடம் இது. இதன் ஒளிபரப்பலுக்கு மூலவர்எவர்? திரு. சி.எம். தியாகராசன் என்பவர். அவர்க்குத் தக அமைந்த அருமைத் துணைகள்! குறிப்பறிந்து பணி செய்யும் கடமை உணர்வினர்! நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல் என்னும் குறளுக்குப் பேருரை வேண்டுமா? மருத்துவர் தியாகராசனார் என அவர் பெயரைச் சுட்டுதல் சாலும்! இயல்பாகவே அருண் மருத்துவராகிய அவர், தமிழ்க் காதலரும் ஆவர்; தமிழ்த் தொண்டரைப் போற்றும் காதலரும் ஆவர்.

அதனால், வேலாவின் மருத்துவப் பணி அவர்க்குத் தனிச் சிறப்பும் விருப்பும் வழங்கும் பணியாயிற்று. நேரம் அரிய அவர், நேரம் கருதாமல்உரையாடவும் நேர்ந்ததெனில் அந் நேயத்தை வழங்கியது தமிழ்க் காதலும், நம் மறைத் தொண்டுமேயாம்; ஒரு நாள் கூறுகிறார் மேதகை மருத்துவர்; தமிழ் வினாவிடுவிப்பு (குவிசு) தொலைக்காட்சியில் காட்டினார்கள். தமிழ் வினாவுக்குத் தமிழில் விடை வழங்கத்தக்க மாணவர்களை அவர்கள் தேர்ந்து கொள்ள வில்லை. ஆங்கில வழிக் கல்வி மாணவரிடம் தமிழ் விடை நோக்கல் வெற்றி தருமா? அவர்கள் சொல்லும் மறுமொழி யாகிய ஆங்கிலத்தைத் தமிழாக்கஞ் செய்து சொல்ல வேண்டிய நிலை உண்டாகியது; அது இயல்பாக இல்லை. ஏன் நாட்டுப் புறத்தில் நன்கு தமிழ் வழிக் கல்வி பயின்ற மாணவர் களைஅவ்விடையளிப்புக்கு தேர்ந்தெடுத்திருக்கலாமே என்ற அவர் ,"அன்றைய நிகழ்ச்சியைப் பார்த்துத் தலையைப் பிடிக்கும் படியாக இருந்தது" என்றார்! "ஆங்கில வழியில் பயின்று ஆங்கில முறை மருத்துவத்தில் ஓங்கும் அவரின் தமிழ் வழிச் சிந்தனை இஃதென எண்ண அவர் தம் நல்லுள்ளம் புலப்பட்டது என்று வேலா நன்றியுணர்வுடன் பாராட்டுவதைக் கேட்டுக் கேட்பவரும் தலையசைத்தல் நேரிடைக் காட்சியாகும்."

மருத்துவரைக் குறித்த நாம், மருத்துவ காலத்தில் மருத்துவ மனையிலும் ஒய்வு நிலையிலும் குடும்பத்து உறுப்பினருள் ஒருவராய் உழுவது அன்பினராய், தொண்டின் உறைப்பினால் ஒன்றாகி உடனாகி உணர்வாகி இருந்தது பெருமகனார் சித்தோட்டுப் பாவலர் குமர நடவரச் ஈவப்பனார் ஆவர் என்பதையும் நினைவு கூர்கிறோம்! தமிழ் மறவர் ஈவப்பர் என்று மூதறிஞர் செம்மலால் பாராட்டப்பட்டவர் அவர் முத்தமிழ்க் காவலருடன் தில்லிக்குக் குறளாயச் சார்பில் சென்று தமிழ்

*முழக்கமிட்டு வந்தவர் அவர்! தமிழுணர்வாளரைத் தழுவிக் கொள்ளுதலைத் தவமாகக் கொண்ட அவர், தொண்டர் வேலாவுக்குத் தொண்டு செய்ய முந்து நில்லாரா?*

**ஊழை உப்பக்கம் காணல்**

*வேலா மருத்துவ மனையில் இருந்த போதும் மருத்துவ மனை நீங்கி ஓய்வு கொண்டிருந்த போதும் நேரில் கண்டு எழுதிய காட்சி நிலை இது:*

*"வேலா நலமாக இருக்கிறார்! மிக நலமாக இருக்கிறார்; மிக மிக நலமாக இருக்கிறார்! அவர் எப்படி நலமாக இருக்க வேண்டும்! அவர் எப்படி நலமாக இருக்க வேண்டும் என நாம் எண்ணுகிறோமோ, அதற்குமேல் நலமாக இருக்கிறார்."*

*"வேலா உடலைப் பற்றியது நோய்! அவர் உளத்தைப் பற்றியதன்று! உடலளவில் அமையும் நோய் உளத்தை என் செய்யும்? உணர்வை என் செய்யும்? தோற்றுத் தோற்று ஒடுங்கும்! முகம் காட்டாது முக்காடிட்டுக் கொண்டும் ஓடும்! இவற்றை உணர்ந்து கொண்டவர் வேலா! நன்றாக - மிக மிக நன்றாக உணர்ந்து கொண்டவர் வேலா! அவர் வெற்றி ஓங்கியுள்ள விழுப்ப நிலை இது!"*

*"வேலா நகைக்கிறார்! நலம் வினவி வருபவரை நோக்கி வரவேற்கும் 'வரவேற்பு நகைப்பு' என எண்ணுவதா? அது ஏமாற்றும் நகைப்பு! என்னை நோய் வருத்துமோ? வருத்தவும் கூடுமோ? தாங்கள் கவலை விடுக! என் நகைப்பைப் பார்த்த அளவானே யான் நோயை வென்ற வெற்றி வெளிப்படுமே! என நகைக்கும் வள்ளுவ நகைப்பு! இடுக்கண் வருங்கால் நகுக எனத் தெளிந்து பண்பட்ட நகைப்பு! வேலா ஒரு நகைப்பா நகைக்கிறார்? வள்ளுவ நகை நகைக்கிறார்! திருத்தக்கர் நகை நகைக்கிறார்! நடமாடும் நாவரசர் நகை நகைக்கிறார்! தமிழ்த் தென்றல் திரு.வி.க. தேர்ச்சியில் தோய்கிறார்! எப்படி?"*

*வேலா உள்நகை நகைக்கிறார்! வெளிப்பட்டும் வெளிப் படாக் குறுமுக்கையாம் முகை மொக்குள் நகை நகைக்கிறார் - இது வள்ளுவர் நகை.*

"இடுக்கண் வந்துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானுமின்றி நகுக"

*என்னுமாப் போல நகைக்கிறார் - இது திருத்தக்கர் நகை.*

"வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட்டேனே"

*என்னும் பெருநகையும் நகைக்கிறார் - இது நாவுக்கரசர் நகை.*

*வள்ளுவரும் திருத்தக்கரும் நாவரசரும் ஆகிய மூவரும் ஒருவராம் மூர்த்தியாம் நகையல்லவோ இவை!*

*வேலா தமிழ்த் தென்றலில் அமைந்து அமைந்து தளிர்க் கின்றார். அதனைத் திரு.வி.க.வே திருவாய் மலரக் கேட்போமே!*

*"தொல்லை நோய்க்கு மருந்துண்டோ? மருத்துவர் என்ன விடை இறுப்பரோ அறிகிலேன்! எனக்கொரு மருந்து துணை செய்து வருகிறது. அஃதென்னை?*

*அஃது எனது தாய்மொழி; அமிழ்தினும்இனிய தமிழ்மொழி; என்போன்றோர்க்கென்று தமிழ்க் கலைகள் தோன்றினவோ என்று யான் அடிக்கடி நினைப்பதும் உண்டு."*

*தொல்காப்பியனார்., நக்கீரர், நல்லந்துவனார், திருவள்ளு வனார், இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர், மாணிக்கவாச கனார், நம்மாழ்வார், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார் முதலிய தமிழ் மருத்தவர் யான் நூல் எழுதும் சிற்றறையிலும் வீற்றிருக்கினறனர். அவர் முன்னேதொல்லை அணுகி எங்ஙனம் நோய் செய்யும்?*

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்"

*- இப்பாக்களில் சொல்லினும் பொருளினும் இரண்டும் கலந்த ஒருமையிலும் ஒன்றித் திளைக்கும்மனம், எந்நிலை எய்தும்? அம்மனத்தை தொல்லை நோய் உறுத்துங்கொல்"*

*- திருக்குறள் விரிவுரை - பாயிரம் - அணிந்துரை. 8-9.*

*வேலாவை, தொல்லை நோய் உறுத்தவில்லை என்பதற்கு இதோ ஒரு சான்று; நிகழ்ச்சியில் பங்கு கொண்டு நேரில் கண்ட கழக ஆட்சியாளர் இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் கூறுகிறார்:*

*"உடல் நலிவுற்ற நேரத்திலும் நோயை பொருட் படுத்தாது, அன்னைத் தமிழ் ஆட்சி பெறு" என்று முழக்கமிட்டுக் கொண்டாடுபவர்.வ.சுப.மாணிக்கனார்த் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி.ஐயர் அவர்களுடன் சென்னை நெடுவீதியில் நடந்து வந்ததை எந்தத்தமிழ் நெஞ்சமும் மறக்காது" என்பது அது.*

*அமெரிக்க நாட்டு மருத்துவ மனையில் இருந்து மீண்ட அண்ணா, தமிழ்நாடு, என்னும் பெயர் சூட்டு விழாவில் பங்கு கொள்வதற்கு இல்லாமல் இவ்வுடல் இருந்தென்ன என்று சொல்லிக் கலந்து கொண்டது போன்ற நிகழ்வன்றோ இது.*

**உரையும் பாட்டும் உடைமை**

*வேலா நோயுற்றார் என்பதை அறிந்த அளவான் 'அவர் நலம் பெற்றார்' என்பதை அறிய அவாவியவராய் உரையும் பாட்டுமாய் எத்தனை எத்தனைஅறிஞர்கள், அன்பர்கள், ஆர்வலர்கள் எழுதினர்! உரையும் பாட்டும் உடைமையைச் சங்க நாள் பெருமக்கள் எத்துணை மதித்தனர் என்பதற்குப் புறநானூறும் பதிற்றுப் பத்தும் பத்துப்பாட்டும் சான்று!*

*குறளியம் இதழில் வேலா வாழ்த்தரங்கம் (9-9-25) வெளி வந்தது. அதற்கு, முன்னும் பின்னும் இடமும் பெற்றது அது. அதில் சில பாடல்களும் - தொடர்களும் - உரைக்குறிப்புகளும்;*

"செந்தமிழே நம்தாய்; திருக்குறளே நம்மறை;
நந்தா ஒழுக்கமே நம்படை; - உந்துமுனை
வேலாவே நம்தலைவன்; வெள்ளைக் குறளியமே
தோலாத நம்முரசத் தூண்"

"**வேலா அரசன்;** வெறிதமிழ் அந்தணன்; முப்
பாலார் குறளின் பரப்பாளி; - மேலார்
குறளாயங் கண்டான்; குறளியமும் கண்டான்,
திறலாக வாழ்க திளைத்து."

**வ.சுப. மாணிக்கனார்**

வாழ்த்திக் களித்தனன்; வளர்பணிக்கென்தலை
தாழ்த்திக் குளிர்ந்தனன்; தமிழ்ப்பகை தகர்க்கும்
**வேலா?** எனப்பகை விதிர்க்க, குறட்பணி
ஆளும் **அரச** எனப்பலர் போற்ற

குறட்கதிர் **மாணிக்கம்** ஆயினை;
விரல்கொள் நலத்தில் வீறுற்று வாழ்கவே!

**-கோவை இளஞ்சேரனார்**

வேலா அரசமா ணிக்கம்வினைமுடுக்கும்
தோலாச் சுவைநூல் திருக்குறள் - ஆலாப்
பரந்து நலம்பெருக்கும்பான்மைபோல்வாணாள்
சுரந்து பெருகவர்க்குச் சூழ்ந்து.

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

இணையில்லாக் குறள்தோன்றி எத்தனையோ
நூற்றாண்டிங் கேகக் கண்டோம்!
துணையாகும் குறட்பெயரால் குறளாயம்
இவரால்தான் தோன்றக் கண்டோம்
அணைபோலக் குறளாறு தனைத்தேக்கி
மக்கள்மனம் அனைத்தும் பாய்ச்சும்
இணையில்லா நம்வேலா அரசமா ணிக்கம்
சீர்என்னே! என்னே!
வித்தகராம் அரசமா ணிக்கனார் குறட்
காற்றும் வியன்ப ணிக்கே
சித்தமிக உவந்தவராய்த் தமிழ்மனம்கொள்
இராமலிங்கம் சிறந்த பட்டம்
இத்தினத்தில் குறள் நெறிக்கா வலர்என்றே
நாம்மகிழ ஈந்தார் அன்பு
முத்தமிழீர்! குறள் நெறிக்கா வலர்வாழ்க!
என வாழ்த்து முழங்கு வோமே!

**பாட்டுத் தென்றல் பொதிகைச் செல்வனார்**

குறளியம் வேலா குறள்போல் வாழ்கவே
அறம்பொருள் இன்பம் ஆக்கம் பெருகவே
தனித்தமிழ்ச் செல்வன் தாளாண் வேளான்
இனித்தநல் எழுத்தான் இயலிசை செழித்தான்
பிறப்பும் சிறப்புமுறு பெருந்தகை யாளன்
மறப்பற வள்ளுவர் வகுத்த வழியிலே
வாழ்வாங்கு வாபம் வளம்பெறு செம்மல்
தாழ்வுயர் சாதி தமிழனுக் கில்லை
பிறப்பெல்லார்க்கும் பிரிவினை யில்லாச்
சிறப்பென வழுத்தும் செந்தமிழ்ச் செல்வன்

பேச்சும் திருக்குறள் மூச்சும் திருக்குறள்
மாட்சிமை சான்ற மனமும் திருக்குறள்
காலம் விரும்பும் கல்விக் கடலோன்
ஞாலம்அறிந்துநடக்கும் நல்லோன்
எத்திசை மாந்தரும் இணைந்து வாழவே
வித்தகப் பணிநலம் வீறுடன் விளைப்பான்
அறத்தால் இன்பம் அன்பால் இன்பம்
திறத்தால் இன்பம் திளைக்கும்இனியோன்
நாளும் நாளும் நாளும் பொலிய
ஞாலம் புகழ நமது வேலா
வாழிய நீடு வளம்பெறு குறளியம்
சூழிய உலகெலாம் சுவிசே சம்போல்
திருக்குறள் இன்பத் திகழுக வாழ்விலே
உருக்கும் உள்ளம் ஓங்குக நன்றே.

**கவியோகி சுத்தானந்த பாரதியார்**

"பொறுப்புடன் புலவர் நாங்கள் புதுச்சுவைக்காகச் செய்யுள்
உறுப்பினை மாற்று கின்றோம் உம்முடல்தனிலுறுப்பை
அறுத்தின்று மாற்றி யுள்ளார் அழகிய நயங்கள் சேர்க்கப்
பொறுத்தினிச் சுவைப்போம் எங்கள் புதுத்தமிழ் வெண்பா யாப்பே"

**தி. முருகுசுந்தரம்**

தமிழுறு நோயைத் தண்டமிழ்மறையைத்
தாக்கிய நோய்களை யெல்லாம்
அமைகுற ளாய மருத்துவப் படையால்
அழித்தவன் தனக்குறு நோயைச்
சுமையெனத் தாங்கிக் கிடப்பனோ? அறுவைத்
துறையறி பண்டுவர் துணையால்
துமியுறச் செய்தான் என்ற சொல் கேட்டுத்
துள்ளிய தெம்முளம் களித்தே

**– புலவர் ஆ. பழநி**

"நன்னிலை பெறுவீர்; நம்குறள் வளர்ப்பீர்;
மன்னிய அறுவை மகிழ்ச்சியை நிறைக்கும்
கலவற்க என்றேன் வள்ளுவர் காத்தார்."

**புலவர் இரா. வடிவேலன்**

*குறளியம் ஆசிரியர்திரு. வேலா அவர்கள் உடல்நலம் தேவையான ஒன்று. அவரது உடல்நலம்திருக்குறள் இயக்கத்திற்கு அரண்.*

**தவத்திரு. குன்றக்கடி அடிகளார்**

*பிறரைப் போன்று தம் சிந்தனையையும் செயலையும் தொண்டையும் ஆற்றலையும் பல துறைகளில் அலையவிடாது திருக்குறள் சிந்தனையையும் திருக்குறள் தொண்டையுமே ஒருமுகச் சிந்தனையாக்கி வருவதுதான் வேலா அவர்களின் வெற்றிக்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.*

**-முனைவர் ஆறு. அழகப்பன்**

*"குறளாயம் என்ற தனி அமைப்பை அவர் நிறுவிய நிலையில், நான் சற்று மாறுபட்ட கருத்துக் கொண்டவனாக இருந்தேன். குறளாயத்தின் கொள்கைப் படைப்பின் விளைவாகத் திருவேலா அவர்களிடம் இடம் பெற்றிருந்த இலிங்கமும் திருநீறும் விடைபெற்றுச் சென்று விட்டன விழுமிய அக்காட்சி கண்டு வியந்தேன்! உருவமற்ற ஓர் இறைக்கொள்கை அவர் உள்ளத்தில் உருவாகி வள்ளுவத்தை வாழ்வில் மேற்கொள்ளும் தூய குறள் நெறியாளரானார். இந்த வெளிப்பாடு கண்டு என் கருத்து வேறுபாடுகள் கரைந்து பேயின."*

*குன்றாத குறள் ஆர்வலருக்கு உடல் நலம் குன்றிவிட்டது. குறள் நெறி பரப்புவதில் திறம் படச் செயல்படுபவர்க்குச் சிறுநீரகம் செயல்படவில்லை. மாற்றுக் குறையாத தங்கம் நிகர் உள்ளத்தவர்க்கு மாற்றுச் சிறுநீரக மருத்துவம்! இந்த வல்லோசை ஏனைய குறள் அன்பர்களைப் போல் என்னையும் தாக்கியது. அவர் வாழ்க.*

**- தி. அ. சண்முகசுந்தரம்**

*தமிழ் மொழி வளரவும் குறள்நெறி பரவவும் அவரது தொண்டு பெரிதும் தேவையாகும்.*

**முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.வி.**

*சென்னையில் தம் பிணிபோக்கும் பண்டுவத்துக்காகச் சென்றுள்ள நிலையிலும்கூடத் தமிழர்களை நெறிப்படுத்தும்தம் பணிக்கு முதன்மை கொடுத்திருப்பதை நேரில் கண்டு வியந்தேன். நெகிழ்ந்தேன் - போற்றி நின்றேன் ஆம்! சென்னையில் பிணிக்குப்*

*பண்டுவத்துக்காகத் தங்கியிருக்கும் இல்லத்தின் வாயிற்கதவில் அறிவுப்புளது. குறள்வேள் வேலாஇராசமாணிக்கம் என்றா? இல்லை! திருக்குறள் நம் மறை என்ற சொற்கள் கொண்ட அறிவிப்பு.*

**மீ.சு. இளமுருகு பொற்செல்வி**

*இருபத்து நான்கு மணிநேரமும் குறட்பாக்களிலே மூழ்கித் திளைப்பவர் நம் வேலா அரசமாணிக்கனார்.*

**– மா.க. ஈழவேந்தன்**

*“வள்ளுவனார் கண்ட வாழ்க்கைக் கோட்பாடுகளை அல்லது உலகியலைஏன் வாழ்க்கை நெறியாக ஆக்கக் கூடாது? என்று எண்ணினார்; எண்ணிய நம் அன்பரின் உள்ளம் திண்ணி யதாகலின் எண்ணிய வழியே செயல்படத் தொடங்கினார். குறளாயம் கண்டார். குறளாயத்தில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பங்கு கொண்டன. குறாளயத்தைச் சேர்ந்த குடும்பங் களின் செயற்பாடுகள் ஆர்ப்பரவமின்றி அடக்கமாக ஊர்களிலும் நகரங்களிலும் ஆங்காங்கு நடைபெறுகின்றன. குறள் கருத்தை விளக்குவதை விடக் குறள்வழியிலான குடும்பங்களைக் காணு வதில் மனநிறைவு கொண்டார். ஆங்காங்குக் குறளாயக் குடும்பங்கள் நிகழ்த்தும் நிகழ்வுகளில் பங்கு கொண்டு அவற்றை ஊக்கினார். இப்படியே நாடுமுழுவதும் குறளாயக் குடும்பங்களாக ஆகாதா? என்ற எண்ணமும் ஏக்கமுமாகத்தான் அவருடைய வாழ்வின் ஒவ்வொரு கணமும் நகர்ந்து கொண்டிருக்கிறது. இது வள்ளுவர் காலந்தொட்டு நிகழாத ஒருபுதியநெறி. ஒரு புதிய புரட்சி நெறி என்றே கூறலாம்.*

**பேரா.ந. இராமநாதன்**

வேலாவின் தொண்டு பண்பு நலம் குறித்த தொகுப்பு மிகப் பெரிது; அப்பெரிதின் சுருக்கத்தின் சுருக்கத்தின் சுருக்கத் தொகுப்பே இது!

*“ஈரோட்டை நினைத்தால் தன்மானத் தந்தை பெரியாரே முந்து நிற்கிறார்; அடுத்தாற்போல் நம் வேலாவே வந்து நிற்கிறார்” என்று வ.சுப. மாணிக்கனார் சொன்னார் என்றால், மண்ணின் புகழைத் தம்புகழ் ஆக்கி விட்டார் வேலா என்பதை விளக்க வேண்டுவதில்லையே!*

**பட்டங்களும் - பாராட்டும்**

*மாணிக்கனார், வேலாவை அஞ்சலில் "குறளாயத் தந்தை" எனச் சுட்டுவார்; குழித்தலைவர் பெரியவர் மீ.சு. இளமுருகு பொற்செல்வியார் "குறள் வேல்" என்பார்; கழக ஆட்சியாளர் "குறளாயக் கோமான்" என்பார்; பலப்பலரும் "திருக்குறள் செம்மல்" "திருக்குறள் தென்றல்" என பல கூறுவர்.*

*திருக்குறள் நெறிபரப்பு மையம் வேலா அவர்களுக்குக் 'குறள்நெறித் தோன்றல்' என்னும் சிறப்பளித்துப் பாராட்டியது.*

*பம்பாய் திருவள்ளுவர் கழகம் 'திருவள்ளுவர் விருது' வழங்கத் தீர்மானித்து வேலாவை அழைத்தது. அவர் தம் உடல்நிலை அப்பொழுது ஏந்தாக இல்லாமையால் சென்று வாங்குதற்குக் கூடவில்லை.*

*ஈரோடு கருங்கல் பாளைய இளைஞர் நற்பணி மன்றமும் திருமணப் பண்டக உரிமையாளர் திரு.கு. இராமலிங்கனாரும் 13-5-89 இல் இணைந்து நடாத்திய முப்பெருவிழாவில் "குறள் நெறிக்காவலர்" என்னும் பட்டம் வழங்கிப் பட்டாடை போர்த்திச் சிறப்பித்தனர். விழாவுக்குப் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் வி.கே. குப்புராசு இ.ஆ.ப. தலைமை ஏற்றார். முத்தமிழ்க் காவலர், பெரியவர் செ.ந. குப்புமுத்து ஐயா, பாவலர் பொதிகைச் செல்வனார், தமிழ்க்குமரனார், இளங்கோப் பாண்டியனார் ஆகியோர் வேலாவின் பணிநலம் பாராட்டியும் வாழ்த்தியும் பேசினர். பேரா. உ. பாலசுப்பிரமணியனார் நன்றியுரைத்தார்.*

*புதுவை மாநிலக் குறளாய மாநாடு 15-1-90-ஆம் நாள் பொது நிலைக்கழகத்தே நிகழ்ந்தது. புதுவைக் குறளாயம் சார்பில் வேலா அவர்களுக்குத் 'திருக்குறட் செம்மல்' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டினர். விழாத் தலைமை பா.சு. அரியபுத்திரனார் ஏற்றிருந்தார். குறளாய மாநாட்டுக் குழுவினர் வேலாவின் தொண்டைப் பாராட்டிப் பேசினர்.*

*உலகத் திருக்குறள் உயராய்வு மையம் 13-4-90-இல், 'குறள்நெறிச் செம்மல்' என்னும் பட்டம் வழங்கிப் பாராட் டெடுத்தது.*

**தமிழ்ச் சான்றோர் நெருக்கம்**

வேலா பள்ளியில் படித்த கால முதலே தமிழ்ச் சான்றோர் தொடர்பில் இருந்ததையும் அவர்களை மதித்துப் போற்றியதையும் அறிந்துள்ளோம். அவ்வகையில் தந்தையார் காலத்திற்குப் பின்னர்க் குறளியம் குறளாயத் தொடர்பால் உண்டாகிய பெரு மக்கள் தொடர்பு எண்ணிக்கையில் மிகப் பெருக்குடைய தாகும். தமிழ் அறிஞர்கள் உணர்வாளர்கள் என எவரெவர் விளங்கினரோ அவர்களையெல்லாம் வேலா மதித்துப் போற்றினார். அவ் வகையில் பன்மொழிப் புலவர் அப்பாத் துரையார், பாவாணர், அறிஞர் வ.சுப. மாணிக்கனார், பாவலரேறு பெருஞ்சித்திரனார் சாலையார் என்பார் குறிப்பிடத் தக்கவர்கள்.

இனிக் குறளியம் குறளாயப் பணிகளை வேலாவுடன் ஒன்றாகி உடனாகிப் பார்த்துவரும் பெரும்புலவர் பட்டுக்கோட்டை மீ. தங்கவேலனார், செயற்கரும் செயல் பெரிது! இனித்தொடக் கத்திலும் இடையிலும் அவ்வப்போதுமாகப் பேரா. மு.ச. சிவம், பாவை நடராசர், பொதிகைச் செல்வர், பேரா. உ. பாலசுப்பிரமணி யனார், செய்து வந்துள்ள தொண்டுகளும், சொல்லிலும் செயலிலும் காத்துச் சிறக்கும் பாவலர் ஈவப்பனார் தொண்டும் கருதி மகிழத் தக்கன.

ஓர் அமைப்பின் சிறப்பு அதன் தலைமையாலும் கொள்கை யாலும் சிறப்புறுவதுடன் சார்ந்து நின்று கடமை புரிந்தவர் உள்ளொத்த துணையாலும் உணர்வுப் பங்களிப்பாலும் சிறப்புறும் என்பதற்கும் இப்பெருமக்கள் கூட்டுறவு பெருந்து ணையாக இருந்தது; இருந்தும் வருகின்றது அமைப்புப் பற்றிய செய்திப் போக்குவரத்து, இதழ் அச்சீடு என்ற அளவில்தான் பிறரால் துணை நிற்க முடியும். ஆனால், இத்தகைய புலவர் பெருமக்களால் அமைப்பு இயக்கப் பயன்பாடும், இதழ்ச் செய்திக் கொடைப் பயன்பாடும் ஒருங்கே ஏற்படுதற்கு வாய்த்த மையால் வேலா, முழுமையாகக் கருத்துக் கூறுதல், கட்டளை இடுதல், கையெழுத்து இடுதல் என்ற அளவில் அமைந்து மற்றைப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டு வருகின்றது. இனிப் புலவர் ஆறுமுகனார், புலவர் பொதிகைச் செல்வனார், புலவர் வடிவேலனார், பாவலர் ஈவப்பனார் இன்னோர் உழுவலன்பும் ஒத்துழைப்பும் குறளா யத்திற்குக் கடைத்து வருதல் வேலாவின் சால்புச் சீர்மையின் பயனேயாம்.

இனிக் குறளாயக் கிளைகளைச் சார்ந்த பெருமக்கள் பணியும் குறளாயப் பணியின் விரிவாக்கமே யன்றோ! அவற்றைப் பற்றியும் அப்பணியில் ஊன்றிய, பெருமக்களின் உதவிப் பாடு என்பன பற்றியும் 'குறளாயப் பகுதி'யிலே காணலாம்.

வேலா - தனி ஒருவரல்லர்! அவர் ஒரு நிறுவனம்; அவர் ஓர் இயக்கம்!

வேலா - ஒரு நிறுவன - அமைப்புப் - பொறுப்பாளர் மட்டும் அல்லர்! அவர் அரிய செயலர்; பெரிய பொருளர்! உரிய தொண்டர்!

குறளிய - குறளாய - நிகழ்ச்சிகளா? வேலா நிறுவனங்களே முந்து நின்றும் - வந்து நின்றும் பணி செய்யும்! வேலாவின் அமைப்பு கட்டொழுங்கு அத்தகைத்து!

வேலா நடத்தும் விருந்தா? விடுதி விருந்தா இராது! வீட்டு விருந்தாகவே அமையும் நிறுவனங்களே இயைந்து கடனாற்றும் ஒழுங்குடையதெனின், வீட்டைச் சொல்வானேன் அம்மையார், மக்கள், மருகர் அனைவரும் கடமைகளைத் தாம் தாம் தாம் எடுத்துக்கொண்டு செய்யும் போது எவ்வளவு பெரும் பொறுப்பும் எளிமையாகிப் போய்விடும் அல்லவோ!

வேலாவுக்குத் திருக்குறளே வாழ்வு!

திருக்குறளே மந்திரம்!

திருக்குறளே தவநெறி!

திருக்குறளே வைப்பகம்!

திருக்குறளே துய்ப்பகம்!

திருக்குறளே அமிழ்து!

திருக்குறளே மருந்து!

திருக்குறளே வாழ்வாக உடையவேலா,

திருக்குறள் போலவே வாழ்தல் உறுதியன்றோ.

# 2. திருக்குறள் பேரவை

**அடிகளார் தொண்டு**

*1974-இல் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் திருக்குறள் பேரவை என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். செல்லுமிடங் களில் எல்லாம் திருக்குறளில் அமைந்துள்ள புரட்சிக் குறிப்புகளை எடுத்து வைத்து, அவையோர் குறிப்புகளைத் தம்பால் ஈர்த்துக் கொண்ட அடிகளார், அப்பட்டறிவின் துணையிலேயே அவ்வமைப்பைக் கண்டார். திருக்குறளில் அமைந்து கிடக்கும் சைவசமயக் கோட்பாட்டளவில் நில்லாமல், மேனிலையாம் பொதுமை இறைக்கொள்கை, ஆள்வினைக் கொள்கை, அரசியல் கொள்கை, பொருளியல் கொள்கை, அரசியல் கொள்கை, பொருளியல் கொள்கை, குமுகாய இயல் கொள்கை, வாழ்வியல் நெறி என்பனவெல்லாம் ஆய்வுப் பொருளாய் - பட்டிமன்றப் பொருளாய் - வழக்காடு மன்றப் பொருளாய் - கருத்தரங்கப் பொருளாய் - பட்டிமன்றப பொருளாய் - வழக்காடு மன்றப் பொருளாய் - கருத்தரங்கப் பொருளாய் - கலந்துரையாடற் பொருளாய்ப் பெருநகர் சிறுநகர்களோடு பட்டிதொட்டி களிலும் பரவச் செய்தார்! வெளிநாட்டுச் செலவுகளில் தாம் கண்ட புதுமை - புரட்சிக் - கருத்துகளுக்கும், திருக்குறள் இடம் தந்து நிற்பதுடன், அதனினும் மேலோங்கி நிற்கும் கருத்துகளும் ஆழ்ந்து கிடப்பதையும் எடுத்து வைத்துத் திருக்குறட் சிந்தனையை நன்கு பரவ விட்டார்; பரப்பினார். அப்பரப்புதலுக்குப் பரப்பகமாகவும் - பலரையும் அப்பணியில் ஆட்படுத்தி வினை யாற்ற ஊக்குவதாகவும் அமைக்கப்பட்ட அமைப்பே திருக்குறள் பேரவையாகும்.*

**வேலாவின் அணுக்கம்**

*இயல்பாகவே திருக்குறள் பற்றுமையும், ஊன்றுதலும் உள்ள வேலாவுக்கு அடிகளார் அழைப்பும் அமைப்பும் “கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ!” என அப்பர் அடிகள் அழைத்த அழைப்பாகவே தோன்றிற்று. அதனால், அடிகளார்*

*பால் வயப்பட்டார்; அமைப்பின்பால் வயப்பட்டார். இந் நிலையில் 1977-இல் அடிகளாரை அழைத்து, பொங்கல் விழாவை ஈரோட்டில் சிறப்பாக நிகழ்த்தினார் வேலா. பேரவையில், மண்டலச் செயலாளராக வேலாவை அடிகளார் அமர்த்தினார். 1978-இல் திருச்சியில் மாநில மாநாடு நிகழ இருந்தது.*

*அப்பொழுதில் திருக்குறள் பணியில் முந்து நின்று பாடுபடும் பெருமக்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும்; ஒருங்கு கூடி ஒருமைப்பாகப் பாடுபட வேண்டும் என மடல் விடுத்து முத்தமிழ்க் காவலர், அடிகளார், திருக்குறளார், பாவலரேறு ஆகியவர்களை அழைத்து ஓரரங்கில் கண்டு களித்தார்.*

*அம் மாநாட்டின் திறப்புவிழாப் பொழிவை வேலா நிகழ்த்தினார். பின்னர் அடிகளார் திருக்குறள் பொழிவுக்கு எங்கெங்குச் சென்றாலும், மாநாடு, விழா நடத்தினாலும் வேலா மிக அணுக்கமாயினார். பேரவையின் செயல்விளக்க - விளம்பரக் கருவியாக 'ஓரிதழ்' தொடங்க வேண்டும் என்னும் தூண்டலை முன்வைத்தார் அடிகளார். அதனால் 1980-இல் குறளியம் கிளர்ந்தது. அடிகளார் விரும்பியது போலவே பேரவைச் செய்தி களைச் சிறப்பாகக் குறளியம் வெளியிட்டது. அடிகளார் கட்டுரைகளையும் இதழ்தோறும் வெளியிட்டது.*

*முதல் இதழை வெளியிட்டு வாழ்த்துமுரைத்தவர் அடிகளார். அவ் விதழில் "புதியதோர் தமிழினம் படைப்போம்" என்று மடிதற்று முந்துற்ற தமிழ்மாமுனிவர் தவத்திரு அடிகளாரின் நெறிமுறைகளுக்குத் தோள் கொடுத்துத் துணைபுரியக் குறளியம் விழைகின்றது. தமிழர்கள் இதுவரை அரசியலால் ஒன்றுபட முடியவில்லை. சமயங்களால் ஒன்றுபட முடியவில்லை. கட்சி களால் ஒன்றுபட முடியவில்லை. தமிழர்கள் ஒன்று படுவதற்குத் தனிப்பெரும்வழி தமிழர்களின் நெறி விளக்காகிய திருக்குறள் ஒன்றே. குறள்வழி ஒன்றுபடுவோம். குறள்நெறியை உலகெங்கும் பரப்புவோம். குறள்வழி நடப்போம்.*

*தமிழன் தலைநிமிர்ந்து நிற்கத்தக்க துணையாய் இருக்கும் குறளைப் பரப்பி வரும் மாநிலத் திருக்குறட் பேரவையின் தொண்டுகள் தமிழக வரலாற்றில் இடம்பெறத் தக்கவை" என்பது "மாநிலத் திருக்குறள் பேரவை" என்னும், கட்டம் கட்டிய செய்தியின் ஒரு பகுதியாகும்.*

**ஏன் திருக்குறள் பேரவை**

*அவலநிலையில் இருந்து தமிழகத்தை மீட்க மாந்த குலத்தை மீட்க - உள்ள ஒரே வழி திருக்குறளை வாழ்வியல் அறமாக, வாழ்வியல் சட்டமாக ஏற்றுக் கொள்வதுதான்! திருக்குறள் பேரவை, இந்த முயற்சிக்காகத் தொடங்கப் பெறுகிறது.*

*"திருக்குறள் பேரவையின் முதல்நோக்கம் திருக்குறளை முழுதாகக் கற்றல், திருக்குறளை திருக்குறள் கருத்தை - கொள்கைகளை - கோட்பாடுகளை - வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தி சோதனை செய்து வெற்றிபெற்ற அறிஞர்களை திருக்குறள் அறிஞர்களாக ஆகும் முயற்சியில் ஈடுபட்டவர்களை ஒருசில நூறு பேர்களையாவது படைத்திடுவது என்பதுதான். வாழ்க்கை யின் அனைத்துச் சிக்கல்களுக்கும் திருக்குறள் தீர்வு காண்பது என்பது திருக்குறள் பேரவையின் குறிக்கோள். குமுகாய நெறிகளை வளர்த்து, வள்ளுவத்தைக் கருவியாகப் பயன்படுத்துதல் திருக்குறள் பேரவையின் நோக்கம் இன்ன பல கருத்துக்களை விளக்கி ஏன் திருக்குறள் பேரவை என்னும் அடிகளார் கட்டுரை மூன்றாம் இதழில் வெளிவந்தது.*

*22-2-80 இல் வேலாவைப் பெரியார் மாவட்டத்திருக்குறள் பேரவை அமைப்பாளராகச் செயல் படப் பணித்த அடிகளார் ஆணையும் திருக்குறள் பேரவை மாநில மாநாடு இரத்தின கிரியில் நடக்க இருப்பது குறித்த விளம்பரமும் மூன்றாம் இதழில் இடம் பெற்றன.*

*"திருக்குறள் வாழ்க்கைச் செயற் குறிப்புகள்" என்னும் அடிகளார் தொடர் கட்டுரை நான்காம் இதழில் தொடங்குகிறது.*

*"கோள்களையும் காலங்களையும் நம்பி நாளும் ஏமாறும் மாந்தர்க்கு விழிப்புணர்வு ஏற்படுமாறு, இராகு காலத்தில் தொடங்கப்பட்ட இரத்தினகிரி திருக்குறள் பேரவை இரண்டாம், மாநில மாநாட்டுச் செய்தியை 'வீரவேல்' என்னும் புனை பெயரில் 'வேலா'வே தொகுத்து வழங்கி உள்ளார். (இதழ் - 14)*

*8-2-81 இல் கோவை திருக்குறள் பேரவை மாநாட்டில் நிகழ்ந்த கருத்தரங்கில் பங்கு கொண்டார் வேலா.*

*குறளியம் முதலாண்டு நிறைவின்போது அடிகளார் இனிய வாழ்த்துரைத்து அதன் தொண்டு நலம் பாராட்டி ஊக்கினார்:*

*"திருக்குறள் ஓர் இயக்க நூல். ஆனால், சென்ற காலத் தமிழக வரலாற்றில் திருக்குறள் இயக்கமாக இல்லாமல் இலக்கிய மாக்கப் பெற்று விட்டது. வடபுல நாகரிக விரும்பிகள் திருக்குறளை அறநூலாகவுமம் விளக்கமடைய முடியாமல் திருக்குறளை இலக்கியமாக்குவதில் முனைந்து நின்றர். விளைவு, தமிழகம் திருக்குறள் நெறியில் இருந்து முறை பிறழ்ந்தது. திருக்குறள் இயக்கநூல் என்றால் என்ன பொருள்? திருக்குறள் குமுகாயத்தின் அனைத்துத் துறைகளையும் இயக்கும் ஆற்றலுடைய உயர்ந்த நூல் என்பதாகும். ஆனாலும், இயக்க நூல் என்பதால் அறம் தழுவியதன்று என்று பொருள் கொள்ளக்கூடாது. திருக்குறள் ஒரு முழுமையான குமுகாய நூல். இந்தத் தலை முறையில் தமிழகத்தைத் திருக்குறள் நெறி தழுவிய நாடாக ஆக்க வேண்டும் என்பது திருக்குறள் பேரவையின் குறிக்கோள்."*

**குறளியச் சீர்த்தி**

*இக்குறிக்கோளை அடைவதற்குத் தலை சிறந்த கருவியாக விளங்குவது குறளியம்.*

*குறளியம் அயல் வழக்குக்கு 'எரிநெருப்பு'*

*தமிழ் நெறிக்கு அரண்!*

*"குறளியம் தமிழராய்ப் பிறந்து தமிழராய் வாழும் எல்லாரும் படிக்க வேண்டிய ஓர் இதழ்.*

*"குறளியத்தைத் தமிழர் நலம் கருதி - பொருள் இழப்பையும் பொருட்படுத்தாது அருமைக்குரிய வேலா இராச மாணிக்கனார் நடத்தி வருகிறார். தமிழ் நெஞ்சமுடைய அனை வரும் குறளியம் வாங்கிப் படிப்பது கடமை. குறளியம் வளர்வது தமிழகத்தின் எதிர்கால வரலாற்றுக்கு அடிக்கல் என்பதை மறவற்க. ஓராண்டு வளர்ந்துள்ள குறளியத்துக்கு வாழ்த்துக்கள்."*

*குறளியத்தின் கொள்கை இதுவென எவ்வளவு தெளிவாகக் கூறுகிறார் அடிகளார். குறளியம் "தலைசிறந்த கருவி"; "அயல் விழக்குக்கு எரிநெருப்பு"; "தமிழ் நெறிக்கு அரண்" என்பன வெல்லாம் எத்தகைய தேர்ச்சியுரைகள்: தேர்ந்த வழிகாட்டுதல்கள்!*

**பேரவையில் வேலா பங்கு**

*23-8-81 இல் அவலூர்பேட்டையில் திருக்குறள் பேரவையின் சார்பில் "பொதுவுடைமைச் சமுதாயம் மலர்வதற்குத் திருவள்ளுவர் வழிகாட்டத் தவறிவிட்டார்" என்று குற்றம் சாட்டி வழக்காடு மன்றம் நிகழ்ந்தது. நடுவராக அமர்ந்த வேலா,*

"இக்குற்றச்சாட்டு பொருத்தமுடையதன்று; வள்ளுவர், உலகில் அமைந்த பல குமுகாயங்கட்கும், பல அரசுகட்கும் படிநிலைகள் அமைத்து அவ்வந் நிலைகளிலேயே வெற்றி காண வழிவகுக்கிறார். அத்தகு படி நிலைகளிலே ஒன்றுதான் பொதுவுடைமை. அது வள்ளுவனார் வகுத்த படிநிலைகளில் ஏழாகவோ எட்டாகவோ ஆறாகவோ இருக்கலாம். ஆனால், வள்ளுவனாரின் உச்சிப்படி நிலை முடிந்த முடிவுப் படிநிலை குறளியக் குமுகாயம் - குறளிய ஆட்சி" என்று பல சான்றுகளைக் கூறி, பொதுவுடைமையினும் மேம்பட்டது குறளியம் எனத் தமது நடுவர் உரையாக - தீர்ப்பாக - வழங்கி அனைவரையும் சிந்திக்க வைத்தார். திருவண்ணாமலை திருக்குறள் பேரவையில் 23-8-81இல் குறளின்பம் என்னும் தலைப்பில் விரிவுரையாற்றினார்.

13-9-81 இல் நிகழ்ந்த திருச்சி மாவட்டத் திருக்குறள் பேரவை மாநாட்டில், குறளின் கருத்துக்களை நடைமுறைப்படுத்த நாம் செயல்பட வேண்டும். இலக்கியமாகப் போற்றுகிறோம்; இனி அதை இயக்கமாக வளர்த்திட - வேண்டும் என்று விழா நிறைவுத் தலைமையுரையில் கூறினார். இது, அடிகளார் கருத்தை வேலா ஏற்றுக் கொண்டு இயக்கமாக்க முந்துநின்ற முடிபாகும்.

15-11-81 இல் குழித்தலையில் தமிழ்க் கா.சு. விழா. அதில் சிந்தனை அரங்கத் தொடக்கவுரை யாற்றிய வேலா, "விழா நாயகராகிய கா.சு. நிழற்படம் ஏக்கத் தோற்றமாக இருப்பது போல் தலைமை ஏற்றுள்ள குன்றக்குடி அடிகளார் போரூர் அடிகளார் ஆகியோரும் ஏக்கப் பார்வையிலே உள்ளனர். கரணியம் இவ்விழிந்ததமிழ்க் குமுகாயம் பண்டை நாளைப்போல் என்று பாங்குறுமோ என்னும் ஏக்கந்தான்; எப்படி அதைத் தீர்ப்பது என்பதுதான்! அதற்கு முதற் கட்டமாகக் கோயிலில் தமிழ் வழிபாட்டு முறையை உண்டாக்குதலும், காசி திருக்கோ கர்ணம் போல் இறையுருவைத் தொட்டு வழிபாடு செய்தலும் இடைத்தரகரை வழிபாட்டில் ஒழிப்பதுமாகும்" என்றார்.

அடிகளார் தம் தலைமை உரையில், "வேலா போன்றவர்கள் இதற்கு எழுச்சியூட்டிக் களம் அமைக்கும் பொறுப்பை ஏற்கட்டும். அதற்கு முதல் ஆளாகத் தார் தாங்கிச் செல்லவும் களப்பலி ஆகவும் அணியமாக உள்ளேன் என்னும் சூளுரையை மேடையில் அமைந்த தமிழ்நாடு தழுவிய அவையினர் முன் வைத்தார். இக்கருத்து அரும்பினின்று மொட்டாகி விட்டது போதாகி மலர்வது எக்காலம் எனக் கலந்துரையாடியவாறே அவையினர் கலைந்தனர். (குறளியம் 2:5)

சேலம் மாவட்டத்திருக்குறள் பேரவை மாநாடு 22-11-81-இல்நிகழ்ந்தது. பட்டிமன்றத் தொடக்கவுரையாற்றிய வேலா, திருக்குறள் வாழ்வியல் வெற்றி பெறச் சமய வழியிலோ அரசியல் வழியிலோ தலைமை ஏற்க வேண்டும். இதற்கோர் முடிவொன்று வேண்டும்'' என்றார் அடிகளார் அவர்கள், "பேரவையின் குறிக்கோளின் படி செயலுறுங்கள்; இது போன்ற மாநாடுகள் விழாக்கள் இனிப் பயன்தரா; யானும் விரும்பவில்லை. சிறு எண்ணிக்கையினராக இருந்தாலும் செயல்வீரர்களுடன் மனம் விட்டுக் கலந்துரையாடும் நிகழ்ச்சியினையே விரும்புகிறேன். திராவிடம், இந்துமதம் என்கிறார் நம் வேலா. இவையனைத்தும் குறளியத்திற்கு ஒவ்வாத தன்றோ'' என்று கூறினார் (குறளியம் 2:5)

**அறை கூவல் ஆய்வு - விளைவு :**

ஓர் ஆண்டு ஓடட்டும்! உறுதியுடன் நாம் நிற்போம்! என்னும் தலைப்பிட்ட ஆசிரிய உரையுடன் 1-1-82 இதழ் (2:6) வந்தது. அதில் "நாம் எவற்றை ஒதுக்க வேண்டும் ஒழிக்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ, அவை நம்முடனேயே பிரிக்க முடியாத அவல நிலையில் இணைந்திருப்பதால் அழித்தால் நாமும் அழிந்து விடுவோமோ என்ற அச்ச உணர்வின் ஏதிலிகளாய் ஆட்பட்டுக் கிடக்கின்றோம்.''

இவற்றிற்கோர் மாற்றம் வேண்டும் என்ற சிந்தனையுடன் பிறந்த குறளியம் நவம்பர்த் திங்களிதழின் ஆசிரியஉரை, எதை எண்ணி எதிர்நோக்கி எழுதப்பட்டதோ அது முகிழ்த்து விட்டது. ஆம்! நம் தமிழ் மாமுனிவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களின் மடல்வழி அச்சிந்தனை உறுதியுடன் தெளிவுடன் மெய்யுணர்வுடன் தோற்றுவிக்கப்பட்டு விட்டது. அதுவே 'திருக்குறட் சமயம்' இனி, அந்நிலைக்கு ஆட்படலும் ஒருப் படலுமே நாம் செய்ய வேண்டிய பணி. பேசி வந்த காலம் முடிந்து, செயற்படும் காலம் வந்து விட்டது. நம்மை ஏன் நம்மை மட்டுமல்ல; இந்த மாந்தக்குமுகாயத்தையே உய்விக்கவல்ல திருக்குறட் சமயத்தின் தொண்டருக்கும் தொண்டனாய், உறதிப்பட நிற்கும் உள்ளத்தினனாக என்னை ஈகம் செய்ய முடிவு செய்துள்ளேன். நீங்களும் வரச் சிந்தியுங்கள்.

நாம் பிறந்து வளர்ந்து மேற்கொண்ட சமயம் அல்லாது வேறொரு சமயம் காண்பதா எனத் தயங்கினால் குடிகாக்காது. மேலும் பல நூற்றாண்டுகள் கழிவதொன்றே நடக்கும்.

ஆதலின், அன்பு கொள்ளுங்கள், செயல்பட விறு கொள் ளுங்கள். திருக்குறட் சமயம் பல்லாற்றானும் உருக்கொள்ள உங்கள் கருத்துக்களைத் தவத்திரு. குன்றக்குடி அடிகளாருக்கும் எழுதுங்கள். அதன் படியொன்று எனக்கும் அனுப்புங்கள்.

'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்னும் ஏக்கச் சொற்கள் இனி நம்மிடை நடமாடக் கூடாது. கட்டுண்டோம்; பொறுத்திருந்தோம்; காலம் வந்து விட்டது; எக்கயமையையும் வெல்வோம் என்ற சூளுரை பிறக்கட்டும் என ஆசிரிய உரை வழியே அறை கூவல் விடுத்தார் வேலா.

**திருக்குறட் சமயம்**

இவ் வறைகூவல் தூண்டில் எங்கிருந்து கிளர்ந்தது. அடி களாரிடமிருந்து கிளர்ந்தது. 3-12-81-இல் ஒரு கடிதம் வரைந்தார் அடிகளார்:

சேலம் மாவட்டத் திருக்குறள் பேரவை மாநாட்டில் தாங்கள் ஆற்றிய சொற்பொழிவு எழுச்சி மிக்கதாக இருந்தது. தங்களுடைய ஆர்வத்திற்கு நமது உளம் நிறைந்த பாராட்டுகள்.

தாங்கள் இந்துமதம் என்ற கூட்டில் இருந்து பிரிந்து தமிழர் மதம் என்ற பெயரில் ஒன்றை உருவாக்க வேண்டுமெனக் குறிப்பிட்டீர்கள். அஃது ஏற்கத் தக்கதே. ஆயினும் 'தமிழர்' என்ற அடைச் சொல்லோடு இனம் பிரித்துக் காட்டி மதக் கொள்கையை நிறுவினால் வளர்ந்து வரும் உலகப் போக்கில் இடர்ப்பாடுகளும் நிறைய ஏற்படும். அஃது உலகளாவிய கொள்கையாக விரைந்து ஏற்றுக் கொள்வதில் மற்றவர்களுக்குத் தயக்கமும் புழுக்கமும் ஏற்படும். சென்ற காலத்தில் தலைவர் பெரியாரும் பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழின உணர்வுக்கு வித்திட்டு அது 'ஓகோ' என்று சிறப்பாக வளர்ந்து வந்ததும் இப்போதைய நிலையில் அந்த உணர்வு சீர்குலைந்து விட்டதையும் வரலாற்றுப் போக்கில் நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். இதைப் போலவே 'தமிழர்மதம்' என்பதும் நிலை கொள்ள இயலா நிலைக்குத் தள்ளப்படலாம்.

ஆதலால், நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள திருக்குறள் கூறும் சமயத்திற்குத் 'திருக்குறட் சமயம்' என்று அமைத்து அவ்வழியாகவே தமது சமய நெறியை வளர்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

திருக்குறட் சமயம் அமைப்பும் நமது திருக்குறள் பேரவை உறுப்பினர்கள் முதலில் வாழ்க்கையில் ஏற்று ஒழுகத்தக்கதாக

*அமைய வேண்டும். இதனை முதலில் மாவட்ட மாநாடுகளில் தீர்மானங்கள் மூலம் வலியுறுத்த வேண்டும். திருக்குறள் பேரவையைச் சேர்ந்த நமக்குள் குறிப்பிட்ட 50 பேர்கள் கூடித் திருக்குறட் சமயக் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் வடிவம் தருதல் வேண்டும். இவ்வகையான முயற்சியில் ஈடுபடுவது வளர்ந்து வரும் வரலாற்றுப் போக்குக்கும் உலக அளவில் நமது சமய நெறியைக் கொண்டு செல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று நம்புகிறோம். இது தங்களுக்கும் உடன்பாடானதாகவே இருக்கும் என்றும் நம்புகிறோம். அன்பு கூர்ந்து இக்கருத்துக் குறித்து ஆலோசித்து எழுதுங்கள்; முயற்சி செய்கிறோம். இந்துமதம் என்ற கட்டில் இருந்து விடுபட்டு இயங்குவதற்கு இஃதொன்றே வழியாக இருக்கும். இவ்வகையில் தங்களுடைய எழுச்சி நிறைந்த கருத்துக்களைச் சேலம் மாநாட்டில் கூறிய மைக்குப் பாராட்டு. நன்றி.”*

*3-12-81-இல் அடிகளார் இப்படி எழுதுகிறார். ஆனால் ஆர்வத்துடிப்பு உடையவர்கள் உடனே கடிதங்கள் எழுதிப் பரபரப்பாக்குகின்றனர். அதனால் அடிகளார் 16-12-81-இல் “ஏன்? இப்பொழுதே எழுத ஆரம்பித்துள்ளார்கள். குறளியத்தில் ‘ஓர் ஆண்டு விவாதம்’ செய்த முடிவுக்கு வரலாமே! இது தொடர்பாக வரும் கடிதங்களை வெளியிடுங்கள். நாம் பதில் எழுதுகிறோம். பின் முடிவு எடுக்கலாம்” என்று எழுதுகிறார்.*

*அதன் மேன்மடலாகவும் நிலைவிளக்கமாகவும் வேலா எழுதுகிறார் :*

*“தவத்திரு அடிகளார் நம்மை ஓராண்டு சிந்திக்கச் சொல்லி மடல்எழுதி விட்டார். ஏன் எனச் சிந்தித்துப் பார்த்தேன். வெறும் சொல் வீரர்களாகத்தான் இந்த இனம் வாழ்ந்து வருகின்றது என்ற எண்ணம் இருக்குமோ என்ற சிந்தனையும் சுழலிடுகிறது. உண்மையும் அதில் உறைந்து தானே இருக்கிறது. எதை நம்பி இந்த இனத்திற்கு வழிகாட்டுவது? திராவிட வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் இன்றிருக்கும் நிலையைப் பார்க்கும் போது நெஞ்சு கொதிக்கத் தானே செய்கிறது. ஈராயிரம் ஆண்டு அடிமை வாழ்க்கையை ஈராயிரத்து ஒன்றாக மாற்றிக் கொள்வதில் ஒன்றும் இழந்துவிட மாட்டோம். ஆனால், முடிவு நல்ல முடிவாகத் தோன்ற வேண்டும். தோன்றும் என்பதற்கு முன் எடுத்துக காட்டாய் நிகழ்ந்த நிகழ்ச்சியை உங்கட்கு உணர்வுடன் சொல்லிக் கொள்கிறேன்.*

**உறுதி பிறந்தது**

*ஈரோட்டில் 20-12-81 அன்று பெரியார் மாவட்டத் திருக்குறள் பேரவைச் செயற்குழுக் கூட்டம் கூடியது. அதில் அடிகளாரின் மடலையும் அதை ஒட்டி எழுதப்பட்ட சிந்தனையாளர்களின் மடல்களையும் படித்துக் காட்டினேன். கலந்துரையாடல் மிகச் சூடு பிடித்தது. சைவ சமய மடத்தில் இருந்து கொண்டு வேறு ஒரு சமயம் படைக்கும் வீரமும் சிந்தனையும் அடிளாருக்கு வந்ததையும் வியப்புடன் குறிப்பிட்டனர் பலர். பேச்சு மேலும் சூடு பிடித்தது. பல திக்குகளில் சிந்தனைகள் ஓடின. பகுத்தறிவு, கடவுள் மறுப்பு, இன உணர்வு ஆகியனவும் மோதின. 'திருக்குறளை நம்புபவர் நெற்றியில் பொட்டு எதற்கு பூச்சு எதற்கு?' என்று கேள்வி பிறந்தது. மனத்துக்கண் மாசிலனாவதே திருக்குறள் சமயம்எனச் சொல்லிவந்த ஈரோடு திருக்குறள் பேரவைத் தலைவர் திரு. பெரியண்ணன் அவர்களை நோக்கி இக்கேள்வி வீசப்பட்டது. மணிவிழாக் கண்டு திருக்குறளை உயிர் மூச்சாகக் கொண்டு வாழும் அப்பெரியவர் சிந்திக்கக்கூட நேரம் எடுத்துக் கொள்ளாது நம் சந்தனப் பொட்டையும் பூச்சையும் நீக்கித் தம் உள்ளத்தை மட்டுமன்றி, உடலையும் திருக்குறளுக்கு ஈந்த காட்சி என் மெய்யெல்லாம்சிலிர்க்கச் செய்தது. அவையே அளக்க ஒண்ணா வியப்பெய்தியது!"*

*என் உள்ளத்தில் பளிச்சென ஓர் ஒளி பிறந்தது. ஆம்! திருக்குறள் வழி ஒரு குமுகாயம் பிறந்து விடும் என்ற உறுதி பிறந்து விட்டது ஆனால், பல உள்ளங்களில் எழும் ஒரே சிக்கல் 'சமயம்' என்ற சொல் திருக்குறளின் துணை சொல்லாக வேண்டாம். வேறு சொல் வேண்டும் என்பதே. வாருங்கள் - சொல்லுங்கள் - சிந்திப்போம் செயல்படுவதில் உறுதியாய் நிற்போம்.*

*தவத்திரு அடிகளார் அவர்கள் ஓராண்டு சிந்தனையில் ஓட்டும் என்கிறார். ஆனால் நாம்உறுதியுடன் நிற்போம். உறுதியிருப்பவர்கள் ஒருப்படுபவர்கள் ஒன்றாகுக்ஙள். சிந்திப்போம்; சிந்திப்பவர்களையும் ஓரணியில் சேர்போம். வரும் சனவரி 15 ஆம் நாள் நம் தெய்வத்தின் திருநாள். இல்லந்தோறும் விழா எடுங்கள் என்னும் வேலா, சிந்தனைக் கடிதங்களை வரவேற்று, அவற்றைக் குறளியத்தில் வெளியிடுவது பற்றியும் அறிவிக்கிறார். (2:6:4)*

*3-12-81 ஆம் நாள் அடிகளார் அஞ்சலுக்கு மறுமொழியும் எழுதுகிறார்.*

*“தங்களின் மடலைப் பலபடியெடுத்துப் பல சிந்தனையாளர் களுக்கும் அனுப்பி உவந்தேன் குறள்வழி ஒரு குமுகாயம் தோன்றும் என்ற நம்பிக்கையும் அப்பெருங் குமுகாயத்தில் ஒருவனாய்த் தான் நான் உயிர்நீப்பேன் என்ற நம்பிக்கையும் மலர்ந்து விட்டது. இதுபற்றிய தங்களின் தொடர்ந்த நடவடிக்கைகளுக்குப் பல்லாற்றானும் உறுதுணையாக இருப்பேன்.”*

*திருக்குறட்சமயம் இன்றுழலும் இசுலாம் கிறித்தவம் ஆகியவற்றையும் ஈர்த்துமேல் எழக்கூடிய சமயமாக மலர வேண்டும். பார்ப்பனியம் அறவே நீக்கப் பட்டதாயும்சிவனியம் திருமாலியங்களை உள்ளடக்கிச் சேர்த்து விட வல்லதாயும் அமைதல் வேண்டும். அறம் என்பதைச் செயல்களில் இருந்து நெஞ்சத்துடைமையாக்க வேண்டும். பொருளைச் சமன்மைக் குமுகாயத்திடையே காணவேண்டும். இன்பத்தை இல்லறத்திலே தூய்த்துணரல் வேண்டும். தமிழ்த்தென்றல் திரு.வி.க. கருதியது போல் திருக்குறள் பாக்களுக்குக் காலத்துக் கேற்ப நன்மைகளைப் பயக்கும் தீதில்லா உரைகளை உருவாக்கிச் சிக்கெனப் பிடித்தல் தவறாது வேண்டும்.*

*அத்துடன் ஒரு நிறம் வேண்டும், ஒரு முறை (அனைத்து நடப்புகளிலும்) வேண்டும். ஒரு வல்லொலியும் வேண்டும். ஒருவர்க்கு ஒருவர் இனங்கண்டு கொள்ள ஓர் அடையாளமும் வேண்டும். அவர்களோடு இயங்கக் கொள்கை மிகு இளைஞர் அணியும் வேண்டும். கடவுள் மறுப்பாளர்களில் இணைந்து விட்டுத் திணறுவோரும், பகுத்தறிவாளர்களில் ஏதோ ஆற்றல் என்ற ஒன்றை ஏற்போரும், பார்ப்பனியம் இல்லா ஓர் புதிய அமைப்புக்கு ஏங்கும் உள்ளத்தோரும், தனிச்சிவனியம், தனி மாலியம் என்று சிந்திப்போரும் திருக்குறட் சமயத்தில் உடனடிப் புகுந்து கொள்கை வழி உருப்பெறலாம். பார்ப்பனியத்தை மேற்கொண்டவரும் தம் கயமை அழித்து மனம் திருந்தி பூணூல் அறுத்து, போலி மைப் பார்ப்பனியத்தை மனதார விலக்கி மாந்த உணர்வுடன் வருவோரும் ஏற்கப்படலாம். இவை எல்லாம் தங்கள் சிந்தனைக்கு வைக்கப்பட்டனவே ஒழிய முடிவுகள் அல்ல என எழுதினார். (2:6:6)*

**ஆய்வுகள்**

*திருக்குறள் சமயம் குறித்த அஞ்சல்கள் வந்தன; பெருகின; நேர்காணல்களும் நிகழ்ந்தன; கருத்தரங்குகளும் கிளர்ந்தன.*

*"திருக்குறள் சமயத்தில் கோயில் வழிபாடு இல்லையே; நாம் திருக்கோயிலை விட்டுவிட முடியுமா?" என வினாவினார் முத்தமிழ்க் காவலர்.*

*"சமயம் என்ற சொல் தடுமாறச் செய்யும்; வேறுபாடு களையும் உண்டாக்கும்; அதற்கு மாற்றீடான வேறொரு சொல் வேண்டும்" என்றார் பேராசிரியர் அன்பழகனார்.*

*இதே கருத்தை யுரைத்த பாவலரேறு பெருஞ் சித்திரனார், "சுணக்கமின்றி விரைந்து செயல்படவேண்டும்" என்றும் கூறினார்.*

*"அறிவுச் சமயம் அமைந்தால் - சாதிப்பிடிப்பற்ற -மூட நம்பிக்கையற்ற - அறிவுச் சமயம் அமைந்தால் வரவேற்ப" தாகத் தி.க. பொதுச் செயலாளர் மானமிகு வீரமணியார் உரைத்தார்.*

*மதம் அல்லது சமயம் என்பதை வழி, நெறி' கோட்பாடு, கொள்கை எனக் கொள்ளுகையில் அதனை - இனத்துடன் - நாட்டுடன் - அடக்குவது ஆகாது என்கிறார் பேரா. கு. வெ.கி. ஆசான்.*

*"உள்ளீடு அழிந்து வரும் மாந்தகுலத்தை மீட்க உள்ள ஒரே வழி திருக்குறளை வாழ்வியல் அறமாகச் சட்டமாகக் கொள்வது தான், வாழ்க்கையின் அனைத்துச் சிக்கல்களுக்கும் திருக்குறள் வழி தீர்வு காண்பது என்பது திருக்குறள் பேரவையின் குறிக்கோள்; திருக்குறள் பேரவை சோவியத்தில் ஏற்பட்ட புரட்சியைப் போல் ஒரு புரட்சியை ஏற்படுத்தத்தக்க வலிமை யுடையதாக அமைய வேண்டும்" இன்னபல கருத்துகளை, ஏன் திருக்குறள் பேரவை? என்னும் கட்டுரையில் அடிகளார் விரித்தெழுதினார்.*

*"திருக்குறளை ஒரு சமய நூல் என மக்களுக்கு அறிமுகப் படுத்திப் புது விளக்கங்கள் தந்து அதன் பெயரில் ஒரு சமயத்தை நிறுவினார் எதிர்காலத் தமிழகம் நம்மை மன்னிக்காது மயங்காமல் தூற்றும்" எனச் சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தனார் கொந்தளித்துரைத்தார்.*

*"திருக்குறள் சமயம் என்ற பெயர் வேண்டாம்; தோல்வி பெறும்; 'குறளிய நெறியம் காண்க' என்றார் சங்ககிரி சக்திவேல்."*

*மனித குலச் சிக்கல்களுக்குத் தீர்வு காண பெரிதும் துணை செய்ய வல்லன காந்தியமே குறளியமே! மார்க்கியமே! என்றும் பட்டிமன்றம் மதுரையில் 6-1-82-இல் நிகழ்ந்தது. நடுவராக*

*இருந்த அடிகளார், குறளியமும் காந்தியமும் சோதிக்கப் படாதவை. மார்க்கியக் கருத்துகள் சோதித்துக் கொண்டிருக்கும் நிலையுள்ளன இந்திய சமுதாய மக்களால் காந்தியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டன. திருக்குறள் அதன் சிந்தனைக் கருத்துக்கள் ஏட்டளவில்தான் நின்றனவே தவிர தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாகவில்லை என்னும் கருத்தை வெளியிட்டார். இதனை வெளியிட்ட குறளியம் இக்கருத்தைக் குறளியச் சிந்தனையாளர்கள் தவறெனக் கருதுகிறோம். பலபடி நிலைகளில் ஒன்றான மார்க்கியம் பல நாடுகள் ஆய்வில் தோல்வி கண்டு வருவதும் முற்றான. இதுவே அன்று என்பதும் சிந்திக்கற்பாலது குறளியத்தை ஏட்டளவில் இருக்கச் செய்தது யார் தவறு?" என்னும் வினாவை எழுப்பியது (2-7-50).*

**ஆகூழா? போகூழா?**

*இவ்விதழின் ஆசிரிய உரை, "ஆகூழா? போகூழா?" என்பது. பெரியார் மாவட்டத் திருக்குறள் பேரவை மாநாடு பற்றியது.*

*அருள் நெறியின் ஒரு பகுதியே திருக்குறள் என்று தடுத்து நின்றது ஒரு கூட்டம். திருக்குறளின் ஒரு பகுதியே அருள்நெறி என அங்காந்து நின்றன குறளிய நெஞ்சங்கள். தோல்வியுற்றால், இன்னும் சில நூற்றாண்டுகள் அடிமை வாழ்வே தொடரும். யாரை நொந்து என்ன பயன்? இராவணனின் படை போரில் மிகுந்து மாண்டு போனதால், அவர்களது பரம்பரையினரைவிட விபீடணனின் பரம்பரைஇந்நாட்டில் மிகுந்து வாழ்கிறது. ஆனாலும் ஒரே இனக்குருதி அல்லவா? அதனால் அவர்களும் தமிழர்கள் தாம்- திராவிடர்கள்தாம்" என எழுதினார். அடிகளார் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. கலந்து கொண்டபேரா.க. அன்பழகனார் மாநாட்டிற்கு அடிகளார் வர முடியாதது ஒரு குறையே எனச் சுட்டினார். அடிகளார் கலந்து கொள்ளாத கரணியத்தை நானறிவேன். ஆனால்அதை அனைவரும் அறியும்படி வெளிப்படையாக எழுதியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்" என வேலூர் மார்த்தாண்டனார் எழுதிய அஞ்சல் நெஞ்சமலரில் இடம் பெற்றது (2-9-45)*

**ஓரிடைவெளி**

*நாகர் கோயில் - மண்டைக் காட்டில் சமயப் பிணக்கால் நேரிட்ட கொடுமையை நீக்கும் பணியில் அடிகளார் முந்து நின்றார். "அந்நிலையில் சனாதனக் கொடுமைகளையும் மதவெளி*

களையும் நீக்கி மக்கட்கு வழிகூறி நெறிப்படுத்தி மன்பதையை மகிழ்விக்க அவ்வப்போது அருளாளரின் இலக்கணங்கட்கு இலக்கியமாக நம்மனோர் கண்முன் நடமாடும் நல்லர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரே ஆவர்" எனக் குறளியம் பாராட்டுகிறது (2:9:6). அடிகளார் வெளிநாட்டுச் செலவு - வரவேற்பு ஆகியவையும், திருக்குறள் பேரவையில் வேலா பங்கேற்பு, பேரவை நிகழ்ச்சிகளைக் குறளியம் வெளியிடுதல் என்பனவும் தொடர்கின்றன. எனினும் ஓரிடைவெளி - ஒரு விரிவு - ஒரு வெடிவு பெருகுகின்றது.

**புதியதோர் குறளிய உலகு**

1-12-1983 இதழ் முகப்பு - புதியதோர் குறளிய உலகுபடைப் போம் எனப் பளிச்சிடுகின்றது.

"கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் திருக்குறளைப் பேசினோம்; திருக்குறளைச் சிந்தித்தோம்;"

திருக்குறளை ஆராய்ந்தோம்; திருக்குறளை எழுதினோம்! ஆனால், திருக்குறளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொண்டதாகச் சொல்லி ஏமாற்றுகிறோம்! ஏமாற்றுகிறோம்!

இன்னும் எத்தனை தலைமுறைகட்கு இந்த ஏமாற்றுப் பணி தொடர்வது? துணிவுள்ளவர்கள் தொடருங்கள்! தெளிவுள்ள வர்கள் ஒன்று சேருங்கள்! நம்மிடமுள்ள எல்லாச் சார்புகளையும் (சமயம்) கட்சிப் பிணக்குகளையும் தூக்கி எறிவோம்! குறளியமே வாழ்வு நெறி! குறளியமே ஆட்சி நெறி! முழுமனத்தோடு, துணிவோடு, தெளிவோடு, ஒபக்கத்தோடு, ஏற்றுக் கொள்பவர் களே வாருங்கள்! ஒன்று சேருவோம்! ஒரு நெறி நிற்போம்! புதியதோர் குறளிய உலகு படைப்போம்! எழுதுங்கள்; பேசுங்கள்; உறவாடுங்கள்; உறுதிகொள்வோம்! உறவு கொள்வோம்! வரும் தி.பி. 2015 நம் குறளிய உவலகு பிறக்கும் நாள்!" என்பது அது.

1-1-84 இதழின் (4 : 6) ஆசிரிய உரை - குறள் - குறளியம் - குறளாயம்"

1-11-81 இல் நாம் தொடங்கிய பணியின் தொடர்பே இத்தலைப்பும் அதனை ஒட்டிய முயற்சிகளும் என்னும் முன்னு ரையுடன் தொடங்குகிறது.

"நான், 'திராவிட சமயத்தவன்' என்று தமிழக முதல்வர் மாண்புமிகு ம.கோ. இரா அவர்கள் சொல்லியதை ஒட்டித்

தொடங்கிய கருத்துரைகளில் 'திருக்குறள் சமயம்' பிறந்தது. தமிழ்நாடு அளாவிய நிலையில் தமிழ்ப்பேரறிஞர்களும் சான்றோர்களும் கலந்து கொண்டு தம் கருத்தை வெளிப்படுத்தினர். கடுமையான எதிர்ப்புகள், உறுதியான பாராட்டுக்கள், சிக்கல் களைச் சுட்டிக்காட்டும் சிந்தனைகள் இவ்வாறு ஏழத்தாழ ஆறு திங்கள்கள் தொடர்ந்தன.

'ஓர் ஆண்டு விவாதம்' எனக் கூறி நம் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் பெருமான் அவர்களும் தம்மை விடுவித்துக் கொண்டார். அனைத்தும் நம் இதழ்களில் வெளிவந்தன. இரண்டு ஆண்டுகட்குப் பின் திரும்பவும் சிந்திக்கத் தொடங்கியுள்ளோம். அதன் முனைப்பே சென்ற இதழ் முகப்பும், இவ்விதழிடை உள்ள வெள்ளையறிக்கையும்.

"சமயம், சமுதாயம் ஆக்கப்பட்டுள்ளது பட்டறிவுச் சாணைக்கல் மிகவும் பயன்பட்டுள்ளது. வெற்றியா தோல்வியா எனத் துணுக்குறாத மனங்களின் மொத்த முயற்சிகள் திரும்பவும் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. இந்த ஊர் - இந்த நாடு - இந்த உலகம் என்று தேடிக்கொண்டிருக்கும் மாந்த நிறைவாழ்வை இதிலே காட்ட முடியும் என்ற உறுதி மிகவும் வலுவடைந்துள்ளது.

"கடந்த ஐம்பது ஆண்டுக் காலமாகத் தொடர்ந்த பகுத்தறிவுப் பணிகள் நம்மைப் பாழ்ங் குழிகளில் இருந்து மேடுகளில் ஏறி நிற்கச் செய்து விட்டன. ஆனால் அதன் பிறகு? வினாவுக்கு விடையில்லை; தோன்றும் சிக்கல்களுக்குத் தீர்வு இல்லை. புதிய வழி தேடினும் கண்டிலோம். நம்மோடு வந்த பலர் திரும்பவும் பாழ்ங்குழியே போதும் எனப் போய் விட்டனர். புரியாத சிலர் பொல்லாதவை யெல்லாம் புதிய வழி என்கிறார்கள்.

திருக்குறளை அறநூல் நீதிநூல், மறைநூல் எனப் பலவற்றால் கூறினரே ஒழிய, அஃதோர் சமுதாய நூல் எனச் செப்புவார் இல்லை. சொல்லுக்கே ஆளில்லை என்றபோது நடை முறைக்கு என்பதை நாம் எங்கு போய்த் தேடுவது? ஆனாலும், அறிவுச் சீற்றங்களின் வழக்கமான செயற்பாடுகளை உடையவர்கள் ஏதாவது செய்துதானே ஆகவேண்டும். பேராயக் கட்சியைத் தொடங்கியவர்கள் அண்ணல் காந்தியையோ இன்றைய விடுதலை இந்தியாவையோ எண்ணியா தொடங்கினார்கள்?

நாமும் நம்போன்ற மன உளைச்சல்களைக் கொண்டோரும் சேர்ந்து விதைத்துள்ளோம். தி.பி. 2015 தை முதல்நாள். அவற்றைச் சிந்தித்து நீர்வார்ப்போம்; வளர்ப்போம். வளர்வித்து அதன்

பயன்களை நாமும் நுகர்ந்து உலகையும் நுகரச் செய்வோம். மேலே சொல்லுங்கள். குறளியத்தின் வெள்ளறிக்கைபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்பதை எழுதுங்கள். வரும் தை முதல் நாளன்று ஒன்று கூடிச் சிந்திப்போம். வாருங்கள் வந்து திருவள்ளுவரின் அருள் தொண்டராகுங்கள்" என்று அழைப்பு விடுகிறார்.

**ஒரு மீள் பார்வை**

திருக்குறள் பேரவையின் மண்டலச் செயலாளராக - மாவட்டப் பொறுப்பாளராக - பேரவைச் செய்திப் பரப்பாளராக - அடிகளார்க்கு அணுக்கராக அமைந்து பல்லாற்றானும் மதித்துப் போற்றி பணிந்து வழிபட்டுக் கடனாற்றிய வேலா, குறளாயம் கண்ட நிலை இது. குறளாயம் பற்றிய செய்தி தனியே தொடருமாகலின் இவ்வளவில் அமையலாம்! ஆனால் ஒரு மீள் பார்வை பார்த்தல் வேண்டும்! அதுநோக்கியே ஒவ்வொரு செய்தியும் விரிவாகவும் அவரவர்கள் எழுத்துச் சான்று வழியாகவும் காணத் தலைப்பட்டோம்! எந்த ஒரு செயலும் அல்லது நிகழ்ச்சியும் ஒரு படிப்பினை ஆகாவிட்டால் பின் வருவார்க்கு என்ன பயனாம்? படிப்பினையாக எடுத்துக் கொண்டால் நீர் கிழிந்த வடுப்போல் மாறி நிலைத்த தொண்டுக்கு உதவுமே!

திருக்குறளைக் குமுகாயப் பொருளாக்க - நடைமுறைப் பொருளாக்க - உலகளாவிய கொள்கை விளக்கப் பொருளாக்கக்-கிளர்ந்ததாகச் சொல்லிய திருக்குறள் பேரவையில் இயைந்து இணைந்து உடனாகி ஒன்றாகி நின்ற வேலாவும் அடிகளாரும் கொள்கை வழியால் விரிசல் கண்டனர் என்று சொல்ல முடியுமா? அப்படிச் சொல்ல முடியும் ஆயினும், அக்கொள்கை விரிசலும் தனித்தனி அமைப்பு ஆகும்படி ஏற்பட வேண்டுமா? ஆனால், ஏற்பட்டு விட்டதே ஏன்? இணைந்திருந்தால் - இணைந்து கடனாற்றினால் - இன்னும் எவ்வளவோ மேம்பட்ட பயன்களைக் கண்டிருக்கக் கூடுமே! என்று எண்ணவே தோன்றுகின்றது!

அடிகளார் புதிய பார்வையர் - சமயக் கட்டுக்குள் - சமயக் கட்டு மடத்துக்குள் இருப்பினும் - அதனையும் கடந்து புரட்சிப் பார்வை பார்க்க வல்லார் என்றன்றோ தமிழ் உலகம் கண்டது! தீர்மானித்தது!

"புரட்சி மணம் பூக்கும் உருசிய மண்ணின் மணமும் சிவனிய மணத்தொடு உலாக் கொள்ள இயலும்!

நடமாடும் அப்பரடிகள், நம்பா மதத்துப் பெரியாரொடு தழுவிக் கொள்ள இயலும்!

“கடவுளைப் படைத்தவன் முட்டாள்; அதனை நம்புபவன் மூடன்” என்று கூறும் பெரியார், மகா சந்நிதானம் என்று வீழ்ந்து வழிபடவும் காண முடிந்தது.

- வேறு எந்தச் சிவனிய மடத்திலாவது இவற்றை எதிர்நோக்க முடிந்ததா? இத்தகைய விரிந்து பரந்த கொள்கைப் பார்வை வேலாவுக்கும் அடிகளாருக்கும் அமைந்தும், தொடராமல் இடைத்தடைப்பட்டுப் போவானேன்! நாம் எதிர் நோக்கிய நல்விளைவுகள் ஏற்படாமல் போவானேன்?

வேலா உரிமை வாழ்வர்; உரிமைத் தொழிலர்; உரிமைத் தொண்டர்; உரிமைக் கொள்கையர்; அவரை - அவர் கருத்தை - அவர் இயக்கத்தைத் தீர்மானிப்பார் அவரே! அந்நிலை அடிகளுக்கு உண்டா? அடிகளார் ஒரு துறவு மடத்துத் தலைவர்; அவர் எண்ணினாலும் எண்ணாவிட்டாலும் அத்துறவு மடத்து அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மரபியல் உண்டு. அன்றியும் அத்துறவு மடம் அன்றி, அச் சமயஞ்சார் பிற துறவு மடங்களும் உண்டு. அவை ஏறிட்டுப் பார்க்கவே செய்யும்! எதிரிட்டுப் பார்க்கவே செய்யும்! ஏனென்று தட்டிக் கேட்கவும் செய்யும்!

இன்னும் ஒன்று; மிகக் கடினமானது; தாம் இருக்கும் இடத்தின் பார்வைக்கு எதிரிட்ட பார்வையைத் தாமே வைத்து எதிர்ப்பார்க்கு இடந்தந்து போராட்டத்தில் புகுவது.

‘திருக்குறட் சமயம்’ என்றாலும் ‘திராவிடச் சமயம்’ என்றாலும் வேறொரு சமயம் தானே! திருவள்ளுவரைத் திருவள்ளுவ நாயனார் என வழங்கி உச்சி குளிர்ப்புறுபவர்களும் அப்பெயரைச் சமயப் பெயராக ஏற்பரா? தவப்பெருந்திரு, திருப்பெருந்திரு என்னும் அடைமொழிகளைக் கொள்ளலும் ஸ்ரீலஸ்ரீ’ என்பதற்கு இணையாகாது எனவும், இணையாகக் கொள்ளக் கூடாது எனவும், கொள்ளவும் மாட்டோம், கொள்ளவும் விடமாட்டோம் எனவும் பலப்பல சிவனிய மடங்கள் - தவறு - சைவ மடங்கள் திருக்குறள் சமய அல்லது திராவிடச் சமயப் புகவு பற்றிக் கருதவும் துணியுமோ? இக்கட்டான நிலை அடிகளார்க்கு! கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிந்த கதை! சாக்கிய நாயனார் கதைப் பின்னணியை நோக்கவே நன்கு புலப்படும்?

வேலா ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கிறாரே. இறும்பூது நிகழ்ச்சி என்கிறாரே! "திருக்குறளை நம்புபவர் நெற்றியில் பொட்டு எதற்கு? பூச்சு எதற்கு?" என்றதும் சந்தனப் பொட்டையும் பூச்சையும் நீக்கினாரே அப்படி அடிகளார் செய்ய இயலுமா? அப்பெரியண்ணப் பெரியவர் தம் வாழ்வுக்குத் தாமே தீர்மானிப்பர்! அவர் செய்யார்! அவர் ஒரு 'குறுக்கையை (சிலுவையை) மாட்டினும், பள்ளிவாயிலை நணுகினும் தடுக்க எவர்க்கும் மேலாண்மை இல்லை! ஆனால், அடிகளார் அதனைச் செய்யின் அந்நொடியே மடத்தை விட்டு வெளியேறாமல் இயலுமா? வெளியேறா விட்டால், வெளியேற்ற நடவடிக்கை இல்லையா? முறை மன்றம் இல்லையா? ஆதலால் அடிகளார் நிலையில் திருக்குறளைச் சமயம் ஆக்குதலோ 'திருக்குறள் நம்மறை' எனலோ இயல்வன அல்லவாம்! அவர் இருக்கும் இடம் அத்தகைத்து!

"வேலா போன்றவர்கள் இதற்கு எழுச்சி யூட்டிக் களம் அமைக்கும் பொறுப்பை ஏற்கட்டும்! அதற்கு முதல் ஆளாகத்தார் தாங்கிச் செல்லவும் களப்பலி ஆகவும் அணியமாக உள்ளேன்" என்று அடிகளார் கூறினாரே எனின், வேலா அடிகளார் வழியில் சென்று வந்தாரா? வேலா வழியில் அடிகளார் வந்தாரா? இதனை வேலா கூறியிருந்தால் பொருந்துவதாம்! அடிகளார் கூறியது, அக்கொள்கையை அப்பாற்படுத்தித், "தாம் அவ்வழியில் வழி நடத்திச் செல்ல இயலாது" என வெளிப்படக் கூறாமல் குறிப் பாகக் கூறி ஒதுங்குவதாம் செய்தியாம். அன்றியும், மேலோட் டமாக எண்ணும் அவையின் பாராட்டை எண்மையாய்ப் பெற்றுக் கொள்ளும் பட்டிமன்ற - வழக்காடு மன்றப் - பாங்குமாம்.

'சமயம்' 'மறை' என்பனவும் 'சாலா' என வேலாவை எதிர்ட்டார் இல்லையோ! எழுதிக் கண்டித்தார் இல்லையோ! உணர்வு மீக்கூர்ந்து திருக்குறட் சமயத்தின் சார்பு வேண்டா என ஒதுங்கிக் கொண்டாரும் இலரோ! உண்டு ஆனால் வேலா, பலப்பலர் ஆய்வுக்கும் கருதுகோளுக்கும் சிந்திப்புக்கும் விட்டார்! அதன் முடிவு ஒத்த முடிவாக இருக்கும் - இருக்கு வேண்டும் - என்று கூற அவர் அதிகாரியா? பலரும் பலப்பல கருத்துக்களைக் கூறினர். அக்கருத்துக்களைத் திரட்டித் தொகுக்கக் காலம் ஓராண்டு எல்லை இருந்தும் - ஓராண்டு எல்லை தந்தும் - உணர்வு வயப்பட்டோர் முந்தி விட்டனர். வேலாவையும் நெருக்கினர்! அடிகளார்க்கும் எழுதினர்! அடிகளார் 'என்ன விரைவு!' எனவும் வினாவ, வினாக்கள் முந்துகின்றன? குறளிய இதழிலோ -

பேரவை நிகழ்விலோ வெளிப்பட இடைவெளி தோன்ற இல்லை எனினும் அடிகளார்க்கும் வேலாவுக்கும் இடைவெளி உண்டாகி விட்டது; சற்றே சற்றே விரியவும் ஆயிற்று! இது கொள்கை வழி இடைவெளியேயன்றித் தொடர்பு வகை தொண்டு வகை இடைவெளியேயன்று என்பதைக் குறளியத்தை முழுமையாகத் தொடர்ந்து பார்த்து வருவார் அறிவார்! பேரவையும் குறளாயமும் இணைந்து செயலாற்றி வருதலும் கண்கூடு! ஏனெனில், “ஒத்துப் போகும் ஊடகம் ஒன்று! அது திருக்குறளே” ஆதலால்!

அடிகளார் பேரவைத் தலைவராக - வேலா பேரவைப் பரப்புநராக இருந்து தொடர்ந்து பணி செய்திருந்தால் இன்னும் பன்மடங்கு நல்லவிளைவுகளை எதிர்நோக்கியிருக்கக் கூடும். ஏனெனில், 3-12-81 இல் அடிகளார் எழுதிய அஞ்சலைப் பலபடிகள் எடுத்துப் பலர்க்கும் விடுத்ததுடன், குறள்வழி ஒரு குமுகாயம் தோன்றும் என்ற நம்பிக்கையும், அப்பெருங் குமுகாயத்தில் ஒருவனாய்த்தான் நான் உயிர் நீப்பேன் என்னும் நம்பிக்கையும் உண்டாகியுள்ளமையையும் அடிகளார்க்குத் தெரிவிக்கும் வேலா, “ஆகூழா? போகூழா?” என்று பெரியார் மாவட்டத் திருக்குறள் பேரவை மாநாட்டு நிகழ்ச்சி குறித்து எழுதிய எழுத்து பிளவை வெளிப்பட உணர்த்திற்று! நிலைமை என்ன குறளாயம் என ஓர் அமைப்பு உருவாயிற்று!

இவ்விரிவாய்வின் முடிவென்ன? தமிழ் மொழி - தமிழின - இயக்கங்கள் உள்வெடிவுகளால் - பிரிவாகி - மீண்டும் மீண்டும் அவை தொடங்கிய இடத்திலேயே தொடங்கி வளர்ந்து மீண்டும் ஒன்று தொடங்க வழியமைத்து ஓய்ந்து விடுகின்றன என்பதே! இசையில் ஆரோசை அமரோசை இன்பாகலாம்! கொள்கை வழியில் கேடேயன்றோ!

முனைப்புகள் - முட்டுதல்கள் - மோதுதல்கள் எல்லாமும் கொள்கை வழியில் நெருங்கி வருவார்க்குள்ளேயே - உறைப்பாக நிற்பார்க்கு உள்ளேயே ஏற்பட்டுக் - கொள்கைகளைக் கனவிலும் கருதார் இயக்கமாக்கி அவர்கள் மூடுவிழா நடத்துவதற்குத் துணைப்பட்டு நிற்பதே!

“மிகைநாடி மிக்க கொளல்” என்பதனைக் கொள்கை வழிக்குக் கொள்வார் எவர்? எதிரிடையாளரிடம் - முரண்பட்ட கொள்கையாளரிடம் கூட்டு வைத்துக் கொள்வமேயன்றி, எம்மிடைச் சற்றே கொள்கை - கருத்து - வேறுபட்டாரிடத்துக்

*கூடேம் என்று, முரண்கூடாரங்களொடு முந்து முந்து முனைந்து நின்று இனங்கெடுக்கும் கட்சிகளின் காட்சிகள் நாம் அறியா தனவா? ஆதலால், மொழி, இன, வழிக் - காவல்களில் நாம் நம்மை ஈகம் செய்தும் கூட ஒன்றியிருத்தல் ஆக்கமாம்! இல்லையேல் தேக்கமாம் என்பதன்றி, இன்கேடுமாம் என்பதே.*

*இனிக் குறளியம் குறித்துக் காண்போம்.*

**குறளியம் (அறிவாண்மைத் திங்கள் இதழ்)**

*திருக்குறளின் விளம்பரக் கருவியாகவும், அறிவு நல வளர்ப்புக் கலைக் கழகமாகவும் தொடங்கப்பட்டது 'குறளியம்'. குறளியக் கொள்கை இன்னதென்றும், அதனை வெளியிட் டுரைத்த அடிகளார் உரை இன்னதென்றும், குறளியம் பிறந்த வகை இன்னதென்றும் - முன்னரே அறிந்துள்ளோம்.*

*குறளியம் தொடங்கி ஒன்பான் ஆண்டுகள் நிரம்பி, இது கால் பத்தாம் ஆண்டில் நடையிடுகின்றது. தொடக்க முதலே, அதன் வருவாய் கொண்டு இதழ் நடத்த இயலாது என்பதை வேலா அறிவார். ஆதலால், அதன் உறுப்பினர் எண்ணிக்கை உரிய அளவை எட்டுமட்டும் கைப்பொருள் கொண்டு வெளியிடுதல் என்னும் உறுதியைக் கொண்டமையாலும், அச்சக வாய்ப்பும் வணிக நிறுவன அமைப்பும் ஏந்தாக இருந்து வருதலாலும் இடையறவுபடாமல் இயல வாய்ப்பாயிற்று. (குறளியத்தால் உண்டாகும் பொருளிழப்பை அறிய விரும்புவோர் குறளியம் 9:7 பக் 24 - 25 காண்க).*

*இதுகாறும் திங்கள் இதழாகிய குறளியம், 117 இதழ்களை வெளியிட்டுள்ளது. வரும் ஆகத்துத் திங்களிதழ் 11 ஆம் ஆண்டின் தொடக்க இதழாக அமையும். ஆண்டு 'வேல்' என்றும், திங்கள் 'வெற்றி' என்றும் வரும் இதழ் இந்நாள் வேல் 10. வெற்றி 9 ஆகும் (1-4-1990).*

**ஆசிரியர் உரை**

*இந்நூற்றுப் பதினேழு இதழ்களில் ஆசிரிய உரையாகவும் துணையுரையாகவும் 179 கட்டுரைகளும் குறுங்கட்டுரைகளும் வரைந்துள்ளார் வேலா. இவற்றுள் சில செய்திகள் மட்டுமே, குறித்த கால அளவில் நின்று பயன் செய்பவை; மிகப்பல, நிலைத் தக்க தொகுப்பாகித் தமிழ்வளமாக நின்று பயன் செய்பவை.*

**பொருட்சீர்மை**

*முதல் மூன்று வேல்களும் திருக்குறள் பேரவை வரலாற்றை எவர் எக்காலத்தில் ஆய்வுப் பொருளாகக் கொள்வர் எனினும் அவ்வாய்வுக்கு மூலவைப்பகம் போல்வன.*

*நான்காம் வேல், ஐந்தாம் வெற்றி தொட்டுக் 'குறளாயம்' ஆய்ஞருக்கு மூல வைப்பகமாகவும், திருக்குறள் பேரவை ஆய்ஞருக்குத் துணை வைப்பகம் போலவும் அமைவன.*

*தமிழ் மொழியாக்கம், தமிழ்மொழி இயக்கம், திருக்குறள் ஆய்வு, தமிழினம், தமிழக அரசியல், தமிழ் வழிபாடு, தமிழீழம், தமிழ்வழிக் கல்வி இயக்கம், குமுகாயச் சீர்திருத்தம், சாதி ஒழிப்பு, குறளியப் பொருளியற் கொள்கை இன்னவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ ஆய்வார்க்கும் - நூல் செய்வார்க்கும் - அரும் பெரும் கருவூலமாகத் திகழ்வது குறளியம்.*

**ஒளிமணி**

*வேல் 1. வெற்றி 4 இலேயே ஆசிரிய உரை தீட்டுகின்றார் வேலா? தலைப்பு என்ன?*

*“இந்நாள் முதல்வர் செய்வாரா? முன்னாள் முதல்வர் ஏற்பாரா?” அரிய தலைப்பு! சங்கப் புலவர்கள் அனைவரும் சேர்ந்து நின்று ஒரு குடி காக்க உரைத்தது போன்ற ஒளிமணித் தலைப்பு!*

*இரு முதல்களும் இணையக் கூடியது அரசியல் களத்திலா? கட்சிக் களத்திலா? இல்லை! இல்லை! தாய்த் தமிழ்க்கு உலகப் பெருவிழா எடுக்கும் நன்மங்கலப் பொழுதிலே! அதனை ஏற்க இருவருள் எவர் முந்து நின்றனர்? முந்து நின்றால் முழுப்புகழ் அவர்க்கன்றோ! தனித்தனி கருத்துக்களுக்குத் தலையாட்டம் தந்து விடாமல் தாய்த் தமிழ் விழாவிலே உலகே தலையாட்டம் இருவரும் ஒருவராம் உயர்நிலை எய்தக் கூடாதா என உருகி - உருகி - எழுதிய எழுத்து வேலா எழுத்து.*

**உருக்கம்**

*1967 - ஆம் ஆண்டு இந்தியப் பேராயக் கட்சி தேர்தலில் தோல்வியுற்றது. தி.மு. கழகத்தினர் தமிழ்நாட்டில் இல்லை - இல்லை - பெயர் மாற்றமும் பெற இயலா அவல நிலையில் இருந்த - சென்னை மாநிலத்தில் - அரசுக் கட்டில் ஏறியது* **பேராயக்**

**கட்சிக்காக தந்தை பெரியாரும் தி.மு.க. விற்காக மூதறிஞர் இராசாசியும் வரிந்து** கட்டிக் கொண்டு அத்தேர்தலில் பணி யாற்றினர். அது போழ்தும் சரி; அதற்கு முன்னரும் சரி; தி.மு.க. வையும் அதன் தலைவர்கள் முதல் உறுப்பினர்கள் யாவரையும் சேர்த்து தந்தை பெரியார் திட்டிய திட்டுகட்டும் ஏச்சும் பேச்சு களுக்கும் அளவே இல்லை. அமைதியாகவும், பொறுமையாகவும் அவற்றை இன்முகத்துடன் ஏற்றனர் அண்ணாவும் அவர்தம் தம்பிகளும்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்தன. தி.மு.க. வென்றது; அண்ணா அவர்கள் அரசுப் பொறுப்பினை ஏற்றார். பெரியார் திருச்சிக்குத் தம் மாளிகைக்குச் சென்று விட்டார். சென்னையில் இராசாசியோ சுறுசுறுப்புடன் நெஞ்சு நிமிர்த்திக் கொண்டார்; ஆட்சிக்கு வந்தோரை மந்திரங்கள் சொல்லி மயக்கி வாழ்த்திடக் காத்து நின்றார். அண்ணா வந்தாரா? தம்பிகள் வந்தனரா?

ஈரோட்டுப் பாதையில் உருண்டு புரண்டு வளர்ந்தவர்கள் அல்லரோ? ஆம்! தம் தலைவரை நோக்கி - திருச்சியை நோக்கி - ஒரு மனத்துடன் ஓடினர். அய்யாவைப் பார்த்து - எட்டி எட்டிப் பார்த்து மெய்ச் சிலிர்த்தனர். அண்ணா முன் நின்றார். "இந் தாருங்கள் அய்யா, இந்த வெற்றியே தி.மு.க. ஆட்சியே உங்கட்குப் பரிசு - படையல்" என்று கைகட்டி என்ன சொல்வாரோ எனக் கலங்கி நின்றனர். தாய்ப்பாலுக்கு ஏங்கும் பச்சிளங் குழந்தை களாய் நின்றனர். அண்ணா பார்க்க ... தம்பிகள் பார்க்க ... ஏக்கமுடன் பார்க்க ... பெரியார் பார்க்க... எல்லாரையும் சுற்றிச் சுற்றிப் பார்க்க...

கண்கள் குளங்களாயின; உடல்கள் இணைந்தன; உள்ளங்கள் ஒருப்பட்டன; அழுக்காறும் காழ்ப்புணர்வும் திக்குத்தெரியாமல் எங்கு இருந்தனவோ அங்கேயே ஓடிவிட்டன (அந்தக் காட்சியை இன்று நினைந்து எழுத, கண்களில் கண்ணீர் தேங்குகிறது).

அடுத்து வந்த கிழமையிலே இராசாசி அவர்கள் தம் சொந்த இதழ் எனச் சொல்லிக்கொண்ட இதழில் காழ்ப்பு மிக்கிட்டு, அழுக்காறு விஞ்சி, ஆற்ற இயலாதோர் நிலையில் பலரிடம் சொல்லிச் சொல்லிப் பின் எழுதவும் செய்கிறார். நான் ஏமாற்றப் பட்டேன்; இப்படியும் செய்வார் என்று கனவிலும் எதிர்பார்க்க வில்லை என்று.

*இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொண்டோம்? 19 நூற்றாண்டுகளாக அனைத்திலும் அடிமைப்பட்டும் அமுக்கப் பட்டும் அறிவிழந்தும் இருந்த நாம் அரை நூற்றாண்டில் பெற்ற கல்வியும் விழிப்பும் தானே இத்திருப்புமைக்குக் கரணியம்.*

*தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் திருக்குறளைக் கற்றுணர்ந்தவர்கள் அல்லரோ! குடி செயல்வகை அதி காரத்தைத் தான் மறப்பரோ? தன்மானம் கருதிக் கொண்டு தம் குடி உயரும் செயலை உரிய காலத்தில் செய்யாமல் இருப்பாரா அண்ணா அவர்கள். தம்மையும் தம் தம்பிகளையும் திட்டினாரே எனத் தம் மானம் கருதாது தமிழ்க்குடி - திராவிட இனம் உயர்வதற்கான உரிய செயலை உரிய நேரத்தில் அன்றோ அண்ணா செய்தார்!*

"குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்" (1028)

*சேரன் செங்குட்டுவனின் குடிகாத்த நிகழ்ச்சியினும் விஞ்சி நின்றன்றோ இந்நிகழ்ச்சி வரலாற்றில் இடம் பெற்று விட்டது.*

*தமிழவேள் கலைஞர் அவர்களே!*
*புரட்சித் தலைவர் அவர்களே!*
*நான் முந்தியா நீ முந்தியா என்று எண்ணாது.*
*அன்புடைமையோடு*
*இனியவை கூறி*
*நடுவு நிலைமையோடு*
*அடக்கமுடைமையோடு*
*பொறையுடைமையோடு*
*அழுக்காறு நீக்கி*
*வெஃகாமை இன்றி*
*புறங் கூறாது*
*பயனில சொல்லாது*
*பெரியாரைத் துணைக்கொண்டு*
*சிற்றினம் சேராது*
*அவையஞ்சாது*
*நட்புப் பாராட்டி*
*பழமைபேணி*
*கூடாநட்பு நீக்கி*
*பேதைமை அகற்றி*
*இகல் அறுத்து*

உட்பகை ஒழித்து
குடி செயல்வகை அறிந்து
மானம் நோக்கிப்
பெருமை சேர்க்கக்
குடிமை காக்கச் சரியான காலம்
வந்து விட்டது!

உலகத் தமிழ் மாநாட்டை மதுரை மாநகரில் நடத்துங் காலம் வந்துவிட்டது. தமிழுக்குற்ற இன்றைய தலைவர்களோ குடிமை காத்த அண்ணாவின் வழிவந்தவர்களோ மாமியார் மருமகள் தாக்கங்கள் போலக் கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம் என்ற பேதைமை நிலையை ஏற்றால் என்னென்பது! அரசியலில் நீங்கள் எப்படியோ இருங்கள். அதைக் காலமும் மக்களும் முடிவெடுக்கட்டும். அதைப்பற்றி இஞ்ஞான்று யாமும் சிந்திக்கவில்லை.

தமிழினத்திற்கே பெருமை சேர்க்கும் உலகத் தமிழ் மாநாட்டின் போது நாட்டின் தலைவர்களிடையே இத்துணைப் பகை ஆகலாமா? வேறுபாடு தமிழில் - தமிழ் மாநாட்டில்தான் காட்டலாமா கலைஞர் இல்லாதோர் உலகத் தமிழ் மாநாடு நடப்பதை நாளைய வரலாறு எண்ணி உட்பகையை நினைவு கூர்ந்து நகையாடுமல்லவா!

பொன்மனச் செம்மல்புரட்சித் தலைவர்அவர்களே! பெரியாரைத் துணைக்கோடாது அண்ணா அரசுக் கட்டில் ஏறியிருந்தால் என்ன பெருமை வந்திருக்கும். சிந்தியுங்கள். அதே நிலைமைதான் இன்றும்; அண்ணா அவர்கள் நிலையில் தான் இன்று நீங்களும். அண்ணாவைப் போல் குடிசெயல்வகை அறிந்து திராவிடக் குடியினப் பெருமையை - குடிமையைக் - காப்பீர்களா?

அண்ணா அவர்கள் திருச்சி சென்று குடிமை காத்தது போல் நீங்களும் கோபாலபுரம் செல்ல வேண்டும். அவரை அழைக்க வேண்டும். ஏன், மாநாட்டில் சிறப்பையும் வழங்கலாம். ஏற்பாரா கலைஞர் என அஞ்சாதீர்கள். முன்வரலற்றை உடனிருந்து கண்டவரல்லவா அவர்! பெரியார் அண்ணா ஊட்டிய தாய்ப் பாலில் வளர்ந்த நெஞ்சம் அது. தமிழ் என்றால் மறுக்வும் துணியுமோ? மறுத்தால் ... மறுத்தால் ...

தமிழக முதல்வரே, திரும்பவும் ஒரு வரலாற்றைப் படையுங்கள்! குறள் படித்த நாங்கள் குடிமை காக்கத் தவறோம் என்பதை சாற்றுங்கள்!

கொஞ்சுதமிழ்ச் செந்தேனே! கலைஞர் அவர்களே! நீங்களும் மறுக்காது மனமாற்றம் இல்லாது மதுரை நோக்கிச் சேர்ந்து வாருங்கள். குடிமைக்கு முன் காழ்ப்பு ஏது? எல்லாம் தூள் ... தூள்...! நீங்கள் சொல்லும் பாடம்தானே!

நீங்கள் இருவரும் அண்ணாவின் தம்பிகள் என்றால் தமிழிற்காக, தமிழ் மாநாட்டிற்காக ஒன்று படுங்கள்; அரசியலை இதில்விதைக்காதீர்கள். இல்லையேல் தமிழினம் மறக்காது. வரலாறு எதையும் விடாது - வேலா.

ஆசிரிய உரை முழுமையும் இது! அவர் தம் உணர்வு மீக்கூர்ந்த ஆசிரிய உரைக்கு எடுத்துக்காட்டாக மட்டுமா இயல்வது! வேலாவின் குடியோம்பும் திறம் காட்டும் சான்று ஈதன்றோ! மாற்றார்க்கு இடம்தராது, மனமொத்து இனநலங் காக்க உருக்கமாக வேண்டும் வேண்டுதல் அன்றோ இது!

"ஆசிரிய உரை சரியானதே; ஆசிரியர் எது பற்றியும் எழுதும் உரிமை படைத்தவர். அவர் கருத்துத்தான் மக்கள் கருத்து" என்று இதனை வரவேற்றார் முத்தமிழ்க்காவலர்.

"இருவரும் ஒன்றுபட்டு நிற்பார்களானால் அதனடிப் படையாக ஏற்படும் திராவிட இயக்க வலிமையை இந்தியாவில் எந்த ஓர் ஆற்றலாலும் அழித்துவிடமுடியாது என்பது பனிமலை போலும் உண்மை. இனநலம் கருதும் நல்லோர் பலரும் நடுநிலை யாளர் சிலரும் எதிர்பார்ப்பதும் இதையே" என்று பாவலரேறு பகர்கின்றார்.

"கலைஞருக்குத்தான் நீங்கள் உருக்கமான வேண்டுகோளை விடுத்திருக்கிறீர்கள். இருப்பினும் வேறு ஏதேனும் நிகழ்ச்சிகள், நெருக்கடிகள் ஏற்பட்டு உங்கள் நல்ல வேண்டுகோளை அவர் ஏற்றுக் கொள்வாரானால் நானே அதில் மகிழ்ச்சி அடையும் முதல் தமிழனாக இருப்பேன்" என முனைவர் சாலையார் சாற்றினார்.

"கலைஞர், திண்மையான இதயம் பெற்றவர். அது மட்டுமா? எதையும் தாங்கும் இதயம் பெற்றுத் தமிழினத்தை வாழ்வித்த அறிஞர் அண்ணாவின் இதயத்தையும் அல்லவா வாங்கி வைத் துள்ளார். அதனால் தானே துன்பங்கள் இழைத்த இந்திரா அம்மையாருடன் நட்பும் உறவும் கொண்டுள்ளார். ஆனால், இதே பண்பு ஏன் உடனாளர்களிடம் செயற்படவில்லை. சிந்திக்க வேண்டிய ஒன்று. நாம் சிந்திக்க முடியாமல் சங்கடப்படுகிறோம். வழக்கம் போல் கலைஞர் தான் துணை செய்ய வேண்டும்.

*அவருடைய வரலாறு படைக்கும் மடல்கள் வாயிலாக நம்மைச் சிந்திக்க வேண்டும். பாராட்டுதலுக்குரிய தமிழக முதல்வர் ம.கோ. இராமச்சந்திரன் அவர்கள் சிந்திக்க வேண்டும். இந்திரா அம்மையாரிடம் கூட நட்புப் பாராட்டிக் கொண்ட கலைஞர், தமது கெழுதகைமை மிக்க உறவினராக விளங்கிய ம.கோ. இரா. அவர்களுடன் நட்புக்காட்ட உறவுக் கரங்களைத் தரத் தயங்குவது ஏன்? அவர் நெஞ்சத்தில் நெருடிக் கொண்டிருப்பது எது? என்று ம.கோ. என்று ம.கோ. இராமச்சந்திரன் ஆராய்ந்தறிய முன்வர வேண்டும்" என்று அடிகளார் ஆய்ந்துரைத்தார்.*

*ஆராய வேண்டியவர்கள் ஆராய்ந்தார்களா? அதுதான் தமிழகம் காணாத தொடர் வரலாறு ஆயிற்றே! ஆய்ந்திருந்தால், தமிழினத்திற்கு ஓர் அரிய விடிகாலம் ஆகியிருக்குமே! தமிழினத் திற்குள் மண்டிக் கிடக்கும் இனநலம் கருதாச் செயல்கள் தாமே, அண்டை அயலும் தமிழினம் மண்டியிடக் கண்டு வெறிக் கூத்தாட வைக்கின்றன! பாவேந்தர் சொன்னாரே! போர்க்களம் போதல் வேண்டா; பொன் பொருள் இழக்க வேண்டா; ஒன்றே ஒன்று போதும்; பகையில்லை; பாழில்லை! எது அந்த ஒன்று! தமிழர் ஒன்றுபட்டு விட்டார் என்ற ஒன்றே ஒன்று.*

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

*என்பது தானே அது. இந்நிலை என்றுதான் ஏற்படுமோ? இந்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்கென்றே, ஏற்பட்ட, ஈழப்பாடே இப்பாடு அப்பாடு என்னாமல் எப்பாடு ஆகிவிட்டது!*

**வெப்பம்**

*"உய்விக்கும் தலைவன் உருவாவ தெக்காலம்" அவன் வழி உருவாவ தெக்காலம்? என்றும் ஆசிரிய உரை வரைந்தார் வேலா (2:3). "இன்று வேண்டியது ஒன்றே ஒன்று; அது நல்ல தலைமை. ஊழி பெயரினும் தாம் பெயராகக் குறளியச் சான்றாளன்" என்கிறது மற்றோர் இதழின் ஆசிரிய உரை (2;5).*

*"திராவிட இயக்கத்தீரே! திரும்பிப் பாருங்கள் யார் உங்களை மன்னிப்பது?" என விளித்து வினா எழுப்புகிறது ஆசிரிய உரை ஒன்று (6:3).*

*"மதுவிலக்கைக் கைவிடுவதினும் நான் ஆட்சியைக் கைவிடுவேன் என்று சூளுரைத்து பேரறிஞர் அண்ணா வழிவந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் எத்தனையோ*

அறிவுடைய அறப்பணிகள் நம் கண் முன்னர் இருந்தும் மது விலக்கை ஒழித்துப் பின் ஏற்ற பாங்கினால் மாறிய நம் மனக் கொதிப்பு இன்னும் அடங்கவில்லை.

இன்றோ அன்னையின் மீதிட்ட ஆணையையும் மறந்து, தலைவன் வகுத்த கொள்கைகளை யெல்லாம் இழந்து மது விலக்கைக் கைவிட்டு ஆட்சி நடத்தும் இழிபாங்கை இந்நாள் முதல்வர் புரட்சித் தலைவர் ஏற்றுள்ளமையோ நஞ்சு தோய்ந்த வாள்முனை நெஞ்சாங் குலைகளை வருடினாற்போல் வருத்திக் கொண்டுள்ளது.

இந்த அழிவுப் பணிகளில் திராவிட இயக்கங்களும் ஈடுபடலாமா? இதுவே நம் குமுறல் வினா" என வெதும்பி எழுதியதன் ஒரு பகுதி இது. அண்ணா ஆட்சி தவிர்த்த கடந்த பதினெட்டு ஆண்டுக் காலத் தமிழக வரலாற்றினைச் சிந்திக் கிறோம். அன்று, இன்று எனப் பதின்மூன்று முறை தலைப்பிட்டுக் கருத்துரைக்கும் ஆசிரியவுரைத் தலைப்பு "இரட்டைக் குழல் துமுக்கியா? ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளா?" என்பது.

"தி.க. தோழர்கள் பெரியாரின் அருமைத் தலைமைத் தொண்டரை இழக்கக் கூடாது?; பெரியாரின் தொண்டர்கள் பெரியாரின் வழியில் இருந்து மாறக் கூடாது. யார் எங்கிருந் தாலும் இனநலம் காக்க ஓரணியில் திரளும் மனப் பான்மையை நாம் இழந்து விடக் கூடாது." அதே போல் கொள்கையாளர் களை இழக்கும் நிலை தி.க.விற்கு வரக் கூடாது. எதையும் (பொருள், சொத்து, தன்முனைப்பு) விட்டுக் கொடுக்கலாம். ஆனால் கொள்கையாளர்களை விடக்கூடாது. ஏனெனில் கொள்கையாளர்களால் தாம் பெரியாருக்கு இவையெல்லாம் உருவாயின என்பதை மறந்து விடக்கூடாது. இந்த நாட்டின் கொள்கைகட்குத் தொண்டர்கள் அமையார் என்னும் இழி சொல்லை நீக்குங்கள். திரு.கி.வீரமணி தம் தோழர்களை இழப்பதும், தோழர்கள் திரு.கி. வீரமணியை இழப்பதும் வரலாற்றில் பெரியாருக்கும் பெரியாரியத்திற்கும் முதுகில் விழும் கத்திக்குத்து. மற்றவர் நகையாட வாழ்ந்து வீழ்தல்கூடாது! கூடாது! இனநலம் எல்லாம் புகழும் தரும் (8:1). இவ்வாசிரிய உரைக்குத் தலைப்பு பெரியார் முதுகில் கத்திக்குத்து என்பது. ஆட்சிக் குரியவர்கள் சிலராக நாற்காலி வெறியர் கள் பலராயினரே என்றும் ஆசிரியவுரை எழுந்தது (87) "தேர்தல் வருகிறது தெரிவது என்ன" (5:4) யாருக்கு நம் ஒப்போலை? (5:5)

"தேர்தல்வேண்டும் ஆனால் உடனேவேண்டாம்" (8:9). தேர்தல் வருகிறதாம்; யாருக்கு வாக்கு (9:2) கொள்கை உள்ளோர் குன்றாவர் கொள்கை இலார் குன்றுவர் (10:2) "யாருக்கு வாக்கு" (10:4) தேர்தல் - தெளிதல் - தெரிதல்" (10:5) சொல்லியமைக்குப் பாராட்டுகள் செய்யாமைக்கு" (10:8) என்றெல்லாம் ஆசிரிய உரைகள் கிளர்கின்றன.

**சொன்னதைச் செய்க**

சென்னை பெரியார் திடலில் நடந்த திருக்குறள் கட்டுரைகள் ஆங்கிலப் பதிப்பு வெளியீட்டு விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் "திருக்குறள் தேசிய நூல் - உலகநூல் என்பதைவிட தமிழ் நாட்டு இல்லங்களின் வாழ்வியல் நூலாக வேண்டும் என்றார்.

"திருக்குறள் நம் மறையாகி இருந்தால் நால் வருண வேதங்கள், குர்ரான், விவிலியம், தம்மபதம் ஆகியன பெற்ற மக்கள் தொகை யிலும் திருக்குறள் வழி ஒழுகுவார் மிகுந்திருப்பர்" என்றார் கலைஞர்.

- ஆம்! குறளாயம் இவற்றைத்தான் சொல்கிறது. சொல்லி யதைச் செய்கிறது; செய்து வருகிறது.

கலைஞரைப் பார்க்கிறோம். நீங்கள் சொன்னதைச் செய்யுங்கள் எனக் கேட்கிறோம்.

புத்தம் நிலைபேறு அடைய அசோகன் வந்தார்.

திருக்குறளுக்குக் கலைஞர் வருவாரா?

என வேட்கை யுரைத்து வினாவுகின்றது இறுதியாகச் சுட்டிய ஆசிரிய உரை.

**சமயச் சால்பு**

வேலா கொண்ட சமயப் புரட்சி பெரிது. மெய்யுணர்வில் தலைப்பட்டுப் பேராப் பெருநிலை எய்தும் செம்பொருட் பார்வையது அது சாதிக்கு இடந்தராத சால்பும், தாய்மொழி வழியே வழிபடும் உயிருரிமையும் கொண்டது.

'மீனாட்சிபுரம் மீளுமா?' என்கிறது ஆசிரிய உரை ஒன்று. (2:1)

மீனாட்சிபுரத்து மக்கள் ஒரு மொத்தமாகச் சமயம் மாறி விட்டனர்; அவர்களைக் குறைகண்டு என்ன பயன்? சமயத்தில் உள்ள குறைகளை நோக்குங்கள்; நீக்குங்கள்; அப்போது

இசுலாமாபாத்தும் வேளாங்கன்னியும் மீனாட்சிபுரமாக மாறும் என்னும் ஆசிரிய உரை ஏழு குறிப்புகளை வைத்து மேலுமோர் வினாவை எழுப்புகின்றது.

1. சாதி வேறுபாடுகள் இந்து மதத்தில் இருந்து அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

2. உரிய தகுதியுள்ள அனைவரும் கோயில்களிலும் திருமடங்களிலும் (சாதி வேறுபாடுகளின்றி) அனைத்துப் பொறுப்புகளிலும் இடம் பெற வேண்டும்.

3. அறிவியலுக்கும் உண்மைக்கும் மாறான பொய்யுரைப் புராணங்களையும் பழக்க வழக்கங்களையும் மூட்டை கட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

4. வருணாசிரமம் ஒழிக்கப்பட்ட புதிய இந்து மதம் நிறுவப்பட வேண்டும்.

5. தாய்மொழி வழிபாடு உரிமையாக்கப்பட வேண்டும்.

6. கூட்டு வழிபாடு என்ற பொய்மை எல்லாச் சமயங் களிலும் புரையோடி விட்டது. இறைமை உணர்வு என்பது தன் - தனிஉள - மயற்சி. அகவழிபாடு என்பதே நம் மெய்ப் பொருள் உணர்த்துகிறது. இறைமை உணர் வைக் கூட்டுவழிபாட்டால் பெற இயலாது. மனத்துக் கண் மாசிலனாகி அகவுணர்வு பெற்றுப் பேரா இயற்கை பெறலே நம் இறைமைக் கொள்கை.

7. இந்து சமயத்தில் நுழைந்திருக்கும் மற்றை இழிமை களைப் போக்க அவ்வப்போது அறிஞர் பெருமக்கள் கூடி ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும்,

காஞ்சிமடத்திற்கும் மதுரை ஆதீனத்திற்கம் தகுதியுடைய இன்றைய தாழ்த்தப்பட்ட ஒருவர் இளவல் பொறுப்புத்தலைமை ஏற்றப்பின் திருமடத் தலைவராக வேண்டுமி. அன்றுதான் இந்து மதம் தலைநிமிர்ந்து நிற்கும். மீனாட்சிபுரம் என முழங்கும் இவர்கள் இதற்கு ஆட்படுவார்களா? என்பது அது,

“நம் கோயில்களில் படிந்தகறை” என்பதோர் ஆசிரிய உரை (1:2)

திரு நணா (பவானி கூடுதுறை)க் கோயிலில் கோடி அர்ச்சனை! பாவேந்தர் பட்டடை ஈரோடு இராமலிங்கனார் பாவலர் ஈவப்பனாருடன் கோயிலுள் சென்று நால்வரை

*நினைந்துருகி முழுநீறுபூசிக் கொண்டு தமிழினமே விழி என்னும் தலைப்பிட்ட அறிக்கைகளை அனைவர்க்கும் வழங்கினார். தேவார திருவாசக திருவாய்மொழிகளைப் புகவிடாது புரியா வட மொழிக்குக்கோயில் இடமாகிவிட்டதால்ஏற்பட்ட கேட்டை விளக்கினார். இங்கே அறிக்கை வழங்கவோ பேசவோ கூடாது என ஆங்கிருந்தவர் தடுத்தனர்.*

*இந்தக் கோயிலில் உங்களுக்கு என்ன உரிமை உண்டோ, அவ்வுரிமை எங்களுக்குமுண்டு. எங்களைப் போகச் சொல்ல எவருக்கும் உரிமைஇல்லை. நால்வர் வழியில் செயல்படும் நாங்கள் கோயிலின் இறைமையையும் தூய்மையையும் காக்கப் பாடுபடுபவர்கள், இன்றில்லாவிட்டால் நாளை உணர்வீர்கள்" என்றார் இராமலிங்கர். இதனைச் சுட்டும் வேலா, "இராமலிங்கரைப் போன்ற துணிவுள்ள இளைஞர்கள் ஒவ்வோர் ஊரிலும் தோன்றினால் நம் கோயில்களில் பல நூறு ஆண்டு களாகப் படிந்த கறைகளை நீக்கித் தூய்மை யாக்கலாம். பழைய தெய்வத்தன்மை நம் கோயில்களில் திரும்பவும் தோன்றலாம். தோன்றுமா? வழிபிறக்குமா?*

*உணர்விருந்தால் சொல்லுங்கள்! ஒன்றாய்ச் செயல் படுவோம்!" என்கிறார். சொல்லிய வண்ணம் செய்தலே, சொல் லுதல் என்பது வேலாவின் மறை! அது திருக்குறள் வழியது தானே!*

**சாதி ஒழிப்பு**

*வீர சைவம் 'பிறப்பொப்புக்' கொள்கையது; திருக்குறள் வழியும் அதுவே; ஆதலால் முன்னர் வீரசைவராய்ப் பின்னர்க் குறளியத்தராய்த் தம்மை முழுதாக்கிக் கொண்ட வேலா. "சாதி வேற்றுமை ஒழிப்பில் அரசின் கடமை" (1:11) என்று மறையும் இந்தச் சாதி வெறி இங்கு?" (9:4) "சாதியை ஒழிக்கும் முயற்சியே அறிவுடைமை" (9:7) என்றெல்லாம் ஆசிரிய உரைகள் எழுதினார்.*

*"சாதியைச் சொல்லாதே! சாதியைக் கேட்காதே! சாதியை நினைக்காதே! என்று நம் நாட்டின் ஆட்சியாளர்கள் மேடையிலே அலறுவதோடு சரி. ஆனால் அவர்கள் ஆட்சியில் பள்ளிக்குச் சேரும் பிஞ்சுக் குழந்தைகளிடம் என்ன சாதி எனக் கேட்டுத்தான் பள்ளியில் சேர்க்க அவர்கள் ஆளும் ஆட்சி சட்டம் செய்திருக் கிறது. சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. கொள்கையற்ற அரசியலாளர்கள்.*

ஏ! ஆட்சியாளனே, நீ மேடையிலே முழங்கியதை ஆட்சியிலே நடைமுறைப்படுத்த எத்தனை ஆண்டுகளாகச் சிந்திதுக் கொண்டு இருக்கிறாறாயா?

ஓர் உண்மை தெரியுமா? சமுதாயச் சிந்தனையாளர்களும் பேரறிஞர்களும் மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியை மட்க அடித்தது யார்? ஆட்சியாளர்களேதாம்! ஆட்சிக்கு வராத போது கொள்கையெல்லாம் வாய்கிழியப் பேசுகிறார்கள். வந்தவுடன் கொள்கையை மறந்து நழுவி விடுகிறார்கள். சாதியற்ற இந்தியாவை உருவாக்குவேன் என்றார் காந்தியடிகள். அவர் வழி அரசுகட்டில் ஏறிய நேரு அவர்கள், தம்மை ஒரு நாத்திகர் என்றுகூடச் சொல்லிக் கொண்டார் ஆனால் அவரால் சாதியை ஒழிக்க ஓர் அணு அளவுகூட அவரது ஆட்சிக் காலத்தில் முடிய வில்லை.

அதே போன்று தந்தை பெரியார் வழிவந்தவர்கள் கொள்கைமறந்து கோயிலைச் சுற்றிக் கொண்டும் மடத்தலைவர் களை முழங்காலிட்டுக் கும்பிட்டுக் கொண்டும் வயிறு பிழைக் கிறார்கள். இந்த நிலை எம்.ஜி. ஆர்., ஆட்சியில், இதுபோன்ற மூடப்பழக்க வழக்கங்கள் செய்யும் செயல் உச்ச நிலைக்குப் போய்விட்டது. தன்மானம் என்ற கொள்கை பேச்சிற்குக்கூட இல்லை. விளைவு, ஒளிந்திருந்த சாதி வெளிகளும் மதப்பூசல்களும் இன்று கச்சை கட்டிக் கொண்டு சங்கங்களாக முளைத்து வளர்ந்து ஆட்டம் போடுகின்றன. அதனால்தான் வயிரத்தை வயிரத்தால் தான் அறுக்கமுடியும் என்று கூறி, இனிமேல் எல்லாச் சலுகை களும் கலப்புமணம் புரிபவர்களுக்கே வழங்கவேண்டும் என்று சென்ற இதழில் நாம் வலியுறுத்தியிருந்தோம்" என்று விரித்தெழுதும் வேலா, "சாதி வெறியர்களோடு போராடி வெல்லலாம் ஆனால் சாதியால் நன்மை போகிறதே என்று கூறும் குறுகிய எண்ண முள்ள தன்னல வெறியர்களே நமக்கும் நம் முயற்சிக்கும் முட்டுக் கட்டைகள். இவர்களுடைய குறுகிய நோக்கத்திற்குச் சரியான தீர்வு முறை கண்டால் சாதிகளை அழித்து விடலாம். மதவெறியை ஒடுக்கி விடலாம்.

இதற்குள்ள ஒரே வழி பொருளாதார அடிப்படையில் வாய்ப்புகளை வழங்குவது என்பதே. இதைச் செயல்படுத்தவல்ல சிந்தனையும் அறிவாற்றலும் மிகுந்த ஆட்சியாளன் என்று பிறப்பானோ? ஆட்சிக்கு வருவானோ? அது வரை நாம் காத்திருப் போமா? அன்றிக் காலத்தை வென்று மாற்றுவோமா? சிந்தியுங்கள்" என வரைகின்றார். இது, சாதியை ஒழிக்கும் முயற்சியே அறிவுடைமை என்பதன் ஒரு பகுதி.

**குடியொழிப்பு**

*குடிகெடுக்கும் குடியை ஒழிப்பதில் வேலாவுக்குத் தனிப் பெரும் உந்துதல் உண்டு. பலப்பல வேண்டா; ஆசிரிய உரை ஒன்று; அதுவும் குறளியம் தொடங்கிய எட்டாந்திங்கள் ஆசிரிய உரை. "சான்றோரரால் எண்ணப்படாதவர்" என்பது தலைப்பு. முழுமையாகத் தரப்படவில்லை; சிலச் சில பகுதிகள் :*

*திரு. கலைஞர் ஆட்சியில் ஏற்பட்ட மதுவிலக்குத் தளர்வு என்னும் துயர முடிவால் விளைந்த கொடுமைகள் இன்னும் நம் குமுகாயத்தை விட்டு அகன்ற பாடில்லை. அவ்விடைக் காலத்தில் குடிக்கப் பழகிய தலை முறைகளை இன்றளவும் திருத்த முடியாது. துயருறும் இல்லங்களை எண்ணிப் பார்க்கும் போது நெஞ்சு குமுறுகிறது. நல்லவர்களின் இதயங்கள் அழுகின்றன.*

*திரு. கலைஞர் ஆட்சியின் மதுவிலக்குத் தளர்வினால் மது குடிக்கப் பழகிய எனது நண்பர் ஒருவரின் குடும்பம் இன்று நடுத் தெருவில் நிற்கிறது. அவரைப் பெற்றவர்களும் உற்றவர்களும் செய்வதறியாது திகைக்கின்றனர். அவரது தந்தையார் தாம் செய்த பெருவணிகத்திற்குத் தம் மகனும் துணையின்றிப் போன சூழலில் மகனது செயல்களால் செல்வத்தையும் இழந்து இறந்தார்.*

*"மற்றுமொரு குடும்பம் நாட்டுக்குழைத்துப் பட்டயம் பெற் தலைவனைக் கொண்டது. அவர் மகன் கல்லூரிக் காளையானான். மதுவிலக்குத் தளர்வு வந்தது. மகன் குடியனானான். தந்தை தம் மகன் நிலைக்கு இரங்கி உயிரையே துறந்தார்.*

*"மற்றுமொருவர் இன்றை இலக்கிய விழாக்களின் தலைவர். 'சனாதனதர்மங்'களின் காவலர். அவர் மகன் மிகப்பெருங் குடியனாக மாறி விட்ட கீழ்மையை எண்ணி எண்ணி மறுகி, நாளும் மாழ்குகிறார். இதைப் போல எத்னை குடும்பங்கள் தமிழ்நாட்டில் அவலநிலைக்கு ஆளாகியுள்ளன. அய்யகோ! நெஞ்சு பொறுக்கு தில்லையே!*

*"என்னைப் பார்க்கிறேன். என் இல்லத்து முன்னவர்களைப் பார்க்கிறேன். மதுவிலக்கு குடி கொடிது என்று உணர்ந்த தலை முறையில் தானே நாங்கள் வாழும் மாந்தர்களாக மாறினோம். குறளியம் நடத்தும் கொள்கையராகிறோம். இது தானே தமிழகத்து வாழும் அனைத்துக் குடும்பங்களின் நிலையும்.*

*"தமிழக முதல்வர் அவர்களே! புரட்சித் தலைவர் அவர்களே! தங்கள் மனம் தடுமாறுகிறது; மதுவிலக்கை நீக்கத்தான் போகிறார்*

*முதல்வர் என்று சொல்கிறார்களே! அஃது உண்மையா? கூடாது; கூடவே கூடாது.”*

*“நாங்கள் அன்புடன் நினைப்பதைப் போல உங்கள் குடும்பங்களின் முன்னவர்களை நினைத்துப் பாருங்கள்; உங்கள் அமைச்சர்களின் கட்சிக் காரர்களின் குடும்பங்களின் முன்னவர் களை நினைத்துப் பாருங்கள்! ஏன் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் முனனவர்களை நினைவில் கொண்டு பாருங்கள். கோவணம் கட்டிப் பகலைப் போக்கிக் குறுகிப்படுத்து இரவைப் போக்கி வாழ்ந்ததையும் கல்வியின்றிக் கைகட்டி வாய் பொத்தி, காலில் விழுந்ததையும் ... அப்பப்பா திரும்பவும் அந்த வாழ்க்கை இந்நாட்டு மக்கட்கு வர வேண்டுமா?*

*“புரட்சித் தலைவர் அவர்களே, தங்களை நாட்டு மக்கள் விரும்பியதற்கு என்ன கரணியம்? வாழ்க்கையில் மட்டுமின்றி, திரைப்படத்தில் கூட ஒரு குடியனாகத் தோன்ற மறுத்து நடித்ததை மறக்காதீர்கள். உங்களைப் பண்பற்றோர் சிலர் - திட்டத் திற்கான பொருட்பற்றாக் குறையால் - நெருக்கி, உங்கள் கொள்கையை மாற்றக் கூறுகிறார்கள். அவர்களை அருகில் அழைத்து வாயை ஊதச் சொல்லிப் பாருங்கள். அவர்களின் திரைமறைவில் நடப்பதைப் பாருங்கள். அவர்களது நட்பை விட்டுவிட முயலுங்கள்.*

*“மதுவிலக்கை எடுக்க வேண்டும் என்றால் ஆட்சியில் இருந்தே விலகி விடுவேன்” என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்கள் உங்களைத் தடுக்கஇன்றில்லை. எளிய குடும்பங்களின் - தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் - அவல நிலைக்குக் கரணியமே குடி என்பதைக் கண்டுணர்ந்த தலைவர் காமராசர் உங்கட்கு எடுத்துக் கூற இன்றில்லை.*

*“மதுவிலக்கைத் தளர்த்தக் கூடாது எனக் கலைஞர் அவர் களின் இல்லத்திற்கே சென்று கேட்டுக் கொண்ட மூதறிஞர் இராசாசி உங்களிடம் வர இன்றில்லை. ஆனால் உங்களிடம் குடிப்பழக்கம் இல்லை. உங்களின் நல்ல பழக்கங்களும் பண்புகளும் தாம் உங்களை முதல்வராக்கி உள்ளன. நீங்கள் பெற்ற நல்லவை களை நாட்டுக்கும் ஆக்குவீர்கள் என்றுதான் மக்கள் நம்புகிறார்கள்.*

*“குடியாதவர்கள் நூற்றுக்கு 70 ஆக மாறும். இந்த மாற்றம்... தாழ்த்தப்பட்ட குடிகளை, என்றும் தாழ்வுபெற்ற குடிகளாக மாற்றும். அந்தப் பெருமையைக் கட்டிக் கொள்வதானால் மதுவிலக்கை எடுங்கள்!*

“ஆனால் ஒன்று, தாங்கள் சான்றோரால் எண்ணப் படாதவர் ஆகிவிடுவீர்கள். பேரறிஞர் அண்ணா போல், பெருந்தலைவர் காமராசர் போல் மூதறிஞர் இராசாசி போல் என்றும் சான்றோரால் எண்ணப்படத்தக்கவராகத் தாங்கள் திகழ வேண்டும் என்பதே எங்கள் அவா.”

“அரசுப் பணிகளில் திருவள்ளுவர் ஆண்டைப் பதிக்கச் சொன்னீர்கள். எங்கள் நெஞ்செல்லாம் பூரித்தது.

“கேரளத்திலே போய் நான் தமிழன் என்று சொல்லிய - உலகத் தமிழ் மாநாடு நடத்திய உங்களைக் கொஞ்ச நினைக்கிறது.

“யாரோ உங்களைப் பள்ளத்தில் இடறச் செய்கிறார்கள். பெருமதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்களே! இருகரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறோம். மதுவிலக்கை நீக்க வேண்டாம். தற்கொலை முனைப்புக் கொடுமைக்கு ஆளாக வேண்டாம். குடியைக் கெடுப்பது குடியே! அதுவே மக்கள் தலை மேல் விழுகின்ற இடி.”

எவ்வளவு நயம்! எவ்வளவு கெஞ்சுதல்! எவ்வளவு மன்றா டுதல்! பின்னரும் என்ன? மீண்டும், கலைஞர் ஆட்சி தளிர்க்க வேண்டும் என விழைந்த வேலாவுக்குக் களிப்பூட்டிய ஆட்சி தோன்றியும் “மலிவு விலை மதுவை அரசே வழங்கும்” என்ற செய்தி தாங்கிக் கொள்ள முடியாததாயிற்று! குடிப்பழக்கம் குடும்பத்தை அழிப்பதைக் கண்ணாரக் கண்டிருந்தும் அதனை விலக்காமல், மலிவு விலையில் அரசே தருவது என்பது எவ்வளவு தீமையானது என வெம்பினார். கண்ணீர்விட்டு மன்றாடுகிறோம்; மலிவு விலை மது வேண்டா’ என ஆசிரியவுரை வரைந்தார். மகளிரியக்கத்தவரின் மதிக்கத்தக்க கருத்துக்களையும் வெளி யிட்டார்! இவ்வளவும் வென்றனவா? இன்றுவரை ஆகவில்லை!

**ஈழத்தமிழகம்**

தமிழ் உணர்வு இளந்தை முதலே பெற்றுப் படிப்படியே வளர்ந்து வருவதுடன் வளர்த்து வருபவரும் வேலா. அவர் தமிழினப் பற்றுமைக்குச் சான்று பல வேண்டுவதில்லை. ஈழச் சிக்கல் பற்றிய அவர்தம் சிந்தனை எத்தனை இதழ்களின் ஆசிரிய உரைகளாக விளங்குகின்றன என்பதைக் கண்டாலே தெளிவாகி விடும்.

“செந்நீரும் கண்ணீரும்” என்பதில் அவர் உருகி உருக்கும் செய்தி (1:12) “ஆ, அய்யோ! அய்ய்யயோ! ஆங்... ஆங்கு... ஆங்;

*ம்.... ம்.... அப்பா! தாயே! ஆண்டவனே! என்னைக் காத்தருளும் கதிர்காமத்தானே! முருகனே! ஓ... ஓ... அய்யோ... இப்படிப்பல அவலப் பேரிரைச்சல்கள் ஈழநாடு (இலங்கை) - கொழும்பு புகைவண்டி நிலையத்தில் இருந்த எனது செவிகளில் சம்மட்டி கொண்டு அறைந்தது போல் விழுந்தன (1977 இல் யான் ஈழநாட்டுப் பயணம் மேற்கொண்ட போது நடந்தது). வண்டி புறப்பட 12 மணித்துளிகளே இருந்தன. உடன் ஒலிவந்த திக்கு நோக்கி ஓடினேன். என் ஈழ நண்பர்களான சுதந்திரன் இதழ் ஆசிரியர் திரு. மகேசன், திரு. நவசோதி, திரு. பேரின்ப நாயகம் ஆகியோரும் பின்வந்தனர்.*

*புகைவண்டிப் பெட்டி ஒன்றின் உள்ளும் புறமும் சுமார் முன்னூறு பேர்கள் அழுதரற்றிய பேரிரைச்சல்தான் அது. பிறந்தும் வாழ்ந்தும் வந்த நாட்டைத் துறந்தும் இழந்தும் தமிழ்நாடு செல்லும் மக்கட்கூட்டத்தான் என்பதறிந்தேன். உடனிருந்த ஈழ நண்பர்கள் அரசு ஒப்பந்தங்களை விளக்கினார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று வகுத்த தமிழினம் தோன்றிய ஈழ மண்ணில் இருந்து கால வரலாற்றின் கொடுமையால் வெளி யேற்றப்படும் அவலத்தைக் கண்ட என் கண்கள் குளமாயின.*

*ஈழத்தில் இத்திங்களில் நடந்ததை நாளிதழ்களில் அறிந்த என் நெஞ்சம் நடுங்கியது. முந்தைய அவலக் காட்சியினும் கொடுமையானதோர் காட்சி என் மனத் திரையில் ஓட, கண்ணீர் செந்நீராய் வடிந்தது. தீ, கொலை, கற்பழிப்பு, சூடு, தாக்குதல்... மனத்திரையில் ....*

*திராவிட இயக்கம் தந்த கலைஞர் கருணாநிதி இக்கருத்தை இதயத்துட்கொண்டு ஈழத்தமிழர் படும் துயர் - எமக்கு மனிதாபிமானப் பிரச்சினை மட்டுமில்லை. இனப்பிரச்சினையும் கூட என்று கூறி பாரதத் தலைமை அமைச்சரைத் தக்கன புரிய வேண்டுகோள் விடுத்துள்ளார். திராவிட இயக்கம் பெற்ற தமிழக முதல்வர் ம.கோ. இரா. அவர்களும் இச்செய்திகளுடன் பாரதத் தலைமை அமைச்சரை அணுகியுள்ளார். இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக இவ்விருவரும் இதிலாவது செயல் படுவரா என ஏங்கும் இதயத்தினராக உள்ளனர் தமிழ்நாட்டினர் என வரைகிறார். இணைந்த பயன்பாடு இங்குக் காண இயலுமா? தங்கள் மானத்தை விட இனமானம் உயர்ந்ததென இவர்கள் என்று எண்ணினார்கள்? தன்மானத்தால் இனமானத்தைக் கெடுத்த - கெடுத்துவரும் செய்திகள் - காட்சிகள் தானே மிகுதி. அதனால் பதறும் நெஞ்சத்தைப் பறையறைந்து ஆசிரிய உரையாக்கி முடிக்கிறார். (3:12)*

*“ஆம்! ஒன்றைச் செய்து விடுங்கள். தமிழ் எதற்கு? தமிழ்நெறி எதற்கு? தென்திசை வரலாறு தான் எதற்கு? அதை முடித்து விடுங்கள். அதை முடித்து விடத்தானே உங்கள் தன் மானம் முனைப்பாயுள்ளது. முனைப்புகள் எங்கெங்கோ முட்டி மோதுகின்றன. ஆனால் முட்டி இணைய வேண்டிய இடத்தில் மோதல் இல்லையே! இஃது அழிவு மோதல்; ஆக்க மோதல் அன்று.*

*தமிழ்த் தலைவர்கள் இழுக்காற்றுச் சேற்றில் அமிழ்ந்து கிடக்கிறார்கள். மக்களே நீங்கள் விழித்து நல்ல வழிகாட்டுங்கள்! உங்கள் விழிப்பில் தான் வாழ்வும் வீழவும் வழி அமைந்திருக்கிறது” என்கிறார்.*

*நடுநிலையாளர் நாட்டம் என்னும் ஆசிரிய உரையில் (4:2)*

“தமிழீழமே பிறத்தல் வேண்டும்
தலைகள் இனிப்பல்லாயிரம் போனாலும்
தமிழீழமே பிறத்தல் வேண்டும்”

*என்றார். மேலும் சொல்கிறார்:*

*“நாம் ஈழம் சென்றிருந்தோம். விடுதலை உணர்வு ஓங்கியிருந்த வேளையில் சென்றிருந்தோம். அங்கு ‘பிராமணன்’ இல்லை. முதலிசெட்டி பிள்ளை இல்லை. தெலுங்கன் மலையாளி கன்னடத்தான் என்று மொழிப் பிரிவுமில்லை. ஏன்? சாதியுணர்வே தலை காட்டவில்லை அனைவரும் தமிழராய் ஒன்றி நின்றதைக் கண்டோம்” என்கிறார்! அந்நிலையே நீடித்திருந்தால், இடரும் இக்கட்டும் இன்றுவரை நீடித்துக் கொண்டு இருக்குமா? “தமிழீழம் தோன்றுமா?” (5:9). சிக்கலில் தமிழீழச் சிக்கல்” (6:2) “தமிழீழமன்று - தமிழர்களின் தாயகம்” (7:5) “தாயிடமே பிள்ளை வளர வேண்டும்!” (8:1) “இந்தியா பெற்றெடுத்த சிக்கலும் ஈழம் உற்ற அல்லலும்” (8:4) “ஈழத்தமிழ் மாநிலம் தமிழ் ஈழமாகுமா?” (9:12) என்றெல்லாம் ஆசிரிய உரைகள் கிளர்ந்தன. அட்டைச் செய்திகளும் கட்டமிட்ட செய்திகளும் குலவின.*

*ஒன்றுபடாப் போராளிகளுக்கு ஒன்று உரைத்தார் வேலா. ஈழத்தமிழ்த் தாயகப் போராளிகளுக்கு ஒன்று கூற விரும்புகிறோம். இன்றைய நிலையில் உங்களின் பிளவுகளை நீக்குங்கள்; எல்லாப் பிரிவினரும் ஒன்றுபடுங்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களின் தலைமையை ஏற்று இறுதி உயிர்ப் போராட்டத்தை நடத்துங்கள் நன்மை தீமைகளை இப்போது ஆராய வேண்டாம். உரிமை பெறுவதொன்றே உங்களின்*

*குறிக்கோள். பின் விளைவுகளை இப்போதுள்ள சூழ்நிலையில் சிந்திக்க வேண்டாம். உரிமைக்குப் பிறகு அவ்விளைவுகள் கொடுமையாக தீமையாக அமையுமானால் அந்தத் தலைவனையும் உரிமையுள்ளவன் அழிக்கட்டுமே! எனவே, பல்குழுவின் காரணமாக உரிமைப் போராட்டத்திற்கு இடையூறாக இருக்க வேண்டாம். வேண்டுவது தமிழர்களின் உரிமைத் தாயகம்தான்''*

*இன்று தேவை ஒரே காட்சி! ஒரே போக்கு! ஒரே முடிவு!'' என்று வெற்றி வகையைத் தமக்குப் பட்டவாறு தெளிவாக உரைத்தார் (7:5)*

**துறைதோறும்**

*“வாழ வேண்டியவர்களே வாருங்கள்'' என இளைஞரை அறை கூவி அழைக்கிறார் (1:6). “திருக்குறளைக் குறை கூறக் கங்கணம் கட்டிக் கொண்டதா காஞ்சிமடம்'' என வினாவுகிறார். (2:9). அதனைச் சார்ந்து பேச வந்த ஒருவரைச் சுட்டிக் காட்டி, அடையாளம் கண்டு கொளுங்கள் என வரைகிறார் (2:10). ஊராட்சிச் சிறப்பை வலியுறுத்தி பக்குவம் செய்யும் நற்பள்ளிச் சாலை திறக்கப்படுமா? என வுனா எழுப்புகிறார். (21:2) ஊட்ட உணவுத் திட்டத்திற்கே உலை வைப்பதா? என அத்திட்டத்தை வரவேற்றுப் போற்றுகிறார். மொழி வழிச் சிந்தனைக்குக் கருநாடகம் காட்டும் வழி (3:3) மடஎன்றும் கல்விக் கொள்கைக்கு வழிகாட்டுமா வங்கமும் கேரளமும் (7:9) என்றும் எழுதுகின்றார். ஆசிரியர்களே ஒதுங்காதீர்கள் (3:4) எங்கும் தமிழ் எனவாகத் தமிழாசிரியர்களே தலையிடுங்கள் (4:3) ஆசிரியர்களே பள்ளிக்குச் செல்லுங்கள் ஆட்சியாளர்களே கண்ணைத் திறவுங்கள் (6:5) அரசு அலுவலர் முறையற்ற போக்கு (6:3) துணிவுள்ளவர் துணைக்கு வாருங்கள் (6:4) கல்வியை விலைபோட்டு வாங்கினால்தான் முடியும் இங்கு - இன்று (8:12) இன்னவாறெல்லாம் ஆசிரிய உரை எழுதி நெறிப்படுத்த முனைகிறார்.*

*“மே முதல் நாள் வருமா (3:10) மே - நாள் நினைவில் நடைமுறை தொழிலாளரும் தெய்வப் புலவரும் (6:10). மே முதல் நாள் ஊழல் ஒழிப்பு நாளாகட்டும் (7:19). மே நாள் (8:10). என பொருளியல் பார்வை பார்க்கிறார். குறளிய வழியில் குமுகாயம் காணவாரீர்' (2:7). புதியதோர் குறளாய உலகு படைப்போம் (6:2). இன்னன குமுகாயப் பார்வை. குறளாயச் செய்தி விரிவுடையது ஆகலின் அது, மேலே எண்ணப்படுகிறது.*

*“ஆறாத்துயர்'' (1:7) எனப்பாவாணரும், பதிப்புத் துறையில் ஈடு இணையற்றவர்'' (3:7) எனத் தாமரைத் திரு.வ. சுப்பையா*

*அவர்களும் "மூதறிஞர் செம்மல் வ.சுப. மா. மறைந்தாரே" (9:10) என மாணிககனாரும், அருந்தமிழ் வல்லார் மறைவு (9:11) என முனைவர் க.த. திருநாவுக்கரசு, திரு. மு.ரா. பெருமாள், புத்தனேரி சுப்பிரமணியம் ஆகியோரும் நினைவு கூர்ந்து புகழப் பெறு கின்றனர்.*

**இன்னலும் இரங்கலும் - ஆய்வுரை**

*திரு.கி. வீரமணியைக் கொல்லும் நோக்குடன் ஒரு கூட்டம் கிளர்ந்தது. அதனைக் கண்டிக்கும் வகையால் எழுந்தது. "இமை போல் காப்போம்" என்னும் ஆசிரிய உரை (3:1)*

*"இது நாடா; காடா என்ற ஐயம் எழுகிறது; குருதி கொதிக்கிறது; நெஞ்சு படபடக்கிறது" எனத் தொடங்கும் உரை, வீரமணியை நம்மிடை வாழும் வீரப் பெருமகனாகக் காண்கிறேன். அவரை இச் சனாதனக் கயவர்களிடமிருந்து காத்தாக வேண்டும். இக்கயவர்கள் மக்களைப் போன்றே இருப்பர். இக்கயவர்கள் நம் நட்பு அணிகளில்கூட (திக. தி.மு.க. அ.தி.மு.க.) ஊடுருவி இருப்பர். தமிழ்த் தலைவர்களாகவும் இறைமை உணர்வுடையவர்களாகவும் வாழ்ந்து தந்தை பெரியாரின் பணிகட்கு உறுதுணையாக இருந்த தவத்திரு ஞானியாரடிகள், தவமிகு மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.க. முதலானவர்களின் அடியொற்றி வாழும் இறைமைப் பற்றாளர்களாகிய நாம் ஒருங்கு சேர்ந்து வீரமணி அவர்களின் உயிருக்கு ஊறுவிளைப்போரை அடையாளம் கண்டும் காட்டியும் வேரறுக்க வேண்டும்" என்று வளர்ந்து, கொத்தளம் ஏறியும் கொத்தடிமை ஆயினரே என்ற அவர் சொல்லுக்குத் தமிழக அரசு வரலாற்றில் இடம்பெறக் கூடாது. காமராசர், பக்தவத்சலம் ஆட்சி கூடத் தந்தை பெரியாரைக் கண் இமை போல் காத்ததை நாம் மறத்தல்கூடாது என நிறைகின்றது. கால இணைப்பு - கருத்து இணைப்பு - கொள்கை இணைப்பு - கருத்து இணைப்பு - கொள்கை இணைப்பு இன்னவெல்லாம் படம் பிடித்துக் காட்டும் நெறிப் பாட்டுரை இவ்வாசிரிய உரையாம்.*

*"அன்னை இந்திராவின் உண்மையான வாழ்க்கை வரலாறு எதிர்கால மக்கட்குக் கிடைத்த அரிய வழிகாட்டியாகும்" என்று இரங்கல் உரை தொடங்கும் வேலா, அவர் வாழ்வு வழிகாட்டியா தலைப் படம் பிடித்துக் காட்டுகிறார். ஒன்று நேரிடை அரண்மிக்க சான்று! மற்றொன்று எதிரிடை முரண்மிக்க சான்று! இருவகை யானும் அரசியலாளர் ஏற்க வேண்டுவதும் தவிர்க்க வேண்டு வதுமாம் - சான்றாதலை இந்திரா அம்மையார் செயற்பாட்டுப் பண்பியல் காட்டி நிறுவுகிறார்:*

"நல்லனவும் அல்லனவும், பொறுமையும் வெகுளியும், அறமும் பழியும், வாய்மையும் பொய்மையும் மாறி மாறி வந்த நிகழ்வுகளைக் கொண்டது அன்னை தம் வாழ்க்கை. நாணத்திற்கு இரு பக்கங்கள் உண்டு. எல்லா உள்ளங்களும் இருபக்கங்கள் கொண்டவைதாம். பண்பு உடைமையும் கயமையும் அந்த இருபக்கங்களாம். எவரொருவர் எவ்வெவ்வாறு எவ்வெவற்றை எஞ்ஞான்று ஆற்றுப்படுத்திக் கொள்கிறார்களோ அவ் வகைகளே அஞ்ஞான்று விளையும் என்னும் உலகவழக்கை உண்மையாக்கியதே அவர் தம் நெடிய வாழ்க்கை.

இனம் மொழி நாடு கடந்த மாந்த உள்ளமும் இவர்பால் இலங்கியது. பிற்போக்குத் தன்மை வருணாசிரமப் போக்கு ஆகியவும் சிலகாலம் இவரை விழுங்கியிருந்தன. நெருக்கடி நிலை (மிசா), நயன்மை மறுப்பு, ஒறுப்புணர்வு ஆகியன இல்லாமல் இருந்திருந்தால் ,வரும் ஓர் அண்ணல் காந்தி ஆகியிருப்பார். அரசியலில் ஈடுபடுவோர் ஒவ்வோருவரும் உய்த்துணர வேண்டிய ஏன்? கற்றுணர வேண்டிய வரலாற்றுப் பக்கங்களே அன்னையின் வாழ்க்கை. அத்தகு அரிய வரலாற்றை எதிர்கால மாந்த இனத்திற்கு அளித்த, நம் மறைந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களை நினைந்து நெடிய நினைவலைகளில் நீந்து கிறோம். அவர்தம் புகழில் நிற்க. அதற்குத் தக" என்பது அது (5:5:27).

கவர்ச்சியே ம. கோ. இராவின் வெற்றி; அமைந்து விட்ட நல்ல தலைவிதியே ம.கோ. இராவின் பேறு; என்பனவெல்லாம் அறியாதவர்களும் புரியாதவர்களும் புகழும் சொற்கள், அழகுக் கவர்ச்சியோ அளவற்ற வீரமோ மட்டும் உலகில் எவரையும் நிலையான புகழுக்குரிய தன்மையில் வரலாறு படைக்கவில்லை. கிளியோ பாத்ராவும் மர்லின் மன்றோவும் செங்கிசுக் கானும் இட்லரும் இன்னும் பலரும் இதற்கு எடுத்துக் காட்டுகள். ஆனால் மறைந்த நம் தமிழக முதல்வர் ம.கோ. இரா. பெற்றிருந்த கவர்ச்சியோ ஓரளவு அவரின் வெற்றிகட்குத் தொலைவில் நின்றிருந்தாலும் அது முழுக் கரணியமாகாது என்பதை அவரின் வாழ்க்கைப் பாதையைத் தொடங்கும் நிலையில் இருந்து அணுகுவோர் உணரலாம்.

ஏழாம் அகவையில்நின்றுவிட்ட அவரின் கல்வி, நாடகங் களில் நடிப்பதன் மூலம் புராணக் கல்வியாக வளர்ந்தது.

*நாட்டின் உரிமைப் போராட்ட அன்றைய நிகழ்வுகள் அவருடைய ஓரசைவை ஏற்படுத்தின. இந்நிலையில் கலைஞர் கருணாநிதி அவர்களின் தொடர்பும் அவர்தம் கொள்கையினர் தொடர்பும் புராணப் புரட்டுகளைத் தெளிவாகப் புலப்படுத்தி மாந்த உணர்வை நெஞ்சிலே நிறுத்தியது. கலைஞரின் தெடர்புதான் இவரை நெறிப்படுத்தியது. இதுவே இவரது உள்ளத்தைப் புரட்சியாக்கி முழுக் கல்வியானது. இவர்தம் இளமையிற்பட்ட ஏழ்மையும் தொல்லைகளும் இவருக்கு மாந்த உரிமைகளுக்கு ஏங்கும் மனத்தை அளித்தது.*

*"காட்சிக்கரிய கமுக்கம் மிக்க இவர்க்கும் அக வாழ்க்கையில் பல தோல்விகள் உண்டு. ஆனால் அத்தோல்விகளால் மனம் துவளாது தம் வாழ்க்கையை இறுதிவரை மேம்படுத்திக் கொள்ள முயன்றார்."*

*"மொத்தத்தில் இவர் பெருமைக்கும் புகழுக்கும் வெற்றிக்கும் முழுக் கரணியம் தம்மைப் பிறரிடத்தில் நல்லவராக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே, இவரை நல்லவராகச் செய்துவிட்டது. இந்திய நடுவண் அரசையும் இவரது புகழுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாக இயங்கவும் செய்து விட்டது" என்னும் ஆசிரிய உரை வேலாவின் ஆழ்ந்த பார்வையைத் தெளிவிக்கிறது. இரங்கல் வேளையில் எண்ணிப் பார்க்கும் மதிப்பீடு இது. (8:6)*

**படையல்**

*குறளியத்தின் ஒவ்வோர் ஆண்டின் முதல் இதழும் முறையே பெருமக்கள் வேலாயுதனார், முத்தமிழ்க் காவலர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறளார், பன்மொழிப் புலவர் கா. அப்பாத் துரையார், பெரும் புலவர் மீ. தங்கவேலனார், பேரறிஞர் வ.சுப. மாணிக்கனார், அண்ணலார் பு. சுப்பிர மணியனார், படைமேல்நர் த. சாமிநானார், கு. ச. ஆனந்தனார் ஆகியவர்களுக்குப் படையலாக்கப்பட்டுள்ளன. தொண்டரை மதித்துப் போற்றுதல் தொண்டர் கடனே அன்றோ!*

*இதழ்படையல் செய்யப்பட்டுள்ள பெரு மக்களின் தகவு செவ்விதே என்பதைக் காட்டுவது போல் அரசின் திருவள்ளுவர் விருது முத்தமிழ்க் காவலர், குன்றக்குடி அடிகளார், வ.சுப. மா., கு.ச. அனந்தனார் ஆகியோர்க்கு வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ந்து பாராட்டுதற்கு உரியதாம்.*

**துணை நலம்**

குறளியப் பணியை நோக்கும்போது, அதன் உள்ளீடாக இருந்து உணர்வோடு உழைத்த புலமையாளர்களை - உயிர்ப்புத் தொண்டர்களை - செய்திகளை ஒழுங்குறுத்தி மெய்ப்புப் பார்த்த மேன்மையாளர்களை எண்ணாமல் முடியுமா? அவர்களை முன்னரே கண்டுள்ளோம்.

குறளியக் கருத்துக் கொடைஞர்களை இவ்விடத்தே சுட்டுதல் தகும். பலரையும் சுட்டல் இயல்வதோ? முத்தமிழ்க் காவலர், தவத்திரு அடிகளார், திருக்குறளார், சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தனார் என ஒரு நால்வரைச் சுட்டி அமைதல் சாலும்! மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் உணர்வுத் தொண்டும் ஊற்றமும் சொல்லாமல் தீருமா? தமிழ் வழிக்கல்வி இயக்க நிறுவனரும் வழிகாட்டியும் அவரே அல்லரோ!

**ஆசிரிய உரைச்சீர்மை**

குறளியத்தின் ஆசிரிய உரை, ஒவ்வொன்றும் ஆய்ந்து காணத்தக்க அத்தகு உணர்வு நிலையும் ஆக்க நிலையும் பொதுநல நோக்க நிலையும் நடைநல நிலையும் உடையவை. வேலாவின் நினைவு - சொல் - செயல் ஆகிய மும்மையும் ஒருமையாம் ஒரு சிறப்பின் வெளிப்பாடாக அமைபவை. ஆய்வு நோக்கில் தனித்தனி ஆய்வார் ஆய்ந்து கண்டு கொள்வாராக.

கண்டு கொள்ளுதல் என்பது அரும்பொருள். அக்கண்டு கொள்ளுதலுக்குப் பலப்பலர் கருவிகளைத் தந்து காட்டுவார் அல்லர். ஆனால், வேலாவைக் கண்டு கொள்ள வாய்துள்ள கருவிகள் மிக வெளிப்படையானவை; தெளிவும் மிக்கவை.

ஒவ்வொரு நொடியின் வாழ்வுக்கும், ஒவ்வோர் இயக்கத் திற்கும், ஒவ்வொரு நினைவுக்கும், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் குறள் நெறியே நெறியெனக் கொண்டவர் வேலா! அதன் வழியாலேயே குமுகாயமா, அரசியலா, பொருளியலா எவ்வியல் ஆயினும் தீர்வு காணலாம் என்றும் காண வேண்டும் என்றும் கண்டவரும் கொண்டவரும் வேலா ஆதலால் ஆசிரிய உரை ஒவ்வொன்றும் குறள் நெறி வழியதாகவே தலைப்பும் - விரிப்பும் - முடிப்பும் செய்விதின் இயலக் காட்டுகின்றார். இதன் விரியே 'குறளாயம்' என்பதை நாடறியும்; நாடு தழுவிய ஏடுகளும் அறியும். அக் குறளாயம், ஆட்சியைக் கொண்டால் - கொள்ளும் நிலைமை

ஏற்பட்டால் - நாட்டின் மொழி நிலை - சமயநிலை - சாதி நிலை - அரசியல நிலை குமுகாய நிலை- பொருளியல் நிலை - தொழிலியல் நிலை - சட்சியர் நிலை - சான்றோர் நிலை பொது மக்கள் நிலை - கற்றோர் நிலை எப்படி எல்லாம் இருக்கும் இருக்க வேண்டும் என்பதன் வெளிப்பாடே ஆசிரிய உரைகளின் பிழிவு எனல் சாலும்!

பதவியர் எனின் என்ன, ஆளியர் எனின் என்ன, முரணர் எனின் என்ன, 'திரளர்' எனின் என்ன 'அழிப்பர்' எனின் என்ன நெஞ்சிற்படும் உணர்வை உள்நோக்கு ஒன்று இன்றி உணர்த்துதல் உள்ளத்தால் பொய்யா தொழுகுதல் ஆகும். அத்தகையர் இடித் துரைத்தல் பெருநலப் பார்வையது. அதனால், இடுக்கண் வரும் எனினும் நகைப்பதும் இடும்பைக்கு இடும்பை படுப்பதும் இயற்கை! அந்நிலை இல்லாரே, உணர்வு வயத்தல் ஒன்றை உரைத்துப் பின்னர் அவ்வுணர்வு போய நிலையில் என் செய்தோம் என இரங்கி மாற்றாரிடம் - மதியாரிடம் மண்டியிட்டுத் தன்மானம் தாழ நின்று வாய்மைக் களத்தில் இருந்து தப்பியோடுவர். வேலா, மடியில் க்னமில்லை; வழியில் அச்சமில்லை" அவர் மன நலம் மன்னுயிர்க்கு ஆககம் தேடுகிறது:

**மனவளம்**

"எங்கும் கழித்தல் (-) எங்கே கூட்டல் (+)"

என்பது ஆசிரிய உரைகளுள் ஒன்று (7:12).

1947 - ஆம் ஆகத்துத் திங்கள் பதினைந்தாம் நாள், நம் நாடு உரிமை பெற்றது - இது வரலாறு.

அந்த உரிமை உண்மையானது அன்று என்று காந்தியடிகளும் தந்தை பெரியாரும் அன்றே சுட்டினார்களே - இதுவும் வரலாறு.

இவ்வரலாறுதான் உண்மை என்று இன்றைய நாட்டு நடப்புகள் தெளிவாக எடுத்துக் காட்டி வருகின்றன.

நாம் உணவிலே உடையிலே தேவையிலே தொடர்பிலே மற்றவர்களுக்கு இணையாக இருக்க வேண்டும் என்ற உணர்ச்சியில் குறை காண இயலாது. எங்குப் பார்த்தாலும் தொழிலும் உழவும் வளர்ந்து, முன்னைவிட ஐம்பது விழுக்காடு மிகுதியாக இருப்பதைப் பார்க்கிறோம். இனியும் கட்ட முடியாத அளவுக்கு அணைகளையும் கட்டி விட்டோம்.

*நம் நாட்டு விளைபொருள்கள் ஏற்றுமதி நிலைக்கும் பெருகிவிட்டன. இருப்பினும் நாம் நாட்டில் வறுமையின் எல்லையும் விரிந்து கொண்டே செல்கிறது. நம் ஆட்சியே நடை பெறுகிறது என்ற உரிமை வாழ்வைப் புரிந்து கொள்ளாத அறியாமை நிறைந்த மக்களும், ஏழ்மை மிக்க மக்களும் நம் நாட்டின் மக்கள் தொகையில் ஐம்பது விழுக்காட்டுக்கும் குறைவில்லை என்பதையும் மறுக்க முடியாது.*

*ஏன் இந்த நிலை?*

*நம் மக்கள் ஆரிய இசுலாமிய கிறித்துவ ஆளுமைகளின் கரணியமாகப் புகுத்தப்பட்ட வேறுபாடுகளில் அடிபட்டு வீழ்ந்த பண்பாடுகளால் மனவளத்தை இழந்து விட்டார்கள். தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முனைந்த முனைப்பு இன்றுவரை தோல்வியையே கண்டு வருகின்றன. அதனால்தான் குழந்தை அலறுவதைப் போல் எதைக் கண்டாலும் 'ஒழிக' 'வேண்டாம்' என்பதிலேயே மக்கள் நாட்டம் கெள்கின்றனர். ஆங்கிலேயரை வெளியோ போ என்கிறார்கள். இந்தி ஒழிக என்கிறார்கள். ஆனால் தம்மை, தாய்மொழியை, தம் நாட்டை தம் மக்களை மறந்த மன நிலையையும் பெற்று வருகிறார்கள். எல்லாவற்றையும் ஒதுக்கக்கூடிய அச்சம் நிறை மன நிலையைக் கடந்த பல நூற்றாண்டுகளாகப் பெற்று விட்டதனால், பக்கத்து வீட்டுக்கார ருடனும் தம் வீட்டு உறவினர்களுடனும் நட்புணர்வை வளர்த்துக் கூடி வாழாத நிலை வளர்ந்து வருவதைக் காண்கிறோம்.*

*இப்படிப்பட்ட மன நிலை பெற்றிருப்பதால் தான் தமிழை - தமிழ் நாட்டில் சிறப்புப் பெறச் செய்ய யாரும் அணியமாக இல்லை. அப்படி யாரேனும் இருந்தாலும் அவரை ஆட்சிக் கட்டிலில் ஏற்றுவதற்கு மக்களும் அணியமாக இல்லை. நாலு எழுத்துத் தமிழில் எழுதத் தெரியாதவர்களெல்லாம் நாட்டை ஆள வந்து விடுகிறார்கள். எழுதத் தெரிந்த சில பேரில் பல பேர் போலிகள். ஒரு தமிழன் தில்லிக்குச் சென்றால் தன்னைத் தமிழனென்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறான். வெளிநாடு செல்பவனும் இந்திய மொழியில் உரையாடவும் தயங்குகிறான். இயன்றால் மேல்நாட்டு நங்கையையும் மனைவி யாக்கிக் கொள்கிறான். இவையெல்லாவற்றுக்கும் கரணியம் நாட்டுப் பற்றின்மையா? மொழிப் பற்றின்மையா? இல்லை மனவளமின்மைதான்!*

*குற்றம் சாட்டப்படுவோர் என்னும் இரண்டு அணியினரின் போராட்டம் துவங்கி நடைபெற்று வருகிறது. இதனால் நாம் பெறுவதோ - திகிலும் திகைப்பும், ஒன்றும் புரியாக் குழப்பங் களுமே. இவற்றை அணுகிப் பார்த்து நமக்கு விண்டுரைக்க யாருமில்லை. சொல்பவனும் குற்றவாளி; சொல்லப்படுபவனும் குற்றவாளி; என்பது மட்டும் புரிகிறது . நாம் கண்ணை மூடிக் கொண்டு பின் செல்ல, காந்தியடிகளோ தந்தை பெரியாரோ இன்றில்லை. செயல்கள் சிறப்பாக நடக்கும் என எண்ணி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவோர் கழித்தற்குறிகளாக (-) உள்ளனர். கழிவு 20 விழுக்காடா, 30 விழுக்காடா என்பதே தேர்தல்களில் நாம் காணும் நிலை. எதிலும் கூட்டல் (+) இல்லை.*

*இங்கு ஈழம் போல் கொடுங்கோன்மை நடக்கின்றதா என்றால் அதுவும் இல்லை; ஆனால், செங்கோன்மை தடுமாறு கின்றது. இவற்றிற்கெல்லாம் காரணம் மனவளம் ,ழந்த கண்ணோட்டம் இல்லாத பட்டங்கள் பெற்ற வழி நடத்துநர்களே; அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட மருந்துகள் வேதிமப் பொருள்கள் நம் நாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. டி. டி. டி.* (D.D.T) *யை அமெரிக்காவில் விற்கத் தடை செய்திருக்கிறார்கள். அமெரிக்காவின் பணச் சுரங்கம் டி. டி. டி. யின் வாணிகம். இதன் உண்டாக்கத்தில் 75 விழுக்காடு நம் நாட்டில் விற்பனையாகிறது. கடந்த 15 ஆண்டுகளாக இந்தியா இதனைப் பெற்றதனால் இந்தியக் குடி மகன் ஒவ்வொருவனும் 2 விழுக்காடு டி. டி.டியின் நஞ்சுக்கு இயல்பாகவே ஆளாகி விட்டான் என்று ஆய்வாளர்கள் அறுதியிடுகிறார்கள்.*

*கல்பாக்கம் அணு ஆய்வு நிலையம் மக்கள் வாழும் நெருக்கமான பகுதிக்கு அருகில் உள்ளது. அதற்கு ஏதாவது ஊறு நேர்ந்தால் (போபால் நச்சுவளி போல) 300 கல் தொலைவு நான்கு திக்குகளிலுமுள்ள உயிரினம் அழியும் என்கிறார்கள். அப்படியானால் தமிழ்நாட்டில் மதுரை மிஞ்சுமா? ஈரோடு இருக்குமா? கற்பனையிலும் நெஞ்சம் நடுங்குகிறது. மக்கள் நலனைக் கருதாது மக்கள் வாழும் இடங்களில் போபாலையும் கல்பாக்கத்தையும் உருவாக்க ஒப்புதல் தந்த மன இயல்பைச் சிந்திக்கிறோம்.*

*இதற்கும் மேலாக, திட்டமிட்ட ஒரு கொலையாக, மனவளத்தைப் பாழ்படுத்துவதில் எழுத்தாளர்களும் போட்டி*

*போடுகிறார்கள். மக்களின் மனவளத்தை ஏற்படுத்தும் திண்மை உணர்வைச் சாகடிக்கத் தங்கள் எழுத்துக்களில் நஞ்சேற்று கிறார்கள். சமுதாயத்தில் தோன்றும் தீயமாற்றங்களையும் தீயவிளைவுகளையும் மட்டுமே பெரிது படுத்தி அவற்றை முறையென்றும் நிறையென்றும் இயல்பென்றும் உருவாக்கப் பார்க்கிறார்கள். இன்று நம் நாட்டில் அனைத்து மொழிகளிலும் இழிவான வெறுக்கத் தக்க கேட்டைப் பரப்பும் புதினங்களும் சிறுகதைகளும் ஏராளமாக வெளி வருகின்றன. ஒருவன் எழுதப் படிக்கத் தெரிந்ததுமே அவனுக்கு இந்த நூல்கள்தாம், அந்தப் பண்பாட்டை ஊட்டுகின்றன. இதில் இனம், மொழி, நிறம், மதம் ஆகியவேறுபாடுகள் இல்லை. மனத்திண்மை திட்டமிட்டு அழிக்கப்பட்டு மன வளம் சுருங்கிப் போகின்றது. இந்நிலையில் வளர்ந்தவர்கள்தாமே நாட்டை ஆளவருகிறார்கள். கழித்தல் குறி (-) மக்கள் பெருகப் பெருக நாம் என்று கூட்டல் குறி (+) மக்களை உருவாக்குவது?*

*இவற்றுக்கு இடையில் சிலர் கையுயர்த்திப் பொதுவுடைமை பேசிப் பொறுப்பாளர்கள் ஆகிவிடப் பார்க்கிறார். ஆனால் அங்கும் காண்பது கழித்தல் (-) குறிகளே. கூட்டல் (+) குறியுள்ள மாந்தரை உருவாக்கினால்தான் உலகம் உய்யும். இதுவே நேர் நோக்கு. அத்தகையோரை உருவாக்குவதற்காகவே திருக்குறள் மாந்த நலத்துக்காகவே தெய்வப் புலவரால் வழங்கப் பட்டது.*

"மக்கள் மனவளம் பெற ஓர் உரிமை -
எழுச்சிப் போராட்டம் -
நாடளாவி நடக்கட்டும். மனநலம்
மன்னுயிர்க்கு ஆக்கம்"

*என்பது அது. இனி மனவளம் உருவாக்கிய இனவளமாம் குறளாயம் காண்போம்.*

*"இனநலம் எல்லாப் புகழும் தரும்."*

**குறளாயம்**

*ஆயம், என்பது ஆராய்ந்து எடுக்கப்பட்ட கூட்டம். குறள்நெறி பரப்பும் இதழ் குறளியம் எனப்பட்டது. அவ்வாறே, அக்குறள் நெறியை வாழ்வியலாகக் கொண்டொழுகவும் ஒழுகச் செய்யவும் தெரிந்தெடுக்கப்பட்ட அவையம் குறளாயம் ஆயிற்று.*

திராவிடர் சமயமா, வள்ளுவர் சமயமா என்றெல்லாம் எண்ணியும் ஆய்ந்தும் மறுத்தும் விளக்கமுற்றும் நிறைவில் 'குறளாயம்' என அமைந்தது. அவன் அமைவைப் பற்றி முன்னரே சுட்டியுள்ளோம்.

புதியதோர் குறளிய உலகு படைப்போம்' என்னும் முகப்புடன் 1-12-1983 இதழ் வெளி வந்தது. 15-1-1984 இல் குறள் - குறளியம் - குறளாயம் பற்றிய கலந்துரையாடல் ஈரோட்டில் நிகழ்ந்தது. குறளாயம் பற்றிய வெள்ளை அறிக்கை 1-1-1984 ஆம் இதழில் (4:6) வெளிப்பட்டது.

எல்லார்க்கும் எல்லாம் என்ற அறநெறிப் பட்ட பொதுமைச் சமுதாயத் திட்டத்தைக் குறளியம் வகுத்தளிக்கிறது. அது காட்டும் அரசியல் , பொருளியல், சமுதாயவியல், மெய்யுணர்வு ஏனைய அறிவியல்கள் ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துக்களின்படி குறளாயம் அமைவுறும் என்பது அதில் காணும் குறளாய அமைப்புக் குறிப்பு.

அவ்விதழின் ஆசிரிய உரை குறள் - குறளியம் குறளாயம் என்பதே. அதில் குறளாயம் தோற்றமுற்ற வகை விளக்கப்படுகிறது. அது முன்னரே அறியப் பெற்றதே.

குறளாயம் தொடர்பாக முத்தமிழ்க் காவலர் பேராசிரயர் க. அன்பழகன் தி.மு.க. கொள்கை பரப்புச் செயலர் செ. கந்தப்பன், கோவை மு. இராமநாதன் முதலியவர்களை வேலா சந்தித்துக் கலந்துரையாடியது பற்றிய ஆசிரிய உரையும் திருக்குறள் பீடம் குருபழநி அடிகள் முதலான பலர் சிந்தனைகளும் 1-2-84 இதழில் (4:7) இடம் பெறுகின்றன.

1-3-84 (4:8) இதழின் ஆசிரிய உரை "குறளாயம் 133 பேர்" என்பது. அதில், குறளாயம் காலத்தின் கட்டாயத்தில் உருவாக்கம் பெறுகிறது. மாந்த வரலாற்றின் தொய்வில் விழுந்த சீர்கேடுகளை அகற்ற - தூய்மைப்படுத்த - குறளாயம் தோன்றுகிறது.

"இவ்வியக்கம் வளர நெடுங்காலத்திற்கு முன்னரே அடித் தளம் இடப்பட்டு விட்டது. ஆனால் மக்கள் வாழத்தக்க கூடமாகக் கட்டப்படவில்லை. அப்பெரு முயற்சியையே இன்று நாம் ஒன்று கூடித் தொடர உள்ளோம்."

"இவ்வடித்தளத்தின் மேல் 133 தூண்களை நிறுத்திக் குறளியக் கூரை பரப்புதல் வேண்டும். அந்நிழலை இவ்வுலக

மாந்தர் துய்க்குமாறும். காக்குமாறும் நிலைமாறா வலிமை மிக்க ஊறில்லாத் தூண்களை முதலில் நிறுவும் பணியை மேற் கொள்ளல் வேண்டும். அத்தகு 113 தூண்களும் நிறுவிய கூடமே குறளாயம்.”

இன்னபல கருத்துகளை ஆசிரிய உரை வைக்கின்றது. அமைப்பில் சேர்த்தற்குரிய விண்ணப்பப் படிவத்தையும் இவ்விதழ் வழங்குகிறது. “இவ்வமைப்பில் சேர விருப்புபவர் எந்தச் சமயத்தில் - எந்தக் கட்சியில் - எந்த இனத்தில் - எந்த நாட்டில் எந்தப்பணியில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், குறளாய நெறிகளை வாழ்வில் கைக் கொள்பவர்களாக இருக்க வேண்டும்” என்றும் குறளாயத்தின் ஒரே தலைவர் திருவள்ளுவரே. மற்ற அனைவரும் தொண்டுள்ளத்தோடு ஏற்றத் தாழ்வுகள் எதுவுமின்றி ஈகவுணர்வோடு பொறுப்புகளை - பணிகளை - வகுத்துக் கொண்டு பங்காற்ற அணியமாவோம்; அணி திரள் வோம்; ஒன்று கூடுவோம்; வாரீர்” என்று அழைப்பு விடுகின்றது.

குறளாயத்தில் கலந்து கொள்வோர் தகுதி எனப் பத்துக் குறிப்புகள் குறளாய வெள்ளறிக்கையில் இடம் பெற்றுள:

1. எங்கும் யாண்டும் அன்பும் அருளும் அறவுணர்வும் அமைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. குமுகாய மேம்பாட்டிற்காக அஞ்சாமல் துணிவுடன் செயலாற்றுபவராக இருத்தல் வேண்டும்.
3. தத்தம் வாழ்க்கைக்கு ஊதியம்தரும் ஏதேனும் தொழிலோ பணியோ செய்பவராக இருத்தல் வேண்டும்.
4. குமுகாயத்தைக் களங்கப்படுத்தும் இழிமைகளைச் செய்பவராக இருத்தல் கூடாது. (கலப்படம், கள்ளக் கடத்தல், பதுக்கல், கந்து வட்டி, சுண்டல், கையூட்டு மற்றும் ஏமாற்றுச் செயல்கள்)
5. சிற்றுணர்ச்சிக்கு அடிமையாகாதிருத்தல். (கஞ்சா, புகையிலை, இலைச்சுருட்டு, வெண்சுருட்டு போன்றவை)
6. புலால் மறுத்தல்.
7. வரைவின் மகளிரைச் சேராமை, பிறன்மனை விழை யாமை, ஆடவரும் மகளிரும் கற்பு நிலை காத்தல்.
8. மயக்கம் தரும் மதுபோன்ற பொருட்களை மறுத்தல்.

9. சூதாடாமை, சூது போன்றவை அனைத்தையும் தவிரித்தல்.

10. தாய்நாடு, தாய்மொழி, தாயகக் குடிமை புரக்கும் உறுதி.

என்பன.

குறளாயச் சிந்தனைகள் பெருவரவின ஆயின. ஒவ்வொருவர் சிந்தனையும் குறளியத்தில் பதிக்கப் பெற்றது. நல்லதை ஏற்றும், அல்லதை எடுத்துரைத்தும் மாசு நீக்கி மணியாக்கும் பொறுப் பையும் வேலா எடுத்துக் கொண்டுளார். சான்றாக ஓர் இதழில் (4:7) ஒன்பதின்மர் சிந்தனைகளும், மற்றோர் (4:8) இதழில் பதினறுவர் சிந்தனைகளும், இன்னோர் (4:9) இதழில் பதினால்வர் சிந்தனைகளும் இடம்பெற்றுள. இவற்றுள் 4:8 இதழின் பதினறுவர் சிந்தனைகளுக்கும் மறுமொழிப் பதிவும் வேலாவினால் தரப்பட்டுள்ளது. இது, அவர்தம் ஊற்றத்தையும் உண்மை யையும் உயிர்ப்பையும் காட்டுவதாய் அமைந்துள்ளது. முதன் மூன்று சிந்தனைகளுக்கு வேலாவின் மறுமொழியைக் குறிப்பிடு கிறோம்.

"அரசு குறளாயத்திற்கு அமைதல் வேண்டும் என்ற தங்கள் கணிப்பு அருமையிலும் அருமை. ஆயின், பாராட்டுகளோ வாழ்த்துகளோ எதற்கு? என்ன நடந்து முடிந்து விட்டது? நடை முறை வெற்றியா வந்து விட்டது? இப்படித்தான் இத்தனை நூற்றாண்டுகளாகப் பாராட்டிக் கொண்டே செத்தோம்! செய்ய வேண்டியதைச் செய்து செத்தோமில்லை."

"இயன்ற துணை என்ற சொல் குறளாயம் படைக்காது. ஏற்போம் என்ற சொல் கிடைக்குமா?"

"பண்புகள் என்பது நூலுக்கு இருந்து யாது பயன்? ஒற்றை மாந்தனுக்காகி வளர்ந்து குமுகாயத்திற் கானால் அன்றோ நூல். குரானுக்கும் விவிலியத்திற்கும் விழுக்காடுகள் கொடுத்தீர்கள். ஆனால் திருக்குறளுக்கு விழுக்காடு தர நடைமுறைப் படுத்தினால் அன்றோ இயலும்! கற்பனை வாழ்வில் இருந்து நீங்கி நடைமுறை வாழ்வுக்கு முயலலாமே! துணிவிருந்தால் துணிந்து வாருங்கள்! குறளியத்தில் வழக்கும் உண்டு! தண்டமும் உண்டு; வாருங்கள்; உருவாக்குவோம்."

'ஏன் குறளயாம்?' என்னும் ஆசிரிய உரை 1-5-85 - இல் கிளர்ந்தது (4:10). 15-4-84 - இல் ஈரோட்டில் நாற்பத்தொருவர்

கூடிக் குறளாயம் பற்றி ஆய்ந்த ஆய்வும், 10-6-84 - இல் மீளவும் கூடி ஆய்வது பற்றிய குறிப்பும், யாம் இறைமை நிகழ்வில் இன்பம் காண்போம். சென்ற, 15-4-84 இன் பின் இதிலோர் மாற்றம் கூட்டினோம். மறைமொழிகளாக யாம் கொண்டிருந் தவைகளை விடுத்துத் திருக்குறள் ஓதி ஓதிச் செம்பொருள் நுகர்வு கொள்ளலானோம். அறத்தைச் சொன்னோம். எம் அகத்தை யாரோ தூய்மைப்படுத்தியது போல் இருந்தது. பொருளைச் சொன்னோம். பொருந்தாப் பொருளியற் பொத்தல் களை உணர முடிந்தது. இன்பத்துப்பாலையும் ஓதினால் என்ன விளையும் என்றிட ஓதிப் பார்த்தோம். ஆம்! இல்லாள் எம் அன்புக் கிழத்தியாய் அருமை வாழ்க்கைத் துணை நலமாய் ஊடலுவகையாய் நாளும் தோன்றுகிறார். ஆம்! இதுவன்றோ வாழ்வாங்கு வாழும் முறை. மறைமொழி இது வென உணர்ந்தோம். நிறைமொழி மாந்தரைக் கண்டு கொண்டோம் என்னும் தங் குறிப்பும் அவ்வாசிரிய உரையில் திகழ்கின்றன.

அறவுள்ளத்தோடு துறவுள்ளமும், பணியுள்ளத்தோடு பைந்தமிழ் வன்மையும், எளிமைத் தோற்றத்தோடு ஏறுநடைப் பேச்சும், கொள்கை பல அறிந்தாலும் குறளிய உறுதியும் ஊதிய நோக்கமில்லாத உழைப்பும் உடையவராய்க் 'குறளியக் குடிலுக்கு ஏற்றகொள்கையர் தேவை' என்னும் வேட்டமும் குறளாயத்தில் எழுகின்றது (4:10).

"இயேசு பெருமானின் அப்போசுதல்களைப் போலவும், முகமது நபிபெருமானின் கலிபாக்களைப் போலவும், புத்த பிரானின் ததாகதர்போலவும், மார்க்கிய மெய்ப்பொருளிற்கு அமைந்த இலெனின் போலவும், குறளியக் குடிலை ஏற்போர் மெய்ப்பொருளுக்கு நன்மாணாக்கராய் அமைவர் என்றும் அவர் தம் தகவார்ந்த பணித்திறமும் சுட்டப்படுகிறது.

குறளாயத்தில் இணைய விரும்பியோர் பட்டியலும், குறளாயச் சான்றோர் நிரலும் பதிவாகின்றன. முதற்பட்டியலில் வேலா முதல் செழியன் த. ஈறாக தொண்ணூற்று இரண்டுபேர் இடம் பெற்றுளர். அடுத்த இதழ்களில் அவ்வெண் 173 ஆகின்றது. இவ்வாறே பெருகு கின்றது.

ஈரோட்டுக் கூட்டத்திற்கு வந்ததன் பின்னர், புலால் புகைப் பழக்கங்களைக் கைவிட்டு விட்டேன். என் இனம் மேம்பட வேண்டும்; இஃதொன்றே என் குறிக்கோள்; உயிரையே இதன்

பொருட்டு விடுதற்கு அணியனான நான் ஊன் சுவையையா விடமாட்டேன்" என்றெல்லாம் வந்த அஞ்சல்களைச் சுட்டிய பெருமிதத்துடன் எதையும் ஏற்போம் குறளாயத்திற்காக என்னும் தலைப்பிட்ட ஆசிரிய உரை மலர்கின்றது (4:1) குறளாய உறுதி மொழிகள் இவையெனத் திட்டப்படுத்தவும் படுகின்றது :

1. எதையும் குறளிய நோக்கில் அணுகுவோன்.
2. சமுதாய மேம்பாட்டுக்காகச் செயலாற்றுவேன்.
3. முறையான தொழிலை மேற் கொள்வேன்.
4. என்பால் களங்கமில்லை; களங்கங்களைக் களைவேன்.
5. குறளிய நடைமுறைகளுக்கு முதன்மை தருவேன்.
6. மனத்தில் மாசிலனாகி ஒத்ததறிந்து பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பவற்றைக் கையகப்படுத்துவேன்.
7. காதலையும் கற்பையும் தலைக் கொள்வேன்.
8. சாதியத்தை ஒழிப்பேன்.
9. நாளும் திருக்குறளை ஓதுவேன்
10. தாய் நாடு புரக்கும் பண்புடன் உலக மக்கள் ஒன்றே என்று குறிக்கொண்டு வாழ்வேன்.

- என்பன அவை. திருக்குறள் நம்மறை என்னும் ஆசிரிய உரை 1-7-84 இதழில் (4:12) கமழ்கின்றது அதன் முகப்பு :

"யாம் மிகப் பெருமிதம் அடைந்து வருகிறோம். காரணம் குறளாயத் தொடர்பால்சிறந்த நண்பர்களைப் பெற்று வருகிறோம். யாம் எண்ணுவதையே எண்ணி இயங்கிடத் துடிக்கும் மனங் களால் நாம் மேலும் உறுதியும் செம்மையும் பெறுகிறோம். நம் நிறைமொழி மாந்தரான திருவள்ளுவப் பெருமான் நட்பிற்குப் பல அதிகாரங்களை ஏன் வகுத்தளித்தார் என்பதன் உண்மையை இப்போதே நன்கு அறிய முடிகிறது. குறளாயம் நல்ல நண்பர் களைக் கூட்டுவிக்கும் களமாக உருவாகிறது" என்று பூரிக்கிறார் வேலா. செம்பொருள் நுகர்வு இலச்சினை, கொடி, துண்டு ஆகியன பற்றியும் குறிக்கொள்ளப் படுகின்றது. "இதுகாறும் உள்ள திருக்குறள் பேரவை சங்கங்களின் அமைப்புகளை என் செய்வது?" என வினாவும் நண்பர்களுக்கு திருக்குறள் தொடர்பான எல்லா அமைப்புகளும் செயற்பட நாம் உறுதுணையாவதுடன்

முன்னின்று பணியாற்றவும் வேண்டும்'' என்னும் தகவார்ந்த விடையும் வெளிப்படுகின்றது.

10-6-84-இல் குறளாய இரண்டாம் நிரல் கூட்டம் நிகழ்ந்தது. விரிவாக ஆய்ந்து அமைப்புக்கு வேண்டும் செப்பங்கள் முடிவு செய்யப் பெற்றன.

25-7-84 இல் குறளியக் கூடத்தில் குறளாய ஆய்வுக் கூட்டம் நிகழ்ந்தது. தவத்திரு. அடிகளார் கலந்து கொண்டார். அதில் குறளாயச் சமுதாய அமைப்பின் நோக்கம், இதுகாறும் அடி களார் வாயிலாகப் பெற்ற கருத்துக்கள், துணை ஆகியவற்றை எடுத்துரைத்து இனிப் பெற வேண்டிய கருத்துக்களை அவாவி நிற்பதாக''க் குறிப்பிட்டார்.

அடிகளார், "சமுதாயச் சீர்திருத்தமும் சமயச் சீர்திருத்தமும் எளிமையானவை அல்ல என்றும், இச்செயற்பாடுகளுக்கு முன்னர் படிப் படியாக ஆய்வு செய்திருக்க வேண்டும் என்றும், முறையான ஆய்வுகள் இல்லாமல் செய்தது தமக்குப் பிடிக்கவில்லை என்றும், கருத்துச் சுதந்திரமுள்ள நாட்டில் ஆங்காங்கே அமைக்கப்படும் அமைப்புகளிலெல்லாம் தாம் சேர்தல் என்பது இயலாது என்றும் கூறினார். அவையோர் பலப்பல வினாக்கள் எழுப்பினர்; கருத்துக்கள் உரைத்தனர்.

அடிகளார் "புதிதாகச் சாதி சமயம் கடந்த ஒருமைப்பாடு அமைவதாயின் முன்னரெய்திய தோல்விகளைப் பாடமாகக் கொண்டு நாமும் தோல்வி அடையாமல் நடை பயிலத் தக்கவாறு ஆராய்ந்து செயல்பட வேண்டும். இந் நடவடிக்கைகளைத் திருக்குறட் பேரவைச் சார்பிலேயே பொதுக்குழுக்கூட்டத்தில் ஒரு முடிவாக நீங்கள் கொண்டு வந்திருக்கலாம். செய்யவில்லை. ஆகலின் பேரவைப் பொதுக்குழுவைக் கூட்டிக் கருத்தினைக் கேட்போம். அறிஞர்களை அழைத்து ஆய்வு செய்வோம். பின்னர் ஒரு முடிவுக்கு வருவோம். ஒவ்வோர் அணியிலும் மிதவாதம், தீவிர வாதம் என இரு பகுப்பு உண்டு. இது தீவிரவாதக் குழுவாக எழுந்துள்ளது நன்று; அப்படியே முடிவு செய்வோம்'' என்றார். (5:1)

அதனால் வேலா தம் நினைவை - செயற்பாட்டை - செயற் பாட்டு இயக்கமாக எழும் குறளாயத்தைப் பற்றி அடிகளார் என்ன கருதுவார் எனத் தம் நினைவோட்டப் போக்கில்

நினைக்கிறார். அவர்க்கு அடிகளார் 'உருவெளித் தோற்றம்' உண்டாகிறது. ஐயமும் விளக்கமும்கிளர்கின்றன. அது, "அடிகளார் தோன்றுகிறார்" என்னும் பெயரீட்டில் வெளிப்படுகின்றது. (1-7-84; 4:12)

ஆனால் நிகழ்வோ மாறாகித் தலைகீழாகின்றது.

திருக்குறளைப் பொதுமறை எனத்தான் நாம் ஏற்போம். நம்மறை என ஏற்க இயலாது என்றார். அவர் கொண்ட கோலம் எதற்கென அவையினர்க்குப் புரிந்து கேள்விக் கணைகள் தொடர்ந்தன. சினமடைந்த அடிகளார் சீற்றம் பெற்றுத் தாம் விலகிக் கொள்வதாகக் கூறினார். பரப்பும் பணியில் பெரும் பங்காற்றும் பேரவை நலிவடையக் கூடாது என எண்ணிய வேலா பிறிதொரு நாள் தொடரலாம் எனக் கூறியதன்பின் அடிகளார் விரைந்து சென்றார்.

முன்னரே, அடிகளாரொடு கலந்துரையாட வேலா பல்கால் எழுதினார்; பொங்கல் விழாவுக்கு அடிகளார் வரின் பயனாம் எனவும் எண்ணினார்; மறுமொழி அடிகளாரிடமிருந்து பெறாமையால் விதிமுறைகளை வகுத்துத் தொடர்ந்து ஆய்வுகளும் நடத்தி வந்தார். இந்நிலையில்தான், இந் நிகழ்ச்சி ஒரு நேர்ச்சியாயிற்று.

நிகழ்ச்சியில் நடந்த நேர்ச்சிகளில் மனம் தளர்ந்த வேலா, அடிகளாரின் நேர் எதிர் முரண்பாடான உரைகளை மாற்றி இவ்வாறு அடிகளார் பேசியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்ற உணர்வுடன் எழுதிய வரிகள் இவை: அடிகளாரும் வேலாவும்:

"குறளாயத்தை அடிகளார் விரும்புவாரா?"

"குறளாயப் பணிகளை - முயற்சிகளை மிக மிக விரும்பு கிறோம். ஆரியப் பிடிப்பு இல்லை என வந்தாலே போதும்."

"ஏராளமான பணிகளையுடைய அடிகளார் நம் குறளிய இதழ்களைப் படித்திருப்பாரா?"

"திருக்குறளுக்காக வரும் குறளியம் இதழை நாம் பாராது இருப்போமா? குறளாயம் பற்றித் தொடர்ந்து கவனிக்கிறோம். எப்பணி இருந்தாலும் இப்பணியன்றோ நம் முற்பணி; வாழ்வின் முழுப்பணி."

*"தம் இசைவைக் கேட்காமல் குறளாய அமைப்பைத் தொடங்க முற்பட்டது சரியில்லை என்பாரோ?"*

*"திருக்குறளுக்கு யார் எப்பணியை எங்குத் தொடங்கினாலும் நாம் துணை நிற்போம். அதுவும் சமுதாய முயற்சியையா தடை சொல்வோம். பாராட்ட அல்லவா செய்வோம்."*

*"தாய்ச்சபை இருக்கத் தனி அமைப்பு எதற்கு என்று கேட்பாரா?"*

*"தம்மின் தம் மக்கள் என்பதன்றோ நம் கொள்கை. நம்மையும் ஊக்குவிப்பதுதானே இப்பணி. தேவையான எல்லா நிலைகளிலும் உறு துணையாக இருப்போம். மாநிலக் குழுவைக் கூட்டி நாமே ஆய்வு செய்து தேவையான கருத்துக்கள் வழங்கிச் செயற்படுவோம்."*

*"யார் யாரோ எங்கெங்கோ அமைப்புகளைத் தொடங்கு வார்கள். நாம் இணைவதா? கருத்துச் சந்தை மலிவாகிவிட்டது. தனி வட்டம் எதற்கு என்று நினைப்பாரோ?"*

*"நற்பணிகளை முனைப்பாக எங்குத் தொடங்கினாலும் அங்குத் தேடி வருவோம்; கலப்போம். நெடுங்காலமாகப்பட்ட துன்பங்கள் ஒழிந்தால் போதும். மேடைதோறும் நாம் கூறிய சிந்தனைகளின் வடிவாக்கமன்றோ குறளாயம்."*

*"ஐயாயிரம் ஆண்டுகள் கொண்ட வரலாற்றில் எத்தனை தோல்விகள் எத்தனை பள்ளங்கள். திக்குத்தெரியாத நிலை. பலமுறை சிந்திக்காது அறிஞர்களைக் கூட்டி ஆராயாது நம்பிக்கையுள்ளவர்களுடன் தொடங்கியுள்ள இச் சிந்தனையைப் பற்றி..."*

*"நெடுங்காலமாகப் பேசி எழுதிச் சிந்தித்து முடித்து விட்டோம். இன்னும் காலம் கடக்க வேண்டா. ஆய்ந்திட வருவோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கையில் (சாதி - சமய - கட்சி) ஊன்றியுள்ளனர். அவர்கள் தம் இசைவுக்கு - விருப்பிற்கு - ஏற்பப் பேசிக் குழப்பமே விளைவிப்பர். இதுவரை வந்த சிந்தனைகளே போதும். நம்பிக்கையுள்ளவர்களோடு நடைமுறைகளை ஏற்படுத்தி நெறிப்படுத்துவதே இனிப் பயன் அளிக்கும்"*

*"இதுபற்றி நாம் தொடர்ந்து எழுதிய பல மடல்களை அடிகளார் பெருமான் கண்டாரோ இல்லையோ?"*

*"அதைப்பற்றி ஏன் சிக்கல்? காணாவிட்டால் தான் என்ன? நலன் நாடிக் கொள்வதன்றோ நம் உள்ளம்."*

*"திருக்குறட் பேரவையில் குறளாயம் பற்றி எத்தீர்மானமும் கொண்டு வரவில்லையே! பேரவை ஏற்குமா?"*

*"இது நடைமுறை அமைப்பு. திருக்குறள் பேரவையுடன் முரண்பாடு எதுவும் இல்லை. நம் பேரவையினர் குறளாய நடைமுறைகளை ஏற்றுக் குறளாயச் சமுதாய அமைப்பில் இடம்பெற வேண்டும். பேரவை அதற்கான பட்டடையே. மிதவாதிகளில் இருந்து தீவிரவாதிகளை உருவாக்குவோம். தீவிரவாதிகள் இல்லாவிடில் மிதவாதிகட்கு உணர்ச்சியற்றுப் போகும். குழந்தை வளர்கிறது. கண்போலக் காப்பது பேரவையின் கடமை."*

*"சுத்த சன்மார்க்கம் என்ற வள்ளற் பெருமானின் ஆறாம் திருமுறை குறளாயக் கொள்கைகளை உடையதே. உழுத நிலமாகிய வள்ளலார் நெறியையே ஏற்றுக் கொண்டால் என்ன? திருக்குறளின்படி குறளாய நெறி என்று தனித்தொன்று வேண்டுமோ, தனி இயக்கம் நமக்கு வேண்டும் என்ற தன் முனைப்பு தலைதூக்கி உள்ளதோ?"*

*"கவலற்க. இது தன் முனைப்பு அன்று நன்முனைப்பு; வள்ளலார் போற்றி ஒழுகியதே வள்ளுவர். திருக்குறட் சமுதாயம் வேறு, வள்ளலார் நெறி வேறு அன்று; ஆயினும் திருக்குறள் நெறி - குறளாயம் - மாந்தர் அனைவருக்கும் உலகெலாம் ஒளிர வல்ல நெறி. அந்நெறியின் விளக்கமே ஆறாந் திருமுறை. உலகின் எந்த அறநூலுக்கும் இணையாக - உயர்வாக - இயங்கி ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் கனல் திருக்குறளில் கனன்று கொண்டுள்ளது. அதை ஊதிவிட்டால் போதும். உலகெங்கும் அறிவொளி எனும் ஞாயிறு ஒளிரத் தொடங்கிவிடும்.*

*மதுரையில் 'வள்ளுவம் வாழ்வை வளம் செய்யாது. கம்யூனிசமே உலகுய்யும் வழி' எனத் தீர்ப்புக் கண்டாரே அடிகளார். சேலத்தில் தம்மைச் சிந்தனையாளராகப் பாருங்கள்; எதைச் செய்ய முடியும்? எதைச் செய்வது? எனச் சீறி விழுந்தாரே அடிகளார். அவ்வாறு பாகுபாடு ஏதும் காட்டிவிட்டால்..."*

*"நாம் என்றும் திருக்குறள் வழியினர். இலால் குடியில் நாம் சொல்லியதை மறந்தீரோ! தேவைப்பட்டால் இந்தக் காவி*

*உடைகளையும் கழற்றி எறியத் தயங்கோம்' என்ற சூளுரைகள் உம் செவிப்பட வில்லையா?"*

*"செவி மட்டுமா; மெய்யெலாம் சிலிர்த்தது. அத்திருவடி களைச் சிக்கெனப் பற்றிக் கொண்ட யாம் வருடி வருடி அடையாளம் கண்டு கொண்டோம். நாம் பற்றிய திருவடிகள் ... திருவள்ளுவரின் திருவடிகள் கண்ணீரால் கழுவி மனமலர் களைச் சாத்தித் திரும்பவும் தலை வைத்துத் திருவடிகளைச் சிக்கெனப் பற்றிக் கொண்டோம்."*

*மணியோசையுடன் மெல்லக் காலைப் பொழுது புலர்ந்தது. மாலை வந்தது. அடிகளார் அசைந்து வரகிறார். கூட்டம் நெருங்குகிறது, அடிகளார் தோன்றுகிறார். "ஒலிப்பதிவு - நாடாச் சுருள் ஒலிக்கிறது. சில நேரங்களில் அலறுகிறது. (ஏனெனில் அவர் அன்று திருவள்ளுவராக இல்லை. ஒவ்வொரு வினாவுக்கும் எதிரிடையான எதிர்பாராத - மறு மொழி தரும் குன்றக்குடி அடிகளாராக இருந்தார்! என்பதை முழங்குகிறது ஒலியிழை!) இந்நேர்ச்சி நேராமல் இருந்திருக்கக் கூடாதா?"*

*ஆம்! அடிகளார் வழியில் வேலா எப்படி வயப்பட்டு நின்றார்! அதன் ஆழ்மனக் காட்சி தானே இது! நேரில் ஒப்புகை பெற இயலவில்லை எனினும், நெஞ்சத்து ஒப்புகை பெற்றுக் கொள்ளும் நேர்த்திதானே இது! இன்றுவரை இவ்வுணர்வுப் பதிவு மாறியது இல்லையே! வாழிய வள்ளுவ நெஞ்சம்!*

*குறளாய விதிமுறைகளை இறுதிப்படுத்தும் கூட்டம் 26-8-84 - இல் சேலம் தமிழ்ச்சங்கத்தில் நிகழ்ந்தது. அது குறித்துத் "திரும்பிப் பார்மின்கள்" (5:2) வினைத் திட்பம் என்பது மனத்திட்பம்" (5:3) என்னும் ஆசிரிய உரைகள் வெளிப்பட்டன. அவ்வாய்வுக் கூட்டத்திலேயே,*

"குறளாய அமைப்பாளர் : வேலா
புரவலர்கள் : முத்தமிழ்க் காவலர்
பேரா. பெரோசு, கேவை"

*என்பார் அமர்த்தம் பெற்றனர்.*

"திருக்குறளைக் கற்றவன் மாந்தன் ஆவான்
திருக்குறளை ஆய்ந்தவன் அறிஞன் ஆவான்
திருக்குறளின்படி நடப்பவனோ தெய்வம் ஆவான்
திருக்குறளை நாளும்படி; திருக்குறளே நம்மறை"

*என்னும் முழக்கம் இதழ்தோறும் தொடர் கின்றது.*

*குறளாயத்தின் முதற்கிளை 1-8-84 - இல் தென்னார்க்காடு மாவட்டம் வளவனூரில் கிளர்ந்தது. புதுவைக் கிளையில் கண்ட முடிபாகச் "செம்பொருளின் மந்திரச் சொற்கள்" (5:7) வெளிப் பட்டன.*

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்"

"நன்றின்பால் உய்ப்பது அறிவு"

*இவ்விரு சொற்றொடர்களையும் சொல்லிச் சொல்லி மனத்திற்படிய உருவேற்றிக் கொள்ளல் வேண்டும். இறைவழி பாட்டின் போதும், நம் கூட்டத் தொடக்கங்களிலும், தீமைகளை விலக்கும் போதும், இன்ப துன்பக் காலங்களிலும், இம்மந்திரச் சொற்களே உறுதுணை. தத்தம் வலக்கையை நெஞ்சின் மேல் வைத்துக் கொண்டு இவைகளைப் பயிலுதல் மிகுநலம் விளைக்கும். நல்லன நாளும் நிலைபெற உடனே தொடர்க! உயர் நலம் உறுக! எனத் தூண்டுகிறது" செம்பொருள் மந்திரச் சொற்கள்" (5:7).*

*ஈரோட்டுக் குறளாயக் கிளையின் சார்பில் தொடர்ந்து 'நிலவுக் கூட்டங்கள்' நிகழ்ந்தன. அதன் ஐந்தாம் வட்டத்தின் போது (5:7)*

*குறளாய அன்பர்கள் அவரவர் வாழும் ஊர்களில் ஒருங் கிணைய ஒருவழி - முழு நிலவு நாள் என்னும் குறிப்புத் தரப்பட்டது.*

*கிளையினர் கூடிப் பழக முழு நிலா நாளே முற்றும் பொருந்தும் எனத் தூண்டியது (5:7).*

*குறளியச் சாலையே நம் வழி; குறளியச் சோலையே நம் தங்கல்; குறளிய மாளிகையே நம் உறையுள்; குறளிய அரசே நம் அரசு; குறளிய மறையே நம்மறை எனக் கொண்டு உண்ணும் போதும் உறங்கும் போதும் எண்ணும் போதும் எழுதும் போதும் எப்போதும் எப்பணியில் நின்றாலும் குறளியத்திலேயே அழுந்திக் குறளாயத்தை உருவாக்கி நம் பொருளாம் செம்பொருளும் அதுவே என்னும் மெய்யுணர்வு கொண்ட வேலாவுக்கு அவ்வப் போது, குறளியக் குறளாயக் கருத்துப் பொருள் வகையால் உண்டாகிய உள் வெதுப்பல்கள் மிகப்பல. உண்டாகிய உள் வெதுப்பல்கள் மிகப்பல. உண்டாகிய கழிவிரக்கங்களும் மிகப்பல என்னே இம்மக்கள் நிலை! என்னே இம்மக்கள் அடிமை நிலை! என்னே இவ்வறிவாளர் சிந்தனை! என்னே என்னே இவ்வாட்சி யாளர் போக்கு! என்னே இவ்வாய்வாளர் நோக்கு! என்றெல்லாம்*

இரங்கவும் வைத்துள்ளன. அவ்வப் போது அவை ஆசிரிய உரையாய் வெளிப்பட்டன. அவற்றுள் ஒன்று, "சொல்வதைச் செய்வோம் வாருர்" என்பது (5:8)

"திருக்குறள் கருத்துகள் அனைத்தும் ஏற்று நடக்க இயலாது" என்கிறார் ஒரு தமிழ்ப் பாவலர்.

"புலால் மறுப்பும் கொல்லாமையும் துறவிகளுக்கே உரியன" எனறு கூறுவதுடன்,

"கள்ளுண்ணாமை காலத்திற்கு ஏற்ற தன்று." என்று கடித்தும் குடித்தும் களிக்கிறார் ஒரு புலவர்.

"திருக்குறள் பெயரால் மக்கட்குத் திட்டங்கள் தீட்டி வறுமை

ஒழிப்புப் புரட்சி செய்வோம்."

என்கிறார் ஒரு சிந்தனையாளர்.

"திருக்குறளை வைத்துச் சமுதாயம் என்பதெல்லாம் வேடிக்கை என்பாரும் வீண் விழைவு என்பாரும் கவைக்குதவாது" என்பாருமாகத் தம் சொல்லம்புகளை விடுத்த வண்ணமுள்ளனர்.

குறளியம் உயிர்ப்புற திருக்குறள் புரட்சிகளை எல்லாம் வடித்துத் தந்த அறிஞர்களோ ஏட்டளவோடு மௌனமாகி யுள்ளனர்.

இந்த நிலையில் ஈரோட்டுத் திண்ணையில் இருந்து குறளியம் - குறளாயம் என எழும் முணகல் ஒலிகளைத் தம் சமய வெறிகளாலும் ஆளுமைகளாலும் அமிழ்த்திவிடச் சிலர் முயல் கிறார்கள். இவற்றை எல்லாம் என்னென்பது? அண்மைக்கால அரை நூற்றாண்டு முயற்சிகள் எழுச்சியை விளைக்க முடிய வில்லை என்றாலும்; விழிப்பை விளைத்த வரலாறுகளை யாரால் மறுக்க முடியும்?

விழித்த கண்விழிப்பு வீணாகி விட்டதோ எனக் கணக்கிடும் நிலைவந்துள்ளது. ஏற்பட்ட புரட்சிகள் பூசனை - பொய்ம்மை - ஒப்பனைப் புழுதிகளில் புரண்டு கொண்டுள்ளன. ஏன் இந்நிலை? அறிவு என்பதே நன்றின்பால் உய்க்கவும், மெய்ப்பொருள் காணவும், செம்பொருள் உணரவும் என்பதை விடுத்து மெய்யுணர்வை நகைப்பிற்கு உள்ளாக்க முற்பட்டனர் சிலர்.

விளைவு, வீழ்ச்சியைத் தழுவ நேர்ந்துளது. இத்தகு நிலையில் மீட்சியடைய ஒரே வழி திருக்குறள்தான்...

நாம் இனி, இறுதி முயற்சி ஒன்றை எடுத்துவிட அணியமாக வேண்டும். வீழ்ந்தாலும் சரி! வாழ்ந்தாலும் சரி! வெற்றி தோல்வி களை எண்ணிச் செயல்படக் கூடாது. நம் வினைத் திட்பங் களுக்கு மனத்திட்பமே வழி. நாம் சில முடிவுகளுக்கு வந்து விட வேண்டும். குழப்பங்களே கூடாது. இந்த அடிப்படையில் நம்முடன் சேர்த்துப் பத்துப்பேர் அமைந்தாலே போதும். திருக்குறளுக்காக வாழ - நடக்க - காட்டாக விளங்க - பத்துப் பேர். அந்தப் பத்துப் பேரை நம்பிப் பல கோடிப்பேர், சொல்லும் செயலும் ஒன்றாயிருக்கும் உள்ளமுடையோரை எம் உயிரோடு இணைய அழைக்கிறோம். நாம் கண்டுணர்ந்த நெறிகளை நீங்களும் கைகொள்ள அழைக்கிறோம்.

குறளியத்தின்பணி இனி இனி, "சொன்னதைச் செய்வோம்; சொல்வதைச் செய்வோம்" என்பதே. ஆம்! திருக்குறள் சொல் வதைச் செய்வதே குறளாயம்

என நிறைக்கிறார்.

20-1-85 இல் புதுவைக் குறளாயத் தொடக்க விழா நிகழ்ந்தது.

10-3-85 இல் தமிழகத் தலைநகரில் குறளாயக் கிளை கிளர்ந்தது.

28-4-85 இல் நெல்லை மாவட்டக் குறளாயக் கிளையும்,

கோவை மாவட்டக் குறளாயக் கிளையும் தோன்றின.

12-5-85 இல் குறளாயச் செயல் வீரர் 4ஆம் மாநிலக் கூட்டம் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ந்தது.

23-6-85 இல் பொள்ளாச்சி குறளாயக் கிளை பூத்தது. இவ்வாறே மாவட்டக் கிளைகளும் நகரக் கிளைகளும் ஆங்காங்குத் தோன்றின.

குறளாயத் திருமணங்களும் நிகழத் தொடங்கின. வேலாவின் திருமகளார் திருமணம் குறளாய நெறியிலேயே நிகழ்ந்தது.

24-5-85 இல் ஈரோட்டில் நிர்மலா - சௌந்திரராசன். 'மஞ்சுளா- இரவிக்குமார்'

திருமணங்கள் குறளயாத்திருமணங்களாகத் திகழ்ந்தன.

18-8-85 இல் குழித்தலையில் இராசகுமார் - மாலதி திருமணமும்,

28-8-85 இல் கோவையில் இராசகாந்தம் - இராசேந்திரன் திருமணமும் குறளாய மணங்களாக நிகழ்ந்தன.

குறளாயத் திருமணம் நிகழ்முறை (6:2) மணமக்கள் சொல்லவேண்டிய மங்கலக் குறள்கள் ஆகியவை 1-9-85 இதழில் இடம்பெற்றன:

திருமணமுறை : மணமக்கள் அவையில் வீற்றிருக்க, விழாவிற்கு வந்துள்ள முதிர்ந்தவரும் பண்பாளருமான ஒருவர் மணவிழாவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். குடும்பத்துப் பெரியவர்களை வணங்கிப் பின் தாய்நாட்டு மண், தெய்வப் புலவர், திருக்குறள் மறை ஆகியவற்றை மணமக்கள் வணங்கிமேடைக்கு வரவேண்டும். குறளாயச் செம்பொருள் நுகர்வு செய்தலும், உறுதிமொழிகள் பத்தையும் அனைவரும் ஒருமிக்கக் கூறச்செய்தலும் வேண்டும். பின்னர், மணமக்கள் இருவரும் இணைந்து 10 குறள்களை விழாத் தலைவர் சொல்லச் சொல்லப் பின் தொடர்ந்து சொல்லி அவையினர் முன் வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழிகளைப் படித்துக் கையொப்பமிட்டு மாலை மாற்றிக் கொள்வர். உறுதிமொழி இதழில், அவையிலுள்ள பதின்மர் மணமக்களின் பெற்றோர் உட்படச் சான்றொப்பம் வழங்கி மணவிழாவை இனிது முடிப்பர்'' மங்கலக் குறள்கள் : வாழ்க்கை : அன்பும் அறனும், அறனெனப்பட்டதே, ஆற்றின் ஒழுக்கி, வையத்துள் வாழ்வாங்கு; துணை : மனைத் தக்க, பெண்ணிற்பெருந்தக்க; தற்காத்து. நலம் : பெறுமவற்றுள், குழல் இனிது, மங்கலம் என்ப.

திருமண முறை வகுத்த குறளாயம் 'குறளாய இல்லற இணைப்பகமும் நிறுவியது.' (6:10)

22-1-88 ஆம் நாள் சென்னையில் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்கள் திருமகளார் பூங்கொடி திருமணம் நிகழ்ந்தது. மேதகு கலைஞர் கலந்து கொண்ட விழா அது. குறளாய முறைப்படி வேலா அவர்கள் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்தார்கள். அம்முறையை வியந்து பாராட்டிப் பேசினார் கலைஞர். வேலா தம் உரையிலே கலைஞர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்தைத் தம் ஆளுகைக்குள் கொண்டு குறளியப் பணி யாற்றும் காலம் வரத்தான் போகிறது. அதற்கு முதற்படியாம்

பணிகளைத் தமிழுணர்வாளர் செய்தல் வேண்டும். என்றார். அச்சொல் வெல்லுஞ் சொல்லானது வரலாறு ஆயிற்று.

27-9-85 இல் வேலாவின் பேரன், திரு. சக்தி வேல் - பூங்கொடி செல்வமகன் பெயர் சூட்டுவிழா குறளாய நெறியில் செம்பொருள் நுகர்வுடன் நிகழ்ந்தது. வேல் அரசு என்னும் பெயர் சூட்டப் பெற்றது.

குறளியம் வளர்க்கத் திருக்குறள் இசைப்பாடல் போட்டி நடத்தியது குறளாயம். புனைகதைப் போட்டியும் நடத்தியது; குறளியம் குறளாயப் பணிகளுக்குத் தொண்டுள்ளத்தோடு தம்மை ஈகம் செய்ய வல்லாரைத் தேடியது; தேடிக் கொண்டும் உள்ளது.

திருக்குறள் ஒலியிழையையும், திருக்குறள் கையெழுத்துப் பதிப்பையும், திருவள்ளுவர் படத்தையும், குறளாயக் கொடியையும், மார்பொட்டியையும், பரப்பும் பரப்பகமாகவும் குறளாயம் பணியாற்றியது; அது வழங்கிய துண்டு அறிக்கைகளும் வெளியீடு களும் எண்ணற்றவை. கன்னிமுதல் சென்னைவரை மிதிவண்டி உலா நிகழவும் உதவியது (7:6:5). இவை குறளாயம் செய்தவை எனின் வேலா தாமே செய்தார் என்பது மெய்மைதானே!

குறளாயத்தின் மரபில் நீத்தார் கடன் முறை செய்தலும் (6:8) வரையறுக்கப்பட்டது.

உயிர் நீத்த உடலை உடன் தூய்மை செய்து உரிய உடை களை அணிவித்தல். நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் அருகில் அமைதியாக நின்று குறளாய முறைப்படி செம்பொருள் நுகர்வு நிகழ்த்துதல். பின், நில்லாதவற்றை, நாள் என, நெருநல், ஒரு பொழுதும், குடம்பை, பொருளல்லவற்றை, எப்பொருள் எத்தன்மைத்து, பிறப்பென்னும், வேண்டுங்கால், ஆரா இயற்கை என்னும் குறட்பாக்களை ஓதுதல். இம்முறையைத் தேவைக் கேற்பச் சில தடவை செய்யலாம். உயிர் பிரிந்த பத்துமணி நேரத்திற்குள் பகற்பொழுதில் நன்காடு கொண்டு சேர்த்து மண்ணீடு செய்தல் வேண்டும்.

இந்நீத்தார் கடன், முதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் க்குக் குறளாயச் சார்பில் திருக்குறள் முற்றோதலாக நிகழ்த்தப் பட்டமை நினைவில் முகிழ்க்கின்றது. பெரும்புலவர் மீ. த.வும், பாவலர் ஈவப்பரும் அக்கடனேற்றனர்.

*16-2-86 - இல் குறளாய நடைமுறைக் கூட்டம் நிகழ்ந்தது. குறளாயச் செயற்பாடுகளை முடுக்கி விடுதற்காகக் குறளாயத் தலைமைக் குழுவினராக மூவரையும் குழுவினராக ஒன்பதின் மரையும் மூன்றாண்டு கட்குத் தெரிந்தெடுத்ததைத் தலைமை அமைப்பாளர் வேலா அறிவித்தார்.*

*தலைமைக் குழுவினர் மூவர் :*

*வேலா. அரசமாணிக்கனார்*

*பெரும் புலவர் முஇ. தங்கவேலனார்*

*பேரா. உ. பாலசுப்பிரமணியனார்*

*என்பார். குறளியம், குறளாயம் ஆகிய இரண்டிலும் பின்னிரு வரும் முன்னரே இணைந்து ஆற்றிய தொண்டு பெரிது.*

*“குறளாய நெறிமுறைகளை வகுக்க சிந்திக்க நெறிப்படுத்த நாளும் உடனிருந்து எம்மை ஆட்படுத்திய பெருமை பெரியவர் பட்டுக் கோட்டை திரு. மீ. தங்கவேலனாரைச் சாரும்” என்றும், குறளாயச் செயற்பாடுகளை வகுத்து வழிப்படுத்தும் பணியில் எம்மை விரைவாக நடத்திச் செல்ல முன்வந்து அழைத்துச் செல்பவர் சிதம்பரம் பேராசிரியர் திரு. உ. பா. அவர்கள்” என்றும் இவர்களை வேலா பாராட்டுகிறார் (6:8).*

*“திருக்குறள் ஒன்றிற்காகேவே இனிவாழ்வேன் என்ற உறுதிபூண்ட வெள்ளுடையாளர் ஒருவர் திடுமெனக் குறளிய அலுவலகம் வந்து நின்றார். ஓய்வு பெறும், பெற்ற உறுதியால் இளநகையுடன் ஆழ்ந்த சிந்தனைகளைப் பரப்பும் ஒளிமிகு கண்களுடன் மூவாண்டுகளுக்கு முன் (1982) அடி மேல் அடிவைத்து நடக்கும் மெல்லிய இயல்பாளராக எம்முன் சிவப்பழமாக வந்தமர்ந்தார் திரு. தங்கவேலனார். குறளியம் அவரால் பாலூட்டப் பெற்றது; தாலாட்டப் பெற்றது; நடை பயிற்றப் பெற்றது; மொத்தத்தில் தாயாகி வளர்த்தார். வளர்த்துக் கொண்டுள்ளார்” எனப் பாராட்டுகிறார் குறளிய - குறளாய நிறுவனர்.*

*ஆறாம் ஆண்டு முதல் இதழைத் தங்கவேலனார்க்குப் படைத்து உருகுகிறார் வேலா. எப்படி?”*

*“நாம் எம்மையே இன்று சுற்றிச் சுற்றித் திரும்பிப் பார்க் கிறோம். நகைப்பும் வியப்பும் தோன்றுகின்றன.”*

மேற்கொண்ட கொள்கையால் தனிமையும் அமைதியும் தவழும் நிலை நமக்குப் பிறந்துள்ளது கடந்த ஐந்து ஆண்டுக் குறளியப் பணிகள் ஈந்துள்ள இன்றைய நிலை இதுதான்.

"திருக்குறள் நம்மறை - நெறி; குறளாயம் அமைப்போம் என்ற சொற்றொடர்கள் மேடையில் பேசப்படும்போது ஏற்றுப் பாராட்டிய நெஞ்சங்கள், அவற்றை எழுத்திலும் எண்ணத்திலும் ஏற்க வேண்டும் என்ற குரல் எழுப்பியபோது விருப்பமின்றி நோக்கும் பார்வைச் சூட்டிற்கு ஆளானோம். ஏன்? மதிப்பின் மைக்கும் ஆட்பட்டோம்.

"இருபது ஆண்டுகளுக்கு முன் சொல்லியிருந்தால் இதை வலுவாக்கியிருக்கலாம் என்பது ஒரு திருக்குறள் களஞ்சியத்தின் கூற்று. ஆடி ஓயட்டும் என்பது அம்மாமிக் குமுகாயம் வளர்க்கும் நம் சிந்தனையாளர் ஒருவர் தம்போக்கு. நடப்பது நடக்கட்டும் நாலிலும் இருப்போம் எனும் பெரியோர் வாழும் இந்நாட்டில் அரிதும் பெரிதுமான ஒரு வயிரக் கட்டிபோன்றிலங்கும் பட்டு கோட்டைப் பெரும் புலவர் . தங்கவேலனார் அவர்கட்கு இவ் வாறாம் ஆண்டு முதல் இதழைப் படையல் செய்து மகிழ்கிறோம்; என்பது அது.

பேரா. உ. பா. தொடர்பு, குறளியம் - குறளாயங்களுக்கு வாய்த்தது மட்டுமோ? குறளாயம் தோற்றுவித்த மழலையர் பள்ளித் தாளாளர் பொறுப்பையும் ஏற்றது! தமிழ் மாணிக்கத்தின் உறவைக் குறளாயத்தில் நிலை பெறுத்தவும் ஏந்தாயிற்று.

குறளாயத் தலைமைக் குழு எத்தகைய தகவார்ந்தது என்பதைக் குறிக்கவே இவை கூறப் பட்டனவாம்.

1986 மே 23, 24, 25 - ஆம் நாள்களில், வேலா நிலையத் திறப்பு விழா, நிலவுக் கூட்டம், திருக்குறள் முற்றோதல், தலைமை ஆட்சி - செயற் குழுக் கூட்டம், குறளிய மழலையர் பள்ளித் துவக்க விழா ஆகியன நனிசிறப்பாக நிகழ்ந்தன.

வேலா நிலையத்தைத் திருமலி வேலா சந்திரா அம்மையார் குறளாய முறைப்படி தம் திருக்கையால் திறந்து வைத்தார். புதுவை திரு.வை. வேலாயுதனார் குறளாயக் கொடி ஏற்றினார். திரு. மீ. தங்கவேலனார் செம்பொருள் நுகர்வில் திளைப்பித்தார். குறளாய அமைப்பாளர் வேலா வரவேற்புரைத்தார். திருக்குறளார் முற்றோ தலைத் தொடங்கினார். புலவர் இளங்குமரன், பேரா. வளனரசு ஆகியோர் நிலாப் பொழிவு செய்தனர்.

பாவலர் முருகு சுந்தரம் மழலையர் பள்ளியைத் தொடங்கி வைத்தார். ஈரோடு நகர் மன்றத் தலைவர் திரு. செ. அரங்கராசனர் வாழ்த்துரைத்தார். திரு.கு.ச. ஆனந்தனார் கலந்துரையாடலைத் தொடங்கி வைத்தார். முப்பெருநாள் முழுமை விழாவாகத் திகழ்ந்து குறளாயச் சீர்மையை அறியச் செய்தது. நாடு தழுவிய அளவில் பேராளர்களும் பெருமக்களும் கலந்து கொண்டு, சான்றோர்கள் ஒருமித்துக் கூடி விழா வெடுத்தால் அஃது எப்படி இருக்கும் என்பதனை வெளிப்படுத்திக் களிப்பூட்டியது.

திருக்குறள் உணர்வு பெறத் தமிழ்ப் பெயர் மாற்றம் வேண்டும் எனக் குறளாயம் ஓர் அறிவிப்பு விடுத்து (8:3).

"பிறமொழிப் பெயருடைய குறளாயப் புரவலர்கள் அறங் காவலர்கள் ஆகியோர் தமிழகம் முழுதும் நன்கு அறிமுகமான வர்கள். ஆதலின், அவர் தம் பெயர்களைக் குறளாயம் சிறப்புப் பெயர்களால் அல்லது முன்னெழுத்தைச் சுட்டுதலால் மட்டுமே வழங்கும். எனினும் அவர்களும் தம் பெயர்களைத் தமிழாக மாற்றிக் கொள்வதைக் குறளாயம் பெரிதும் வரவேற்கிறது. பிறமொழி இனத்தவராயினும் அவர்க்கும் திருக்குறள் பெயர்களே ஆயத்தில் இணையுங்கால் சூட்டப் பெறும்" என அறிக்கை குறிப்பிடுகின்றது. அவ்வறிக்கையின் கீழேயே பெயர் மாற்றம் செய்தோர் பட்டியலை வைக்கின்றது குறளாயம்.

வேலா ராசமாணிக்கம் - வேலா அரசமாணிக்கம்

உ. பாலசுப்பிரமணியம்- பேரா. முருகு (உ பா)

சி. தட்சிணாமூர்த்தி - தென்முக நம்பி

வே. கோதண்டராமன் - குறளேந்தி

"சொன்னதைச் செய்வோம்! சொல்வதைச் செய்வோம்."

என்று ஆசிரிய உரை எழுதியவர் அல்லரோ வேலா. அதனால் அவரே முந்து நின்றார்!

குறளாயத்தார்க்கு ஒருநிலை ஒழுங்கு வேண்டும் என்பதை வேலா திட்டப்படுத்துகிறார். அவை இவை:

1. குறளாயத்தைச் சார்ந்தவர் என எளிதில் அறியும் பொருட்டு எப்போதும் இலச்சினையைச் சட்டையில் அணிந்திருக்க வேண்டும்.

2. குறளாயத்தார் இல்லங்களின் முகப்பில் திருக்குறள் நம்மறை - நெறி என்ற தொடர் அமைந்த பலகை வைத்தல் வேண்டும்.

3. குறளாயத்தார் இல்லங்களில் திருக்குறள் நாளும் ஓதிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

4. குறளாயத்தார் இல்லந்தோறும் குறளியம் இதழ் வாங்க வேண்டும்.

5. குறளாயத்தார் ஒன்று சேர்ந்து மகிழும் திருநாள் முழுநிலவு நாளே ஆகும். (9:9).

"குறளாயத்தில் இணைய வாரீர்" என

வேண்டுகை விடுகிறார் வேலா (1033).

"சமயங்களின் நிலையாமைக் கொள்கை வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்கவில்லை."

கோனாட்சி அணுகிப் பார்த்தது முடியவில்லை.

குடியாட்சி தோன்றிற்று; கூடவே முதலாளியம் முகிழ்த்தது. உள்ளவர் சிலர் இல்லவர் பலர் ஆக உருவாக்கினர்.

பொதுவுடைமை மலர்ந்தது. கூடவே தனி மாந்த ஊக்கம் ஆர்வ வளர்ச்சி அறவுணர்ச்சி தனித்தன்மைகள் நீங்கின. பொறி வாழ்க்கை உருளத் தொடங்கிற்று.

குடியரசுக் கூட்டுடைமை மாற்று வழியாகத் தரப்பட்டது. விளைவு பொருளாதார இனச் சமன்பாட்டை மக்கள் முழுமையாகப் பெறவில்லை.

சர்வோதயம் பிறந்தது; நடைமுறைக்குப் பொருந்தவில்லை. அரசுப் பின்னணியின்றி அதுவும் வாழ இயலவில்லை. எனவே சரியான வழி எது?

குறளாயம் - குறளாயம் - குறளாயம் - இது காலத்தின் கட்டாயம்.

**குறளாயம் :**

ஒரு சாதி அன்று.

ஒரு சமயம் அன்று.

நிறம் அன்று.

அஃதொரு சமுதாய இயக்கம்!

அன்பால் அருளால் இணைந்து இயங்கும் ஓர் அறிவியக்கம்.

அது பண்பைப் பயில்விக்கும் ஒரு பள்ளி.

அது மெய்யுணர்த்தும் ஒரு கல்லூரி அது பல்துறை சிறந்த ஒரு பல்கலைக் கழகம்.

அதுவே முழுமையான வாழ்வியலைக் கூட்டும் வளமனை.

அவ்வளமனையியல் அனைவரும் தோளோடு தோள் இணைந்து வாழ்வோம் வாரீர்!"

என அழைக்கிறார். மனிதர்காள் இங்கே வம்; கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ என அழைத்த அப்பரடிகள் அழைப்புப் போல்வது இது! தாம் பெற்ற பேறு உலகும் பெற வேண்டும் என்னும் உயரமைழப்பு இது! உணர்ச்சி வாயிலாக உணர்வோர் வலித்தே!

16-8-86, 17-8-86 ஆகிய நாள்களில் தலை நகரில் மறைமலையடிகள் நூலகத்து வள்ளலார் மாளிகையில் குறளாய, குறளிய விழாக்கள் நிகழ்ந்தன. கருத்தரங்கம், ஆவ்ரங்கம், பாட்டரங்கம் என்பவை நடைபெற்றன. அதன் வரவேற்புரையாற்றிய வேலா, மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் என்னும் இந்த ஒருகுறளை வாழ்வில் மேற்கொள்வோமே. அதிலே நிற்போம்; அதையே சொல்வோம்; அதையே வாழ் வாக்குவோம். ஆதிபகவன் யார்? என்பது போன்ற முடிவற்ற கருத்துக்களில் நாட்டம் செலுத்திச் செலுத்தி 2000 ஆண்டுக் காலத்தை வீணடித்தோம். வள்ளுவர் எச்சாதி? எச்சமயம்? மூடநம்பிக்கை அற்றவரா? உள்வரா? மேலுலகம் கீழுலகம் உண்டா? இவற்றிலேயே காலத்தைக் கழிப்பதனால் என்ன பயன்? இவை எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளுங்கள். இவற்றைச் சிந்திக்காதீர்கள். திருக்குறள் புகழ் பாடிவிட்டு வேறு வேள்வியிலும் பசனையிலும் கூடுகிறோம். அதன் விளைவால் அன்றோ திருக்குறளை நடை முறைப்படுத்தாமல் விட்டோம். இனியாவது திருக்குறளைச் செயற்படுத்துவோம். திருக்குறளை ஓதியே எவ்வினையும் கொள்ளுவோம். அதிலேயே வாழ்வோம்; அதிலேயே மறைவோம்! இதற்கு மேலே வேறு வேண்டுமா?" என்றார்.

*விழாவில் பா. சு. அரியபுத்திரனார், வ.சுப. மாணிக்கனார், கல்லை தே. கண்ணன், இரா. இளங்குமரன், குமர நடவரச ஈவப்பனார், பொ. ஐயனாரப்பன், வண்ணப்பூங்கா வாசன், அரு கோபாலன், மூர்த்தி, மு. தங்க வேலனார், அண்ணாமலை அடிகள், ஈழவேந்தன்ஒ, இரா. முத்துக்குமாரசாமி, வான்மதி, உ. பாலசுப்பிரமணியம், மா. சு. சம்பந்தன், பெருங்கவிக்கோ, செயசீலன், முததமிழ்க்காவலர், த. கோவேந்தன், அவ்வை நடராசனார், வை. வேலாயுதம், படை மேல்நர் சாமிநாதன், வ. வேம்பையன், வீ. செ. கந்தசாமி ஆகியோர் பங்கு கொண்டனர்.*

*“திருக்குறள் நம்மறை என்று ஒருவன் ஒத்துக் கொள்ளா தவன் ஆயின், அன்றே திருவள்ளுவர் சொன்னது போல் பிறப்பின் கண் ஐயப்படும் என்று எண்ணுங்கள். ஒவ்வொரு வனுடைய வாழ்க்கையை உயர்த்தும் நோக்கத்தில் குறளைப் பார்க்க வேண்டும் என்பதால் அது என்மறை ஆகிறது” என்று தம் பொழிவில் குறிப்பிட்டார் வ.சுப. மா. (7:2)*

*“வேலா இராசமாணிக்கம், நல்ல குறள் தொண்டர், உணர்வுமிக்க தொண்டர், செயல் வீரர், திருக்குறளுக்கு என்று ஓர் அமைப்பும் ஓர் இதழும் கண்ட முதல் தமிழர் அவர். அவருக்கு நாமெல்லாம் துணை நிற்க வேண்டும்” என்றார் முத்தமிழ்க் காவலர் (7:2)*

*12-7-77 இல் மதுரைமாநகரில் வேலா தலைமையில் குறளாய மாநாடு நிகழ்ந்தது. அதில் முத்தமிழ்க்காவலர், மூதறிஞர் வ.சு.ப.மா வழக்கறிஞர் கே. மீனாட்சி சுந்தரனார், வானொலி நிலைய இயக்குநர் விசய திருவேங்கடம், திருக்குறள் பெருமாள், திரு. இளங்கோ பாண்டியன், பதின்கவனகர் கனக சுப்புரத்தினம், வே. அறிவுடை நம்பி ஆகியோரும் திரு. மீ.த.. திரு. உ..பா. திரு. இளங்குமரன் ஆகிய குறளாயக் குழுவினரும் கலந்து கொண்டனர்.*

*11-10-87 இல் கோவை மாநகரில் குறளாய மாநாடு நடை பெற்றது. வேலா தலைமை ஏற்றார். முனைவர் கா. மீனாட்சி சுந்தரனார், பெருங்கவிக்கோ வா.மு.சே., அரு. கோபலன், ந. ஆறுச்சாமி, புலவர் வடிவேலன், மூதறிஞர் வ.சுப.மா., பதின்கவனகர் கனகசுப்புரத்தினம், கு.வெ.கி. ஆசான். புலவர் இளங்குமரன்; புலவர் மீ.த. பேரா உ.பா. ஆகியோர் கலந்து கொண்டனர்.*

10-9-89 இல் சென்னை மாவட்டக் குறளாய மாநாடு வேலா தலைமையில் நிகழ்ந்தது. பாவலர் ஈவப்பனார், இசை இறையார், சே. கந்தப்பனார், மா. வழித்துணையார். திருவாளர்கள் கா. பொ. இரத்தினம், பாவலர் சுரதா, கு. இரகுபதி, வீ. செ. கந்தசாமி, தமிழப்பன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

10-9-89 மாலையில் சென்னை மாவட்டக் குறளாய மாநாடு, தமிழ்வழிக் கல்வி இயக்கச் செயற்பாட்டுக் கருத்தரங்காக நிகழ்ந்தது. கிழ்வுக்கு முத்தமிழக் காவலர் தலைமை ஏற்றார். திருவாளர்கள் வா.மு. சேதுராமன் இறையன், அரணமுறுவல், பொற்கோ, இளங்குமரன், மெய்யப்பன், ஈவப்பனார், ஆதி அறிவுடை நம்பி ஆகியோர் பங்கு கொண்டனர். வேலா அவர்கள் தீர்மானங்களை முன்மொழிந்து விளக்கினார்.

திருக்குறள் நம்மறை என்பதைத் தேர்ந்த புலமையரும் ஏற்கத் தயங்குதலும் மயங்குதலும் கண் கூடு. மறை என்ற அளவில் அவர்களுக்குத் தோன்றுவது வேதம் என்பதே! மற்றொன்று பொதுமறை, உலகமறை, தமிழ்மறை எனப்படுவதை நம்மறை என்பதா? என்பது! இதனால் நம்மறை என்பதற்குரிய கரணியத்தை மேடைதோறும் வைத்து விளக்கு தலைக் கடனாகக் கொண்டார் வேலா. பிறர்பிறர் கூறும் விளக்கங்களையும் தகவாக ஏற்றுப் போற்றினார். தொடர் கட்டுரையாகத் "திருக்குறள் நம்மறை" என ஆசிரிய உரையும் எழுதினார்.

வேலாவின் குறளிய குறளாயப் பணிக்கு அளவு கோல் உண்டா? ஒன்றைச் சுட்டுதல் சாலும்!

வேலா அறுவைப் பண்டுவத்திற்கு ஆட்பட்டு மருத்துவ மனையிலும், ஓய்வுத் தங்கலிலும் பல திங்கள் இருக்கும் இக்கட்டு உண்டானதை உணர்வோம்; அறிவோம். அவ்வேளை எத்தகைய வேளை! அவ்வேளையிலும் அவர்தம் ஆசிரிய உரை அறுவை செய்த அத்திங்களிலும் கூட காலம் தாழ்ந்து கூட - வரவில்லை! எவரெவர் கட்டுரை வழக்கமாக இடம்பெறுமோ அவை வருவதற்கு முன்னாகவே வந்தமைந்தது, வேலாவின் உயிர்ப்பே குறளியம் குறளாயம் என்பதை நிலைநாட்டும். வேலாவுக்குக் குறளே அமுது! குறளே மருந்து! குறளே விருந்து! இஃது இயற்கை யாகி விட்ட நிலை! இந்நிலையும் ஓராண்டு ஈராண்டு நிலையில்லை. ஆதலால், அதுவே நடைமுறை வாழ்வாகி விட்டதாம்.

**“குறளாயக் கொள்கை விளக்கம்” - வருமாறு**

*குறளாயத்தின் ஒரே தலைவர் தெய்வப் புலவர். திருக்குறள் வழி நாம் நடப்போம். உலகு நம் வழி நடக்கும்.*

திருக்குறள் நம்மறை - நெறி.

திருக்குறளைக் கற்றவன் மாந்தன் ஆவான்.
திருக்குறளை அறிந்தவன் அறிஞன் ஆவான்.
திருக்குறளின்படி நடப்பவனோ தெய்வம் ஆவான்.
திருக்குறளே நம்மறை - நெறி.

செந்தமிழே நம்தாய்!
திருக்குறளே நம்மறை!
நந்தா ஒழுக்கமே நம்படை!
தாழ்வு போக்கிடும் குறளாயம்!
தடைகள் நீக்கிடும் குறளாயம்!
வாழ்வு சேர்த்திடும் குறளாயம்!
மானம் காத்திடும் குறளாயம்!

தமிழ்நாட்டு மக்கள் தமிழராக வாழ
உலகினர் நல்ல மாந்தராகத் திகழ
திருக்குறள் நெறி ஒன்றே வழி!

முப்பால் வழியில் தப்பாது ஒழுகின்
இப்பார் புகழ நிற்பான் தமிழன்!

வையகம் தனக்கே ஒரு மறையாம்
வள்ளுவர்தந்த திருமறையாம்!

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
திருக்குறள் எங்கள் வாழ்க்கையின் வேர்!

குறள் நெறிவிட்டால் வாழ்வில்லை!
குறள் நெறி நின்றால், தாழ்வில்லை!

குறளியம் கொள்வோம்!
குறளாயம் காண்போம்!

*செம்பொருள் நுகர்வுக்குரிய திருக்குறள் மந்திரச் சொற்றொடர்கள் நான்கு:*

*1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*

*2. நன்றின்பால் உய்ப்பது அறிவு*

*3. ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்*

4. அறன் எனப்பட்டதே இல்வாழ்கை

இறைவழிபாடு, பிறந்தநாள், பெயர் சூட்டல், காதுகுத்து, பூப்பு நீராட்டு, திருமணம், புதுமனை புகுதல், இறந்தார் கடன் முதலிய அனைத்தும் திருக்குறள் வழிச்செய்தலே சாலச் சிறப்பு.

## நல்லாட்சி நாட்டில் நிலவக் குறளாயம் வழங்கும் பத்துக் கட்டளைகள்

1. குடியரசு - குடும்ப அரசு ஆகக் கூடாது. நல்லவர்களும் வல்லவர்களும் நாட்டின் பல திக்குகளில் இருந்தும் பல குடும்பங்களில் இருந்தும் ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டும். கட்சித் தலைமையாக ஆளுவோரின் மக்கள், மாப்பிள்ளை, மருமகன், மனைவி, மனைவிப் போலி, நெருங்கிய உறவினர்கள் தொடர்ந்து ஆட்சித் தலைமையில் ஏறும் பரம்பரை ஆட்சி சட்டத்தால் தடுக்கப்பட வேண்டும்.

2. சான்றோர் வழிச் சமுதாயமும் ஆட்சியும் அமைய, கட்டுப்பாடுகளுடைய வேட்பாளர் தேர்வுமுறை வேண்டும். (ஒழுக்கம், ஆன்ற குடிப்பெருமை, கல்வி, ஒரு நல்ல குடும்பம், நாட்டின் பண்பாடு, மதுக்குடி இன்மை, செல்வ நிலை முதலியவை பேணப்படல் வேண்டும்)

3. நாட்டில் 2 (அ) 3 கட்சிகளுக்குமேல் இருக்கக் கூடாது.

4. தேர்தல் செலவுகளை அரசே ஏற்கவேண்டும்.

5. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் உடல்நல முள்ளவராய் 40 அகவைக்கு மேலும் 65 அகவைக்கு உட்பட்டும் இருக்க வேண்டும்.

6. தலைமை ஆட்சியில் இருந்து ஓய்வு பெற்ற வர்களும் சான்றோர்களும் பல்கலை அறிஞர்களும் கூடிய பதின்மர் கொண்ட அவை ஒன்று தலைமை ஆட்சி யாளருக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட வேண்டும்.

7. கையூட்டுப் பெறும் ஆட்சியாளர்களையும் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களையும் கடும் தண்டனைக்கு உரியவர்கள் ஆக்க வேண்டும்.

8. குடியரசு நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெறும் எந்த ஒரு பதவியிலும் ஒருவர் இரண்டு முறைக்குமேல் இருக்கக் கூடாது. என முறைப்படுத்தப்பட வேண்டும்.

9. செல்வக் குவிப்புக்கு மேல் மட்டம் குறிப்பிடப்பட்டு அவ்வப்போது ஆய்வுக்குட்பட வேண்டும். செல்வக் குவியலைத் தடுக்க வேண்டும்.

10. நாட்டில் 18 அகவை வந்த அனைவருக்கும் ஒளிப் படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். அதில் அவர்கள் சொத்து விவரமும் குறிப் பிடப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

**குறளியம் : 8.9.23.**

## குறளாய ஆட்சிக் குழுவினர்

| | |
|---|---|
| குறளாயத்தின் ஒரே தலைவர் | - தெய்வப்புலவர் திருவள்ளுவர் |
| குறளாயப் புரவலர் | - முத்தமிழ்க் காவலர் |
| குறளாயத் தலைமை அமைப்பாளர் | - வேலா |
| இணை அமைப்பாளர் | - இரா. இளங்குமரன் |
| குறளாயப் பொதுச் செயலர் | - மு. தங்கவேலனார் |
| ஆட்சிக்குழு உறுப்பினர் | - பெருங்கவிக்கோ<br>கு. இரகுபதி<br>க. கனகராசா<br>குமர நடவரச ஈவப்பனார்<br>படைமேல்நர் த. சாமிநாதன்<br>பேரா பா. வளன் அரசு<br>அறவியஞ்சேரல் அடிகள்<br>இறையரசனார்<br>பேரா ச. மெய்யப்பனார் |

இனித் தமிழ் வழிக் கல்வி இயக்கம் குறித்துக் காண்போம்.

# 3. தமிழ்வழிக் கல்வி இயக்கம்

"தமிழால் முடியும்" என்றவர்கள் ஆட்சிசெய்த போது, சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று உண்ணா நோன்பு கொண்ட சங்கரலிங்கனார் உயிரைப் பலி கொள்ளவே முடிந்தது. பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் ஈறாகப் பயிற்று மொழி தமிழாகவே இருத்தல் வேண்டுமெனக் கன்னி தொடங்கிச் சென்னை வரை நடைத் திட்டம் கொள்ளவிருந்த தமிழ் அரிமா இலக்குவனாரைச் சிறையுள் பூட்டியும் வேலையைப் பறித்தும் வெறியாட்டம் காட்டவே முடிந்தது.

"எங்கும் தமிழ்; எல்லாம் தமிழ்" என்று முழங்கியவர் காலத்திலே சென்னை மாநிலம் தமிழ் நாடாகியது ஒரே தலைவர் ஆனால் ... தமிழ் வழிக் கல்வி இயக்கம் தோற்றித் தெருத் தெருவாகக் கூட்டம் போட்டு வலியுறுத்தவும், ஊர்வலம் போகவும் அறிக்கைகள் விடுக்கவும் ஆகிய நிலையே இன்றும் தொடர்கின்றது.

தமிழ்நாட்டில் தமிழில் கற்பிக்க என்பதற்கொரு போராட்டம் தமிழில் பாடு; தமிழில் ஓது; தமிழில் பலகை வை; தமிழில் பேசு; தமிழில் எழுது; தமிழனாக இரு - என்பவற்றுக்கெல்லாம் அமைப்புகள், போராட்டங்கள்ஒரே தலைவர் இதனை விந்தை என்பதா? வேடிக்கை என்பதா? விளையாட்டுத் தனம் என்பதா?

தமிழ் வழிக் கல்வி இயக்கம் என்னும் பெயரே, அதன் நோக்கத்தையும் ஆக்கக்கருத்தையும் தெரிவிக்குமேஒரே தலைவர் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராய், துணை வேந்தராய் பணியாற்றி ஓய்வு நாளிலும் ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்" எனப் பேராசிரியர் மூதறிஞர் செம்மல் வ. சுப. மாணிக்கனார் தோற்றுவித்து, உயிர்ப்பும் உணர்வுமுடைய இயக்கமாக ஆக்கிய அமைப்பு தமிழ் வழிக்கல்வி இயக்கம். அதன் நிறுவனரும் தந்தையும் அவரே !

*வேலாவையும் தமிழ் உணர்வையும் தனித் தனியே பிரித்துக் காண இயலாது. அவ்வகையில் இரண்டற்ற ஒன்றானவர் அவர். பள்ளிப் பருவத்திலேயே உருவாகி, காளைப் பருவத்திலே கட்டமைந்து, திருக்குறள் பற்றால் வளர்ந்து, குறளிய - குறளாயத் தொண்டுகளால் முழுமை பெற்றது அது.*

*“நீதிமன்றங்களில் தமிழ்” என ஆசிரிய உரை எழுதியதுடன் சில சட்டச் சொற்கள் - தமிழாக்கம் என்னும் ஆக்கத் தொடரை வெளியிட்டவர் வேலா (2:8) தமிழ்க் கல்வி பயில்பவர் களுக்கே எங்கும் எதிலும் முன்னுரிமை” என்னும் கருத்தினை வலியுறுத்தி, முன்னுரிமை தர முதல்வர் முயல்வாரா?” என வினா எழுப்பியவர் வேலா (3:11).*

*தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடும் அகர முதலியில் வேறுமொழிச் சொற்கள் இடம்பெறக் கூடாது என்பதை வலியுறுத்திக் கருத்தரங்கு நடாத்த, “தமிழ் மொழியின் தனித் தன்மைமையக் காப்பாற்றக் குறளிய அன்பழைப்பு” விடுத்து நடத்திக் காட்டியவர் வேலா (6:4).*

*தூய தமிழ் அகராதியும் தொகுக்கப்படும் என அரசும் பல்கலைக் கழகமும் ஏற்றுக் கொண்ட அளவில் தமிழுக்கு வெற்றி; தமிழுக்கு வந்த இடையூறு நீங்கியது” எனக் களிப்புற்றவர் வேலா (6:7).*

*“மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு - வேண்டுகோள்” எனப் பத்துக் கருத்துக்களை வலியுறுத்தியவர் வேலா (6:9).*

*அதில், தமிழ் ஆங்கிலம் மற்றும் பிறமொழிகள் கற்றுப் புலமை பெற்றிருந்தாலும் தமிழுணர்வும் தமிழ்ப் பற்றுமிலாரைச் சங்கத் தலைவராக அமைத்தல் கூடாது” என்றும், “தமிழிலும் தமிழ் நாட்டிலும் புகுந்துவிட்ட அயல் வழக்குகளும் அயல் பண்பாடுகளும் தமிழுக்கும் தமிழனுக்கும் உரியன என்று திரித்துக் கூறுபவர்களை இனங்கண்டு விலக்க வேண்டும்” என்றும், எங்கும் தமிழ் என்ற முழக்கத்தோடு மட்டுமல்லாமல் தமிழக அரசு இதனை வழுவாமற் செயற்படுத்தி முத்தமிழையும் முதன்மைப் படுத்துகிறதா என்பதையும் கண்காணிக்க வேண்டும்” என்றும் குரல் எழுப்பியவர் வேலா.*

*“கல்வியில் மும்மொழிக் கொள்கை முரடானது!*

*இருமொழிக் கொள்கை ஏமாற்றுவது!*

*ஒருமொழிக் கொள்கையே உகந்தது"*

*என முழங்கியவர் வேலா (6:12). "தலைநகரில் தமிழ்தான் இல்லை" என வெம்பி வெதும்பி எழுதியவர் வேலா (8:2). தமிழ் எழுத்து வடிவச் சீரழிப்பைத் தடுத்து நிறுத்திய தமிழக அரசுக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறார் வேலா (9:12).*

*இத்தகு ஊற்றமுடைய வேலாவை இனங்கண்டார் மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்; மாணிக்கனார் படைத்த வள்ளுவத்தால் உள்ளெலாம் உள்கிக் கிடந்த வேலா, தமிழ் வழிக்கல்விக்காகத் தம் முதுமையையும் தம் பதவிப் பெருமையையும் எண்ணாமல் செய்துவரும் தொண்டினை எண்ணிப் பூரித்தார். தம்மை அத்தொண்டுக்கு ஆட்படுத்திக் கொண்டார்; குறளியத்தைத் தமிழ் வழிக்கல்வியியக்கப் பரப்பகமாகவும் குறளாயத்தைத் தொண்டுத் துணைக் கழகமாகவும் கொண்டார். ஏன்?*

*"பிற சமயங்களோ தமிழின் துணையில்லாமல் வளரும்; நம் குறளாயம் தமிழ்த் துணையின்றி வளராது. அதனால் தமிழொடும் திருக்குறளொடும் பின்னிப் பிணைந்த தகைமையை உணர்ந்து குறளாயத்தை மேற்கொண்டு வளர்த்தல் வேண்டும்" எனக் கண்டவர் அவர் (6:3:12).*

*"குறளாயத்தின் செயல்திட்டங்களை அவ்வப்போது படித்து வருகின்றேன். தக்கவர்கள் பலர் உறுப்பினராக இருக்கவும் காண்கிறேன். குறளியக்கம் எந்த அளவு இருந்தாலும் அது தமிழியக்கமும் மனித இயக்கமும் ஆம். எந்த இயக்கத்துக்கும் இக்காலத்துக் கிளர்ச்சி என்ற பூசல் விளம்பரமும் கிளர்படையும் வேண்டியுள. அப்போதுதான் கவனம் திரும்பும் போலும்" என மூதறிஞர் செம்மல் தொடர்பாகின்றார் (6:3:36). ஏழாம் ஆண்டின் முதல் வெற்றி அவர்க்குப் படையலாக்கவும் பெறுகின்றது. ஏன்? "திருக்குறள் என்மறை என்பதே ஏற் சொல்" என வள்ளுவர் பொழிவு வைத்தவர் அவரல்லரோ! அவ்வைப்பு அன்றோ நம்மறைக்கு மூலம்!*

*தலைநகரில் தமிழ்தான் இல்லை என்னும்" ஆசிரிய உரை (8:2) நிறைவில் மருத்துவத்தில் சட்டத்தில் பொறியியலில் அறிவியலில் கணக்கியலில் ஆட்சியியலில், அனைத்துத் துறைகளிலும் தமிழ் இடம் பெற வேண்டும் அல்லவா! செய்திருக்க வேண்டிய முதல் அடிப்படைப் பணியல்லவா!"*

*"இதனையெல்லாம் எண்ணி நினைந்து நினைந்து உருகி, தமிழ்நாட்டின் அடிநிலைப் புரட்சியாகத் தமிழ்வழிக் கல்வியி யக்கத்தினை மூதறிஞர் செம்மல் வ.சுப.மா. அவர்கள் இன்று தோற்று வித்துள்ளார். இவ்வியக்கம் ஒன்றினால் தான் எல்லா விடிவும் தமிழ்நாட்டுக்கு வரும் என்று அறுதியிட்டன்றோ நல்லோரை நாளெல்லாம் நாடுகிறார் அவர்" எனத் தமிழ் வழிக் கல்வி இயக்கத்தை ஆற்றுப்படுத்தி எழுதுகின்றார். வேலா.*

*"தாய்த் தமிழைக் காக்கும் போராட்டம் வெல்க" என்னும் தலைப்புடனும் வ.சுப. மா. படத்துடனும் வேல் 9 வெற்றி 1 வெளிப்பட்டது. அதில்,*

*"முதல் வகுப்பில் இருந்து ஆங்கிலமா!*

*தமிழ் ஒலிப்பு முறையே மெல்ல அழிந்து விடும்!"*

*"தமிழ் வழிக் கற்றவர்கட்கே தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பு - நெடுநாட்களாக இவ்விரு செய்திகளும் நம் அரசியல் தலைவர்கள் அனைவராலும் பேசப்பட்டு பின் மறக்கப்பட்டு மொத்தத்தில் ஏமாற்றப்பட்டு விட்டது.*

*இப்பெருங் குறையைக் களையத் தம் 72 ஆம் அகவையில் காரைக்குடி மூதறிஞர் செம்மல் வ. சுப, மாணிக்கனார் அவர்கள் 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற பெயரில் உயிர்ப் போராட் டத்தைத் தமிழ் அறிஞர்களுடன் தொடங்கிவிட்டார். மதுரையிலும், சென்னையிலும், நெல்லையிலும், நாகர்கோயிலிலும், ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடந்தன. மாவட்டந் தோறும் தொடர்ந்து நடைபெற உள்ளன.*

*தில்லைக் கோயிலில் ஆயிரம் ஆண்டுக் காலமாய் விடு பட்டிருந்த தேவார திருவாசகங்களை அம்பலம் ஏறிப் பாடச் செய்த இவர்தம் வெற்றியைப் போல் தாய்த்தமிழைக் கொலு வேற்றும் போராட்டமும் வெல்க! அனைவரும் துணை நிற்போம் என்கிறார்.*

*"சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் இருந்து தேரடித் தெருவரை நடந்த தமிழறிஞர்களின் ஊர்வலம்" என ஆசிரிய உரை அவ்விதழில் எழுகின்றது.*

*நிகழ்வை வேலா உரைக்கிறார்.*

தாங்கள் தவறாது சென்னை வந்து சேர்க என அன்பாணை மூதறிஞர் செம்மல் வ.சுப. மா. அவர்களிடமிருந்து வந்தது.

சித்தோட்டுப் பாவலர் ஈவப்பனாரின் அருந்துணையுடன் 23-7-88 காலை சென்னை சேர்ந்தேன்.

23-7-88 மாலை 5 மணி வள்ளுவர் கோட்ட வாயிலை அடைந்தேன்.

படிக்கும் தோற்றத்தில் அமைந்த பேரறிஞர் அண்ணாவின் சிலையை உற்று நோக்கினேன். சிலையின் பார்வை அவர் கைப் புத்தகத்திலும் பட்டு, அதன் கீழே நிற்கும் எளிய மெலிந்த ஓர் உருவத்தின் மேலும் பட்டதாய்த் தோன்றியது. அவ்வுருவத்தை உற்று நோக்கினேன்.

அவர்தம் மூதறிஞர் செம்மல் வ.சுப.மா. அவர்கள். எப்பொழுதாவது நெஞ்சுவலி வருமாம். தமிழ்படும் துயரை எண்ணி எண்ணி அன்று வந்தது போலும். மருத்துவர் தந்த சில வில்லைகளை எடுத்து நாவின் அடியில் இட்டு மனத்துணிவால் விரைந்து உடலைத் தெளிவாக்கிக் கொண்டார். தம் பிணியை மறந்து தமிழன்னை உற்ற பிணையைப் போக்க 4 கல் ஊர்வலம் நடாத்தி வீறுநடை போட்டு வந்தார் என எழுதுகிறார்! எழுது கிறாரே வேலா! இவர்தம் உடல்நிலை என்ன? மாற்றுச் சிறுநீரகம் மாற்ற இருந்த அண்மை நிலை! ஊண் தவறினும் ஊசி தவறாத, விருந்து தவறினும் மருந்து தவறாத - உடல் நிலை! கற்சிலையாக இருந்தாரே அவர், தமிழ்நாடு என்னும் பெயர் சூட்டு விழாவில் கலந்து கொள்ளுதற்கு மாட்டாத உயிர் இருந்தென்ன போயென்ன என வந்து உடல் நலிந்து - உயிர் ஊசலாடும் காலத்தும் உணர்வோடு கலந்து கொண்டவர்! என்ன கூட்டுறவு! வேலா தொடர்கின்றார்.

தொண்ணூற்றைத் தொடும் முத்தமிழ்க் காவலரும் எழுபத் திரண்டைத் தாண்டும் மூதறிஞர் செம்மலும் யானும் வழங்கிய சிற்றுரைகளின் பின் ஊர்வலம் தொடங்கியது. அவ்விருபெருந் தமிழ்ச் சான்றோர் பின்னே, தமிழறிஞர்களும் பற்றாளர்களும் தொடர்ந்தனர்.

அன்னைத் தமிழே வேலை பெறு!

ஆங்கிலமே வெளியேறு!

என்ற முழக்கங்களை வழிநெடுக முழங்கிக் கொண்டே தேரடித் தெருவை 8 மணி அளவில் ஊர்வலம் அடைந்து பொதுக் கூட்டம் தொடங்கப் பெற்றது.

"சென்னைத் தெருக்களில் எத்தனை வகையான ஊர்வலங்கள் சென்றுள்ளன. ஆனால் உண்மையில் செயல்பட வேண்டிய ஓர் அரிய பணிக்காகத் தமிழறிஞர்கள் இன்றுதான் ஒன்று வடிவந்திருக்கின்றார்கள் என்று ஊரார் பலர் பேசுவது ஒலித்தது. இந்தியை எதிர்ப்பதிலே இருந்த ஊக்கம் தமிழை வளர்ப்பதிலே இல்லாதிருந்து விட்டோம் என்ற ஏக்கத்தை நிகழ்வைக் கண்டோரிடமெல்லாம் கேட்டோரிடமெல்லாம் தோன்றக் கண்டேன்"

9-7-88 ஆம் நாள் சென்னை திருவல்லிக்கேணி முசுலீம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நிகழ்ந்த தமிழ் வழிக்கல்வி இயக்கக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார் வேலா.

23-7-88 ஆம் நாள் வள்ளுவர் கோட்ட அண்ணாசிலை முன் வழிமொழிந்து பேசிய வேலா, ஊர்வலத்தின் பின்னர் நிகழ்ந்த கருத்தரங்கில் அமைவுரையும் ஆற்றினார்.

(9.2) ஆசிரிய உரையுடன் ஆங்கிலம், இந்தி முதலிய மொழிகள் தனிப்பாடமாகக் கற்றுத் தரலாம். ஆனால் தமிழ் நாட்டில் மற்றை எல்லாப் பாடங்களும் தமிழில்தான் கற்பிக்கப் படவேண்டும். தமிழ்நாட்டில் தமிழ்தான் பயிற்று மொழியாக வேண்டும். வேறு மொழி பயிற்று மொழியாகக் கிஞ்சித்தும் ஒவ்வோம்" என வரைந்தனர்.

25-9-88 இல் பெரியார் மாவட்டத் தமிழாசிரியர் கழகச் சார்பில் ஈரோட்டில் நிகழ்ந்த தமிழ் வழிக்கல்வி இயக்கப் பேரணியை வேலா தொடங்கி வைத்தார். பேரணியின் பின் நிகழ்ந்த கூட்டத்திலும் பேருரையாற்றினார்.

வ.சுப, மாணிக்கனார் எழுதிய "தமிழ் வழிக் கல்வியியக்கம்- கொள்கை விளக்கமும் நலங்களும்" என்னும் விரிந்த அறிக்கை குறளியத்தில் முழுமையாக வெளியிடப்பட்டது.

"தமிழ் வழிக்கல்வி இயக்கம் தமிழ் நாட்டில் தான் தேவை தேவை" என வலியுறுத்துகிறார் வேலா (9:6).

"ஆங்கிலம் வாயிலாகக் கற்பிக்கக் கூடிய எல்லாப் பள்ளிகளிலும் இந்தி மட்டும் உடன் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

*தாய் மொழி என்ற பெயரில் தமிழ் மொழியோ வேறு எந்த மொழியோ முதல் வகுப்பில் இருந்து பாடமாக வைக்கப்படக் கூடாது. தேவையானால் 7, 8, ஆகிய இருவகுப்புகளில் மட்டும் பாடமாக வைத்து முடித்து விடவேண்டும். தமிழ் கற்பிக்க வேண்டுமானால் ஆங்கிலத்தை நீக்கி விட்டு அந்த இடத்தில் தமிழை வைத்துக் கொள்ளலாம்" என நடுவண் அரசில் இருந்து வந்த ஆணையை மறுத்து இவ்வாறு எழுதினார் வேலா (9.6)*

*மூதறிஞர் செம்மல் வ.சுப. மா. இயற்கை எய்தினார்; எய்திய நாள் 24-4-89. அந்தோ மூதறிஞர் செம்மல் வ.சுப. மா மறைந்தாரே! யார் யாரை யாரால் எவரால் எப்படி ஆறுதல் படுத்துவது" என ஆசிரிய உரை எழுதி இரங்கி ஏங்கினார் வேலா.*

*"ஈரோடு என்ற நினைவு வந்தால் முதலில் நம் நினைவுக்கு வருபவர் மான உணர்வுகளை வழங்கிய தந்தை பெரியார்; அடுத்து நினைவுக்கு வருபவர் நம் அன்பிற்குரிய வேலா அவர்களே" என ஈரோட்டில் நடந்த உயர்நீதிமன்ற நடுவர் கட்குத் திருக்குறள் பேரவை வழங்கிய வரவேற்பு விழாவின் போது கூறிய மூதறிஞர் செம்மலின் உதடுகள் இனிப் பேசாப் பேரா இயற்கையாய் விட்டனவே! நாம் எங்கு போய் அழுதாலும் இவ்வாற்றாமை தீராதே! யாம் மருத்துவ ஆய்வில் சென்னையில் இருந்தபோது ஈரோட்டில் அவர் கூறிய இச்சொற்கள் எம்மை நெக்குருகச் செய்தன.*

*"யாம் உடல் நலம் குன்றிய போது ஈரோட்டிற்கும் சென்னைக்கும் நேரில் வந்தும் கடிதங்கள் வாயிலாகவும் அவர் உசாவிய பாங்கும் ஊக்குவிப்பும் என் உடல்நலத்திற்கே உறுது ணையாகின. திருக்குறளுக்காக வேலா நம்மோடு நலமாக வாழ வேண்டும். உடலை மருத்துவர் சொற்படி தவறாது பேணச் சொல்லவும்" என அவர் எழுதிய வரிகளை நினைக்க நினைக்கக் கண்கள் குளமாகின்றன. எங்கட்கோர் அண்ணல் இவர்போல் இனி யார் வாய்ப்பார்!"*

*"மூதறிஞர் செம்மலுக்கு நாம் கூறும் உறுதியான வீர வணக்கங்கள்" தமிழ்வழிக் கல்வி இயக்கமும் திருக்குறள் நம்மறை நெறி எனும் சமுதாயமுமே.*

*அண்ணலை வணங்குவோம்; அவர்வழி நடப்போம்" என்கிறார் வேலா (9:10)*

*குறளாயத்தின் சார்பில் மூதறிஞர் செம்மல் மறைவு குறித்து இரங்கல் கூட்டம் தி.பி. 7-5-2020 இல்நிகழ்ந்தது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூன்று; அவற்றுள் முன்னது இரங்கல்; பின்னவை வேண்டல்கள்.*

*2. மூதறிஞர் செம்மல் வ.சுப. மா. அவர்கள் தம் உயிர் மூச்சுக் கொள்கையான தமிழ்வழிக் கல்வி இயக்கத்தைப் பொறுப் பேற்றுச் செயற்படுத்தி வெற்றி காணத் தமிழகப் புலவர் குழுவினரை இக்குழு கேட்டுக் கொள்கிறது.*

*3. திருக்குறள் நெறியையும் தமிழ் உணர்வையும் கொண்டு இயங்கும் இன்றைய தமிழக அரசும் தமிழக முதல்வர் திரு. கலைஞர் அவர்களும் அண்ணல் வ.சுப. மா. அவர்களின் கொள்கைகளாக தமிழ்வழிக் கல்வியை நடைப்படுத்தலும் எழுத்துச் சீர்மை என்ற போலிமைகளைத் தடுத்தலும் வேண்டும் என்பன.*

*புலவர் குழுவும் தம் பொருளாக எடுத்துக் கொள்ள வில்லை. அரசும் கருத்தில் வைக்க வில்லை! வேலாவே, இதனை ஏற்கும் கடப்பாடு உண்டாயிற்று. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது ஏமாற்று வித்தையானது என்று கூறும் வேலா (10:3), தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி இயக்கம் தோன்றிப் போராட வேண்டிய சூழலை இந்த நாட்டை ஆண்ட ஆட்சியாளர்கள் உருவாக்கி விட்டார்கள். தமிழுக்காக வாழ்வது போல் ஒரு போலிமை; ஏன் இந்த நாடகம்? கல்லாத மக்களைக் கவர் வதற்கா? கோபுர வாழ்வு வாழ்வோரைக் களிக்கச் செய்யவா?"*

*என்று வினா மேல் வினா எழுப்புகிறார்.*

*"வேற்று மொழிகள் பாட மொழிகளாக இருக்கலாம். பயிற்று மொழிகளாக இருக்கக் கூடாது என்பதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத எந்த அரசையும் நாம் வருத்தக் கண் கொண்டுதான் பார்க்க இயலும்" என்று இடித்துரைக்கிறார்.*

*"தமிழ் வழிக்கல்விக்கு எதிர்ப்பாகத் தமிழ் நாட்டில் வேற்றுப்பயிற்று மொழித் திட்டத்திற்கு வழிவிடும் ஆட்சி யினால் இதற்கா எருவிட்டு வளர்த்தோம் என்ற சொற்றொ டர்களே குருதி நாளங்களெல்லாம் ஓடிப்பாய உதடுகள் முணு முணுக்கின்றன என இரங்குகிறார்."*

*குறளிய குறளாய நிறுவனர் வேலா தமிழ் வழிக் கல்வியி யக்கத்திற்குப் பொறுப்பேற்று அறிக்கை விடுகிறார்.*

*நம் அன்னைத் தமிழை அரியணை ஏற்றுவது நம் பிறப்புரிமை; இவ்வியக்கத்தில் தமிழ்ப் பிறப்பாளர் அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியில் நின்று ஒரே குரல் எழுப்புவோம்.*

**தமிழக அரசுக்கு உடனடி முறையீடு :**

*மண்ணின் மொழிக்கே வேலை வாய்ப்புகள்,*

*தமிழ்வழி கற்றவர்க்கே வேலைகள் யாவும்*

*தமிழ்வழி மாணவர்க்கே உயர் கல்விகள்,*

*வேலை ஆங்கிலத்துக்கா? வேலையின்மை தமிழுக்கா?*

*நீர் களைக்கா? நெருப்பு பயிருக்கா?*

*எங்கும் தமிழ் எதிலும் தமிழ்.*

*மழலை முதல் பல்கலைக் கழகம் வரை எங்கும் தமிழ் ஒன்றே பயிற்று மொழி ஆக வேண்டும்.*

*ஆங்கிலமே வெளியேறு! அன்னைத் தமிழே வேலை பெறு!*

*தமிழ்வழிக் கல்வியியக்கம் - குறளாயம் (10:3) என அறிக்கை விடுத்தால். தமிழ்வழிக் கல்வி இயக்கம் உருப்பெறச் செய்வோம் என வேறோர் அறிக்கையும் விடுத்தார் (10 6)*

*"தமிழ்நாடு எனப் பெயரிட அண்ணா தோன்றினார்"*

*தமிழ்வழிக் கல்வி பெற - வழங்க - யார் தோன்றுவார்? என வினாவித் தமிழ்வழிக் கல்வி இயக்கம் வலுப்பெறுகிறது" எனத் தமிழ்வழிக் கல்வி இயக்க அமைப்பாளராக ஓர் அறிக்கை விடுத்தார் (10:7). தமிழ்வழிக் கல்வி இயக்கத்தினை நாடளாவிய அமைப்பாக - உணர்வு மிக்க அமைப்பாக - ஆக்குதற்குத் தக்க செயற்குழு உருவாக்கம், செயற்பாட்டு உருவாக்கம் ஆகிய வற்றுக்காக 11-2-90 இல் சென்னை சைதை திருவள்ளுவர் குருகுலப் பள்ளியில் கூடுமாறு அழைத்தார். வேலா அமைப்பா ளரானார். ஆட்சிக்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1-4-90*

இல் சென்னையில் தமிழ் வழிக்கல்வி இயக்க மாநாடு நிகழ்ந்தது. முற்பகல் தலைமையுரையை வேலா நிகழ்த்தினார்.

"சாதிகளின் அடிப்படையில் உள்ள வகுப்பு வாரி உரிமையை நீக்கிவிட்டுத் தமிழ்நாட்டில் பயிற்று மொழியாக ஆங்கிலத்தில் மட்டும் படித்தவர்களை முன்னேறியவர்கள் என்றும் ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் படித்தவர்களைப் பிற்படுத்தப் பட்டவர்கள் என்றும், தமிழில் மட்டுமே படித்தவர்களைத் தாழ்த்தப்பட்ட வர்கள் என்றும், பிரித்து மேற் கல்வி, அரசுவேலை வாய்ப்புகள் வழங்கினால் தமிழும் வளர்ந்து விடும். சாதிகளும் மெல்ல ஒழிந்து விடும். ஏனெனில் ஆங்கிலம் பேசி வாழ்பவர்கள் இன்று ஓர் உயர்சாதியாகிக் கொண்டுள்ளனர். இவர்களே இந்நாட்டின் மன்னர்களா? மற்றவர்கள் அடிமைகளா? இவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் இரண்டு விழுக்காடு கூடத் தேறாது, இவ்விரண்டு விழுக்காட்டினரோடு கூடி வாழும் அரசியல்காரர்கள் நம்மைக் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் போலிப் பெருமையால் ஏமாற்றி விட்டனர்."

"தமிழ்வழிக் கல்வியைத் தமிழக அரசு நெறிப்படுத்தினால் எத்தகு ஈகம் புரிந்தும் துணையாகிக் காத்திடுவோம். தமிழ்வழிக் கல்வி இயக்கம் தமிழ்நாட்டில் வாழ்பவர் அனைவருக்கும் உரிமையுடைய ஒன்று. இதில் இந்து, இசுலாம் கிறித்துவம், ஆத்திகம் போன்ற மதச் சிக்கல்களுக்கு இடமில்லை. அதுபோல் பிராமணர் பிராமணர் அல்லாதவர் சாதிப்பிரிப்புகள், பேசும் மொழிப் பிரிவுகள் ஆகிய சிக்கல்களுக்கும் இடமில்லை. தமிழ் மாநிலத்தில் தமிழ்வழிக் கல்வி என்ற ஒரே முழக்கமே நம் முழக்கம்" என்றார் வேலா.

**தமிழ் வழிக்கல்வி இயக்க உறுப்பாண்மையர்**

**நிறுவனர் - மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார்**

புரவலர் - முத்தமிழ்க் காவலர்

அமைப்பாளர் - திரு வேலா

துணை அமைப்பாளர்கள் : முனைவர் வா.மு, சேதுராமன்

திரு.து. இரா. மீனாட்சி சுந்தரம்

புலவர் த. சுந்தரராசன்

திரு. ந. அரணமுறுவல்

நெறியாளர்கள் : முனைவர் பொற்கோ

முனைவர் இரா. இளவரசு

அமைப்புக்குழு

உறுப்பினர் : நூற்றைம்பதின்பர்

*இயக்கத்தின் அறிக்கை - அமைப்பு - செயற்பாடு என்பன வெல்லாம் குறளியத்தில் இடம் பெற்றுள (10:9) தமிழ்வழிக் கல்வி மாநாடு ஊர்வலம் - தீர்மானிப்பு இன்னவெல்லாம் 17-6-90 இல் திருச்சி மாநகரில் நிகழ உள்ளன. அறிஞர்களும் ஆர்வலர்களும் ஒன்று திரண்டு ஒரே குரல் கொடுத்தால், அரசு ஆணை பிறப் பிக்கத் தக்க தூண்டுகோல் ஆகுமல்லவோ! மக்களாட்சி முறை அதுதானே!*

*தமிழ்வழிக்கல்வி இயக்கம் தொடர்பான வேலாவின் மணிமொழிகள் சிலவற்றைப் பொறித்து இதனை நிறைப்போம்!*

*தமிழில் பேசக் கூசாதே!*

*பிறமொழி கலந்து பேசாதே!*

*திராவிட ஆட்சியில் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதில் ஏன் தயக்கம்? தமிழ் நாட்டில் 90ரூ மக்கள் தமிழோடு வாழ்கின்றனர். 10% மக்கள் பிறமொழி களால் பிழைக்கின்றனர். அரசு யார் பக்கம்?*

*ஆட்சிமொழி இந்தி அரசுமொழி ஆங்கிலம்! கோயில் மொழி சமற்கிருதம்! தமிழ் மொழிக்கு எங்கே இடம்?*

*பெற்றதாய் தனைப் பேணாதான்*

*பிறவிப் பயனைக் காணாதான்.*

*ஆங்கில வழியில் கற்காதே!*

*அடிமையாய் என்றும் நிற்காதே!*

*தமிழில் பெயரைச் சூட்டு!*

*தமிழனாய் வாழ்ந்து காட்டு!*

*தமிழ்நாட்டில் தமிழில் பேசினால் கீழ்ச் சாதியா?*

*வேற்று மொழியில் பேசினால் மேற் சாதியா?*

*தாய்மொழி வழிக்கல்வி பயிலாதவனிடம் நாட்டுப் பற்றும் இராது. தேசியப் பற்றும் வராது! சொந்த வீட்டைக்கொள்ளை அடிப்பவனைப் போலத் தன் சொந்த நாட்டையும் கூறு போடுவான்; அடைவு வைப்பான்; விலைக்குக் கூட விற்று விடுவான்.*

*தமிழ் வழிக் கல்வியைத் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்த வல்லவர்களே ஆட்சிக் கட்டிலுக்கு உரியவர்கள்; மற்றவர்கள் விலக்கப் பட வேண்டியவர்கள்.*

# அ. இனநலம்

குறளியம் குறளாயம், ஆட்சிக்குழு, பொதுக்குழு, மாநாடு, நிலாப்பொழிவு, தொடர் பொழிவு, விழாக்கள் இன்னவெல்லாம் தொடர் தொடராக இயல்தற்கு மனவளம் பொருள்வளம் ஆகியவை மட்டும இருந்தால் போதா. இனவளம் கட்டாயம் வேண்டும். அவ்வினவளம் நலமான தாகவும் அமைய வேண்டும்; அதனால்தான் வள்ளுவம் இனநலம் எல்லாப் புகழும் தரும் என்றது. மேலும் "மனநலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்க்கின நலம் ஏமாப் புடைத்து" என்றும் கூறியது. வேலா பெற்றுள்ள இனநலம், பெரிது; பெருமைக்கும் உரியது. அஃது அவர் தம் மனநலத்தாலும் பணிநலத்தாலும் கொள்கையூற்றத்தாலும் உண்டாகியது.

வேலாவின் இனநலம் பெரிது என்பதால் எண்ணிக்கையைச் சுருக்குதல் செய்திகளைச் சுருக்குதல் ஆகிய 'சுருங்கக்கூறல்' என்னும் உத்திவகையில் சுட்டப்படுகின்றது என்க.

வேலா பயின்ற காலத்து நட்பாக வாய்த்த வருள் ஒருவர் ஏ. இரகுபதி என்பார். அவர் தோல் ஆய்வில் பட்டம் பெற்ற அறிஞர். இராணிப் பேட்டைடயல் வாழ்கின்றார்.

கல்விக்காலப் பெரு நண்பருள் ஒருவர் கே.கே. ஏ. சையது முகமது அலி என்பார். அவர் தம் பெற்றோர் பெருந்தகைமையும் பேரன்பும் முன்னரே சுட்டப்பட்டன. பெருவணிகர் அவர். திரு. தக்கணாமூர்த்தி, ந.சி. குமார். ந.சி. வெங்கடேசன் என்பார் உறவுப்பெருஞ் சீர்மையர்.

வணிகத் தொடர்பாக வாய்த்த நண்பர்களுள் பெரியவர் எசு. மீனாட்சிசுந்தரனார் க. சங்கரனார், கே. இலக்குமி நாராயணன், சூலபுரம் முகமதுஅலி, புலவர் செல்வராசனார், பாவலர் முருகுசுந்தரனார், தூ. இரா. மீனாட்சி சந்தரனார், அ.க. பச்சையப்பனார், நெல்லை அருணாசலனார் என்பார் குறிப்பிடத் தக்கவர்கள்.

திருக்குறள் குறளியம் குறளாயம் தொடர்பான நண்புகள் பெரிது. முன்னரும் பலப் பல தொடர்புகள் குறிக்கப்பட்டுள.

வள்ளுவர் வழி; வள்ளலார் வழிக்கு முன்னோடி. அவ்வள்ளலார் வழியர் வேலாவுக்குப் பெரு நட்பும் நேயமும் உடையவர். இரட்டை இராசமாணிக்கம் எனப்பலரும் கூறும் அருட்பாத் தென்றல் பண்டுவர் மா. செ. இராசமாணிக்கனார் குறிப்பிடத்தக்கவர். தவத்திரு ஊரனடிகளார், பழ சண்முகனார், பாவலர் இளங்கம்பன், திரு. தி.கோ. சீதாராமன், சித்தர் கழகத் தலைவர் கவிராசு மாணிக்கம் என்பார் நேயருள் சிலர்.

இயற்கை மருத்துவ வேட்கையர் வேலா. அதனால் திரு. ஆறுச்சாமி என்னும் இயற்கை மருத்துவர் குறளாய மனைக்கண் இருந்து மருத்துவக்கடமைபுரிந்தார். அவ்வகையில் பெரியார் மாவட்டத் தலைமகனார் எனப்படும் செ.ந. குப்புமுத்து ஐயா அவர்கள் நெருக்கமான அரவணைப்புடையவர்கள். மேலும் சிவசைலம் இராமகிருட்டிணர், கோவை சுப்பிரமணியனார், பேரா. பெரோசு, கோபி வெள்ளியங்கிரி, முன்னாள்ச.ம. உறுப்பினர் கிருட்டிணசாமி, சண்முகவேல், சேலம் சின்னாண்டார் என்பவர்கள் குறிக்கத் தக்கவர்கள். வேலாவுக்கும் வீரசைவப் பெருமக்களுக்கும் பெருந் தொடர்புண்டு. அவ்வகையில் குடந்தை பெரிய மடத்துத் தலைவர், பேரூர் அடிகள், மயிலம் - பொம்மய புரம் அடிகள், சிதம்பரம் ஈசான மடத்து அடிகள், கூப்ளி மூர்சாவீர் மடத்து அடிகள், திருப்போரூர் அடிகள், தோ. பா. நந்திகேசுவரர் பேரா. வை. இரத்தினசபாபதி என்பவர்கள் அவ்வகையில் குறிப்பிடத் தக்கவர்கள்.

திருக்குறள் மறவர் பாவலர் ஈவப்பனார், விடுதலை ஈகியர் பெரியண்ணனார், திருக்குறட்பேரவைச் செல்வர் தி. அ. சண்முக சுந்தரனார், பாவேந்தர் பட்டடை இராமலிங்கனார், பெரும் புலவர் க. ஆறுமுகனார், பாட்டுத் தென்றல் பொதிகைச் செல்வனார், புலவர் சி. மு. இராச மணிக்கனார், புலவர் வடிவேலனார். பேரா. மு.ச. சிவம், கல்வெட்டறிஞர் இராசு, வேலூர் குறளேந்தி யார்,. சாணிப்பூண்டி ச.த. திருஞான சம்பந்தம், பதின்கவனகர் கனக சுப்புரத்தினம், சின்னதாராபுரம் இறையரசனார், குறள்நெறியர் இசை இறை சேரலாதனார், திருவள்ளுவர் குருகுலம் இரகுபதி யார், குறள்வழி தே. கண்ணனார்,

கழக ஆட்சியாளர் இரா. முத்துக்குமாரசாமியார், பேரா.ச. மெய்யப்பனார், புதுவை வை. வேலாயுதனார், இளங்கோ பாண்டியனார், படைமேல்நர் திருவண்ணாமலை சாமிநாதனார் ஆகியோர் குறளாயத் தொடர்பாளர்கள் ஆவர்..

இல்லத்திற்குவந்து இனிது தொடர்பு கொண்டுள்ள பெருமக்கள் பலர். அவருள் தவத்திரு முத்தமிழ்க்காவலர், குன்றக்குடி அடிகளார், திருக்குறளார், அருள் அரசு வாரியார், மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார், சிலம்பொலி செல்லப்பனார், ஔவை நடவரசனார், மறை திருநாவுக்கரசர், மானமறவர் வீரமணி கூப்ளி மூவாயிரமடத்துப் பெருந்தலைவர், இல்கல் முதலிய ஐந்து மடத்துத் தலைவர்கள், குழித்தலை இளமுருகு பொற் செல்வியார், அமைச்சர் காளிமுத்து, பாவலரேறு பெருஞ் சித்திரனார், ஈழ வேந்தன், பதின்கவனகர் பெ. இராமையனார், தண்டபாணி தேசிகர், சாலை -சாலினியார், பெருங் கவிக்கோ வா.மு. சேதுராமனார், புலவர் குழந்தை, பாவலர் முருகுசுந்தரம், பாவலர் சுரதா, கு.ச. ஆனந்தனார், மறைநித்தல் இன்பனார், இரா. இளங்குமரன் ஆகியவர்கள் சுட்டற்குரியர்.

இனிப்பல்வேறு வகைகளாலும் தொடர்பு கொண்ட பெருமக்களுள் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், அழகரடிகள், அருளிசை மணி நாகரத்தினம், பேரா. ந. சஞ்சீவி, மதுரை ஞான சம்பந்தர் திருமடத்தடிகளார், கு.வே.கி. ஆசான், அன்புப்பழநீ, கேரளம் சிவானந்த பாரதியார், வள்ளுவர் வழி கண்ணனார், வீ.செ. கந்தசாமி என்பவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

திருக்குறள் நம்மறை என்பதை ஏற்றுக் கொண்டு தம் வழிபாட்டிலும் தொழிலிலும் வாழ்விலும் சடங்குகளிலும் கடைப்பிடியாக உள்ள பாராட்டுக்குரிய பெருமக்கள் திருச் செங்கோடு தக்கணாமூர்த்தி, திருப்பூர் நா. முத்துசாமி, திருவண்ணாமலை படைமேல்நர் சாமிநாதன் என்பவர்கள். இவர்கள் மிக அணுக்கத் தொடர்பினராவர்.

இவ்வின நலம் எண்ணி முடியாது. மன நலம், இன நலத்தின் மூலம்! ஆகலின் மனநலம் விரிய விரியும் இனநலத்தைக் குறிக்க இயலாது! குறிக்கத் தக்கவர்களுள் எத்துணைப் பேர்கள் விடுபாடு பெற்றுளரோ! நல்லோர் இனநலம் "விரிப்பின்

பெற்றுளரோ! நல்லோர் இனநலம் விரிப்பின் மிகும், தொகுப்பின் எஞ்சும்" எனச் சொல்லியமைதல் அவையடக்கம் போல்வது.

**வேலாவின் வழிபாட்டாளர் மூவரும் அவர்நிலையும்**

தெய்வப்புலவர் திருவள்ளுவர் - வழிகாட்டும் தெய்வம்

பெம்மான் பசவேசர் - வழியருளிய தெய்வம்

திருத்தந்தை வேலாயுதனார் - வழிகோலிய தெய்வம்!

# நிகழ்ச்சிகள் சில

**சொல்லும் செயலும்**

வேலா இறைமை அழுத்த வீர சைவக் குடிவழியர்; வீரசைவ அழுத்தமும் மிக்கவர்; எனினும் "திருக்குறள் நம்மறை" என என்று அவர் வாய்சொல்லியதோ அவர் கை எழுதியதோ - அன்று தொட்டு அவ்வீர சைவக்கோலமும் கொண்டிலர். வினை வேறு சொல்வேறு - ஆதல், கனவினும் இன்னாது என்னும் வள்ளுவத்தை உணர்ந்து உள்ளத்தால் பொய்யா தொழுகும் வாழ்வு; வேலா வாழ்வாகும்.

**தமிழ் முழக்கம்**

பவானி செல்லாண்டியம்மன் கோயிலில் குடமுழுக்கு விழா நிகழ இருந்தது. அடியார் திருக் கூட்டம் நன்கொடை தண்டுதற்கு வேலாவை அணுகியது. வேலா குடமுழுக்கு விழாவின் போது தேவாரத் திருவாசகத் திருமந்திரங்கள் முழக்கப்படுமானால் தாம் அவர்கள் கேட்கும் நன்கொடையை மகிழ்வுடன் வழங்குவதாகக் கூறினார். வந்தவருள் ஒருவர் பன்னிரு திருமுறை வல்ல தோன்றல்; எனினும், வேலாவின் இவ்வுரை கேட்கப் பெறாமல் உடனே வெளியேறி விட்டார். அவர் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்தும் கொள்கையை விட்டுத்தர வேலா இசையாமை அவர்தம் உறுதிப் பாட்டுச் சான்றாம்.

**முந்தும் சால்பு**

மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் ஈரோட்டுக்கு வந்தார். விடுதியில் தங்கியிருந்தார். அங்கிருந்து வேலாவுக்குத்

தொலைபேசித் தொடர்பு கொண்டார். வேலா உடனே அங்கே வந்து காண்பதாகக் கூறினார். இருவரும் நான் வருவேன் நான் வருவேன் என முதலில் புறப்பட்டு வழிப்போக்கில் கண்டு பின்னர் வேலகத்திற்கு உடன் வந்தனர். அப்பொழுது மூதறிஞர் "தமிழுக்குத் தொண்டு செய்பவர்களை அவர்கள் வாழும் இடத்திற்கு வந்து கண்டு செல்லுதலே சால்பு" என்று தம் வருகைக்குரிய முற்கோளை உரைத்தார். பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஒருவர் வழியே கேட்கும் செய்தியா இது?

**திங்கள் கொடை**

பெருந்துறை மேனிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற விழா அதில் பங்கு கொள்ள வேலா சென்றார். பேச்சு - எழுத்துத் திறத்தில் வல்ல மாணவன் ஒருவன் பரிசுகள் சில பெற்றான் அவன் ஆற்றல் வேலாவுக்கு மகிழ்வு தந்தது. அம்மாணவன் வறிய நிலையையும் ஆசிரியர்கள் தந்த உதவி ஊக்கங்களையும் அறிந்த வேலா, அம்மாணவன் மருத்துவக் கல்லூரியில் சேர விரும்பிய விருப்பம் அறிந்து பாராட்டினார். அவன் அக்கல்வி பயிலும் காலம் முழுமையும் திங்களுக்கு உருபா 100 தருவதாக உறுதி யளித்தார். அவ்வாறே மருத்துவக் கல்லூரியில் இடம் வாய்த்துப் பயின்ற அவனுக்கு அக்காலமெல்லாம் அவ்வாறே புலவர் வடிவேலனார் வழியாகத் தொகை உதவி வந்தார்! படிக்கும் பருவத்தில் வறுமைத் துடிப்பு இருத்தல் ஆகாது என்னும் பேரெண்ணமுடைமையால் வேலா இவ்வாறு பலர்க்கு உதவி யுள்ளார். நல்ல ஒருவர் உருவாதல் நாட்டுக்கு வளமே யல்லவோ!

**ஓதல் கொடை**

புதுவையிலே குறளாய மாநாடு; இளஞ் செல்வர் இருவர்; இருவரும் உடன்பிறந்தார். அவர்கள் தம் பள்ளிக் கல்வியின் ஊடே திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சியும் நடத்தினர். வேலா, அவர்களை ஊக்கும் வகையால் பாராட்டுரைத்து 100, 100 உருபா பரிசு வழங்கி மகிழ்வித்தார். அவ்விழாவிலே திருக்குறள் தொண்டர் பெருமக்களுக்குப் பாராட்டு நிகழ்ந்தது. அவர் பெயரே திருக் குறள் பெருமாள். அவர்க்குப் பொன்னாடை போர்த்திப் புகழ்மாலை சூட்டியதுடன் அவர்க்கு உதவும் வகையில் தொகையும் வழங்கினார். தேடுவளம் ஊருணியாய்ப் பயன் மரமாய்ப் பிறர்க்கு உதவியாக அமைதல் என்னும் குறிக்கோள் நெஞ்சம் இத்தகு கொடைகளால் இனிது விளங்கும்.

**நூற் கொடை**

*சென்னை சுவாகத்து விடுதியில் தமிழ்நாட்டு எழுத்தாளர் கழகச் சார்பில் ஒரு நூல் வெளியீடு. ஆசிரியர் மெர்வின் என்பார் எழுதியது. வெளியிட்டு விழாவில் ஒருநூல் கூட விற்பனையாக வில்லை. வேலா மனம் எழுத்தாளர்பால் அன்பு கொண்டது. அவரை ஊக்கப்படுத்த வேண்டும் என உந்துதல் ஆனது. அதனால் பத்து உருபா விலையுடைய அந்நூலில் 50 படிகளை விலைக்கு வாங்கி அங்கு வந்திருந்த ஒவ்வொருவர்க்கும் தம் அன்பளிப்பாக வழங்கினார். நூலாசிரியர்க்கு ஊக்கம் உண்டாக்கியதுடன். நூல் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு வருவார் கடமை என்ன என்பதையும் உணர்த்துவதாக இருந்தது அந்நிகழ்ச்சி.*

**முகத்துக்கு முகம்**

*முகம் முப்பெரு விழா 16-5-90 இல் சென்னை பாவாணர் நூலகத்தில் நிகழ்ந்தது. அதில், முகம் மாமணி இளைத்துக் கொண்டே போவதாக மன்னர் மன்னன் குறிப்பிட்டார். "அவரை இளைத்துப் போகவிட மாட்டோம்; அவர் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதை நாம் பார்த்துக் கொள்வோம் என்ன?" என்று முனைவர் வாசவன் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டதும், குறளியம் வேலா முகம் வளர்ச்சிக்கு உருபா 500 கொடுத்தார். வாசவன் தொடர்ந்து வேலா குறள் காட்டிய அறநெறியில் ஈட்டிய பொருளை ஈகின்றார். அவர் தமிழகத்தைக் குறளகமாக மாற்றப் பாடுபட்டு வருகிறார் அவருக்கு நாம் துணையாக இருப்போம்" என்றார். மேலும் நாரணதுரைக் கண்ணனார் எழுத்தாளர்களுக்குப் புகலிடமாக இருந்ததை விளக்கிய போது வேலா, நாரண துரைக்கண்ணனார்க்கு உருபா 500 நன்கொடை வழங்கினார். கைம்மாறு கருதாக்கடப் பாட்டுக் கொடைகள் இன்ன பலவாம்.*

**அன்பளிப்பு :**

*வேலா புத்தக அங்காடிக்கு ஓர் ஆசிரியர் வந்தார். அவர் நெடுநேரம் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். பின்னர் விலைமிக்க சில நூல்களைப் பிறர் அறியாவண்ணம் எடுத்துப் பையில் மறைத்துக் கொண்டு எதுவும் வாங்காதவர் போல் வெளியேறினார். அவர் செயலைக் கூர்ந்து கண்ட கருத்துமிக்க கடையாள் ஒருவர் பின் தொடர்ந்து, கடை வாயிலிலேயே*

பையைப்பிடித்துக் கொண்டு வந்து வேலா முன் நிறுத்தி நிகழ்ந்ததைக் கூறினார். ஆசிரியர்க்கு முழுத்தலைக் குனிவாயிற்று. என்ன நிகழுமோ என அஞ்சி நாணினார். "ஏன் இவ்வாறு செய்தீர்கள்? ஓர் ஆசிரியர் இவ்வாறு செய்யலாமா?" என்றார். "ஆசிரியர் இவ்வாறு செய்யலாமா?" அந்தப் புத்தகங்கள் என் தேர்வுக்கு வேண்டியிருந்தன; பணம் இல்லாமையால் அவ்வாறு செய்து விட்டேன்; பெருத்த தவறுதான்; பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்றார்; கையெடுத்து வணங்கினார்.

"இனி இப்படிச் செய்யாதீர்கள்; முடியாத நிலை இருந்தால் அதனைச் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்; நான் தட்டாமல் தருகிறேன்" என்று சொன்னார் வேலா. அவர் எடுத்துச் சென்ற நூல்களில் "அன்பளிப்பு" என எழுதிக் கையொப்பமிட்டுத் தந்தார்.

பிரான்சு நாட்டு விக்டர் கியூகோவின் வெள்ளி விளக்குத் திருத்தந்தையார் செயலுக்கும் வேலா செயலுக்கும் வேற்றுமை உண்டா?

**பழையபெட்டி :**

ஒருநாள் வீட்டில் வெள்ளையடிப்பு நடந்தது. வழி பாட்டறையில் ஒரு பெட்டி இருந்தது. அது சாதிக்காய்ப்பலகைப் பெட்டி; பழமையானது. அப்புறப்படுத்த வேண்டி அப்பழம் பெட்டி அங்கே கிடப்பானேன்? ஒழுகறைப் பெட்டிகளுக் கிடையே அப்பெட்டி ஏன்? என்று எண்ணிய அரசமாணிக்கர் வெளியே எடுத்துப் போடுகிறார். தந்தை வேலாயுதனார் காண்கிறார். அதனைத் துடைத்து மீண்டும் அவ்விடத்தே வைக்கிறார். இப்பெட்டியை அப்புறப்படுத்தலாமே எனத் தந்தையாரிடம் கூறுகிறார். என் தொடக்கக்கால வணிகத்தை எடுத்துக் காட்டும் நினைவுச்சின்னம் அது; நம் வணிக வளத்தின் 'மூலபண்டாரம்' அதுவே! என்னை என் பழமை நினைவு மாறிவிடாவகையில் காத்து வரும் கலைப் பொருள் அதுவே" என்னை என்பதைக்கூறி அப்பெட்டியே தாம் முதற்கண் முதிய வணிகர் ஒருவரிடம் வாங்கிய பாடற் புத்தகங்களின் வைப்பயகமாக இருந்ததனை விளக்கினார்! தந்தையார் உணர்வுக்குத்தலை வணங்கிய தகவார்ந்த அரச மாணிக்கர் இன்றும் அப்பெட்டியை அவ்விடத்திலேயே வைத்துப் போற்றி வருதல் தந்தைவழி மைந்தர்வழி என்பதற்கு மெய்ச்சான்றாகும்!

**விருப்பாவணம் :**

*திபி. 2017 துலை 10ஆம் நாள் (27-10-86) வேலா விருப்பாவணம் ஒன்று எழுதியுள்ளார். அதனைப் படித்த பதிவாளரும் பதிவு அலுவலகத்தவர்களும் இதுகாறும் தம் அலுவலகம் கண்டறியாத 'தனித்தமிழ் ஆவணம்' அதுவென வியப்புற்றுச் சொல்லறச் சொல்லி மகிழ்ந்தனர்.*

*திருக்குறள் நம்மறை என்பதை வாழ்வியல் நெறியாக ஏற்று வாழும் வேலா எனத் தொடங்கியிருந்தது அது. அசையும் அசையாப் பொருள் (தாவர சங்கமம்) மரமபுரிமை (பரம்பரை) உரிமை (சுதந்திரம்) துய்த்தல் (அனுபவிப்பு) இளவல் (மைனர்) தம்வரைவு (சுவஸ்தலிகிதம்) இன்னபல இன்றமிழ் ஆட்சிகள் கொண்டது அது. நல்லதமிழில் பதிய, பதிவகம் மறுப்ப தில்லையே! நாம்தானே அதனை மேற்கொள்வில்லை என்பது வேலாவின் தெளிவு!*

**பெரியார் மாவட்டம்**

*ஈரோடு மாவட்டம் தனியே பிரிக்கப்பட்டபோது "பெரியார் ஈ.வே. இராமசாமி மாவட்டம்" என்னும் பெயர் சூட்டுவதென் அரசு தீர்மானித்தது. அத்தீர்மானிப்புக்கு முடிவெடுத்தற்கு ஒரு கூட்டம் ஈரோட்டில் நிகழ்ந்தது. அமைச்சர் இராம. வீரப்பனார் வந்திருந்தார். அப்பொழுது அப்பெயர் 'பெரியார் மாவட்டம்' என்றே இருக்க வேண்டும் என வலியுறுத்தினார் வேலா. ஆனால் அமைச்சர் அப்பொழுது அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் அதனை விடாமல் வேலா வலியுறுத்தி முத்தமிழ்க் காவலர் வழியே அரசுக்கு ஓர் அறிக்கை விடுத்தார். அம்முடிவே செம்முடிவு எனப் பின்னர் மாவட்டப் பெயர் அமைந்து விளங்குகின்றது.*

**பிறந்த நாள் வாழ்த்து**

*வேலாவின் துணைவியின் உடன்பிறந்தவர் மகனும், அவர், வளர்ப்புப் பிள்ளையுமான செந்தில் தம்பிறந்த நாள் வாழ்த்துப் பெறுவதற்கு வேலாவினிடம் வந்தார். அப்பொழுது அரிய பெரியசெயல் செய்த பெருமக்கள் பிறந்த நாளை வீட்டாரும் நாட்டாரும் கொண்டாடுதல் வழக்கம். நம்மைப் போன்றவர்கள் நம் பிறந்த நாளில் "நான் இன்று முதல் இத்தீயதைத் தள்ளுகிறேன்.*

இந்நல்லதைக் கொள்ளுகிறேன்" என்று உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். அகவை கூடக் கூட, அல்லவை படிப்படியே தள்ளப்பட்டு நல்லவை கொள்ளப் பெற்று முழுமாந்தன் ஆக உதவும். அவ்வகையில் "இவ்வாண்டுப் பிறப்பு முதல் இத்தீயதைத் தள்ளுகிறேன் இந்நல்லதைக் கொள்ளுகிறேன்" என்று திட்டப் படுத்திக் கொண்டு வாழ்த்துப் பெறவா என்றார் வேலா. இவ்வாறு சிந்திக்கத் தூண்டிச் செயலாக்கச் செம்மைக்கு ஆட்பட்டவர் வேலா. ஆதலால், அம்முறையைப் பட்டறிவால் அழுத்தமாகக் கூறமுடிந்ததாம்.

**வேலைநீக்கமா? குறை நீக்கமா?**

வேலா வணிக நிறுவனத்தில் பணியாள் ஒருவர். அவர் வெளியே வாங்கி வரும் பொருள்களில் சற்றே விலையேற்றிக் கூடுதல் தொகை பெற்று வருதல் குறிப்பாக அறிய வந்தது. அதனைத் தெளிவாக அறிந்த பின், நிறுவன மேலாளர் அப் பணியாளரை 'உரிமையாளர் ஒப்புகை இல்லாமல் பணிக்கு வரக்கூடாது' என்று கூறி அனுப்பி விட்டார்.

பணியாள் உரிமையாளரைப் பார்த்தார். உரிமையாளர் வேலா, உண்மையை உசாவிக் கண்டு பிடித்தார். மறுக்க முடியாத சான்றுகளைக் காட்டி மெய்ப்பித்துத் தவற்றினை ஏற்றுக் கொள்ளும் நிலையை உருவாக்கினார். குற்றத்தை ஏற்றுக் கொண்ட நிலையில் தமக்கு இனிவேலை கிட்டாது என எண்ணினார் பணியாள்.

பணியாள் பொய்யுரைத்துப் பெற்றுக் கொண்ட உருபாவை வேலா கொடுத்தார். இதனைக் கொண்டு போய், நான் வாங்கிய இந்த இரண்டு பொருள்களிலும் கூடுதல் சொல்லி இதனை வாங்கி விட்டேன். இதனைச் செலுத்தி விடுகிறேன். இனிமேல் இத்தகைய தவறு செய்யமாட்டேன். பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி விட்டுக் கடைக்குப் போ" என்றார்.

குற்றத்திற்கு வேலை நீக்கம் செய்வது வேலா நோக்கமன்று குற்றத்தை நீக்க வேண்டும் என்பதே வேலாவின் நோக்கு வேலாவே கடைக்குப் போ என ஆணையுட்டிருக்கலாமே! மேலாளர் வழியே செல்ல வேண்டுமா எனின் முறையைப் போற்ற வேண்டுமே; அதுவே அவர் நோக்கமாம்.

# இ. உரை வீச்சு

**இந்நிலை என்று மாறும்?**

இன்று நாம் செய்யவேண்டியது திருக்குறளின் மெய்யுரை கண்டு உலக மொழிகளில் எல்லாம் மொழியாக்கம் செய்தல் வேண்டும். விளக்க முறைகளால் குறளியக் கோட்பாடுகளைப் படைத்தல் வேண்டும்.

ஆனால் இன்று நாம் உண்மை தெரியாமல் உலகெல்லாம் திருக்குறள் பரவிவிட்டது எனத் தவறாகக் கருதிக் கொண்டு ள்ளோம். ஒவ்வொரு மொழியிலும் ஒரு சில ஆயிரம் படிகளே வெளியிட்டுள்ள இன்றைய நிலை கடலில்கரைத்த பெருங்காயம் போலத்தான்.

எதை எதையோ இலட்சக் கணக்கில் அச்சிட்டு இலவயமாக வழங்க இந்நாட்டில் பலர் உள்ளனர். ஆனால் வாழ்வியலை வகுக்கும் திருக்குறளை அச்சிட்டு வழங்கத்தான் ஆளில்லை; அமைப்பு இல்லை. என்று இந்நிலை மாறும்? (1-1-1981)

**ஆறாத் துயரை ஆற்றல்**

தமிழுணர்வோடு, அறிவோடு அகர முதலியை ஒழுங்கு படுத்தித் தொடர்ந்து வெளியிட்டு முடிக்கும் பணியை மேற் கொள்ளும் பெருமக்களாலோ, அரசாலோ தான் பாவாணரின் மறைவால் உற்ற தமிழன்னையின் ஆறாத் துயரை ஆற்ற முடியும், (1-1-87)

**கண்ணிமை போல் காக்க**

கொத்தளம் ஏறியும் கொத்தடிமை ஆயினரே என்ற அவச் சொல்லுக்குத் தமிழக அரசு, வரலாற்றில் இடம் பெறக் கூடாது. காமராசர் பக்தவச்சலம் ஆட்சி கூடத் தந்தை பெரியாரைக் கண் இமை போல் காத்ததை மறத்தல் கூடாது.

தமிழக அரசு, விலைமதிப்பற்ற வீரமணி (தி.க. பொதுச் செயலர்) அவர்களின் உயிரைக் காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்! (1-8-82)

**விழிப்புற்றெழுக**

*தமிழ் நாட்டில் வாழ்பவர் - வாழ நினைப்பவர் தமிழ் கற்றாக வேண்டும். தமிழே பயிற்று மொழி தமிழ்வழிக் கல்வி கற்பிக்காத பள்ளி தமிழ் நாட்டில் இருக்கக் கூடாது. எங்கும் எதிலும் தமிழே இருக்க வேண்டும். இவ்வேண்டுகோளைத் தமிழக அரசிடம் ஒப்புவிக்கிறோம். நிறைவேறுமா? மொழிப் பற்றெங்கே? விழிப்புற்றெழுக! (1-10-82)*

**ஒதுங்காதீர்**

*ஆசிரியப் பெருமக்களே ஒதுங்காதீர்கள் பொறுப்பெடுத்துக் கொள்ளுங்கள். கவர்ச்சியாலும் அலங்காரப் பேச்சாலும் பெற்ற கையூட்டுப் பணக்குவியலாலும், அடியாட்களாலும், பரம்பரைப் பதவிப் பிறப்பாலும், இந்நாட்டை ஆண்டு விடலாம் என்று நினைபவர் எவரையும் ஆளவையில் இருக்கவிடக் கூடாது. இத்தகு உணர்வுகளைச் சிந்திக்கக் கூடிய குழுகாயத்தை உருவாக் குங்கள். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பசி நீக்கிப் பகுத்தறிவை வளருங்கள் (1-11-82)*

**அரசுச்சட்டம்**

*தமிழை வளர்க்கப் பல்கலைக் கழகங்களோ, உலகத் தமிழ் மாநாடுகளோ செய்யும் பணிகளை விடத் தமிழுக்கே எதிலும் எங்கும் முன்னுரிமை என்ற அரசுச் சட்டம் எல்லா நிறைவு களையும் செய்துவிடும். தமிழுக்கு முன்னுரிமை வேண்டும். தமிழக முதல்வர் செய்வாரா? (1-6-83)*

**குறை யாரைச் சாரும்**

*இன்றோ பெரும்பாலான தமிழாசிரியர்கள் ஏனோ மொழி நலம் பேணாது, வளர்க்காது, போதும் என்ற பொன்மனம் கொண்டு வாளா விருக்கின்றனர். துறைதோறும் செல்லாமலும், சொல்லாக்கந்தராமலும் உள்ள குறைவு தமிழாசிரியர்களை அன்றி யாரைச் சாரும? தமிழ் வழிக் கல்வி பயின்றவர்களே எல்லாத் துறைகளிலும் கோலோச்சுங் காலம்வரல் வேண்டும். வந்தால் நம்மை ஏமாற்றுவோர் வாழ மாட்டார்; வாழ முடியாது. (1-10-83)*

## நீ - நான்

*நீ .............*

*நான்*

*ஓஓ! தமிழின் தலைவா!*

*தமிழினத் தலைவா!*

*உலகெலாம் உன்மொழி புகழுறவே,*

*திருக்குறளை உன்*

*தமிழில் தந்தாய்!*

*நீவாழ்ந்த காலத்தில்*

*உனக்குத்தான்*

*எத்தனை அயல் நண்பர்கள்?*

*நீ கற்ற மொழிகள் எத்தனை? ஆனால்.,*

*எதற்கும் நீ*

*அடிமை யாகாமல்*

*எங்கெல்லாம் எது கிடைப்பினும்*

*கண்டறிந்தாய்*

*அல்லன நல்லன ஆய்ந்தாய் நீ,*

*புதியன புகுத்தித்*

*திருக்குறளை யாத்தாய் நீ;*

*அதைக் கற்கவன்றோ*

*உலக அறிஞர்கள் உன்னாட்டில் வலம்*

*வந்தார்; வருகிறார்; வருவார்.*

*உன் குறளை அறிந்தவரோ*

*என்றன் நாட்டை நோக்குகிறார்.*

*ஆனால், நானோ... நானே .....*

*விடுதலை பெற்ற என்றன் நாட்டில்*

*சோற்றுக்கு வாழ*

*வேற்று மொழி படிக் வேண்டுமாம்*
*ஒரு சாண் பயிற்றுக்கு*
*ஊமைமொழி போதாதா?*
*தமிழுந் தேவையில்லையே!*
*உயிருக்குத் தானே தமிழ்*
*ஆம் ... ஆம் ... நான்*
*உயிரோடு வாழ*
*தமிழோடு வாழ வேண்டும்*
*என் தமிழுக்கே அரியணை*
*என்னாட்டில்*
*இனியெதற்கு வேறு இணையணை*
*கொடுஞ் சிறையில் தள்ளினாலும்,*
*குற்றுயிராக்கினாலும்*
*கூறுதனைப் போட்டாலும்*
*அஞ்சேன்! அஞ்சேன்!*
*ஒத்ததறிவான் எனின்*
*முகம் பார்ப்பேன்*
*இன்றேல் உனக்கும் எனக்கும்*
*உறவேது என்பேன்.*
*என் வலக்கையே*
*உன் இருக்கையை வீழ்த்தினால்*
*என் என்புடலும் எஃகாகும்.*
*இனியும் என்னால்*
*கதைக்க முடியவில்லை*
*கண்ணீர் விடுகிறேன்*
*அதுவே செந்நீராய் மாறும்!*

**குறளியம் (1-1-87)**

**கல்வியில் :**

*மும்மொழிக் கொள்கை முரடானது!*
*இருமொழிக் கொள்கை ஏமாற்றுவது!*
*ஒரு மொழிக கொள்கை உகந்தது!*

**குறளியம் 1-7-86**

**தேர்தலுக்கு முன் :**

*திருக்குறள் நெறியைக் குறிக்கோளாகக் கொண்டு நல்லாட்சி (தி.மு.க. ஆட்சி) இங்கு மலரும்*

**குறளியம் 1-2-88**

**தேர்தலுக்குப் பின் :**

*வள்ளுவர் கோட்டத்தில் பதவியேற்று*
*வரலாறு படைத்த*
*கலைஞர் அவர்களே! தி.மு.க. ஆட்சியைத்*
*திருக்குறள் ஆட்சியாக மலரச் செய்து*
*உலகிற்கே வழிகாட்டுங்கள்*
*இஃதே எங்கள் எதிர் நோக்கும், வேண்டுகோளும்.*

**குறளியம் 1-2-89**

**கொள்கை ஏற்க**

*பழிநாணும் இயல்பற்றான் எத்தகைய அழகுடையவனாக இருப்பினும், அறிவுள்ளவனாக இருப்பினும். ஆற்றலுடைய வனாக இருப்பினும் கொள்கையை இழக்கத் துணிவான். கொண்ட கொள்கை மறந்து பதவிக்காக வாழும் அவர்கள் வாழ்வு இன்று கணிக்கப்படாமல் ஆகுலங்களால் மறைக்கப்பட்டாலும் காலம் நாளை மாறும். ஆம் வெளிவரும் ஆதலின் நீங்கள் ஆளுங்கட்சியில் இருப்பினும் எதிர்க்கட்சியில் இருப்பினும் உணர்ந்து கொள்ள வேண்டியவை.*

1-9-89

**திட்டமும் மட்டமும்**

*மக்கட்கு வழிகாட்டியாக தலைவராக விரும்புபவர்களே, உங்கள் வாழ்க்கையில் ஒழுக்கத்திற்கு முதலிடம் வழங்குங்கள்.*

ஒழுக்கத்தை வழி நடத்துங்கள். அப்பொழுதுதான் தீட்டும் திட்டங்கள் திண்ணமான திட்டங்களாகச் செயற்படும். இன்றேல் திட்டம் மட்டமாகிவிடும்.

1-10-89

**எவரால் எவர்?**

செங்குட்டுவனின் காலத்தில் இளங்கோ இருந்தார் என்பதை விட இளங்கோ காலத்தில் செங்குட்டுவன் இருந்தார் என்பதே நாம் பெருமிதம் கொள்ளும் வரலாறு. அதேபோல் மூதறிஞர் செம்மல் காலத்தில் கலைஞர் ஆட்சி புரிந்தார் என்ற வரலாறு நாளை நாம் பெறும் பெருமித வரலாறு.

பெரும் புலவர் குழந்தையின் இராவண காவியத்திற்குப் பேரறிஞர் அண்ணாவின் அணிந்துரைச் சிறப்பும், மு.வ. வின் திருவள்ளுவர் (அ) வாழ்க்கை விளக்கத்திற்குத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. வின் அணிந்துரைச் சிறப்பும் போலக் கலைஞரின் குறளோவியத்திற்கு மூதறிஞர் செம்மல் அணிந்துரைச் சிறப்பு காலத்தால் அழியாத கல்வெட்டுப் போன்றது.

இத்தகு பெருமைகளை எல்லாம் உடைய மூதறிஞர் செம்மல் அவர்களின் இறுதிச் செலவில் தமிழக அரசின் சார்பில் ஓர் அமைச்சர் கூடக் கலந்து கொள்ளாதது கலந்து கொள்ளச் செய்யாதது நாம் எல்லாம் தேர்ந்தெடுத்த தமிழக முதல்வர் கலைஞரின் குற்றமோ அமைச்சர்களின் குற்றமோ அல்ல. இயல்பாகவே தமிழர்களிடம் உள்ள அக்கரைப்பச்சை மேலுள்ள மோகமே! காலங்கடந்து உணர்வதிலும் செயற் படுவதிலும் தமிழன் தவறவே மாட்டான்.

1-5-89

**இனி யாரும் அர்ச்சகர் ஆகலாம்,**

**இங்கில்லை; ஆந்திராவில்!**

அர்ச்சகர் வேலையில் எந்தச் சாதியைச் சேர்ந்தவரும் சேரலாம். ஆனால் அவர் முறையாக அர்ச்சகர் வேலைக்குப் பயின்று தேர்வில் தேற வேண்டும். அரசு ஊழியர்களைப் போலவே நடத்தப்படுவர். நாட்டிலே முதன்முறையாக இந்துக் கோயில்களின் நடைமுறையைச் சீர்திருத்தும் நோக்குடன் மரபுகளை உடைத்துக் கொண்ட ஒரு புரட்சியான சட்டம் இது.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சீடர்கள் நடத்திய ஆட்சியிலும் இது தோன்றவில்லை. திரு. என். டி. இராமாராவ் இச்சட்டத்திற்கு முழு ஆதரவு தந்துள்ளார்.

1-8-88

**கண்ணீர் விடத்தான் முடியும்**

கல்வியை விலைபேசி வாழும் நாட்டை உருவாக்கிய இழிமை ஆட்சியாளர்களையே சாரும். சமுதாய அமைப்பையே உருக்குலையச் செய்த இவர்களை என்னென்று அழைப்பது? கயவர்கள் என்று சொல்லிக் கண்ணீர் விடத்தான் முடியும்! வேறு என்ன செய்ய?

1-7-89

**இடைத்தரகர்களை அகற்றுதல்**

இடைத்தரகர்களை இறைமை உணர்வுக் களங்களில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் பதினெட்டு அகவைக்குமுன் மத இயக்க ஈடபாடுகளில் மக்கள் ஈடுபடலாகாது என்றும் சட்டமியற்றிப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதைச் சமுதாயத்தில் உயிர்ப்பிக்க வேண்டும் என்றும் குறளாயத்தார் எதிர் நோக்குகின்றனர். உலகம் முழுவதும் இவ்வியக்கம் இருபது ஆண்டுகளில் பேராட்சி நடத்தி மக்களை உய்விக்கும் என்றும் இன்றைய உலக மாந்தர் படும் இன்னல்களை நீக்கி, மாந்தநேய உணர்வுகளைக் காப்பாற்றி இயக்கும் ஆற்றல் திருக்குறள் ஒன்றுக்கே உண்டு என்றும் குறளாயத்தார் அறிவிக்கின்றனர்.

**முடியுமா? முடியாதா?**

தவத்திரு குன்றக்குடியடிகளார் ‘திருக்குறள் நம்மறை’ என்னும் கொள்கைக்காகத் தம் திருமடத்தை விட்டு வெளியேறி யிருந்தாலும் பெருஞ் செல்வாக்கும் பெரும் நிறுவனப்பொறுப்பும் உடையவராக இருந்திருப்பதுடன், பேரியக்கத் தலைவராகவும் இருந்திருப்பார். ‘கடவுள் இல்லவே இல்லை’ என்ற தந்தை பெரியாரே பெரு மடங்கள் பலவற்றை ஒப்பப் பெரும் பணமும் சீரும் சேர்க்க முடிந்த போது கடவுள் நம்பிக் கையுடைய அடிகளார் சமயம் விடுத்துத் திருக்குறள் வழி நின்றால் எய்த முடியாமலா போகும்?”

**நல்லாட்சி**

ஒரு நல்லாட்சி என்பது எது? என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு வேலா தரும் மறுமொழி வருமாறு :

ஆள்வோர் - ஆளப்படுவோர் ஆகிய இரு திறத்தவர்க்கும் கிடைக்கும் வாய்ப்புகள் - அமைச்சர் அலுவலர் உழவர் வணிகர் தொழிலர் என்னும் வேறுபாடு இன்றி - ஒத்த நிலையில் இயல்பாகக் கிடைக்கும் வகையில் ஆட்சி அமைப்பு இருத்தல் வேண்டும். அந்த ஒப்புரவு அரசு குறள் நெறியால்தான் உண்டாக முடியும் என்பது.

**சாதி ஒழிப்பு :**

சாதிகள் ஒழிய வேண்டுமானால் - கசப்பனதுதான் - சாதிச்சலுகைகள் ஒழிந்தே ஆக வேண்டும். செல்வ நிலை கல்வி நிலை என்னும் இரண்டு அளவு கோலை மட்டுமே கொண்ட சலுகை உண்டானால்தான் சாதியை ஒழிக்க முடியும்! சாதியும் போக வேண்டும்; சாதிச் சலுகையும் போகக் கூடாது என்றால் நடை பெறக் கூடியதா?

**இந்து மதத்திற்குத் தரும் ஏழு திருத்தங்கள் :**

1. சாதி வேறுபாடுகள் இந்து மதத்திலிருந்து அறவே ஒழிக்கப் பெற வேண்டும்.
2. உரிய தகுதியுள்ள அனைவரும் கோயில்களிலும் திரு மடங்களிலும் (சாதி வேறுபாடுகளின்றி) அனைத்துப் பொறுப்புகளிலும் இடம் பெறல் வேண்டும்.
3. அறிவியலுக்கும், உண்மைக்கும் மாறான பொய்யுரைப் புராணங்களையும், பழக்க வழக்கங்களையும் (மூட்டை கட்டி) அப்புறப்படுத்த வேண்டும்.
4. வருணாசிரமம் ஒழிக்கப்பட்ட புதிய இந்து மதம் நிறுவப்பட வேண்டும்.
5. தாய்மொழி வழிபாடு உரிமையாக்கப் பெற வேண்டும்.
6. கூட்டு வழிபாடு என்ற பொய்ம்மை எல்லாச் சமயங் களிலும் புரையோடி விட்டது. இறைமை உணர்வு என்பது தன் - தனி - உள்ள - முயற்சி அக வழிபாடு என்பதே என நம் மெய்ப்பொருள் உணர்த்துகிறது.

*இறைமையுணர்வைக் கூட்டு வழிபாட்டால் பெறல் இயலாது. மனத்துக்கண் மாசிலனாகி, அகவுணர்வு பெற்றுப் பேரா இயற்கை பெறலே நம் இறைமைக் கொள்கை.*

7. *இந்து மதத்தில் நுழைந்திருக்கும் மற்றை இழிவுகளைப் போக்க, அவ்வப்போது அறிஞர் பெருமக்கள் கூடி ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும்.*

**- குறளியம் 1-8-81**

*நம் திருமடத் தலைவர்களும், சமயச் சொற்பொழிவாளர் களும் இராமாயண, மகாபாரதங்களான இதிகாசங்களை விட்டு விட்டு, என்று குறளிய வழிக்கு மீளுகிறார்களோ அன்று தான் மீனாட்சிபுரம் மீளும். இல்லையேல் பல மீனாட்சி புரங்கள் தொடரும்.*

**- குறளியம் 1-8-81**

**தி.பி. 2014 புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்து**

*குறளிய நெஞ்சமே!*

*நமக்கென வழக்கம்போல் பொங்கலும், திருவள்ளுவர் பிறப்பை ஒட்டிய புத்தாண்டும் வருகிறது. நாமும் நம் முந்தையரும் கடந்த பாட்டையின் நீளத்தைத்தான் 2018 ஆண்டுகள் என இதுவரை அளந்தோமேயன்றி ஓரடிகூட உயர்ந்தோமில்லை. இதை ஏன் எனச் சிந்திப்போர் யாவர்? உறுதுணையாக இருந்து மாற்றுவோர்தாம் யார்?*

*நம் பண்பாடு, நம் பழக்கம், நம் ஒழுக்கம் எனத் திருக் குறளைத் தீண்டாமலேயே எதை எதையோ சொல்லி நம்மவர் களை அணிசேர்க்கிறதே, இங்கு வலிமையான வஞ்சகக் கூட்டம். அத்தீயுழியை நம்பி அழிகிறது இங்கு நம் மக்கட் கூட்டம்.*

*நமக்கென்று வாய்த்த தலைமைகள் நம்மைச் செக்கு மாடாகப் பார்க்கின்றனவே யொழியச் சிந்திக்க, வழி தர மறுக்கின்றன. தலைமைகளிலோ அஞ்சிச் சாகும் அவலமும் ஆளடிக்கும் கொடுமையும், தந்நலமே மிகும் கயமைக்குணமும், கொடுமையும், பொறாமையும், வெகுளியும் மனச் சாட்சிகளை மேடையிலே மட்டுங் காட்டி, கைதட்டல் வாங்கிப் பின்னே பொய்ச் சாட்சி ஆகி நிற்கும் பிழைப்பும் முடைநாற்றமாக*

*வீசுகின்றன? நல்லோரை நாடு இனம் கண்டு கொள் மறுக்கிறது. இவைதாம் கடந்த ஆண்டுகளில் நாம் கண்டு கொண்ட உண்மை.*

*இவற்றை மாற்றவல்ல ஒரு வலிமை நம் குறளியத்தில், வள்ளுவப் பெருந்தகையால் வழங்கப் பெற்றுள்ளதா என ஆய்வதுதான் நம்புத்தாண்டுப் பணி பொங்கல் சிந்தனை.*

**- குறளியம் 1-1-1986**

**வேலாவின் எதிர்பார்ப்புகள்**

1. *திருக்குறள் வழியில் ஒரு பேரரசு அமைய வேண்டும்.*
2. *திருக்குறள் வழியில் குமுகாயம் அமைய வேண்டும்.*
3. *அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டில் தமிழே பயிற்று மொழியும் ஆட்சிமொழியும் ஆதல் வேண்டும்.*

*இவற்றுள் பின்னிரண்டு திட்டங்களுக்கும் வித்துகள் ஊன்றப்பட்டுள. முளையும் பாலித்துள்ளது. கிளைத்துத்தழைத்து ஓங்குதல் வேண்டும்.*

*முன்னதற்கு வித்து ஊன்ற வேண்டும். கட்டாயம் நேர்ந் துள்ளது. உலக உய்வுக்கு அவ்வித்தையன்றி எவ்வித்தை ஊன்றினாலும் வீறுமிக்க வெற்றி விளைவை எய்த இயலாது என்பதைக் கடந்த கால நிகழ்கால வரலாறுகள் மெய்ப்பித்துக் கொண்டு வந்துள்ளன; வருகின்றன! இவை வேலாவின் எதிர் நோக்குக் கருதுகோள்கள்.*

**ஒரு வழிகாட்டுரை**

*12-11-989 ஆம் நாள் செமினி பார்சன் வசணிக மையத்தில் 'வேலா நிறுவனம்' தொடங்கியது. ஈரோடு வேலா நிறுவனத்தின் கிளையாகிய அதன் தொடக்கத்தைக் குறிப்பிடும் வேலா, தம் தலைமை நிலையத்து நிகழ்ச்சி ஒன்றைச் சுட்டுகின்றார்.*

*கி.பி. 1963 ஆம் ஆண்டில் ஈரோடு சி-எசு.ஐ. மருத்துவ மனையில் டாக்டர் சாமர் வெல் என்னும் இங்கிலாந்து நாட்டுச் சிறந்த மருத்துவர் பணியாற்றி வந்தார். ஒவ்வொரு மாதமும் முதல்நாள் எங்கள் புத்தக நிலையத்திற்கு வந்து தம் மாத ஊதியத்தில் 5% விழுக்காட்டுத் தொகைக்குப் புத்தகங்கள் வாங்குவார். உடன் தன் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து வந்து குறைந்தது 30 மணித்துளிகளாவது கடையில்*

தமிழ்மொழி தெரியா விட்டாலும் எல்லாப் புத்தகங்களையும் எடுத்துப் பார்த்துக் கொண்டு நேரத்தைச் செலவழிப்பார். அவரிடம் உரையாடிய போது அவர் "நான் என் குழந்தைகளை உணவுக் கடைக்கும் துணிக்கடைக்கும் வட்டிச் சென்று பழகுவது போல் புத்தக எழுது பொருள் கடைக்கும் கூட்டிச் சென்று பழக்க வேண்டும். இது என் கடமை" என்றார்.

அவர் தம் சொல்லில் இருந்து எங்கள் வணிகத்தின் பொறுப்பை மேலும் உணர்ந்தோம். அறிவு தரும் புத்தக விற்பனைப் பிரிவு நல்ல வருவாய் வழங்காதிருந்தும் எங்கள் நிலையத்தில் அவ்வணிகத்தை வளர்த்து வருவதைக் கடமையாகக் கொண்டுள்ளோம் ...

ஐம்பது ஆண்டுகட்கு மேலாக இத்துறையில் இயங்கும் எங்கள் ஈரோடு புத்தக எழுது பொருள் நிலையத்தின் வழியே நூல்களை நேரில் வந்து வாங்கியும் விற்கத் தந்தும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கோ. து. நாயுடு, முனைவர் மு.வ. மற்றும் நல்லோர் பலர் பெருமை சேர்த்துள்ளனர். தமிழகத்தில் மிகச்சிறந்த தமிழறிஞர்களை எங்கள் பதிப்புகளின் மூலமாக அறிமுகப்படுத்திய பெருமை எங்கட்குண்டு. வரலாற்றுப் பெருமைக் குரிய குறளியம் திங்கள் வெளியீடு எங்கள் முத்தாய்ப்பு:" என்பது அது:

**குறளாயம்**

வருங்காலத்தில் குறளாயம் ஒரு சமுதாய இயக்கமாகலாம், ஒரு சமய இயக்கம் போன்றும் ஆகலாம். அல்லது குறளிய நாட்டையே உருவாக்கும் அரசியல் இயுக்கமும் ஆகலாம். எப்படி ஆயிடினும் எங்கும் எதிலும் அதன் அடிப்படை திருக்குறளே. திருக்குறளைத் தவிர வேறு எதுவும் இருக்கக் கூடாது என்பதே எம்மனோர் முடிவு. திருக்குறளின் அணுகுமுறையைச் சமுதாய உருவாக்கத்திற்கு ஈடுபடுத்துவதே குறளாயம்.

**குறளியம் 1-3-86**

**குறளாயத்தின் சமுதாய நோக்கு**

தமிழகத்தை ஒப்பி ஏற்றுக் கொள்க.

ஊழல் புரிவோருக்கு வாணாட்சிறை.

இருமுறைக்கு மேல் பதவி இல்லை.

எல்லார்க்கும் எல்லாம்.

உழைப்பில்லா வரவினைப் பதிந்திடுக,
எல்லார்க்கும் அடையாள அட்டை வழங்குக.
சாதி மதம் மறுத்த மணமக்களுக்கே சலுகைகள் தருக.
சாதியைக் கேட்காதே - சொல்லாதே.
தமிழ் வழிக் கட்டாயக் கல்வி
திருக்குறள் தனிப்பாடம்
ஊர்தோறும் திருக்குறள் நெறி பரப்பு மையம்.
பெண்களை இழிவுபடுத்தும் பேதைமை நீக்கு.

**குறளியம் 1-6-87**

நல்லவரை யாரும் தாழ்த்தி விட முடியாது.
தீயவரை யாரும் உயர்த்தி விட முடியாது.

-1-12-89

திருக்குறள் ஒரு மொழி மீட்பு நூல்
திருக்குறள் ஓர் இன மீட்பு நூல்
திருக்குறள் ஒரு நில மீட்பு நூல்

-1-3-90

## 2000 ஆண்டுகளுக்கு முன் தெய்வப் புலவர் தந்த தெளிந்த முடிவுகள் - கற்பு திண்மை

### நடைமுறை நோக்கு

*கல்லானாலும் கணவன் எனும் கொள்கையும்*
*பின்தூங்கி முன்எழும் பேதைமைத் தன்மையும்*
*உடலொழுக்கம்தான் சிறந்தது எனும் எண்ணமும்*

*வீட்டிற்குள் அடைந்து கிடக்கும் அடிமையுணர்வும் கற்பின் மாட்சியை விளக்குவன. உடலுறவில்தான் கற்பு நிலைத்தது என்பது.*

### திருவள்ளுவர் நோக்கு

*பெண்ணுக்கு வேண்டியது கல்போன்ற மன உறுதியே.. கலங்காத மனத் திண்மையே கற்பு எனப்படும்.*

*கற்பு - பொங்கி வழியாது; தாழ்ந்து போகாது.*

*கற்பு - அசையாதது அழியாதது.*

*கற்பெனும் மனத் திண்மையில்தான்*

*ஆண்பெண் உறவும் நிலைத்து நிற்கும்.*

1-10-87

## வாய்மை - யாதொன்றும் தீமையிலாத சொலல்

### நடைமுறை நோக்கு

*அரிச்சந்திரனின் உண்மையும்*

*தசரதனின் வாய்மையும்*

*சிறப்பாகச் சொல்லப்பட்டன*

*'கண்டொன்று சொல்லேல்'*

*என்பதும் ஏற்கப்பட்டது*

*உண்மை என்பது நெருப்புப் போன்றது.*

*அது சட்டத்திற்கே பயன்படும்.*

*வாழ்க்கைக்குப் பயன் படாது என்ற*

*மன அழுத்தம் விளைந்தது.*

### திருவள்ளுவரின் நோக்கு

*யாருக்கும் எவ்விடத்தும்*

*சிறு தீங்கும் தராத சொல்லைச்*

*சொல்லுதலே வாய்மை*

*(உண்மை பேசுதல்) எனப்படும்.*

*இதுவே மனத் தூய்மைக்கும்*

*அவா இன்மைக்கும் அடிப்படை.*

*குற்றமற்ற நன்மையைத்*

*தருமானால் பொய் கூட*

*வாய்மை ஆகலாம்.*

(1-10-87)

## இதுவோ இன்றைய நிலை

*இசை : ஆடுவோமே - பள்ளுப் - பாடுவோமே*

### எடுப்பு

பாடுவோமே துயர் பாடுவோமே
பாழுஞ் சனாதனம் பரவியதேயென்று - பாடு

### தொடுப்பு

பார்ப் பானை அய்யரென்ற காலம்வந்தது
பாரில் அதை வளர்க்கச் சங்கம் வந்தது
ஏய்ப்பார்க்குக் கால்பிடிக்கும் காலம் வந்தது
ஈனருக்கு ஏவல்செய்யும் நாளும் வந்தது. (பாடு)

### முடிப்பு

எல்லோரும் ஒன்றெனும் காலமும் எங்கே
ஏமாற்றும் பொய்யருக்குக் காலமும் இங்கே
நல்லோரைப் பெரிய ரென்னும் காலமும் எங்கே
அன்புள்ள தொண்டருக்குத் துன்பமும் இங்கே. (பாடு)
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை எங்கே
உண்டுகளித் திருப்போர்க்கு வந்தனை இங்கே
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய்ந்து போனோம்
வீணருக் குழைத்துடலும் ஓய்ந்து போனோம். (பாடு)
நாமிருக்கும் நாடுநம தென்பதெப் போது
நமக்கெல்லாம் உரிமையாய் ஆவதெப் போது
பூமியில்சிலர்க்கு நாம் அடியானோம்
பொதுமைப் புதுவிதிகள் காண்பதெப் போது. (பாடு)

**குறளியம் : 1-8-82**

## திருக்குறள் நம் மறை - நெறி

## என்பதனால்

# நாம் பெறும் தெளிவுகள்

*திருக்குறள் அடிப்படைச் சிந்தனைகளை வழங்குகிறது.*

*திருக்குறள் மாந்தரை மாந்தராக வாழ வைத்து, அறிஞராக்கித் தெய்வமாக வழி கோலும்.*

*திருக்குறள், குடும்பத்தை முதல் அடிப்படைத் தொகுதி யாகக் கொண்டு, அறஞ்சார்த் தியங்கும் குமுகாயத்தைப் படைக்கும்.*

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களும்., வாழ்பவர் களும் தெய்வங்கள். இந்த உருவ வழிபாடுகளே அடி தொழலுக்கும், சேர்தலுக்கும், பின்பற்றற்கும் கருப்பொருளாகும்.*

*இறைமை (கடவுள்) உணர்வு பெருமைக் குரியது. அறிவும், உணர்வும் மிக்குற்ற காலை தோன்றும். 'ஆரா இயற்கையாய் அவா நீப்பின் வருவது இறைமை நிலை, இறைமை தனியொரு பொருளன்று; உருவன்று; அஃதோர் பேரின்ப நிலை.*

*வாழ்வாங்கு வாழ மேற்கொள்ள வேண்டியது 'அறம்'*

*வாழ்வாங்கு வாழும் இல்லற வாழ்க்கையாக அறத்தை அடையலாம்.*

*கடவுள் என்பதை எளிய பிழைப்புக்கு தாக்கியது கொடுமை; அச்சத்திற்கு தாக்கியது மடமை; ஏமாற்றலுக்கு தாக்கியது அடிமை; எதிர்பார்ப்புக்கு தாக்கியதோ போலித்தனம்.*

*உரிய வழியில் பொருளீட்டற்கும் துய்த்தற்கும் உரிமை உண்டு. பொருள்கள் உருவாக்கங்களே உயர்வு.*

*ஈதல், இசைபட வாழ்தல், ஒப்புரவு, பகுத்துண்ணல், ஒத்தறிதல் முதலியன பண்பாட்டுச் சின்னங்கள்.*

*ஒருவன், ஒருத்தி ஒழுக்கம், கற்பு, காதல் முதலியன வழிவழிக் குமுகாய உயிர்பாற்றல்கள்.*

*அரசர், அல்லது ஆட்சியாளர் நாட்டில் (நாட்டு மக்களின்) பணியாளர்களே அவர்கட்குரிய தகுதிகள் நம் மறையா வகுக்கப்படும். இரந்து வாழும் நிலைமை உருவாக்கும் ஆட்சியாளர் அழிக்கப்பட வேண்டும்.*

*உழவே உயர் தொழில்.*

*ஊழ் என்பது உலகின் இயல்பாக இயங்கும் இயற்கையின் இயக்கமே. தலைவிதியே முன்னைப் பிறப்பின் பயனோ அன்று நன்மைகளும் தீமைகளும் தம் செயல்களால் விளைவனவே, மோட்சம் (மேலுலகம்) நரகம் (கீழுலகம்) என்ற கற்பனைச் சிறப்புகளையும், இழிவுகளையும் நம் வாழ்வின் காலத்திலேயே நாம் அடைகிறோம். இவற்றைப் பொருளால், புகழால், மனைவியால், மக்களால் இவ்வுலகில் அடைகிறோம்.*

*நட்பும், நாணமும், மானமும, குடிமையும், நம்மால் பேணப்படும் நாற்றிசைகள்.*

*கயவர்கள் ஒறுக்கப் பெற வேண்டியவர்கள் மட்டு மல்லர். கரும்பைப் போல் கசக்கிப் பிழிந்து, கொல்லப் பெற வேண்டியவர்கள்.*

*நல்ல குடும்பம் நல்ல, வலிவான, ஆற்றல் மிக்க செழுமை யுள்ள குழந்தைகளை நல்கும். இன்பத்துப் பாலின் இல்லப்பயனை ஈனும்.*

*திருக்குறள் மறை எனக்கொள்வேதர் பிறவிக் கடலை முழுமையாகக் கடப்பர்; இடைக்கண் முரியார்; அரைக் கிணற்றுள் விழுந்து அல்லல் அடையார்.*

*1-2-90*

**– வேலா**

# உரைவீச்சில் சாயும் உடலங்களை மீளச் செய்வது

*உயிர்வாழப் பொருள் தேவை அதற்காகத் தாயையும் தன்பெண்டு பிள்ளைகளையும் விற்றா பொருள் தேடுவான் ஒருவன்? தாயையும் தன் பெண்டு பிள்ளைகளையும் இணைத்த உழைப்பால் மானத்தோடு உயிர் வாழலாம்; பொருள் தேடலாம். இதையே நம் மறை ஒப்பும். அதைப் போலத் தமிழை, திருக்குறளை முகநக நட்புப் போல் நம்பிக்கையின்றி மேடையில் பேசியும் எழுதியும் விற்றா உயிர் பிழைக்க வேண்டும்? பொருள் திரட்ட வேண்டும்? பொருள் படைத்தவனே தமிழை - திருக்குறளை ஆயிரம் ஆயிரமாய் விற்கிறான். விற்கிற விரைவில் கலப்பும் அழிப்பும் பேறு செய்கிறான் இத்தகையோரை எப்புலமை கொண்டவர் எனினும் அவரை இனம் கண்டு ஒதுக்கிவிட நாம் பழக வேண்டும். அவர்கள் ஏன் இந்நிலையை அடைந்தார்கள்? ஆம் ... அவர்களின் நெஞ்சத்தில் தமிழால் வாழ முடியும், திருக்குறளால் வாழ முடியும் என்ற நம்பிக்கை இல்லை. அவர் களின் நம்பிக்கை மாற்றுக் கருத்துகளிலும் வேற்றுமொழி களிலும் மண்டியிட்டுக் கெஞ்சி மண்ணில் சாய்கின்றன. இந்தச் சாயும் உடலங்களை நாம் எவ்வாறு மீட்பது? அவர்களும் தமிழர்களாம்!*

**குறளியம் – 1–9–89**

# யாருக்கு வாக்கு?

நம்மை இன்று அலைக்கழிப்பது பிறப்பால் அதிகாரம் என்பதே. அரச மரபுரிமைபோல் தலைவர்களின் கான்முளையுரிமை குடியரசு நாட்டிலும் கோலெடுத்தாளுகிறது. அதனை நிலை நாட்டுவதற்காக எல்லா வழிகளையும் செயற்படுத்துகிறார்கள். இக்குறை ஆளும் கட்சியிலும் உள்ளது. எதிர்க் கட்சியிலும்தான் உள்ளது. இத்கையோர் மக்களில்சிலரைத் தம் இழிசெயல்களில் வீழச் செய்து எப்படியும் வாழலாம் என்பதை நிலைப்படுத்திப் பிறப்பால் தலைமை என்பதை வகுக்க நினைக்கிறார். இதனால், பிறப்பால் கட்சி என்ற ஒன்றும் முளைத்து விடும் போல உள்ளது. இவற்றை வீழ்த்தியாக வேண்டும். வீழ்த்தவல்லது யாது? அஃது அன்றும் இன்றும் ஒன்றேதான். அதுதான் மக்கள் தம் உரிமைக்குரல்; ஒத்த சிந்தனை; உரத்த முழக்கம். இவற்றைத்தான் தெய்வப் புலவர் ‘கெடுக உலகியற்றியான்’ என்றும், தேய்க்கும் மடை என்றும் கூறுகிறார். இந்த அரிய கருத்துகளை நாம் அடிப்படைச் சிந்தனைகளாகப் பெற்றுள்ளோம். இவற்றால் உணர்த்தப் பெற்றுள்ள நாம் நல்லரசை வகுக்க வேண்டிய காலக்கட்டத்தில் இன்றுள்ளோம்.

**குறளியம் – 1–11–89**

# மதிப்பியலில் குறைவானவர்களே

*மது உண்பவர்,*

*புகழுக்கு உரியவர் அல்லர்*

*வீரத்திற்கு உரியவர் அல்லர்*

*சான்றோர் போற்றுதலுக்கு உரியவர் அல்லர்*

*தாயின் மகிழ்ச்சிக்கு உரியவர் அல்லர்*

*பழிநாணும் பண்புக்கு உரியவர் அல்லர்*

*அழியாமையை அழிக்க உரியவர் அல்லர்*

*அறிவைப் பெற உரியவர் அல்லர்*

*ஊராரின் பாராட்டுக்கு உரியவர் அல்லர்*

*கமுக்கத்தைக் காக்க உரியவர் அல்லர்*

*அவர் ... அவர் ...*

*- இதில் இருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன?*

*- மதுக் குடிப்போரும் மதுக் கொடுப்போரும் நம் மதிப்பியலில் குறைவானவர்களே!*

**குறளியம் – 1-5-90**

## இணைப்பு - 1

# வாழ்வுக் குறிப்புகள் - சில

*20-12-1937 - (தி.பி. 1968 நளி6) வேலா பிறப்பு.*

*18-12-60 - பாட்டியார் இயற்கை எய்துதல்.*

*19-11-61 - வேலாவின் திருமணம்.*

*9-11-63 - தந்தையார் இயற்கை எய்துதல்.*

*65 - வேலா நிறுவனத் தொடக்கம்.*

*67 - திருக்குறள் திங்கள் காட்சி வெளியீட்டுத் தொடக்கம்.*

*77 - ஈழச் செலவு.*

*5-11-77 - அன்னையார் இயற்கை எய்துதல்.*

*5-11-82 - மூத்த மகளார் திருமணம்.*

*17-09-85 - பேரன் வேலரசு பிறப்பு.*

*12-11-89 - செமினி பார்சன் வணிக மையத்தில் வேலா நிறுவனக் கிளை தொடங்குதல்.*

இணைப்பு - 2

# வேலாவின் பொதுப் பணிகள் - சில

*14-11-76* - குழந்தைகள் நாள் விழாக் கொண்டாடல்.

*77* - பொங்கல் விழாக் கொண்டாட்டம் - தொடங்குதல்

*1-03-78* - ஊப்ளி மூவாயிரம் மடங்களின் தலைவர் செகத் குருவால் வீரசைவக் கதிரோன் எனப் பட்டம் வழங்கப் பெறுதல்.

*78* - பசுமைப் பணிமன்ற நிலவுக்கூட்டத் தொடக்கம்.

*78* - திருச்சி, திருக்குறள் பேரவை மாநில மாநாடு.

*15-08-80* - குறளியம் மாதிகை வெளியீடு தொடங்குதல்.

*22-08-80* - பெரியார் மாவட்டத் திருக்குறள் பேரவை அமைப்பாளர்.

*80* - இரத்தினகிரி மாநாடு - தி.பே. மண்டலச் செயலாளர்.

*8-02-81* - கோவை மாநாடு.

*22-08-81* - அவலூர்ப்பேட்டை - கருத்தரங்கு.

*81* - திருவண்ணாமலை மாநாடு - விரிவுரை.

*13-09-81* - திருச்சி மாவட்ட தி.பே. மாநாடு.

*15-11-81* - குழித்தலை தமிழ்க் காசு விழாத் தொடக்கவுரை.

*22-12-81* - சேலம் மாவட்ட தி. பே. மாநாடு.

*20-12-81* - பெரியார் மாவட்டத் தி.பே. செயற்குழுக் கூட்டம்.

*13-05-89* - குறள் நெறிக் காவலர் - பட்டம்.

*15-01-90* - திருக்குறள் செம்மமல் - பட்டம்.

*13-04-90* - குறள்நெறிச் செம்மல் - பட்டம்.

## இணைப்பு - 3

# வேலா அவர்கள் செய்த குறளாயப் பணிகள்

*1-12-83 - குறளாயந் தொடங்கும் வேட்கை வெளியிடப் பெற்றது.*

*15-01-84 - திருக்குறளார், ச. தண்டபாணி தேசிகர், பதின் கவனகர் பெ. இராமையா ஆகியோர் முன்னர்த் தொடங்கப் பெற்றது.*

*தேசிகர் அவர்களுக்குக் குறளியப் பொன் விரலாழி புனைந்து பாராட்டு எடுக்கப் பெற்றது.*

*15-04-84 - வெள்ளையறிக்கை ஆய்வுக் கூட்டம் நடத்தியது. நாடு தழுவிய நாற்பத்தொருவர் ஆய்விற் பங்கு கொண்டனர்.*

*10-06-84 - திருச்சி. தமிழகப் புலவர் குழுக் கட்டடத்தில் விதி முறைகள் பகுதி பகுதியாக ஆய்வு செய்யப்பட்டன. முத்தமிழ்க் காவலர் விருந்தோம்பினார். தமிழ் நாடும் அயல் மாநிலமுஞ் சேர்ந்து எழுபத்தொருவர் வந்து விதிமுறை ஆய்விற் பங்கு கொண்டனர்.*

*25-06-84 - குறளாயக் கூட்டத்திற்கு அடிகளார் வருகை புரிந்து, 'திருக்குறட் பணியில் தீவிரவாதம்' என்ற பெயரிட்டுக் குறளாயச் செயன் முறையைத் திருக்குறட் பேரவையின் 'அறிஞர்குழு' - ஆய்ந்து முடிவை கூறுவதாகத் தீர்மானம் செய்தார்.*

*-08-84 - குறளியம் விதிமுறைகளைத் தொகுத்து வெளி யிட்டது.*

*2-08-84 - சேலம் தமிழ்ச் சங்கத்தில் விதிமுறைகள் முற்றும் படிக்கப் பெற்று, நாடு தழுவிய அறுபத்து நால்வர் தம் ஒப்புதல் பெற்றது. புலவர் திரு. மி.மு. சின்னா ண்டார் முன்னின்று நடத்தினார்.*

*5-10-84* - தெ. ஆ. மாவட்டம் வளவனூரில் குறளாய முதற் கிளை கொள்ளுதல்.

*6-10-84* - மாலை புதுவைக் கிளை அமைப்பு முயற்சியிற் பங்கு கொள்ளுதல்.

*20-01-85* - புதுவை மாநிலக் கிளை தொடங்கி, முத்தமிழ்க் காவலர் தலைமையில் வாழ்த்துரைத்தல்.

*10-03-85* - சென்னை பாவாணர் நூலக அரங்கத்தே திருக் குறளார் தலைமையில் சென்னைக் கிளை தொடக்கமாயது.

*28-04-85* - நெல்லை மாவட்டம், கோவை மாவட்டக் கிளைகள் தொடங்கப்பெற்றன.

*12-05-85* - மாநிலக் குறளாயச் செயல் வீரர்கள் கூட்டம் வள்ளுவர் கோட்ட அரங்கத்தில் நடந்தது. மாநிலத் தழுவி 74 பேர்கள் வந்திருந்தனர்.

*15-01-86* - ஈரோட்டில் தெய்வப் புலவர் திருவுருவப் பட ஊர்வலம், இசையரங்கம், உரையரங்கம் ஆகிய வற்றுடன் நடைபெற்றது.

*16-02-86* - செயன்முறைக் கூட்டம் நடத்தி ஆட்சிக்குழு அமைப்புச் செய்தது.

*23-, 24-05-86* - வேலா நிலையத் திறப்பு விழா, திருக்குறள் முற்றோதுதல் செய்தது. 19 பேர்கள் செயற்குழு உறுப்பினராயினர்.

*15-06-86* - மூதறிஞர் செம்மல் வ.சுப.மா. வருகைபுரிந்தார்

*16-08-86* - சென்னையில் செயற்குழு கூட்டம். பெருங்கவிக் கோவுக்குப் பட்டமளித்துப பாராட்டுதல்.

*17-08-86* - குறளியம் ஏழாம் ஆண்டுத் தொடக்க விழா தொலைக்காட்சிக்கு நேர்காணல்.

*19-10-86* - நீலமலை மாவட்டக் குறளாயத் தொடக்கவிழா.

*26-01-87* - பெங்களூர் தூரவாணி நகர் திருக்குறள் விழாவிற் பங்கு கொள்ளல்.

*9, 10-5-87* - காரி, ஞாயிறு நாள்களில் குறளாய மாநிலச் செயற்குழுக் கூட்டமும், குறளாயத் திருமணமும்

திருவண்ணாமலை திருவூடல் தெருவில் நிகழ்ந்தன.

12-07-87 - மதுரைக் குறளாய மாநாடு.

11-10-87 - கோவை மாவட்டக் குறளாய மாநாடு.

15-01-88 - குறளாயச் சுற்றம் நடாத்திய தெய்வப் புலவர் விழா, ஈரோடு.

22-01-88 - கலைஞர் தலைமையில் பெருங்கவிக்கோ மகள் பூங்கொடி திருமணம் குறளாயத் திருமணமாக நடாத்தி வைத்தல்.

28-02-88 - தலைநகரில் நல்லாட்சிக் கருத்தரங்கு நடத்தியது. 114 பேர்கள் வருகை செய்து கருத்துத் தந்தனர்.

13-03-88 - பாவாணர் நூலக அரங்கில் நல்லாட்சிக் கருத்தரங்கு நடந்தது. 99 பேர் வருகை தந்தனர்.

23-07-88 - தமிழ் வழிக் கல்வி இயக்க ஊர்வலத்தில் வள்ளுவர் கோட்டம் முதல் தேரடித் தெருவரை நலிந்த உடலொடும் நடந்து வருதல்.

10-09-89 - சென்னை மாவட்டக் குறளாய மாநாடும் தமிழ் வழிக் கல்வி இயக்கச் செயற்பாட்டுக் கருத்த ரங்கும்.

9-12-89 - சென்னை சைதாப்பேட்டை திருவள்ளுவர் குரு குலத்தில் திங்கள் தொடர் பொழிவுத் தொடக்க விழா.

15-01-90 - புதுவை மாநிலக் குறளாய மாநாடு

18-06-90 - குறளாய வெளியூர் நிலவுக் கூட்ட, முதல் கூட்டம் திருச்செங்கோடு.

7-07-90 - குறளாய வெளியூர் நிலவுக் கூட்டம் குழித்தலை, தமிழ்க்காசு நினைவு இலக்கியக் குழு.

**இணைப்பு - 4**

# வேலா வரைந்த குறளாயக் குறிக்கோள் உரைகள்

| | | |
|---|---|---|
| *1-12-1983* | - | *இதழ் மேலட்டை, புதியதோர் குறளிய உலகு படைப்போம்.* |
| *1-07-83* | - | *திருக்குறள் நம் மறை என்ற ஆசிரியவுரை.* |
| *1-08-84* | - | *மாற்றம் வேண்டும் - நுழைவுத் தேர்வு - ஆசிரிய வுரை* |
| *1-10-84* | - | *வினைத்திட்பம் என்பது மனத்திட்பம் ஆசிரிய வுரை.* |
| *1-02-85* | - | *உய்யும் வழி ஒன்றே ஆசிரியவுரை* |
| *1-03-85* | - | *சொல்வதைச் செய்வோம் வாரீர், ஆசிரியவுரை.* |
| *1-04-85* | - | *குறளாயம் காலத்தின் கட்டாயம், துணைத் தலையங்கம்* |
| *1-11-85* | - | *'திருக்குறள் பேசுவார்'* |
| *1-12-85* | - | *இதுவே குறளாயம். அட்டைப் பொதிவு.* |
| *1-01-86* | - | *குறளாயத்தார் யார்? ஆசிரியவுரை* |
| *1-03-86* | - | *அட்டையில் அமைந்த உரை 'மதுவிலக்கு' குறளியம் குறளாயம்.* |
| *1-09086* | - | *ஆசிரியவுரை கடைசிப்பத்தி.* |
| *1-01-77* | - | *நீ, நான் என்ற முன்னிலையுரை* |
| *1-02-87* | - | *குறளாயம் பற்றிய உரையின் முற்பகுதி.* |
| *1-06-87* | - | *'பாழடைந்த மக்கள் பண்பாடடைவது எக்காலம் 'ஆசிரியவுரை'* |

| | | |
|---|---|---|
| *1-03-88* | - | *நல்லவனை ...... ஆசிரியவுரை* |
| *1-06-88* | - | *மொழியா? இனமா? பண்பாடா? ஆசிரியவுரை.* |
| *1-10-88* | - | *திருக்குறள் நம்மறை - ஆசிரியவுரை* |
| *1-12-88* | - | *திருக்குறள் நம்மறை - ஆசிரியவுரை* |
| *1-0-88* | - | *திருக்குறள் நம்மறை - ஆசிரியவுரை* |
| *1-03-89* | - | *திருக்குறள் நம்மறை - ஆசிரியவுரை* |
| *1-09-89* | - | *திருமண நிகழ்முறை வெளியிட்டது.* |
| *1-10-89* | - | *ஒழுக்கமுடையோரே உயரியர் - ஆசிரியவுரை* |
| *1-11-89* | - | *யாருக்கு வாக்கு ”* |
| *1-03-90* | - | *சொல்லியமைக்கு .......* |
| *1-04-90* | - | *தமிழ் வழிக் கல்வி இயக்க மாநாடு உரைவீச்சு.* |
| *1-05-90* | - | *மன்றாடுகிறோம் ஆசிரியவுரை* |

**இணைப்பு – 5**

# அறிஞர்கள் அன்பர்கள் பெருமக்கள் வேலாவைக் குறித்துரைத்த நன்மொழிகள்

*வீரசைவத் திருநெறித் தொண்டர் - சாந்தலிங்க இராமசாமி அடிகளார்*

*போர்க்குண வேலா - குன்றக்குடி அடிகளார்*

*திருக்குறள் செம்மல் - முனைவர் கி. வேங்கட் சுப்பிரமணியம்*

*குறட்பணியாளும் அரசு - கவிஞர் கோ. இளஞ்சேரன்*

*குறளாயச் செம்மல் - பாட்டுச்சிற்பி முருகு சுந்தரம்*

*திருக்குறள் நெறிபரப்பும் தலைமைத் தொண்டர் - முனைவர் ஆறு. அழகப்பன்*

*செந்தமிழ்த் தொண்டர் - புலவர் ஆ. பழநி*

*குறளாயக் கோமான் - புலவர் இரா. இளங்குமரன்*

*குறளாயக் கோமான் - பாவலர் இறையரசன்*

*குறளாயம் கண்டதமிழ் - கழக ஆட்சியாளர்*

*இரா. முத்துககுமாரசாமி*

*திருக்குறள் ஏந்தல் - புலவர் இரா. வடிவேலன்*

*தாடியில்லாத் திருவள்ளுவர் - பெரியவர் செ.ந. குப்புமுத்து ஐயா*

*குறள்வேள் - தமிழ்ச்சுடர் மீ.சு.இளமுருகு பொற்செல்வி*

*வள்ளல் கோ வேலா - பெருங்கவிக்கோ*

*வா.மு. சேதுராமன்*

*பண்பட்ட வேலா - பேரா. ந. இராமநாதன்*

*குறள்நெறிச் செம்மல் - பேரா. கு. மோகனராசு*

*நம்மறை வேலா - ஈ.ழ. வேந்தன்*

*கொள்கை வள்ளல் - பேரா. க. அரங்கசாமி*

*குறளியச் செம்மல் - பாவலர் கடலூர் மணிமாறன்*

*குறளியச் செம்மல் - புலவர் குடந்தை கதிர் தமிழ்வாணன்*

*தமிழ்க் கொண்டல் - பேரா. வளவனரசு*

*குறளாய அந்தணர் - பேரா. மு.ச. சிவம்*

*குறளியம் தோற்றிய குரிசில் - பெரும்புலவர் வி.பொ. பழனிவேலனார்*

*குறளியக் கோமகன் - பாவலர் அழகிறைவன்*

*வரலாறு படைக்க வந்த வேலா - கவிஞர் முருகொளி*

*தெருளியலார் வேலா - கவிக்குயில் சி. தேவதாசன்*

*நாவழகர் நம் வேலா - பாவலர் குமரநடவரச ஈவப்பனார்*

*பெம்மான் வேலா - மன்னை இராசமாணிக்கம்*

*குறட்செம்மல் - பாட்டுத் தென்றல் பொதிகைச் செல்வன்*

*வாழ்வாங்கு வாழும் வளம்பெறு செம்மல் - கவியோகி சுத்தானந்த பாரதியார்*

“எங்கள் தமிழும் இனிய குறள்நெறியும்
இங்குப்பா ராட்டுவார் இல்லாமல் - மங்குமோ
என்ற கவலை எழுங்காலம் வேலாவும்
நன்றுகாப் பேனென்றான் நான்.”

**- பெரும்புலவர் மீ. தங்கவேலனார்.**

# முன்னுரை

***1984*** *ஆம் ஆண்டு.*

*குறளாயப் பொழிவுக்காக ஈரோடு சென்றிருந்தேன்.*

*ஈரோட்டில் இப்பொழுது உள்ளதுபோல் எனக்குத் தொடர்பு இல்லாத காலம் அது. அடுத்துள்ள பவானியில் என் இளந்தைப் பருவ நண்பர் பாவலர் பொதிகைச் செல்வர் விழாவொன்றுக்கு அழைக்கப் பங்காற்றியுள்ளேன். குறளாய வேலா அவர்களையே சேலம் விழாவொன்றிலேயே முதற்கண் சந்தித்திருக்கிறேன். இந்நிலையில் ஈரோட்டில் என்னை அறிந்தாரும், நான் அறிந்தாரும் அரியர்.*

*குறளாயக் கூட்டத்திற்கு வந்த யான், நேரே நிகழ்ச்சிக்கே போக வாய்த்தது.* **வேலா** *இருந்து வரவேற்றார். மேடைக்கு முன்னே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது, ஒரு பெரியவர் பொன் நிறத்தவர்; தூய வெள்ளைக் கைந்நூலாடை சட்டை, மடிப்புக் குலையாத் துண்டு அணிந்த கோலத்தராய் - மென்னடையில், புன்முறுவல் தவழ வந்தார். அவர் வருகையைக் கண்ட அளவில் வேலா முன்னுற நடந்து, வணக்கமிட்டு அழைத்து வந்தார். என்னருகில் வந்ததும் அப்பெரியவர்க்கு என்னை அறிமுகம் செய்து வைத்துவிட்டு, "இவர்கள் ஈரோட்டு முதன்மை மகனார் என வழங்கப்படுபவர்; திருக்குறள் ஆர்வலர்;* **குப்பு முத்து ஐயா** *என்பது பெயர்" என்றார்.*

**"மொய்த்துவளர் பேரழகு மூத்த வடிவென்கோ"** *என்ற* **சேக்கிழார் அடிகள்** *வாக்கு. இத்தகைய பெருமகனார் ஒருவரைக் கண்ட பெருமையில் இருந்து வெளிப்பட்டதாகத் தான் இருக்க வேண்டும்" என என்னுள் எண்ணினேன். அடுத் திருந்த நாற்காலியிலே அவர் அமர்ந்தார். நானும் அமர்ந்தேன்.*

*"இந்தக் கூட்டங்களாலும், இந்தப் பேச்சாலும் என்ன பயன்? வழக்கமாகக் கேட்பவர்கள் 40, 50 பேர்கள் கேட்க, ஒருவர் ஆராய்ச்சி என்னும் பெயரால் சிலவற்றைச் சொல்ல, கூட்டம்*

கலைந்து செல்ல, மீண்டும் கூட, இதனால் என்ன நன்மை?" என்றார் ஐயா குப்பு முத்து.

எனக்குப் பெரியவர் சொல். 'ஆழ்ந்த ஓர் உள்ளெண்ணம்' கொண்டு அவர் உரைப்பதாகப் பட்டதே ஒழியச், சிறிதும் வேறாகத் தெரியவில்லை. அமைதியாக, "இதனைப் பயனாக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என நினைக் கிறீர்கள்? அதனைத் தெளிவுபடுத்தினால் - அவ்வழி உதவும் என்றால் நாம் நடைமுறைப்படுத்தலாமே!" என்றேன்.

"நானும் சில கூட்டங்களில் சொல்லிவிட்டேன்; பழையபடி பழையபடி இதுதான்; மாற்றமில்லை" என்றார்.

"நான் புதியவன் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்" என்றேன். அரங்கில் ஆராய்ச்சி செய்வதை விட்டுவிட்டு நம் கருத்துகளைத் தெருவுக்குக் கொண்டு செல்லவேண்டும். அங் குள்ளவர்கள் வாழ்க்கையை வளப்படுத்துவதற்குத் தக்கபடி எடுத்துச் சொல்ல வேண்டும். பாட்டு கதை நாடகம் இப்படிப்பட்ட முறைகளை மேற்கொண்டால் தான், படியாத மக்களுக்கும் நம் கருத்துப் பரவும்; பயன் செய்யும்" என்றார்.

"உங்கள் திட்டம் வரவேற்கத்தக்க திட்டம்தான்! நாம் நம் கருத்தைப் பரப்புவதற்குரிய எளிய இனிய வழியைத் தானே சொல்கிறீர்கள்; இதில் என்ன தடை?" என்றேன். "என்னவோ தெரியவில்லை. நானும் சொல்லிப் பார்க்கிறேன். இந்தக் கூட்டம் மட்டும் இல்லை. எல்லாக் கூட்டங்களும் படித்தறிந்த சிலர் பேசிக் கலையும் கூட்டமாக இருக்கிறதே அல்லாமல், ஏழை எளியவர்களின் பக்கமோ, குடிசை குப்பப் பக்கமோ போக வில்லை" என்றார்.

"நாம், மாதம் தோறும் நடத்தும் நிலவுக் கூட்டத்தை ஊரூர்க்கும் தெருவுக்கும் கொண்டு செல்லலாமே என்றேன்". அமைதியானார் பெரியவர்.

கூட்டத்தில் அன்று அவர் வாழ்த்துரை வழங்கினார்; யான் என் பொழிவில் பெரியவர் நெஞ்சப்பதிவைச் சுட்டிக் காட்டி அவர்தம் நேரிய ஆர்வத்தையும் உரைத்தேன். வேலா சிந்தித்தார். "அப்படியே செயற்படுத்தலாம்" என்றார். அதன் விளைவே **குறளாயம்**. அதுவரை ஈரோட்டிலேயே நடத்திக் கொண்டிருந்த முழுநிலவுக் கூட்டத்தை ஊர் ஊராகக் கொண்டு

செல்லும் நடைமுறையை மேற்கொண்டதாகும். பெரியவர் குப்பு முத்து அவர்கள், அறக்கட்டளை அமைப்புக்கு எந்தக் குறளாய நிறுவனர் வழிகாட்டியாக இருந்தாரோ, அவர்க்கே வழிகாட்டியாகிவிட்ட செய்தி இதுவாம்.

வாழ்வில் எவரொருவர் புரிந்துகொண்டு செயலாற்றும் திறமுடையவரோ அவர் எவரெவர்க்கும் வழிகாட்டியாகத் திகழ்வார் என்பது வெளிப்படையாம்.

பெரியவர் குப்பு முத்து அவர்கள் வாய்ச்சொல் வீரர் அல்லர். செயற்பாட்டுச் செம்மல்; சொல்வது எவருக்கும் முடியும். ஆனால் செயல் புரிதலே தேவை என்னும் உறுதியாளர்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்னும் குறள்.

அதற்குப் பின்னர் ஈரோட்டுக் கூட்டங்களுக்குச் செல்லும் ஒவ்வொரு முறையும் முத்து அவர்களைக் கண்டு கலந்துரையாடும் மகிழ்வு வாய்ப்பதாயிற்று. வள்ளுவப் பொழிவா, வள்ளலார் பொழிவா நினைவுக் கூட்டங்களா மங்கலக் கூட்டங்களா முத்து அவர்கள் பெரும்பாலும் முன்னிலையராகவோ, வாழ்த்துநர் ஆகவோ, தலைவராகவோ இருப்பார். அவர் பொழிவு எளிமையும் இயல்பும் நடைப்பாடும் கொண்டதாக இருக்கும்! நீளப் பேசார். சுருங்கிய பேச்சும் செயற்பாடு பற்றியே அமையும். பிறர் நெடும் பொழுது பேசுவதையும் கூட்டம் கால அளவுக்கு மேல் நீளுதலையும் அவர் விரும்பார்.

குறளாயப் பொதுச்செயலாளர் **தங்கவேலனார்,** சித்தோட்டுப் பாவலர் **குமரநடவரச ஈவப்பனார்,** நகைச்சுவையரசு புலவர் **ஆறுமுகனார்** ஆகியோருடன் பெரிதும் கலந்து பேசும் வாய்ப்பு எனக்குக் குறளாயத்தில் உண்டு. அவ்வேளைகளில் குப்பு முத்து ஐயா அவர்களின் சால்பும் கொடையும் சிறப்பப் பேசப்படும்.

தாமே அறக்கட்டளை வைத்து அதன் வட்டி வரவுக்கு மேலாகவும் கொடை புரியும் பெருந்தகைமையர் அவர் என்பதை வியந்து கூறக்கேட்டு யான் மகிழ்ந்ததுண்டு.

முதியர் இல்ல உதவி, உடல் ஊனர் அமைப்பு உதவி, இசை நாட்டியப் பள்ளி உதவி, உயர்நிலைப் பள்ளியாக்கும் முயற்சி

என்பவற்றையெல்லாம் ஆறுமுகனார் அவ்வப்போது எடுத்துக் கூறுவார். வலக்கை செய்வதை இடக்கையும் அறியாமல் செய்வது என்பதற்கு எடுத்துக்காட்டு குப்பு முத்து. அவரிடம் கேட்டால் கொடுத்ததைப் பற்றிச் சொல்லவும் மாட்டார்! அது அவர்தம் பெருந்தன்மை என்பார். அதனைக் கேட்கும் போதெல்லாம் "பழங்கொடைஞர் வழிமுறை அற்றுப் போகாமல் நம் கண்காணத் திகழ்கின்றவரை நாம் போற்றிப் பாராட்டுதல் தலையாய கடமை அல்லவோ! அவர்தம் வரலாற்றை வரைதல் இளைஞர்க்கு எடுத்துக் காட்டாக விளங்குவது அல்லவோ என்ன எண்ணம் எனக்குள் எழும்பியதுண்டு.

அதற்கொரு வாய்ப்புப் போலப் பெரியவர்க்கு வயது எண்பது நடப்பது அண்மையில் அறிய நேர்ந்தது. வெள்ளி விழா (25) பொன் விழா (50 மணி விழா (60) பவழ விழா (75) என்னும் நிலைகளைத் தாண்டி வயிர விழாக்காணும் (80) பெருமகனார்க்கு அவர் தம் விழாவைச் சிறப்பாக எடுப்பதுடன், அவர்தம் வரலாற்றை வெளியிடுதலும் நலமாம் என்னும் எண்ணம் என்னுள் எழுந்தது. ஈவப்பரும் தங்கவேலரும் 'தக்க எண்ணமே' என்றனர்.

பெரியவர் விழா எடுத்தலையும் வரலாறு எழுதி வெளியிடு தலையும் விரும்பவில்லை.

"நம் புகழை நாமே கூறக்கூடாது. அது தற்பெருமையாகும்" என்னும் பேரெண்ணம் சங்கத்தார் காலம் முதல் தமிழகத்தில் இருந்ததால் நாம் இழந்த வரலாற்றுச் செல்வங்களும் பண்பாட்டு நாகரிகக் குறிப்புகளும் எண்ணற்றவை. அன்றியும் நமக்கு நம்மவரே எடுத்துக் காட்டாக இருந்த பெருமைகளை அறியாமல் அயல வர்களையே சான்றாக்கித் தமிழ் மண்ணைத் தாழ்த்தவும் இடந்தந்து விட்டோம். நம் வாழ்வு, நம் இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக வேண்டுமானால் நம் வரலாற்றை எழுதாமல் வெளியிடாமல் முடியுமா?" என்று யான் வற்புறுத்தியதன்பின் ஏற்றுக்கொண்டார் பெரியவர்.

பின்னர் எளிமையாக விழா எடுப்பது என்றும், சிறிய அளவில் வரலாற்று நூல் வெளியிடுவது என்றும் முடிவு செய்தோம். அதற்கேற்பச் சிலச்சில குறிப்புகளைக் கேட்டுக் கேட்டுப் பெறவும், பிறர் பிறர் கூற அறியவும் வாய்த்தவற்றைத் தொகுத்துக் குறுகியதொரு சுவடியாக்கும் முயற்சியை யானே விரும்பி ஏற்றுக்கொண்டேன்.

*பல்லபல குறள்கள் நடைமுறைப்பட வாழும் பெருமகனார் குப்பு முத்து அவர்களின் இனிய வரலாற்றை வரைய ஒரே ஒரு குறள் பெரிதும் தூண்டியது. அக்குறள்.*

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

*என்பதாம்.*

*எண்பது நிறைவு காணும் இளம் பெரு முதியவர் குணப் பெருந்தோன்றல் குப்பு முத்து அவர்கள் வள்ளுவப் பெருந்தகை வாழ்த்தியது போல் "நிலமிசை நீடுவாழ்வா" ராக. எப்பாலும் இன்பமே சூழ்வதாக!*



விரைந்து சென்று ஒரு மானை வீழ்த்தினான்.

உடன் வந்தவர்கள் வேறு வேறு பக்கங்களில் போயிருந்த தால் தானே எரியூட்டி, மானை வாட்டினான்.

அதனை எடுத்துக்கொண்டு வந்த பெரியவரையும் அவருடன் வந்தவரையும் பசிதீர உண்ணச் செய்தான்.

அருகிலே இருந்த அருவியைச் சுட்டிக்காட்டி நீர் பருகச் செய்தான்.

பசியும் களைப்பும் நீங்கிய முதியவர் தம் சுற்றத்தினருடன் வழி நடையைத் தொடங்கக் கருதினார்.

எதிர்பாராமல் எதிரே வந்து பசித்துயர் மாற்றிய இளைஞனின் உதவிக்கு நன்றி கூறக் கருதினார்.

அவர் குறிப்பை உணர்ந்த இளைஞன் அவர் நன்றியு ரையைக் கருதாதவனாய், 'பெரியவரே காட்டிலே இருக்கும் என்னிடம் சிறந்த அணிகலம் வேறு எதுவும் இல்லை என்று சொல்லி மார்பில் கிடந்த முத்து மாலையையும் கையில் கிடந்த கடகத்தையும் கழற்றித் தந்தான்.

இளைஞன் செயல் பெரியவருக்கு வியப்பில்மேல் வியப்பு ஆகியது. இப்படி உதவும் இவன் யாவன் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என விரும்பினார் **"நின்நாடு எது? நின் பெயர் என்ன?"** என்றார் பெரியவர்.

ஆனால் அவர் விருப்பத்திற்கு இடமில்லா வகையில், "பெரியவரே நீர் செல்லவேண்டிய வழி இதுவே" எனக் கைகாட்டி விட்டுக் காட்டுக்குள் சென்று, தன் தோழர் கூட்டத்தொடு சேர்ந்து விட்டான் அவன். பெரியவர்க்கு அவ்விளைஞன் யாவன் என்பதில் இருந்த ஆர்வம் பெருகியது! வழியில் போகின்றவர் வருகின்றவர் ஆகியவர்களிடம் அவ்விளைஞன் யாவன் யாவன் என்று கேட்டு அவன் **தோட்டி மலைத் தலைவன் நள்ளி** என்பதை அறிந்து கொண்டார்.

"நின் நாடு எது? நின் பெயர் எது? என்று கேட்டும் கூடத்தன்னைக் காட்டிக் கொள்ளாமல் உதவும் உயர்ந்த வள்ளல் தன்மையனாக இவன் இருக்கின்றானே! இப்படி இருப்பார் அரியர்! மிக அரியர்!" என வியந்தார். தம் வியப்பைத் தம் அளவில் நிறுத்தி விடாமல் தமிழ் உலகம் கடந்த ஈராயிரம்

*ஆண்டுகளுக்கு மேலாக உணர்ந்து கொண்டாடும் வகையில் ஒரு பாட்டாகப் பாடி வைத்தார். அப்பாட்டு புறநானூற்றில் (150) உள்ளது. அதனைப் பாடிய புலவர் பெயர் வன்பரணர் என்பது. அவர் நிகழ்ந்த நிகழ்ச்சியை நிகழ்ந்தவாறு கூறி, நிறைவில்*

"எந்நாடோஎன நாடும் சொல்லான்
யாரீரோ எனப்பேருஞ் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
நளிமலை நாடன் நள்ளியவன் எனவே"

*எனப்பாடி முடித்தார்.*

**வள்ளல் முத்து**

*புறநானூற்றில் காணும் இக்காட்சி இன்றும் காண முடியாத தாய் இல்லை! கண்ணாரக் காணலாம்! காதாரக் கேட்கலாம்! ஒருவர்க்கு என்ன, ஒன்பதின்மர்க்கு என்ன, பல ஒன்பதின்மர்க்கு, - 'உதவி செய்தேன்' என்பதைக் காட்டிக் கொள்ளாமல், அறவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெரியவர் - எண்ப தாண்டு நிறைந்த பெரியவர்* ***"ஈரோட்டுப் பெருநகரில் வாழ்கிறார்! அவர் பெயர்" குப்பு முத்து"*** *என்பது.*

**முதன்மை மாந்தர்**

*1984இல் ஈரோட்டு அரிமா சங்கத்தார் நகரின்* ***முதன்மை மாந்தர்*** *என ஒருவரைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்தனர். அத்தீர்மானத்தின் சின்னமாகத் தோற்றம் வழங்கியவர் ஐயா* ***குப்பு முத்து*** *அவர்கள். அரிமா சங்கம் ஒரு பெருவிழா எடுத்தது. மாவட்ட ஆட்சியரை அழைத்தது .அவரைக் கொண்டு பொன்னாடை போர்த்தி* ***'நகர முதன்மை மாந்தர்'*** *என்னும் விருது வழங்கிப் பாராட்டியது. அவர்க்கு முன் அவ்விருது பெற்றார் எவரும் இலர்'. பின்னும் அவ்விருது பெற்றார் எவரும் இலர்'. முத்து பெற்ற முதன்மைச் சிறப்பு அது.*

*முத்துவுக்கு இம்முதன்மை எதனால் வாய்த்தது? அவர்தம் தொண்டே இப்பேற்றைக் கொண்டு வந்து சேர்த்ததாம்.*

**பெற்றோர்**

*ஐயா, குப்பு முத்து ஈரோட்டில் வணிகத் தோன்றலாய் வளவாழ்வுடன் விளங்குகிறார். அவர் பிறந்தது ஈரோட்டுத் திண்டலை அடுத்துள்ள* ***செங்கோடன் பாளையம்*** *ஆகும்.*

இவர் தம் தவத்தந்தையார் **நல்லண்ணக் கவுண்டர்** என்பார். தவத்தாயார் **மாராயம்மாள்** என்பார்.

பெற்றோர் பெயரீடே, அவர் தம் சிறப்பை வெளிப்படுத்துமே. '**நல்லண்ணர்**' என்பது எத்தகைய நயத்தகு பெயர்! அருமை அன்னையார் பெயரும் தான் என்ன? '**மாராயம்**' என்பது புறப்பொருளில் பொலியும் துறைகளுள் ஒன்றேயன்றோ! அது, அரசர் புகழும் அரியவீரர் பெறும் பேறாகும். "மறவேந்தனிற் சிறப்பெய்திய விறல்வேலோர் நிலையுரைத்தன்று" என்பது அதன் இலக்கணமாகும்!

ஊர்ப்பெயர்தான் எத்தகையது? "செங்கோடன்" என்பது எத்தகைய சிறந்த செவ்விய பெயர்? செங்கோடு என்ன, செங்கோட்டு வேலர் என்ன! **நல்ல தமிழ்க்குடியினரின் இயல்பான ஊர்ப் பெயரும் ஆட்பெயரும் தூயதாக எப்படி இருந்தன என்பதற்கு எடுத்துக் காட்டாம் பெயர்கள் இவை.**

**மூன்றாம் முத்து**

**முத்து** என்னும் பெயர் தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் ஆண் பெண் இருபாலர்க்கும் வழங்கப்படும் பெயரேயாம். ஆனால், '**குப்பு முத்து**' என்னும் பெயர் அரிதேயாம். அவ்வருமை எப்படி ஏற்பட்டது, இம் முத்துவுக்கு?

'பிச்சை' என்னும் பெயர் கேட்டல் மிகுதி. பிச்சையா, பிச்சம்மாள் என இருபாற் பெயரும் உண்டு. அவ்வாறே மூக்குப் பெயரும் மிகுதி. மூக்கம்மாள், மூக்காயி முதலிய இருபாற் பெயர்களும் உண்டு. இப்பெயர்களைக் கொண்டே அக்குழந்தை யின் பிறப்பு வரலாறு எவராலும் அறியக் கூடியதாகும்.

முதற்குழந்தை பிறந்து இறந்து, பின்னே இரண்டாம் குழந்தை பிறந்து அக்குழந்தையும் இறந்து போக, மூன்றாம் குழந்தையாவது உயிரோடு தங்கவேண்டும் என்று இறையை வேண்டி அத்தெய்வத்திடமிருந்து பிச்சை பெறுவதுபோலப் பெற்றபிள்ளை பிச்சை எனவும், இக்குழந்தை எங்கள் குழந்தை அன்று தெய்வத்திற்கு உடைமையாகப் பட்டபிள்ளை என்பதற்கு அடையாளமாக மூக்குக்குத்தி ஒப்படைத்துள்ளோம் என வழங்கும் பெயர்கள் மூக்கையா மூக்கம்மாள் எனவும் வழங்குவன. இவற்றுக்கெனச் சடங்குகள் செய்வதும் உலக வழக்கேயாகும். குப்புமுத்து என்பதும் அப்படிப்பட்ட பெயர்களுள் ஒன்றேயாகும்.

முத்துவுக்கு முன்னே ஒரு குழந்தை பிறந்து இறந்தது. பின்னும் அப்படி ஒன்று ஆனது. மூன்றாம் குழந்தையே முத்து. இக் குழந்தையாவது உயிரோடு இருக்கவேண்டும் என்று இறையருளை வேண்டி, முறத்தில் குழந்தையை வைத்துக் குப்பையைச் சுற்றி வந்து குப்பையில் கிடைத்த குண்டுமணியாகக் கொண்டனர். இது அவ்வட்டார வழக்காக இருந்தது. அது போலச் சடங்கு செய்யப்பட்ட பிள்ளை ஆதலால் 'குப்பை முத்து' எனப்பட்டார். அப்பெயர் பின்னர்க் குப்பு முத்து ஆகியது, முத்து பிறந்தது கி.பி. 28-1-1915 ஆகும்.

**ஒரு தனி மகனார்**

தனிமரம் தோப்பாகாது என்பது பழமொழி. ஒற்றைப் பிள்ளை பிள்ளை இல்லை" என்பதோர் கதையே உண்டு.

முத்துவோ தனிப்பிள்ளையாகவே இருந்தார். இனிதே வளர்ந்தார். பெருந்தக்க வாழ்வுத் தோன்றலாவே திகழ்கிறார். அடையாற்று ஆலமரம், ஒரு மரம் தானே! அதன் கீழ் எத்தனை ஆயிரம் பேர்கள் தங்கலாம்! மேலே எத்தனை ஆயிரம் பறவைகள் தங்கியுள்ளன! ஆதலால் தனி மரம் தோப்பாகாது என்பதைப் பொய்யாக்கிய அடையாற்று ஆலமரம் போல் ஒற்றைப்பிள்ளை இல்லை என்னும் வரலாற்றைப் பொய்யாக்கிய மெய்வாழ்வு குப்பு வாழ்வாகும்.

சங்கப் புலவர் தனிமகனார் போலவும், திருப்பாடல் தனியன்கள் போலவும் தனிச்சிறப்பு மிக்க பெருமகனார் என்பதை ஊரும் உறவும் உணரப்போலும் முத்து ஒரு பிள்ளையாகத் திகழ்ந்தார்.

சங்கப் புலவருள் ஒருவர் பெயர் குப்பைக் கோழியார் என்பது. இப்பொழுது குப்பைக் கவிஞர் என ஒருவர் சிறப்பொடு வாழ்ந்து வருகிறார்.

குப்பை என்பது குவியல் என்னும் பொருளது. அது மிகுதிப் பொருளும் தரும். "மணியின் குப்பை" என்பது இலக்கிய வழக்கு. இங்கே குப்பை முத்து என்பதை முன்பின் மாற்றினால் முத்துக் குப்பை ஆகிவிடும். உயர் குணங்களுக்கெல்லாம் உறைவிடமாகத் திகழப் பிறந்த பிள்ளைக்கு இப்பெயர் இலக்கணப் பெயரே ஆகிவிட்டதாம்?

**பாங்குக்காரர்**

முத்துவின் தந்தையார் நல்லண்ணர், ஊரில் கொடுக்கல் வாங்கல் நடத்தும் செல்வராக இருந்தார் நிலபுலமுடைய வேளாண் தொழிலராகவும் இருந்தார். முறையாக வருமானவரி செலுத்தும் செல்வத் தோன்றலாகவும் அவர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஐந்து ஏர் பத்து ஏர் நடாத்தும் வேளாளர்க்கும் அத்தகு வருவாய் அமைதலோ, வருமான வரி செலுத்தும் நிலை அமைதலோ இல்லை. நல்லண்ணரின் கொடுக்கல் வாங்கல் வழியாக ஏற்பட்ட துணை வருவாய்ப் பெருக்கத்தின் விளைவே அதுவாகும்.

நல்லண்ணர் அந்நாளில் நிகழ்ந்த திண்ணைப் பள்ளியில் ஐந்து வரை கற்றவரே. உரைநடையில் அமைந்த பாரத இராமாயணக் கதைகளைக் கற்றதுடன் பிறர் கேட்கச் சொல்பவராகவும் விளங்கினார். அதுவே அவ்வூரில் பெரிய படிப்புத்தான். ஆயினும் ‘படித்தவர் வீடு’ என்று சொல்வதிலும் ‘பாங்குக்காரர் வீடு’ என்று செல்வச் சிறப்பு விளங்கவே திகழ்ந்தார். அவர்க்கு வாய்த்த ஒரே மைந்தர் முத்து ஆதலால், அவர் வளர்ப்புப் பற்றியோ, சீராட்டு - பாராட்டுப் பற்றியோ சொல்ல வேண்டியது இல்லை.

**இளமை**

“வாராது வந்த மாமணி” போன்ற நிலையில் பெற்றோர் களால் வளர்க்கப்பட்டார் முத்து. எண்பதாண்டு இளைஞராகத் திகழும் ஐயா குப்பு முத்துவின், இற்றைத் தோற்றத்தைக் காணு வார்க்கு அவர் தம் இளமை எழில் எப்படி இருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியது இல்லை! இளமையின் அழகு தனிச் சிறப்பினது. எல்லாப் பிறப்புகளுக்கும் பொதுவானதும்கூட. ஒரு குடிக்கு ஒரு மகனாகப் பிறந்து உயர் சிறப்புடன் வளர்ந்து வந்த அவர் கல்விப் பருவத்தை எட்டினார்.

**கல்வி**

அந்நாளில், இந்நாள்போல் 3 வயதுக்குள்ளாகவே முதுகு தாங்காத புத்தகச் சுமை சுமக்கும் குழந்தைகளின் ஆங்கிலப் பள்ளிகள் இருந்தது இல்லையே! வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்திலும் இல்லாத ஆங்கில மோகம் அல்லவா இந்நாள் கல்வி வணிகர்க்கு ஏற்பட்டுவிட்டது. குழந்தைகளின் பூங்காவாக மழலையர் பள்ளி விளங்கவேண்டும் என **மாண்டிசோரி**

அம்மையார் விரும்பிப் பள்ளிகளை உருவாக்கினார். ஆனால், அது இப்படிக் கொள்ளைக் கூடமாகவும் மூட்டை தூக்ககமாகவும் குழந்தைகளுக்கு இருக்கும் என்று அவர் நினைக்கவில்லை.

**கல்விக்கு முற்றுப்புள்ளி**

முத்து நம் முன்னோர் வழக்கப்படி அரிச்சுவடி கற்பதற்குத் திண்ணைப் பள்ளிக்குச் சென்றார். உயிர் எழுத்து 12 மெய்யெழுத்து 18 ஆகிய குறுங்கணக்கும், உயிர் மெய் 216 ஆகிய நெடுங்கணக்கும் கற்றார். வீட்டுக்கணக்கு கடைக்கணக்கு எழுதும் அளவில் கணக்கறிவு பெற்றார். ஐந்தாண்டுக் கல்வி அளவொடும் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

மேலே படிப்பதற்கு வேண்டும் செல்வ வாய்ப்பு இருந்தது. பெற்றோர்க்கு அறிவு வளமும் இருந்தது.

ஆனால் முத்துவை அவர்கள் மேலே பள்ளிக்குச் செல்ல விடவில்லை!

முத்துவும் செல்ல விரும்பவில்லை! இளமைத் துடுக்கோ கல்வியில் கருத்து இல்லாமையோ ஆசிரியர் கண்டிப்பு தண்டிப்பு களோ மேலே கற்பதற்குத் தடையாகிவிடவில்லை. பிறகு ஏன் முத்து மேலே படிக்கவில்லை?

ஐந்து படிக்கும்போதே 12, 13 வயது ஆகிவிடுவது அந்நாள் நிலை. அதற்கு மேலே வயது செல்வதும்கூட உண்டு. ஆதலால், ஓரளவு சிந்தித்துப் பார்க்கும் நிலை ஏற்படுவது இயற்கை.

"என்ன காரணத்தால் கல்வியைத் தொடராது நிறுத்தி னீர்கள்?" என நேரில் வினாவினேன். அவர் சொன்னார் என்ன படித்தாலும் குடும்பத் தொழிலாய உழவையும் கொடுக்கல் வாங்கலையும் தான் பார்க்கப் போகிறேன். அதற்கு வேண்டிய கல்வியைக் கற்றால் போதுமே;' என நிறுத்தினார்.

"என்ன இருந்தாலும் மேலேயும் கற்று விரும்பும் தொழிலைச் செய்வது கூட நலந்தானே" என வினாவினேன். அவர் தொடர்ந் தார்; "படித்தவர்களைப் பார்க்கிறோம்? படியாதவர்களையும் பார்க்கிறோம். அவர்களிடம் படிப்பை அன்றி வேறு எந்தப் பண்பாட்டிலும் நடத்தையிலும் வேறுபாடு தோன்றவில்லை. படியாதவர் எப்படி இருக்கிறாரோ அப்படித்தான் படித்தவரும் இருக்கிறார். அந்தப் படிப்பைத் தொடராமையால் ஒரு குறை

நேர்ந்து விடவில்லை" என்றார் பெரியவர்.

"நீங்களாவது படித்துப் படித்தவர் இப்படி இருக்கிறார்" என்பதற்கு எடுத்துக் காட்டாக இருந்திருக்கலாமே?" என்று கேட்க நினைத்தேன். ஆனால், படித்தவர்களுக்கெல்லாம் படிப்பினையாக விளங்கிக் கொண்டிருக்கும் அவரிடம் அதனைக் கேட்க வேண்டியதில்லை" என்று நிறுத்திக்கொண்டேன்.

தம் பெற்றோர் தம்மை மேலே படிக்க விடாததற்கு ஓர் உள்ளெண்ணம் இருந்தது என்றார். அது தம் ஒரே மகன் படித்து வெளியூர் வேலையைத் தேடிப்போய் விடக்கூடாது என்பது என்றார். மேலே படியாமைக்கு அதுவே பெரிய காரணமாயிற்று என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. ஒரே பிள்ளை எனப் பெற்றோர் கொடுக்கும் செல்வம், செல்வக் கேட்டுக்கும் கல்விக் கேட்டுக்கும் பண்பாட்டுக் கேட்டுக்கும் இடமாக இருத்தலை அறியும் நாம், பண்பின் கொள்கலமாகவும் குணக்குன்றாகவும் திகழும் குப்புவைப் பார்த்துப் பூரிக்கிறோம்.

திண்ணைப் பள்ளிக் கல்வியோடு நிறுத்திக்கொண்ட முத்து,தொழிலில் முழு அக்கறையோடு விளங்கினார். "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை; தாய் சொல் துறந்தொரு வாசகம் இல்லை" என்பதற்கு ஏற்ப நல்ல பிள்ளையாக வளர்ந்தார்.

**தொழிலும் தொண்டும்**

அக்கால முதியவர்களின் விடுதலைப் போராட்டம் எழுச்சி மிக்க இறைஞர்களையெல்லாம் வயப்படுத்தி ஆட்கொண்டது. அது முத்துவையும் ஆட்கொண்டது. அதற்கு வாய்ப்பாக ஈரோட்டுப் பெருநகரம் இருந்தது.

ஈரோட்டுப் பெரியவர் ஈ.வே.ராவுக்கு இணையாகப் பேராயத் தொண்டு (காங்கரசுத் தொண்டு) செய்தார் தமிழகத்தில் எவரும் இலர்" என்ற தமிழ்த் தென்றல் **திரு.வி.க.** வினால் பாராட்டப்பட்ட பெருமைக்குரிய **வைக்கம் வீரர்** வளர்ந்து வந்த நகர் அல்லவா ஈரோடு; எத்தனை போராட்டங்கள்! எத்தனை முழக்கங்கள்! எத்தனை ஊர்வலங்கள்! கூட்டங்கள்! இவை, காளைப் பருவ முத்தைக் கவர்வதில் வியப்பென்ன; தம் ஊரிலும் நகரிலும் நிகழும் நிகழ்ச்சிகளில் ஆர்வலராய்த் தொண்டராய்த் திகழ வளர்ந்தார் முத்து!

அவ்வளர்ச்சி, தொழிலைக் கெடுக்கவில்லை; தொண்டு வளர்ச்சியாகவே இருந்தது. அத்தொண்டின் முத்திரை நெஞ்சில் நிலை பெற்றே நின்றது. நெஞ்சில் நிறைந்த ஒன்று, நிகழ்ச்சியில் தானே வெளிப்பட வேண்டும்! அப்படி வெளிப்பட்ட பேறு பெருமைக்குரியதாம்!

**திருமணம்**

1942 ஆம் ஆண்டு இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆண்டு ஆகும். அவ்வாண்டே "வெள்ளையனே வெளியேறு" என்னும் முழக்கம் கிளர்ந்தது. விடுதலை வீறு கொண்ட அவ் வாண்டில் முத்துவுக்கு அகவை 27. அறிவறிந்த தொழிலரா கவும் தொண்டராகவும், தாமே குடும்பம் நடத்தும் தகுதியுடைய வராகவும் விளங்கிய பருவம். அப்பருவத்திலேயே திருமணம் நிகழ்ந்தது. அத்திருமணம் கைந்நூலாடைத் திருமணம் - கதர்த் திருமணம் - என்பது. அது விடுதலை வேட்கையர் அனைவரும் போற்றியும் பரப்பியும் வந்த முறைமையது ஆகும்.

இனித் திருமணத்தை நடத்தியவர் எவர்? **'அருமைக்காரர்'** என்பார் நடத்தினார். அவர் சிறப்பைப் பற்றி, "பிறையாயிரம் கண்டு பிள்ளையார்க்குப் பூசை செய்து, அருமை மணம் செய்தோர்கள் அருமை எடுப்பார்கள்" என்கிறது நாட்டுப் பாட்டு (உதவியவர் திரு. ஈவப்பர்) அருமைக்காரரே, முழுத்தக் கால் நடல் முதலாகத் திருமணக் கடமை புரிவார். தாய்மொழியில் சமுதாயத் தலைவர்களால் செய்யப்பட்ட திருமணங்கள் எப்படி யெல்லாம் மாறிப் போயின என்பதை எண்ணிப் பார்த்தல் நம் பண்பாட்டுப் பயனாம்.

கைந் நூலாடைத் திருமணம் நாட்டில் நிகழ்ந்ததற்குப் பல நோக்கங்கள் உண்டு. வெளிநாட்டுத் துணிக்கு நீக்கமும், உள்நாட்டுத் துணிக்கு ஊக்கமும் தருதல் வேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று முனைப்பான பேராயத் தொண்டரென நாட்டுக்கு உணர்த்துவது. இன்னொன்று கூட்டத்தில் பேசி நாட்டத்தில் கொள்ளாதவர் போல் இல்லாமல் காந்தியத்தைச் சிக்கெனக் கடைப்பிடிப்பவர் இவர் என்னும் முத்திரை பதிப்பதற்கு என்பனவாம். மொத்தத்தில் விடுதலைத் தொண்டர்கள் விரும்பியே ஏற்றுக் கொண்டது இத்திருமணமாகும்.

இதனால் பட்டு உடுத்து மணக்கோலம் காட்டவல்ல செல்வரும், பருத்த கைந்நூல் ஆடை அணிவதற்கு முன் வந்தனர்.

காந்தியடிகளின் இன்னா செய்யாமை (அகிம்சை)க் கொள் கைக்குப் பட்டு உடுத்தல் மாறானது என்பதும் தொண்டர் களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

'பட்டு' என்பதே அதனைத் தந்த புழு 'பட்டுவிட்டதால்' - இறந்து விட்டதால் - பெற்ற பெயராம், பல்லாயிரம் புழுக்களைச் சாகடித்து அதன் நூலைக் கொண்டு செய்யப்பட்ட பளபளப்பு ஆடை **'கலை'**யாடையன்று; **'கொலை'**யாடை என்பதை உணர்ந்த உணர்வே அவ்வகைத் திருமணங்கள் நிகழ அடிப்படை ஆயிற்றாம்.

கைந்நூலாடைத் திருமணம் செய்ய முத்து மட்டுமே முடிவு செய்திருக்க முடியுமா? அருமைத் தந்தையார் நல்லண்ணரின் நல்லெண்ணமும் இருந்திருக்க வேண்டுமே! அவர்க்குப் பெண் கொடுத்த குடும்பத்தவர் இசைவும் இருந்திருக்க வேண்டுமே! ஆதலால், இருவீட்டாரும் இயல்பாக ஏற்றுக் கொண்ட இனிய முறை ஆகியது அத்திருமண முறை.

பழந்தமிழ் நாட்டுத் திருமண முறை நம் பழைய நூல் களிலேயே இடம் பெற்றுள்ளது (அகநானூறு 86, 136)

முழுமதி ஒளி செய்யும் நாளில் (முழுத்த நாளில்) இரவுப் பொழுதில் திருமணம் நிகழ்ந்துள்ளது.

திருமணப் பந்தல் மணல் பரப்பப் பட்டு, இலைதழை பூத்தொங்கல் வனப்புச் செய்யப்பட்டது.

ஒளி விளக்கு ஏற்றப்பட்டது.

மங்கல மகளிர் புதுக் குடங்களில் நீர் எடுத்து வந்து மணமக்களை நீராடச் செய்து, புத்துடை அணிய வைத்துள்ளனர்.

பொதுச் சடங்குகள் செய்து செய்து பழகிப் போனவர் களும் மக்களைப் பெற்றவர்களுமாகிய மகளிர் நால்வர் திருமணச் சடங்கு நடத்தினர்.

"கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு."

என்று அப் பெண்களே மணமகளை நோக்கி வாழ்த்து உரைத் துள்ளனர்.

*உணவைப் பற்றிச் சொல்லவில்லையே என்று எண்ணத் தோன்றும்.*

*திருமணம் தொடங்குவதற்கு முன்னரே உழுந்தக்களி முதலிய ஊட்ட உணவுகளைத் தந்து உண்ட நிறைவின் பின்னரே திருமணம் நிகழ்த்தப்பட்டுள்ளது.*

*பசியோடு மங்கல விழாவில் கலந்து கொள்ளாமல் நிறை வோடு பரபரப்பு இல்லாமல் திருமணம் நிகழவும், வேலைக் கேடு இல்லாமல் நிகழவும் நம் முன்னோர் கண்ட முறை இதுவாம்.*

*திருமண முறை மாறியதுடன் காலமும் நிலையும் எல்லாம் எல்லாம் மாறிப் போயினவே!*

*முத்துவுக்குத் திருமணம் அருமைக்காரர் நிகழ்த்தி வைத்த அருமையை நினைத்தாவது பிறர் பற்றிக் கொள்ள வேண்டுமே!*

**துணை நலம் :**

*ஈரோட்டை அடுத்துள்ள ஊர்* ***குட்டிப் பாளையம்.*** *அதனைச் சார்ந்த சிற்றூர்* ***கவுண்டர் புதூர்*** *என்பது. அவ்வூரில் மணியக்காரராக விளங்கியவர்* ***குமாரசாமிக் கவுண்டர்*** *என்பார். அவருடைய சிறப்பைச் சொல்ல வேண்டியதில்லை. ஏன்?" நீ என்ன மணியம் வேலைக்கா போகப் போகிறாய்?" என்று படிப்பாளிகளிடம் கேட்கப்பட்ட கேள்வியே, அவ்வேலைச் சிறப்பைப் புலப்படுத்தும். "அவன் செய்யும் மணியத்துக்கு அளவே இல்லை." என்னும் தொடரே, அவ்வேலையின் அதி காரத்தை அறிவுறுத்தும்! இத்தகைய செல்வாக்கும் செல்வச் சிறப்பு மிக்க குடும்பத்திலேயே பாங்குக்கார நல்லண்ணர் பாங்காகப் பெண் பார்த்தார். பெண்ணின் பெயர்* ***சாமியாத்தாள்*** *என்பது. குப்புவுக்கு ஒப்பு இவர் என்று சொல்லத் தக்க தோற்றப் பொலிவும் பண்பு நலமும் ஒருங்கே அமைந்தவர். ஆதலால், இருதலை ஒரு புறாப் போல முத்துவும் சாமியும் உள்ளத்தால் ஒன்றி* ***'முத்து-சாமி'*** *என்னும் பெயர்க்குரியவர் போல இல்லறம் நடத்தி வந்தனர்.*

**இல்லறம் :**

*நல்ல மாமன் மாமி : அழகும் அருமையும் அமைந்த கணவர்! சீராட்டுக்கும் பாராட்டுக்கும் உரிய பெற்றோர்! மாப்பிள்ளைக் கொடை, தெரிந்த கொடை, தெரியாக் கொடை*

என்பவை எதுவும் அறியாக் காலம். பெரியவர்கள் சொல்லை மதித்து நடத்தலும், கணவனை மதித்து மனைவியும், மனைவியைப் போற்றிக் கணவனும் வாழ்வதே இயல்பாகப் பழகிப் போன குடித்தனப் பாங்கு. இவற்றைக் கொண்ட இனியவர் இல்வாழ்வு எப்படி இருக்கும்? மழை பெய் என்றவுடன் பெய்யும் மழையைப் பெற்ற உழவன் மகிழ்ச்சிபோல மகிழ்விருக்கும் என்று வள்ளுவர் வகுத்த வாய்மை வாழ்வு முத்துவுக்கும் சாமிக்கும் அமைந்ததாம்.

**வணிக நாட்டம்**

செங்கோடன் பாளையத்தில் உள்ள நில புலங்களைக் கண்காணிப்பது, தந்தையார் நடத்திய கொடுக்கல் வாங்கல் தொழிலுக்கு உதவுவது என முத்துவுக்கு ஆறு ஆண்டுகள் சென்றன. கூட்டுக் குடும்பம் ஆதலால் சிக்கல் எதுவும் இன்றிச் சீராக நடந்தது. ஆனால், முத்தின் எண்ணம் வணிகத்தில் ஈடுபட்டது. அன்றியும் எதிர்காலத்தில் குழந்தைகளின் கல்வி யையும் கருதியது. அதனால், 1948இல் ஈரோட்டில் குடியிருக்கத் தொடங்கினார் முத்து.

"நகரத்தை நாடியது; நலவாழ்வுக்காகவா? நாகரிக வாழ்வுக் காகவா? இல்லையே! ஏதாவது தொழில் செய்ய வேண்டும், வாணிகம் புரிய வேண்டும் என்பதுதானே நோக்கம். அதற்கு ஏற்ப முத்து தம் உறவினர் முத்துசாமிக் கவுண்டர் என்பாரைத் துணையாகச் சேர்த்துக் கொண்டு தொழில் தொடங்கினார்.

முதற்கண் மிதிவண்டிக் கடை ஒன்று வைத்தனர். பின்னர் அரிசி ஆலை ஒன்று நடத்தினர். இவ்வாறு இருவரும் இணைந்த கூட்டுப் பங்குத் தொழில் ஏழு ஆண்டுகள் நிகழ்ந்தன.

**வணிக விரிவு :**

முத்துவின் எண்ணம் மேலும் விரிந்தது. பயறு வகைகள் பருப்பு வகைகளை **ஆக்கிரா** முதலிய வட நாட்டுப் பெருநகரங் களிலிருந்து வாங்கி விற்கும் முயற்சியை மேற்கொண்டார். பட்டறிவும் துணிவும் மிகமிகத் தொழிலும் வாணிகமும் புதுப் புது வழிகளால் விரியத்தானே செய்யும்! அவ்வகையில் பருத்தி விதை வாணிகம் மேற்கொண்டார். 1000 மூடை 2000 மூடை என **மைசூரில்** இருந்து பருத்தி விதையை இறக்குமதி செய்து விற்பனை புரிந்தார். இவ்வகையில் 1959 வரை உள் நாட்டளவில் ஏற்றுமதி இறக்குமதி வாணிகமாக நிகழ்ந்தது.

முத்துவின் எண்ணம் ஈரோட்டுச் சூழல் துணி வணிகத்திற்கு மிகமிக ஏற்றதாக இருப்பதை உணர்ந்தது. அதனால் அவ்வாண்டிலே மற்றை வணிகங்களை விடுத்துச் சவளிக் கடை வைத்தார். அதற்குத் தம் ஓரகத்தார் (சகலர்) கூட்டைச் சேர்த்துக் கொண்டார்.

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையார்த்தற்று"

என்பார் **திருவள்ளுவர்.** ஒரு செயலைச் செய்யும் போதே அதன் சார்பான செயல்களையும் செய்து முடித்தல், பழகிய யானையைக் கொண்டு புதிய யானையைப் பிடிப்பது போல நலஞ்சேர்க்கும் என்பது இதன் பொருளாம். இதற்குத்தகச் சவளி வணிகத்தில் ஈடுபட்ட முத்து, விசைத்தறி போடும் திட்டத்தையும் மேற்கொண்டார். முதற்கண் 24 தறிகளை அமைத்துத் திறம்பட நடத்தினார். சவளிக்கடையும் தறி நெசவுமாகிய இரண்டும் சார்புத் தொழிலாகி, ஒன்றுக்கு ஒன்று உதவியும் ஊக்குவிப்புமாகிச் சிறந்து வந்தன. பொருள் நிலை, முயற்சியால் மேலும் மேலும் சிறப்படைய, வாடகையாக இருந்த நிலையங்களைச் சொந்தமாகவே உருவாக்கிக் கொள்ளும் உயர்வும் உண்டாயிற்று. அது போலவே வாடகையில் குடியிருந்த வீட்டையும் விட்டுச் சொந்தமாகவே மனையிடம் வாங்கி வளமான மனை எழுப்பும் வாய்ப்பும் ஏற்பட்டது.

### பெற்றோரைப் பேணல்

"முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்' எனச் சேர அரசன் ஒருவன் சிறப்பிக்கப் படுகிறான். அவனுக்குரிய சீர் சிறப்புகள் பலப்பல. எனினும், அவன் தன் பெற்றோரைப் பேணிய பெருஞ் சிறப்பே பிறசிறப்புகளிலும் மேலாகத் திகழ அதனை எடுத்துக் கூறி, "முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்" எனப் புலவர்களால் பாடு புகழ்பெற்றான்.

அவனைப் போலவே முத்தும் தம் பெற்றோரைப் பேணுதலில் தனி விருப்புக் கொண்டிருந்தார். தம்மோடு வைத்துக் கொண்டு சிறப்பாகப் போற்றினார். அன்னை மாராயம்மாள் அகவை 70 வரை வாழ்ந்தார். அன்னையார் மறைவுக்குப் பின்னர்த் தந்தையாரை ஈரோட்டில் தம்மோடு வைத்துக் கொண்டு பெருந்தக்க வகையில் பேணினார். அம்முதுமைப் பேணுதல் குடும்பச் சொத்துப் போல ஆகிவிட வேண்டும் அல்லவோ! ஆகிவிட்டால்

வழி வழியாகக் குடிநலம் சிறக்கும் அல்லவோ! அப்பேற்றைக் குப்பு செய்த பேற்றால், இன்று அப்பேற்றைப் பெறும் பேறும் இயல்பாகப் பெரியவர் முத்துவுக்கு வாய்த்துள்ளது. அன்பு மக்களாலும் அருமை மருமக்களாலும் இனிய பேரச் செல்வங் களாலும் இனிதுறப் பேணிப் போற்றும் பேறு பெறுகின்றனர்.

**தந்தையார் வழி :**

தந்தை நல்லண்ணரிடமிருந்து முத்து செல்வம் செல்வாக்கு பண்பாடு இவற்றை மட்டும் பெற்றார் அல்லர். கொடைத்திறமும் குமுகாயத் தொண்டும் கூடவே இருந்து கண்ணாரக் கண்டு களித்த காட்சிகள் அல்லவோ அவை?

உழவடைக் களத்திற்கும் வீட்டிற்கும் புலவர்கள் வருதல் உண்டு. அவர்கள் களம்பாடுதல், மனைபாடுதல் எனப் பாடிப் பரிசில் வேண்டுவர். களத்துக் குவியலில் இருந்து, பாடி வந்த புலவர்க்கு அள்ளி வழங்குவதையும் வீட்டில் விருந்தோம்பிக் கொடை புரிந்து விடுவதையும் இளம்பருவம் முதலே உணர்ந் திருந்தார் முத்து.

பாங்குக் கடை நடத்துபவர், கைம்மாற்று எனப்பணம் தரார். ஏனெனில், நாள்வழி வட்டி போட்டுப் பார்த்த வழக்கம் வட்டியில்லாமல் தருவதை இழப்பாகவே எண்ணுதல் இயல்பு. ஆனால், நல்லண்ணர் திருமணம் என்று வைத்து விட்டு அதற்கு வேண்டும் பொருள் முடைப்பட்டு எவரேனும் தம்மிடம் வந்து கேட்டால், அவர்களுக்கு வேண்டும் தொகையைக் கைம் மாற்றாகத் தந்து பின்னே பெற்றுக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். குடும்பங்கள் தழைத்து விளங்கப் பொருள் ஒரு தடையாக இருக்கக் கூடாது என அவர் கொண்ட நல்லெண்ணம் தம் தந்தையாரின் பெருமையாக முத்துவுக்கு விளங்கியது.

"அந்நாளில் ஒரு பவுன் 13 ரூபாய். 2 மூடை மஞ்சளை விற்றால் ஒரு பவுன் வாங்கலாம். அந்நாள் திருமணமும் ஆடம் பரமாக இராது. சிக்கனமாகவும் நடைபெறும். அதற்கும் முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு உதவுவது பெரிய உதவியாக அதனைப் பெற்றவர்களுக்கு இருந்தது. அதனால் குடும்பமே காலம் காலமாகப் பாராட்டும் பெருமை வாய்ந்தது. என் தந்தையாரின் நேர்மையும், சொல்லும் செயலும் ஒத்த நிலையும் கொடையுள்ளமும் பெருமைப்படத் தக்கனவாகவே இருந்தன." என்கிறார் முத்து.

**வாழ்க்கைத் துணைச்சீர்மை :**

*தந்தையும் தாயும் கொண்ட இல்வாழ்க்கை தம் வாழ்க்கைக்கு நல்ல எடுத்துக் காட்டாகவே இலங்கியது என்பதை எண்ணிப் பூரிக்கும் முத்து, தம் அருமைத் துணையின் பண்பு நலங்களையும் பாசத்தையும் எண்ணி உருகுகின்றார். அக அழகும் புற அழகும் அமைந்த அவ்வடிவு நெஞ்ச ஓவியமாகவும் நிழலோவியமாகவும் திகழ்வதைச் சுட்டிக் காட்டுகிறார்.*

*குடிநலம் பேணலில் அம்மையார் தனிச்சிறப்புக் கொண்டிருந்தார். அக்குடி நலம் சுற்றமாகவும் சூழலாகவும் விரிந்து சென்றது. பழகிய குடும்பங்களுக்கு நல்லது பொல்லது நிகழும் பொழுதில் முன்னின்று எல்லா உதவிகளும் செய்தார். மணமகள் ஒருத்திக்கு அணிமணிகள் வேண்டும் என்றால், தம் பொருள் கொண்டு போய்ப் பூட்டி அழகுறுத்தும் தாய்மைப் பண்பில் திகழ்ந்தார். ஏற்றத் தாழ்வு ஏட்டிக்குப் போட்டி சண்டை சச்சரவு என்பவை அறியா அமைதிப் பிறவி அது என்பதைக் கேட்டு அறியும் நாம் நம்மை அறியாமலே தனிப்பெரும் மதிப்புக் காட்டும் வாழ்வாகின்றது.*

*அவர் வாழும் போதே தனித்தனி நற்செயல்கள் பொதுப் பணிகள் செய்த அளவில் இருந்து அறக்கட்டளை அமைக்கும் திட்டத்தையும் முத்து மேற்கொண்டுள்ளார். நம் செல்வம் இப்படி நமக்கு இல்லாமல் பிறர்க்குச் செலவிடப்படுகின்றதே என்னும் எண்ணம் அவர்க்கு எப்பொழுதும் இருந்ததில்லை. பிறர்க்கு உதவி செய்வதில் துணையாக இருந்ததுடன் அவருமே விரும்பிச் செய்தார் என்பதை அறியும்போது முத்து கொடுத்து வைத்தவர் என்று மகிழ்கிறோம். அதைப் போலவே அம்மையார்க்கும் முத்து கணவராக வாய்த்ததால் அவரும் கொடுத்து வைத்தவர் என்று பாராட்டுதற்கு உரியவரே ஆகின்றார்.*

“புகழ்புரிந்த இல்இல்லார்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை”

*என்னும் குறள்மணியும்,*

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி”

*என்னும் குறள்மணியும் இருவர் வாழ்வாகவும் இணைந்து நடையிடுதல் எண்ணி மகிழத் தக்கதாம்.*

**மக்கட் பேறு**

முத்து-சாமியம்மையார் இனிய வாழ்வில் மக்கள் ஐவர் தோன்றினர். ஆடவர் மூவர். மகளிர் இருவர்.

மூத்தமகன் **வாசுதேவன்** என்பார். அவர் இளம் அறிவியல் பட்டம் பெற்ற படிப்பாளியானார். பொழில் வாய்ச்சி (பொள்ளாச்சி)த் திருச்செல்வம் **மகாலிங்கனார்** நிறுவனம் சார்ந்த விதை ஆய்வுக்குழும்பில் பணி பெற்றுச் சிறந்து விளங்கி வந்தார். துள்ளுந்து (பைக்) ஒன்றின் பின்னே இருந்து சென்ற போது நேர்ந்த ஒரு கொடிய நேர்ச்சியால் இயற்கை எய்தி ஆறாத் துயராக்கி விட்டார். அவர் இயற்கை எய்தியது 23 ஆம் அகவை என்பதை எண்ண, எவரையும் உருக்கத்தக்க செய்தியாம்.

அடுத்துப் பிறந்த மகளார் **சரோசினியார்** அவர் துணைவர் பேராசிரியர் **கறுப்பண்ணர்; பொறியியல்** மேனிலைப் பட்டம் பெற்றவர். இவர்களுக்கு ஆணும் பெண்ணுமாக மக்கள் இருவர் உளர். ஆண் பிள்ளை பொறிஞராகவும் பெண் பிள்ளை மருத்து வராகவும் திகழ்கின்றனர்.

மூன்றாம் மகனார் **குலசேகரன்** என்பார் பொறிஞர். அவர் தம் துணைவியார் **இராசேசுவரியார்** இளங்கலைப் பட்டம் பெற்றவர். இவர்களுக்கு ஒரு மகனார் உள்ளார். குலசேகரனார் சொந்த வணிகத்திலேயே ஈடுபட்டுள்ளார்.

நான்காம் மகனார் **கிருட்டிண மூர்த்தி** என்பார் இவரும் தம் மூத்தாரைப் போலவே வணிகத்தில் ஈடுபட்டுள்ளார். இவர்தம் துணைவியார் **சத்தியபாமா** என்பார். இவர்களுக்குப் பெண்மக்கள் இருவர் உளர்.

கடைசி மகளார் **சந்திரிகா** என்பார். அவர்தம் துணைவர் எலும்பு மருத்துவர் **மாணிக்கம்** என்பார். இவர்களுக்கு ஆண் மக்கள் இருவர் உளர்.

**மனைமாண்பு :**

மக்களைப் பெறுதல்; மனையறங்காத்தல்; சிறந்த செயல் களைச் செய்தல்; அவற்றைத் தம் மக்களும் பயிலுமாறு செய்தல்; அதன் பின்னர்த்தம் வாழ்வைப் பொது நலப்பணிக்கு ஆக்கல் என்பவை நம்முன்னையோர் கண்ட வாழ்வியல் கொள்கை யாகும். இதனைத் தொல்காப்பியம்,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இருந்ததன் பயனே."

என்று கூறும். "இன்ப நுகர்வு நிறைந்து முதிர்ந்த நாளில் தாம் கொண்டிருந்த இல்லறக் கடமையைத் தம் மக்கள் மேற் கொள்ளச் செய்து, தம் சுற்றத்தினருடன் தலைவன் தலைவியர் ஆகிய இருவரும் சிறந்த பொதுநலப் பணிகளில் ஈடுபடுதலே அம்முதுமைச் சிறப்பின் பயனாகும் என்பது இதன் பொருளாகும்.

இவ்வகையில் குடும்பத்தைச் செவ்விய முறையில் நடத்தி நன்மக்களைப் பெற்று, அவர்களுக்கு வேண்டும் கல்வியும் தொழிலும் வளமும் வாழ்வும் அமைத்த முத்துவும் சாமியும் உரிய காலங்களில் உரிய வகையில் மக்களுக்கு நன்மணமும் முடித்து வைத்து அவர்களும் மக்கட் பேற்றில் விளங்கச் செய்தனர்.

**ஓர் அவலம் :**

மேடும் பள்ளமும் சுழலும் இல்லாமல் இயல்பாக ஓடும் ஆற்றிலும், திடுமெனப் பெருகும் வெள்ளப் பெருக்கால் மேடு பள்ளங்களும் சுழல்களும் ஏற்படுவது உண்டு! அவ்வாறே, நான்கு மக்களுக்கும் மங்கல மனையறம் செய்வித்து மகிழ்ந்த அன்னை சாமியாத்தாள் தம் 60 ஆம் அகவையை எட்டி மணிவிழாக் காண வேண்டும் பொழுதில் 25-8-1985-இல் மாரடைப்புக்கு ஆட்பட்டுத் திடுமென இயற்கை எய்தினார்.

குடும்பம் கொண்ட கவலைக்கு எல்லையேது! ஈருடல் ஒருயிராய்த் திகழ்ந்த துணைவர் துயர்க்கு அளவேது! பெற்றவர் இழப்புப் போலப் பிள்ளைகளுக்கு இழப்பும், மனைவியார் இழப்புப் போலக் கணவர்க்கு ஓர் இழப்பும் உண்டா? தளர்ச்சிக்கு ஊன்றுகோல் உதவுவதுபோல் முதுமைக்கு இன்றியமையாதது துணை நலம். அத்துணை நல இழப்பு வீட்டளவில் இருப்பாரை வாட்டியே தீரும். வீட்டோடு நாட்டுத் தொடர்பும் நல்லியல் தொண்டும் உடையாரை வருத்தினாலும் வாட்டி விடுவது இல்லை. அவர்கள் தம் துயரைத் தொண்டாலே மாற்றிக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்றுவிடுவார்கள்.

**மக்கள் தொழில் விரிவு :**

ஐயா குப்பு முத்து அவர்கள் தம் அறிவறிந்த மக்கள் குடும்பப் பொறுப்பும் தொழிற் பொறுப்பும் ஏற்கும் நிலையை அடைந்த அளவில் அவர்களிடம் தம் பொறுப்புகளை விட்டுக் கண்காணித்து அறிவுரை கூறும் அளவில் அமைந்தார். மக்கள், கல்வித் திறம் செயல் திறம் ஆகியவற்றால் கால நிலைக்குத் தக வணிகத்தை விரித்தனர். உயர்ந்த துணிவகைகளை உருவாக்கி உள்நாட்டு வாணிகம் புரிவதோடு வெளிநாட்டு வாணிகம் செய்வதிலும் தலைப்பட்டனர். தில்லி, பம்பாய் முதலிய உள்நாட்டுப் பெருநகரங்களோடும் இங்கிலாந்து சுவீடன் முதலிய வெளிநாட்டோடும் வணிகம் செய்து வருகின்றனர்.

இவ்வகையில்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

என்னும் தந்தையார் கடமையும்,

"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல்லெனும் சொல்."

என்னும் மைந்தர் கடமையும் ஒருங்கே நிறைவேறலாயின.

**அறக்கட்டளை அமைத்தல் :**

குடி நலம் காத்த முத்துவுக்குத் தந்தையார் வழியே ஏற்பட்டிருந்ததும் தம்பேருளத்தால் வளர்ந்திருந்ததும் ஆகிய பொது நல நாட்டம் மிகுந்தது. தாம் ஓர் **அறக்கட்டளை** அமைக்க வேண்டும் என விரும்பினார். அப்பொழுது மக்களும் தக்க நிலையை அடைந்திருந்தனர். துணைவியாரும் உடனிருந்தார். குடும்ப ஒட்டுமொத்த எண்ணமாகவே அறக்கட்டளை அமைக்கும் திட்டமும் உண்டாகியது. அதனை எப்படி அமைப்பது?

முத்து தம் அண்டை வீட்டாரும் அன்பரும் ஆகிய **சண்முக சுந்தரம்** அவர்களிடம் தம் அறக்கட்டளை ஆர்வத்தை உரைத்தார். **வேலா. அரசமாணிக்கனார்,** தம் தந்தையார் **வேலாயுதனார்** பெயரில் பலப்பல அறக்கட்டளைகளைப் பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றில் அமைத்துத் தொண்டு செய்து வருவதை எடுத்துக் கூறி அவரைக் கலந்து பேசி முடிவெடுக்கலாம் என்றார்.

முத்துவும் சண்முக சுந்தரமும் தம் திட்டப்படி வேலாவைச் சந்தித்தனர். வேலா திங்கள் தோறும் **நிலவுக் கூட்டம்** என்னும் பெயரால் இலக்கியக் கூட்டங்களும் திருக்குறள் விளக்கங்களும் தக்கவர்களைக் கொண்டு நடத்தி வந்தார். வேலா தம் தந்தையார் காலத்தில் இருந்தே தமிழ்ப் பற்றுமையும் தமிழ்ப் புலவர் தோழமையும் கொண்டிருந்தார். பள்ளியில் படித்த நாளிலேயே முத்தமிழ்க் காவலர் **கி.ஆ.பெ. விசுவநாதரின்** திருக்குறள் பொழிவைக் கேட்டு அதன் மேல் பெரும் பற்றுமை கொண்டிருந்தார். **தவத்திரு குன்றக்குடி அடிகளார்** நிறுவிய திருக்குறள் பேரவையில் தொடர்பு கொண்டு கடமை புரிந்தார். பின்னே குறளிய இதழைத் தொடங்கியதுடன் குறளாயம் என்னும் அமைப்பையும் கண்டார்.

எல்லாச் சடங்குகளும் எல்லா நிகழ்ச்சிகளும் திருக்குறளை ஓதியே தொடங்க வேண்டும் என்பதும் திருக்குறளே நம்மறை என்பதும் வேலாவின் கொள்கைகளாகும். இவ் வேலாவை முன்னரே முத்து அறிவார் எனினும், அவர் அறக்கட்டளை பல அமைத்துப் பொதுப்பணி செய்தலை அறிந்திலர். ஆகவே அவரை அணுகி அறக்கட்டளை அமைப்பது பற்றிக் கலந்துரையாடினார். வேலா எப்படி எப்படியெல்லாம் பொதுப்பணி செய்யலாம் என்பதை விளக்கினார். அறக்கட்டளைப் பதிவு தொடர்பாகத் திரு. **வி.என். சுப்பிரமணியம்** என்னும் தணிக்கையரை அணுகி முறைப்படி பதிவு செய்துவிடலாம் என முடிவு கட்டினர்.

முத்து, சுப்பிரமணியத்தை அணுகி அறக்கட்டளைப் பதிவுக்கு ஆவன செய்தார். தணிக்கையர், குழு அமைத்தல், வரிவிலக்குப் பெறுதல் என்னும் சட்ட நடைமுறைகளையெல்லாம் எடுத்துரைத்தார். முத்துவோ, **“யான் எவரிடமிருந்தும் நன்கொடை பெற்றுப் பொதுப்பணி செய்யவோ அறக்கட்டளை அமைக்கவோ விரும்பவில்லை. என் வருமானத்தில் இருந்தே அவற்றைச் செய்ய விரும்புகிறேன். ஆதலால் குழு அமைத்தல், வரிவிலக்குப் பெறுதல் என்பவை வேண்டா”** எனக் கூறி அறக்கட்டளை அமைப்பை உறுதி செய்தார். தாமே ஒரு பெருந் தொகையை வைப்பு நிதியாக்கி அதன் வட்டியைக் கொண்டு தொடர்ந்து பொதுப்பணி செய்ய முடிவு செய்தார்.

"நாளை எனின் வேளை தவறும்" என்பது பழமொழி. ஆதலால், அதனைத் தள்ளிப் போடாமல் உடனே வைப்பு நிதி ஏற்பாடு செய்துவிட்டார். கொடுத்துப் பழகிய கை, இவ்வளவு அவ்வளவு என வரம்புடன் நின்று விடுவதில்லையே! ஆதலால் வட்டித் தொகையை விஞ்சிய அளவிலும் ஆண்டு தோறும் பொதுப் பணிக்குச் செலவிடுவது நடைமுறையாகி விட்டது முத்துவுக்கு! அறக்கட்டளையைத் தொடர்ந்து தம் மக்களும் அவர்கள் வழியினரும் செய்யவேண்டும் என்றும், அதனைச் செய்யமுடியா நிலைமை ஏற்படின் அரசே அதனை எடுத்துச் செய்யவேண்டும் என்று எழுதிவைத்துள்ளார். பெருந்தகை முத்து. செ.ந. குப்புமுத்து அறக்கட்டளை என்பது அதன் பெயர்.

**வள்ளுவர் வள்ளலார் பற்றுமை**

வேலாவைத் தொடர்பு கொண்டது நின்றுவிடவில்லை. தொடர்ந்தது. அது குறளாயத் தொடர்பு ஆகியது. திருக்குறள் தொடர்பும் ஆகியது. "வேலாவைக் காண்பதற்கு முன் திருக் குறளைப் பற்றி அவ்வளவாக நான் அறியவில்லை. அதன் மேல் பற்று ஏற்படவும் இல்லை. வேலாவைக் கண்டு பழகிய பின்புதான் அதன் அருமை பெருமைகளை அறிந்து கொண்டேன்" என்கிறார் முத்து.

"எனக்கு வள்ளலாரைப் பற்றியும் அவ்வளவாகத் தெரியாது. வள்ளலார் பெருமையை **மருத்துவர் அரச மாணிக்கனார்** தொடர்பு ஏற்பட்ட பின்னரே அறிய வாய்த்தது. அரச மாணிக்கப் பெயருடையவர் இருவரும் வள்ளுவர்க்கும் வள்ளலார்க்கும் என்னை வழிகாட்டி அழைத்துக் கொண்டனர். அவர் நிகழ்த்தும் விழாக்கள் கூட்டங்களில் தவறாமல் பங்கு கொண்டு மகிழ்கிறேன்" என்று மேலும் கூறினார்.

உண்மை இவையே எனினும், எவரே இப்படிச் சொல்வார். தம்மினும் அகவையால் இளமையான இருவரைத் தம் வழிகாட்டி என மனம் நிறைந்து சொல்பவர் எவர்? என்றும் பெருங்குணம் பெருங்குணமாகத் திகழுமே அல்லாமல் சுருங்கி விடுவது இல்லையே!

**கல்வி நிலையப் பணிகள்**

முத்து பிறந்த **செங்கோடன் பாளையத்தில்** அரசுத் தொடக்கப்பள்ளி ஒன்று உண்டு. அதன் பெற்றோர் சங்கத்

*தலைவர் முத்துவே. முத்தின் முத்தான தொண்டு என்ன செய்தது? தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்க முயன்றது. முயற்சிக்குத் தக்க வாய்ப்பு உண்டாக வேண்டுமே! இரண்டு கட்டடங்களோடு இருந்த பள்ளிக்குப் புதியவையாக நான்கு கட்டடங்கள் எழுந்தன. எட்டாம் வகுப்பாகவும் வளர்ந்தது. மேலும் என்ன? உயர்நிலைப் பள்ளி ஆக்கும் முயற்சியிலே ஊன்றியுள்ளார் முத்து. கருமமே கண்ணாயினார் எடுத்த செயல் நிறைவேறித்தானே ஆகும்!*

*முத்துவின் பிறந்த ஊர்ப் பள்ளி வளர்ச்சி இது என்றால் ஈரோட்டில் அவர் குடியிருக்கும்* **சென்னியப்பர் சாலை (C.N.C.** *சாலை)யில் உள்ள பெண்கள் தொடக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளி ஆக்கப்பட்டது. அதற்கேற்பக் கட்டடத்தை விரிவு படுத்தி யுள்ளார். அதனையும் உயர்நிலைப் பள்ளியாக்கும் முயற்சியை மேற்கொண்டு உழைக்கிறார். அதன் பெற்றோர் சங்கத்தலைவரும் அவரே ஆவர்.*

*இவ்விரண்டும் இவர் பள்ளிகளா? இல்லையே? அரசுப் பள்ளிகள் தாமே; எனினும் என்ன? "ஊருணி நீர், தென்றற் காற்று, மதி ஒளி, கதிரொளி, மழைப்பொழிவு, தண்ணீர்ப் பந்தல், சாலை வழி என்பவை எப்படிப் பொதுவானவையோ அப்படியே அறிவாளன் செல்வமும் பொதுவானது" என்பது ஒரு தனிப்பாடல் செய்தியாகும்.*

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"
"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான்கட் படின்"
"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"
"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு"

*என்னும் ஒப்புரவுக் குறள்மணிகள் வெளியிடும் உண்மை இது தானே?*

**கொங்கு வேளாளர் சங்கம்**

*வள்ளுவர் வழியும் வள்ளலார் வழியும் உலகளாவிய உயிரளாவிய விரிந்த பார்வையின. சாதி சமய மொழி இனக்*

கட்டுகள் அற்ற விரிவுடையன. ஆன்ம நேய ஒருமைப்பாட்டைப் போற்றி வருவன. அதனால் சாதி சமயம் முதலிய குறுகிய பார்வையைக் கொள்ளா. எனினும் தம் குடும்பத்தை உயர்த்து வதற்கு உழைப்பது போலக் குல உழைப்புக்கும், சுற்றத்தார் சுற்றப்பட வாழும் வாழ்வுக்கும் இவ்விரி நிலை தடையாவது இல்லை.

தன் சாதி, தன் சமயம் என்பவற்றின் வாழ்வே வாழ் வென்றும் பிறசாதி சமயங்களைக் கெடுத்தும் அழித்தும் கூடத் தன் சாதியும் சமயமும் வாழவேண்டும் என்று வெறி கொண்டும் ஆடும் ஆட்டமே சால்பு அற்றதும் கேடானதும் ஆகும்.

தொண்டர் முத்து, நகர முதன்மை மாந்தர் முத்து தம் குடிப்பெரு மக்களுக்கும் உரிமை அன்பு உடையவரே. ஆதலால் கொங்கு வேளாளர் மாவட்டத் தலைவராகவும் விளங்குகிறார். தம் சாதி அளவில் நில்லாத பொது மாந்தராக அவர் இருப்பினும் தாம் பிறந்த சாதிக்குரிய முறையான கடமை புரிவதிலும் அவர் பங்கு கொண்டிருப்பதும் எவ்விடத்தும் எவரிடத்தும் சாதி வெறி காட்டாதவராக இருப்பதும் பிறர் பிறர்க்குச் சிறந்த எடுத்துக் காட்டேயாம்.

**வண்மைச் சிறப்பு**

இனி இவர் தம் வள்ளன்மைப் பேற்றையேனும் எவரேனும் முற்றாக அறிவரா? பழுத்த மரம். "நான் இவர்க்குக் கொடுத்தேன்; இவ்வளவு கொடுத்தேன்; என்று சொல்லுமா? "போன பருவத்தில் தந்தேன்; இந்தப் பருவத்தில் தரமாட்டேன்" என்னுமா! அப்படியே முத்துவின் கொடையும் அமையும். "பிறர் பிறர் கூறக் கேட்டேன்" என்ற வன்பரணர் போன்ற நிலைக்கே நாம் ஆட்பட நேரும்.

ஆனால் கொடைக்கென ஒரு தனிச் சிறப்பு உண்டே? "ஓங்கி அடிக்கப்படும் முரசின் ஒலிகூட ஒரு காதத் தொலைவுக்கே (10 கல்) கேட்கும்! **ஆனால் கொடுத்தார் என்னப்படும் சொல் அடுக்கிய மூவுலகும் கேட்கும்** என்றது நாலடி.

மூவிடம் மட்டுமா கேட்கும்! முக்காலமும் கொடைப் பெருமை பேசவேபடும்.

கொடையிலும் சோம்பராக்கும் கொடை உண்டு. பிச்சையால் வயிறு வளர்க்க வாய்ப்பு உண்டு என்றால் அவர் வேலை செய்வாரா? உழைப்பை ஒழிக்கும் கொடை நாட்டுக்குக் கேடாவதே

ஆகும். ஆனால் பொது நலப்பணிக்கு உதவும் கொடை உள்ளதே அது கேடற்றது, பயன்மிக்கதும் ஆகும்.

**உடற்குறையர் நிலையம்**

குப்பு அவர்களின் கொடை பொதுப்பயன் மிக்கதாம். செவிக்குறை பேச்சுக்குறைப் பிள்ளைகளையும் பார்வை இழந்த குழந்தைகளையும் ஒருவர் தம் குடிசையில் வைத்துப் பேணி வருவதை அறிந்தார் முத்து. அவர் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்றார். அவர் பெயர் **முனுசாமி.** அவரிடம் தம்மை அறிமுகப் படுத்தாமல் பொது நிலையில் உரையாடினார்.

உடல் ஊனமுற்றோர் படும்பாட்டை உணர்ந்து அவர்கள் நலம் கருதி அத்தகையவர்களை அழைத்து வைத்துப் பேணி வருவதாகக் கூறினார் முனுசாமி.

அரசின் உதவி உண்டா? பொது மக்கள் உதவி உண்டா? என்று கேட்டறிந்தார். முனுசாமியின் பொருள் நிலை என்ன என்பதையும் கேட்டறிந்தார். தம் நெஞ்சத்தின் நேய உருக்கமே கைப்பொருளும் மெய்ப்பொருளுமாக முனுசாமியார் தொடங்கிய தொண்டினை எண்ணி உருகினார் முத்து.

முனுசாமியாரிடம், பொதுமக்கள் செல்வர்கள் உதவியை நாடிச் செல்லக் கூடாதா? இப்படியொரு விடுதி இருப்பதாகத் தற்செயலாக முதல் நாள் கேட்டறிந்தே தாம் நேரில் வந்ததாகக் கூறினார். முனுசாமியார் செல்வர்களையும் தொழில் தோன்றல் களையும் தேடித் தேடி அலைந்து ஏறி இறங்கி வந்ததையும் அனைவரும் கை விரித்ததையும் வருந்தி உரைத்தார். பெருந்துறைப் பகுதியில் **ஆனைப்பாரி மேட்டில்** அரசு நிலம் தந்ததை உரைத்தார். அதில் ஒரு சிறு கட்டடம் கட்டத்தாம் விரும்பு வதையும் உரைத்தார்.

அவர் நிலையையும் அவரிருக்கும் குடிசையின் நிலைமை யையும் ஊனர்களின் நிலையையும் உணர்ந்த முத்து உடனே தாம் 10000 உரூபா தருவதாகக் கூறிக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யத் தூண்டினார். இப்பொழுது அத்தொண்டு நிறுவனம் வாய்ப்பான கட்டடத்தோடும், ஊனர் தொகைப் பெருக்கத் தோடு அரசு பெருமக்கள் உதவியோடும் சீராக நடைபெற்று வருகிறது. எனினும் அதன் வளர்ச்சிக்கு முதலும் முதன்மையுமாக நின்றவர் முத்துதாமே! அதனால் அவர் தம் கொடைத்திறம் ஆங்குக் கல்வெட்டாகிக் கவின் செய்கின்றதாம்!

நீரில் எழுதிய எழுத்துப் போன்ற நிலையற்ற வாழ்வை நிலைபேறாம் கல்லெழுத்து வாழ்வாக்கிய முத்து "மன்னா உலகத்து மன்னுதல். கலையை நன்குணர்ந்த பெருமகனார். ஆனால். ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியமில்லை உயிர்க்கு" என்னும் உயிரூதியம் கண்டுவிட்ட முத்துவுக்கு இது ஒன்றுதானா புகழ் வரவு?

**மனவளர்ச்சி குறைந்தோர் நிலையம்**

கற்றோர் எண்ணிக்கை பெருகுகின்றது. பொருள் வளமும் உயர்கின்றது. மருத்துவ நலமும் விரிகின்றது. அறிவியல் பொறியியல் சிறக்கின்றன. ஆயினும் என்ன? நோயர் பெருகுகின்றனர். மனநோயரோ மிகப்பெருகுகின்றனர். மனவளர்ச்சி இல்லாப் பிறப்புகளும் பெருகுகின்றன. இதன் காரணம் என்ன?

நோய் தீர்க்கும் முயற்சி போலவே நோயாக்கும் போக்கு களும் போட்டி போட்டு ஒன்றை ஒன்று வெற்றி கொள்ளும் நிலையில் பெருக்க முறுகின்றன என்பதே பொருளாம். வறுமை நாடுகளில் மட்டுமன்று; வளர்ந்த நாடுகளும் இந்த நெருக்கடியில் இருந்து விலக்காகி விடமுடியவில்லை. நோயைத் தீர்க்கும் மருந்தே, நோயாக்கும் மருந்தாகவும் இருக்கும் நிலைமையே இஃதாகும். இந்நிலை உலக நலமாக அமைய முடியாது. இதனைக் கட்டுப்படுத்தாவிட்டால் வேறு கேடு வேண்டாமலே உலகம் விரைவில் மனநோயரும் மனவளர்ச்சி இல்லாரும் நீக்கமற நிறையும் காட்சியையே காண நேரும்.

மனவளர்ச்சியற்றவர்களைப் பேணிக் காத்து மனவளர்ச்சி பெறுவிக்கும் நிலையம் ஒன்று ஈரோட்டில் இருத்தலை அறிந்தார் முத்து. அந்நிறுவனத்திற்கு மனையிடமும் தேவைப்பட்டது. கட்டடமும் வேண்டியிருந்தது. முத்து, மனையிடம் பத்துச் செண்டு வாங்கி வழங்கினார். கட்டடத்திற்கு உருபா 25000 வழங்கினார். அந்நிலையம் மனவளர்ச்சி குறைந்த 120 பேர்க்கு மேல் கொண்ட சமுதாயத் தொண்டு நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்றது.

**பதினகப் பள்ளிகள்**

முத்து அவர்களின் கொடைவளம் பெற்றுச் சிறந்து வரும் பதினகப் பள்ளிகள் (Metriculation School) பலவாம். அவற்றின் கட்டடப் பணிக்காகப் பொருள் வழங்கியுள்ளார். ஒரு வகுப்பறை

உருவாக்க உரூபா 25000 ஆகும் என்ற கணக்கீட்டில் ஒவ்வோர் அறை கட்டித் தந்துள்ளார். அவ்வகையில் **பள்ளியூற்று** பதினகப் பள்ளி. **கொங்கு** பதினகப்பள்ளி என்பவை குறிப்பிடத் தக்கவை.

**நசியனூர்** மேனிலைப் பள்ளிக்கும் உதவ முன் வந்தார் முத்து. ஓர் அறைக்குப் பதினைந்தாயிரம் போதும் என்று அவர்கள் சொல்லியமையால் அத்தொகையை வழங்கியுள்ளார்.

தனி ஒருவருக்கு வழங்கும் கொடையிலும் இக்கொடை வழி வழிப்பெருமை சேர்ப்பது வெளிப்படையாம். பயிலும் மாணவர் உள்ளத்தில் தாம் பயின்ற பள்ளி நினைவும் வகுப்பறை நினைவும் கற்பித்தோர் நினைவும் பசுமையாக இருப்பவை, எத்தகு உயர்வு பெற்றாலும் அவ்வுயர்வுடன் தாமும் உயர்ந்து நிற்பவை இந்நினைவுகளாம். அவ்வாறாகத் தமக்குத் தண்ணிழல் தந்த வகுப்பறை நினைவு பசுமை மிக்கதாக என்றும் இருப்பதுடன் கொடையாளர் பெருமையைப் போற்றவும் அக்கொடைஞரைப் போலத் தாமும் கொடைஞராகும் வளத்தையும் உளத்தையும் ஒருங்கே பெறவும் தூண்டுதலாக அமையும்.

கற்பவர்க்கு ஏடு எழுத்தாணி உடை உணவு முதலியவை கொடுத்த கொடையாளரை நூல்வல்லவரெல்லாம் விரும்பி வந்து தம் நூலில் எழுதுவர் என்று ஏலாதி இயம்பும்,

“ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்
பேணொடு எண்ணும் எழுத்திவை - மாணொடு
கேட்டெழுதி ஓதிவாழ் வார்க்கீய்ந்தார் இம்மையின்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து”

என்பது அது (63)

“வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்”

என்பது திருக்குறள், புகழாளரைச் **‘சாவா உடம்பினர்’** என்பது திரிகடுகம் (16)

இளமையில் கல்வியைப் பெரிதாக எண்ணாத முத்துவுக்கு இவ்வுணர்வு பெருகியமை காலச் சூழலின் விளைவாகும். தம் மக்களை நன்றாகப் படிக்க வைக்கத்தானே ஈரோட்டைத் தேடினார். பின்னரும் படித்த மருமக்களைத் தாமே கொண்டு கொடுக்க விரும்பினார். **அறிஞர் அண்ணா** “மாறமாட்டேன் என்பவரும் தம்மை அறியாமலே மாறிவருவது இயல்பு” என்றார்.

ஆனால் நல்லவரும் வல்லவரும் ஆகியவரும், நற்றமிழ் அன்பும் தொண்டு நலமும் கொண்டவரும் ஆகிய முத்து இவ்வீடுபாடு கொண்டது இயல்பே ஆகும். அவரே கல்விக் கண்ணொளி தருவதற்கு எப்படி எப்படிக் கொட்டிக் கொட்டி கொடை நலம் புரிகிறார்.

**கொங்குக் கல்லூரி**

ஈரோட்டிலே திண்டல் பகுதியில் **கொங்கு வேளாளர் கல்லூரி** ஒன்றுள்ளது. புகழ்மிக்க அக்கல்லூரி இயக்குநர்களுள் ஒருவராகக் குப்பு உள்ளார். அக்கல்லூரியில் அறை ஒன்று கட்ட உருபா 25000 வழங்கியுள்ளார். பிறவகைக் கொடையாகப் பன்னீராயிரம் வழங்கியுள்ளார். அதன் வளர்ச்சிக்காக மிக அக்கறையும் காட்டுகிறார். இவை ஓரளவில் அறியவந்தவை. இன்னும் தருவதற்காக உறுதிமொழி தந்துள்ள கல்விக் கொடைத் திட்டங்களும் உண்டு. அவை அறக்கட்டளை வாய்ப்பைக் கருதிச் செய்யக் காத்திருக்கும் பட்டியலில் உள்ளவை. ஆனால் தேவை என்று வந்துவிட்டால் எவ்வகையிலும் தேடித்தருவதை நோக்காகக் கொண்டவர்க்கு வைப்புத் தொகை அளவு, ஓர் அளவாகுமா?

**தவப் பெரும் வேதாத்திரியார்**

மெய்யுணர்வுக் கொள்கையிலும் இறைமை நாட்டத்திலும் அக்கறை கொண்டவர் முத்து. அதே பொழுதில் பகுத்தறிவுக் கொள்கைப்பற்றும் சீர்திருத்த நோக்கும் உடையவர். அவர்க்குத் தவத்திரு **வேதாத்திரி** அடிகள்மேல் பற்றுமை மிகுதியாம். அது கொள்கை வழியால் ஏற்பட்ட பற்றுமை என்பது நெருங்கிக் கண்டவர்க்கு நன்கு புலப்படும்.

எவரையேனும் காணும்போது "வாழ்க வளத்துடன்" என்று முகமலர்ந்து வாயினிக்கக் கூறும் சொல் நமக்கு வேதாத்திரியாரை நினைவூட்டத் தவறாது. மேலும் இயற்கை உணவு, மூச்சுப்பயிற்சி (யோகா) கூட்டு வழிபாடு முதலியவை அவர் வழியில் இவர் பெற்றவையாம்.

வேதாத்திரியார்க்கு **ஆழியாற்றில்** அறிவுத் திருக்கோயில் ஒன்றுண்டு. இயற்கைச் சூழலில் வனப்புற அமைந்துள்ள அக் கோயில், உள்ளம் கொள்ளை கொள்ளும் சீர்மையுடையது. கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பும் "கைபுனைந்தியற்றிய

எழில் வனப்பும்" இணைந்து கைகோத்து நிற்கும் அந்நிலையம் உருவாக்கம் பெறும்போது முத்துவின் உள்ளம் பங்கு கொள்ளாமல் அமையுமோ? அத்திருப்பணிக்கு உரூபா 25000 வழங்கியுள்ளார்.

கொடைக்காக மட்டுமா வேதாத்திரியார்! கொள்கையிலும் உறுதியாக நிற்கிறார். உடலோம்பல், உளமோம்பல், உயிரோம்பல் ஆகியவற்றை முறையாகச் செய்கின்றார். உடற் பயிற்சி ஒருமுக உன்ளுகைப் பயிற்சி, மூச்சுப் பயிற்சி என்பவற்றை ஒவ்வொரு நாளும் தவறாது செய்து வருகிறார். அப்பயிற்சிகளை முறையாகப் பெற்றுத் திறமாகச் செய்வதைப் பிறர்க்கு வலியுறுத்தும் அவர் தாமே எடுத்துக் காட்டாகச் செயற்பட்டு வருகிறார் வாய்ச்சொல் வீரமா வீரம்?

**இயற்கைக் காவலர்**

கோவை மாநகர்க்குப் பலப்பல சிறப்புகள் உண்டு. அவற்றுள் புத்தம் புதிய பலரும் போற்றும் இயற்கைச் சிறப்பு ஒன்றும் வாய்த்துள்ளது. அது கோவை 6, கணபதி என்னும் பகுதியில் அமைந்துள்ளது.

திருத்தகு தோன்றல் **கிருட்டிணசாமி** அவர்கள் மிகப் பெரும் பரப்பளவில் புத்தம் புதிய வாய்ப்பு நலங்களுடன் நிறுவியுள்ள இயற்கை நல மருத்துவமனையே அச்சிறப்பு மிக்க நிலையமாகும்.

இந்நிலையத்தின் அமைப்பையும் சிறப்பையும் அறிந்தார் முத்து. நேரே சென்றார். அதன் நலங்களையெல்லாம் உணர்ந்தார். **"உணவே மருந்து மருந்தே உணவு"** என்னும் அடிப்படைக் கொள்கையில் தோய்ந்தார். அவர் உள்ளுள் ஓர் ஒளி தோன்றியது. உடல் உள்ளம் எல்லாம் நலம்பெற வாய்க்கும் இத்திட்டம் இயற்கைப் பாதுகாப்பும் மாசுக் கட்டுப்பாடும் அமைந்து சிறப்பதைப் போற்றினார். தாமும் இயற்கை நல நிலையம் ஒன்றைக் காண விரும்பினார்.

இயற்கை மருத்துவப் பயிற்சியில் தேர்ந்த ஒருவர் வேண்டுமே. மருத்துவர் திரு **ஆறுசாமி** பெரியவர் எண்ணத்தில் தோன்றினார். இருவரும் திட்டமிட்டனர். குறளாயத் தோன்றல் **வேலாவைக்** கண்டு கலந்துரையாடினார். ஆக்கமானவற்றுக்கு எல்லாம் ஊக்கமாக முன் வந்துதவும் வேலா உடனே உவந்து ஏற்றார்.

குறளாய மாடிப்பகுதியிலேயே இயற்கை நல மருத்துவ நிலையத்தை உருவாக்கினார். "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்று சொன்ன மாமணி வள்ளுவரின் கொள்கைப் பரப்பு நிலையமான குறளாயம் இயற்கை நலங்காக்கும் நிலையமாகவும் இணைந்து கடனாற்றியது.

மருத்துவமனையை விரிக்க வேண்டும் எண்ணம் ஏற்பட்டது முத்துவுக்கும் மருத்துவர்க்கும். நோயர்கள் தங்குவதற்குத் தக்க வாய்ப்புடனும் மருத்துவர் குடியிருந்து கண்காணிப்பதற்குத் தகவும் மனை பார்க்கப்பட்டது. ஆங்குக் குப்பு முத்து இயற்கை நல மருத்துவ நிலையம் சீரோடும் சிறப்போடும் இயங்கலாயிற்று.

உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்.

என்றும், "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்றும் கூறும் திருமூலர் ஊனுடம்பு ஆலயம்" என்றும் கூறினார். உயிர்களுக்கு உதவும் திருப்பணியே தெய்வப்பணி எனக் கொண்ட ஏந்தல் முத்து, இயற்கை நல வாழ்வைக் கடைப்பிடிக்கிறார். பிறரும் கடைப்பிடிக்கத் தூண்டுகிறார்.

ஓட்டம் ஓட்டமாக வரவேண்டும்; அந்த ஓட்டத்திலேயே நோய் ஓட மருத்துவம் செய்யவும் வேண்டும் என்னும் பரபரப்பு உலகம் அல்லவோ இது. அப்படி வருவார்க்கு ஆர அமரக் கடைப்பிடிக்க வேண்டிய இயற்கை மருத்துவம் செய்யக் கட்டளை இடமுடியாமே. அவர்கள் விரும்பியவாறு ஏதாவது உடனே செய்தாக வேண்டுமே! அதற்காக ஆங்கில மருத்துவம் வல்லாரை ஞாயிறுதோறும் நேர்முகமாகி (முகாம்) உதவச் செய்கின்றார் முத்து.

**மருத்துவ நேர்முகம்**

இயற்கை இறை நம்பிக்கையுடைய முத்துவுக்கு எவரும் உற்றார் உறவினர்தாமே! அப்பெருங்குணத்தால் ஈர்க்கப்பட்ட மருத்துவர்கள் மிகப்பலர். முத்துவின் தொண்டுக்குத் தாமும் துணையாகி உதவ முன்வந்தனர். அவர்களுள் **தவத்திரு. சத்தியசாயிபாபாவின்** பற்றுமை கொண்ட மருத்துவர்கள் சிலர்தாமே இலவயமாக ஞாயிறு தோறும் வந்து மருத்துவத் தொண்டாற்ற இசைந்தனர். கடந்த ஐந்தாண்டுகளாக, முத்துவின் பிறந்த ஊரான செங்கோடன் பாளையத்தில் அத்திருத் தொண்டு திகழ்ந்து வருகின்றது.

இடம் ஊர்ப் பள்ளிக்கூடம்! மருத்துவ உதவியோ இலவயம்! ஆனால் மருந்துக்கு என்ன செய்வது?

எவ்வளவு தொகைக்கு வேண்டுமானலும் மருந்து வாங்கிக் கொண்டு பற்றுச்சீட்டை அனுப்பிவிட்டால் அறக்கட்டளையே அத்தொகையை வழங்கிவிடும். அத்தகைய ஏற்பாட்டைச் செய்துள்ளார் முத்து.

**மக்கள் சக்தி இயக்கம்**

அறிஞர் உதயமூர்த்தி அவர்கள் உருவாக்கி ஊர்தோறும் தொண்டாற்றச் செய்யும் இயக்கம் மக்கள் சக்தி இயக்கம் என்பதாம். அரசியல் சார்பு இல்லாமல் ஊர்நலம் கருதி ஊரவரே உணர்ந்து பொது நலப்பணி புரியுமாறு 'தூண்டும் இயக்கமே ஈதாம். இதன் தோற்றம், இளைஞர்களிடம் கூட்டுறவையும் தொண்டு உணர்வையும் உண்டாக்கி ஊக்கிவருதல் கண்கூடு அன்றியும் அரசும் மக்களும் செய்யத்தக்கன இவை, செய்யத் தகாதன இவை என்பதை நன்கு அறிவுறுத்தும் இயக்கமாகவும் திகழ்கின்றது. இவ்வமைப்பின் மாவட்ட அமைப்பாளராக இருந்து முத்து அவர்கள் தொண்டாற்றுகின்றார்.

**இசைப்பள்ளி**

ஈரோட்டிலே சம்பத்து இசை நாட்டியப்பள்ளி என ஒன்று சிறப்பாக இயங்குகிற்று. அதனைத் தேடிப்போய்ப் பார்த்தார் முத்து. நிறுவனர் வள்ளியப்பரொடு கலந்துரையாடினார். உரையாடலின் இடையே..... உங்களுக்கு உடனே தேவையானது ஏதாவது உண்டா?" என வினவினார். முத்து, **'வீணை'** ஒன்று வாங்கித் தந்தால் நலமாக இருக்கும் என்றார் இசைப்பள்ளி உரிமையாளர். அப்படியானால் அதனை நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள்; தொகை தந்துவிடுகிறேன்." என்றார் முத்து. வியப்புக்கு ஆளானார் இசைப்பள்ளி உரிமையாளர். தாமே தேடிவந்து "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்று நல்குகிறார் அல்லவா! நாவுக்கரசரின் இத்தேவாரத்தைப் பண்ணோடு பாடிப் பரவயம் அடைபவர் அல்லவோ அவர் அவர்க்கு. அவ்விறைமை நலமே எதிரில் கண்ட காட்சியாக இருந்திருக்கும் அல்லவா? அவ்வளவில் நின்றுவிடவில்லை கொடை நலம். இசை நாட்டியப் பள்ளி கட்டடத்திற்காக முத்து பத்தாயிரம் தொகையும் நல்கினார்!

**முதியோர் இல்லம்**

*ஓர் ஒதுக்குப்புறத்தில்* ***முதியோர் இல்லம்*** *ஒன்று நடந்து வருவதை அறிந்தார் முத்து. வண்டியும் செல்வதற்கு உரிய வாய்த்த வழியில்லாத அவ்விடத்திற்குத் தம் வண்டியை எட்டத் திலேயே நிறுத்திவிட்டு எட்டு வைத்து நடந்தார். "பெரியவர் யார்? எதற்கு வருகிறார்? இவரைப் பார்த்தால் இல்லத்தில் சேர வருபவராகவும் இல்லை என்று திகைப்படைய இல்லத்திற்குள் சென்று பேசினார். ஆங்கிருந்த முதியவர்களோடு உரையாடினார். விடை பெற்றுக் கொண்டு வரும் போது ஓராயிரம் ரூபாய் இல்லத்திற்குக் கொடையாக வழங்கினார். அது மட்டும் இல்லை. 20000 அளவில் ஒரு கட்டடமும் கட்டித் தந்தார்.*

"அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று"

*என்பார் திருவள்ளுவர்.*

*வாய்ப்பு அற்றவர்க்கு உதவுவதே ஒருவர் செல்வத்தைப் பெற்ற பயனாகும். அந்நிலையிலும் உதவாதவர் செல்வம், எல்லாவகை நலங்களும் ஒருங்கே அமைந்த நங்கை ஒருத்தியை வாழத்தக்க நம்பியைத் தேர்ந்து கொடை புரியாத முறையால் அவள் வாழா வெட்டியாக இருக்கச் செய்யும் பெற்றோர் உற்றார் உறவினர் செயல் போன்றது ஆகும் என்பது இக்குறளின் விளக்கமாம்.*

*பொருட் பொருள் வாழ்வுப் பொருளாகப் பயன்பட வேண்டும். பயன்படுத்தப்பட வேண்டும் என்பன இவ்வள்ளுவ உட்பொருளாம். இதனை எள்ளளவும் குறையாமல் அறிந்து தம் வாழ்வை அமைத்துக் கொண்ட பெருந்தகை குப்பு முத்து எனின் பொருந்திய முடிவேயாம்.*

*முதியோர் இல்லத்தைப் போற்றும் முத்துவின் சீர்மைக்கு ஒரு சான்று. அவர்தம் பேரனார் விக்கினராசா என்பார். அவர்தம் பிறந்த நாள் விழா ஒவ்வொன்றும் அம்முதியோர் இல்லத்தில் தான் கொண்டாடப்படுகின்றது. எப்படி? இல்லத்தில் உறையும் முதியவர் நூற்றுவர்க்கும் மேற்பட்டோர். அவர்கள் அனைவர்க்கும் அன்று மூவேளை உணவுச் செலவும் பேரனார் கொடையாகத் திகழ்ந்து அவர்களின் ஒருமித்த வாழ்த்தைப் பெறுதற்குரிய ஏற்பாடாகும் இது. இதனைத்தம் மகனாரும்*

மருமகளாருமே பெரிதும் விரும்பித் தாமே முன்னின்று செய்தலை நெஞ்சார்ந்த அன்பால் பாராட்டுகின்றார் முத்து. பலப்பலரும் திருமண விழா, பிறந்த நாள் விழா ஆகிய இத்தகைய நேரங்களில் இவ்வாறு விருந்தோம்பிப் பெரு மூதாளர் வாழ்த்தைப் பெறலாமே எனத் தூண்டுகிறார். ஆம்! அறம் வளர்க்கும் அண்ணல் செயல் ஈதென அகம் உவப்பாகின்றது!

ஒரே ஒரு முறை வீடு சென்று கண்டறிந்தவன் யான். பலப்பல மேடைகளிலும் கண்ட காட்சியும் பேசிய பேச்சுமே எங்கள் உறவு. இதனை முன்னுரைப்பகுதி விளக்கமாகக் காட்டும். ஆனால், ஐயா குப்பு முத்து அவர்களின் உளப்பாங்கை நேருக்கு நேர் அறியும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. “ஒரு பானை சோற்றுக்கு ஒரு பொறுக்கு பதம்” என்பது போல் உண்மைப் படுத்தும் செய்தி அஃதாம்.

குறளாயப் பொதுச் செயலாளர் பெரும்புலவர் **மீ. தங்கவேலனார்,** குறளாய ஆட்சிக் குழு உறுப்பினர் **குமரநடவரச ஈவப்பனார்** ஆகியவர்களுடன் ஐயா குப்பு முத்து அவர்களை அவர்கள் இல்லத்தில் காணச் சென்றேன். கட்டட வேலை பார்க்க வந்தவர்களுடன் நின்று உரையாடிக் கொண்டு இருந்தார். நாங்கள் சென்ற அளவில் அவர்களைப் பணிமேல் ஏவிவிட்டு எங்களோடு வந்து அமர்ந்தார்.

குறளியம் குறளாயம் வேலா நிலவுக் கூட்டம் என எங்கள் பேச்சுச் சென்றது. **‘திருவள்ளுவர் தவச்சாலை’ காவிரித் தென்கரையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அல்லூரில் யான்** ஒரு நிலையம் உருவாக்கி வருவதை உரைத்தேன்.

“ஆம்! முன்னரே நாம் பேசி உள்ளோமே! அதன் வேலை முடிந்து விட்டதா? இன்னும் நடந்து வருகிறதா?” என்றார் முத்து.

“முடியும் நிலையை எட்டியுள்ளது. விரைவில் முடிவடையும். அதன் திறப்பு விழாவுக்கு நீங்கள் வருதல் வேண்டும்; வாழ்த்துரை வழங்க வேண்டும்” என்றேன்.

“அவ்வளவு தொலைவுக்கு வருவது எப்படி இருக்குமோ? உறுதி சொல்ல முடியாது. முடிந்தால் வந்து விடுவேன்” என்றார்.

“எப்படியும் நீங்கள் வருதல் வேண்டும். அறிஞர் பேச்சாளர் சிறந்த எழுத்தாளர் என்பவர்களைப் பார்க்கிலும் தவச்சாலைத்

திறப்பு விழாவுக்குத் திருவள்ளுவர் அருளிய அறவாழ்வு வாழ்ந்து காட்டும் செயல்திறம் உடையவர்களையே தலைமை முன்னிலை வாழ்த்து ஆகிய எல்லாவற்றுக்கும் அழைக்கத் திட்டப்படுத்தி யுள்ளேன். அத்திட்டப்படியே தங்கள் வருகை தவச்சாலைக்கு ஏற்படுதல் வேண்டும்" என்றேன். முத்து ஏற்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை!

எழுந்தார்; நடந்தார்; சில நொடிகளில் திரும்பினார்; கையில் 50 ரூ பணத்தாள் கட்டு ஒன்றை வைத்திருந்தார். "தவச் சாலை வேலைக்குப் பயன்படும் வைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

கேளாமலே எவ்வளவு எளிமையாக இனிமையாகக் **கொடுத்து வைத்த தொகை எடுத்துத் தருவது** போலத் தரும் இக் கொடைத் திறம் "கொடையும் தயையும் பிறவிக் குணம்" என்பதை மெய்ப்பிக்கின்றது என எண்ணினேன்.

அப்பொழுதில், "கொள்ளுங்கால் முகனும் கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாதல் இன்றே யன்று பண்டே உண்டு" என்னும் கலித்தொகை தரும் பழங்காட்சி மின்னலிட்டுக் "கொடுத்து வைத்ததைக் கூட இப்படி மலர்ச்சியொடும் இனிய சொல்லொடும் தருவாரும் அரியரே" என வியப்புற்றேன்.

பல்கால் பலரிடம் கேட்டு மகிழ்ந்த செய்தி நேருக்கு நேர் மெய்யாகக் கைம்மேல் கண்டு "இவ்வுளம் வாழ்க" என என்னுள் வாழ்த்தி விடை பெற்றுக் கொண்டு பெருமக்களோடு திரும்பினேன். அடுத்த கால் மணி நேரத்தில் ஓர் இலக்கியப் பொழிவு எனக்கு இருந்தது. அங்கு ஐயா குப்பு முத்து அவர்களும் வந்தார்கள். என் பேச்சில் சிறிது நேரத்திற்கு முன் நிகழ்ந்ததைச் சொன்னேனும் அல்லேன்! அவர் தாம் சொல்ல மாட்டாரே! நானாவது சொல்லலாமே எனின், நன்றி சொல்லுதல் என்பது முறைமை அறிந்தார் வழக்கன்று. '**நன்றியறிதல்**' என்பதை வள்ளுவம் அறிவார் அறிவர். நன்றியறிந்து நயத்தகு செயற்படையல் புரிவதே நன்றறிந்தார் கடமையாம் என்க.

**நூல் வெளியீட்டுக்குக் கொடை**

கலைமாமணி பழனி இளங்கம்பனார், தமிழ்ப்புகழ் வெண்பாமாலை என்றொரு மாலை இயற்றினார். அவரோ பழனியார்! குப்புவோ ஈரோட்டார்! ஆயினும் என்ன! உள்ளம் நெருங்கினால் ஊரும் உறவும் நெருங்கமாட்டாவா?

*"இந்நூலை அச்சிட உதவிய அருந்தமிழ் வள்ளல்" என்னும் தலைப்பில் 3 வெண்பாக்களை இயற்றியுள்ளார். அருமை மிக்க அவ்வெண்பாக்கள்.*

ஈரோட்டில் வாழும் இனிய தமிழன்பர்
பேரோங்கு வாணிகத்தைப் பேணுபவர்- சீராளர்
எப்பணிக்கும் நன்குதவி எண்ணுவதே நம்முடைய
குப்பமுத்து ஐயா குணம்.

குப்பமுத் தையா குணம்யார்க்கும் வாய்த்திடுமோ
செப்பமுற்ற இந்தச் சிறுநூலை-ஒப்பரிய
மாணிக்க மென்ன மனமுற்ற அன்னவர்க்கே
காணிக்கை செய்தேன் கனிந்து.

செப்பமிகு பண்பாட்டை செந்தமிழின் மேம்பாட்டை
எப்பொழுதும் எண்ணுமுயர் ஏந்தலவர்-குப்புமுத்து
வள்ளலவர் தந்த வளமான நன்கொடையால்
தெள்ளுதமிழ் நூலிதுவாம் தேர்.

*"வள்ளலின் வரலாறு என்னும் பகுதியில், உயர்திரு குப்புமுத்து ஐயா அவர்களின் உதவியும் உறுதுணையும் இல்லாமல் இன்று ஈரோட்டில் எந்த இயக்கமும் இல்லை என்னலாம்." என்கிறார்.*

*குப்பு முத்து அவர்கள் சிறந்த அமைப்புகளிலெல்லாம் பங்கேற்கிறார்கள்! பொறுப்பேற்கிறார்கள்! வேண்டும் உதவி களைப் புரிகிறார்கள். பண்புக்குப் பாராட்டு வந்து சேர்தல் இயற்கைதானே! அவ்வகையில் தவத்திரு வேதாத்திரியார் வழங்கிய அருள்நிதிப் பட்டம் சிறப்பினதாம்! ஈரோட்டு முதன்மை மாந்தர் என அரிமாச் சங்கத்தோர் வழங்கியதோ தனிச் சிறப்பினதாம்.*

*உரையும் பாட்டும் என்னும் இருவகையாலும் பாடுபுகழ் பெறுதலைச் சங்ககால வேந்தர்களும் விரும்பி நின்றனர். புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவாவான ஊர்தியும் பெறுவர் என்று அப்பெரும் புகழைப் பாராட்டினர். பட்டுக் கிழிந்து போகும்; பாட்டுக் கிழியாது என்றார் ஒளவையார். "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந்தனரே" என்பது புறப்பாட்டு. வள்ளுவரோ இல்லற வாழ்வின் நிறைவாகப் 'புகழ்' என்பதை நிலைநாட்டினார். இசை*

வாழ்வாக இனிதின் இயலும் தோன்றல் குப்பு முத்து பெருமையும் புகழும் அவரளவில் நின்று விடுவதோ?

பெரியவர்கள் முத்து அவர்கள் குணக் குன்றாக இருப்பதும் கொடைச் செல்வராக இருப்பதும் பாராட்டுக்கும் புகழுக்கும் உரியவையே. எனினும் அவர்தம் புகழுக்குப் பின்னிலையில் இருப்பவரை எண்ணிப் பாராதிருத்தல் கூடுமா?

பெற்றோர் இருவரும் பெரு மூதாளராக இருந்துளர். அவர்கள் காலத்திலேயே பெருந்தக்க செயல்களில் குப்பு இறங்கியுள்ளார். அவர்தம் உழைப்பால் தேடியதாக இருந்தாலும் பெற்றோர்தம் மன நினைவும் வேண்டியது இன்றியமையாதது தானே.

இனி முத்துவின் துணைவியார் இசைவும் ஒத்துவரா நிலைமை இருந்தால் குடும்ப அமைதி சிறவாதே!

முத்துவின் மக்களும் மருமக்களும் கருத்தொருமித்து உதவா நிலையில் இருந்தால் முத்து தாம் தேடியதே எனினும் அறத்தின் பாற்படுத்த இயலாதன்றோ!

இச்சூழலை எண்ணினால் தோன்றுவது என்ன?

**பெருந்தகைக் குப்புவின் உள்ளம் போலவே சார்ந்ததன் வண்ணமாகும் சால்புத் தோன்றலாகப் பெற்றோரும் துணையும் மக்களும் அமைந்துள்ளனர்** என்பது தெளிவாம்!

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போலத் தலைவர் எப்படி குடும்பம் அப்படி என்னும் சிறப்பில் அமைந்த பேறெனப் பாராட்டத் தகும். இந்நிலை **பிசிராந்தையார்** கூறிய

"மாண்ட என்மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர் என் இளையரும்"

என்னும் தொடர்களுக்கு இணைய அமைந்த குடிச் சீர்மை புலனாகும். யாண்டு பலவாக நலவாழ்வு வாழ்தலின் நயனும் புலனாகும்.

இப்புலப்பாட்டின் பயன் என்ன? அறக்கொடை வாழ்வு வழிவழியாகத் தொடர்ந்து குடிப் பெருமையாகத் திகழும் என்பதாம்.

நெருக்கடிக்காக என்னை நாடி வருகின்றனர். இருக்கும் தொகையைக் கொடுத்து விடுகிறேன், மேலும் தேவைப்படுகிறது.

என் மக்களே முன் வந்து உதவுகின்றனர். மருமகளும் தாமே முன் வந்து என் வழியாக உதவுகின்றனர். என் கொடையையோ, உதவியையோ எதற்கு என்றோ எவ்வளவு என்றோ கண்டு கொள்ளாமையுடன், குடும்பத்தவர்களும் அவ்வறச் செயலில் பங்கு கொண்டிருப்பதால் எனக்கு நிறைவாகின்றது. யான் ஏதாவது செய்தால் சரியாகத்தான் இருக்கும் என்று அவர்கள் என்மேல் கொண்டுள்ள நம்பிக்கையை நினைக்கும்போது பூரிப்பும் ஏற்படுகின்றது" என்றார் பெரியவர்.

**பூரிப்பு**

தங்கள் மக்கள் மருமக்களைப் பற்றிய இப்பூரிப்புப் போல வேறு பூரிப்பும் உங்களுக்கு ஏற்படுவதுண்டா? என்று வினா வினேன்.

சின்னஞ்சிறு பிஞ்சுப் பிஞ்சுக் குழந்தைகளெல்லாம் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் வணக்கம் சொல்லுவதைக் கேட்கும் போதெல்லாம் அப்படியே சில்லிட்டுப் போகிறேன். கல்விக்காகச் செய்யும் என் எளிய தொண்டுக்காக எவ்வளவு பெரிய பரிசுகள் இவை. இதனால் எல்லாப் பணிகளிலும் கல்விக்குச் செய்யும் பணியே உயர்பணி என நம்புகிறேன். இந்தப் பள்ளிக் கூடங்களை உயர்நிலைப் பள்ளியாக்குவதற்கு எவ்வளவு செலவிடலும் என்ன அலைவு அலைதலும் கடமை என உணர்கிறேன். அதே எண்ண மாகவும் வாழ்கிறேன்" என்கிறார்.

ஆயிரம் பிறைகண்ட அண்ணல் குப்பு முத்துவின் ஆர்வம் தந்நல ஆர்வமா? அரசே முன் வந்து செய்ய வேண்டும் கல்விப் பணிக்குத் தக்கவற்றைத்தாமே செய்ய முன் வருவார்க்கும், கால நீட்டிப்பு நேர்கின்ற தென்றால், இரங்கத் தக்க நிலையே அல்லவோ பொதுத்தொண்டரை ஊக்குதல் அல்லவோ அரசு முன் வந்து செய்யவேண்டிய கடமை! பெரியவர் எண்ணம் விரைவில் நிறைவேறுவதாக! பிஞ்சுக் குழந்தைகள் மேலும் மேலும் பூரிப்புத் தந்து உயிர் தளிர்க்கச் செய்வாராக!

**வாழிய நலனே!**

**வாழிய நலனே!**

# உலகை உயர்த்தும் உயர்வர லாறே!

**வா**ழிய வாய்மை! வாழிய நல்லறம்!
வாழிய பொதுநலம்! வாழிய புவியே!
'வாழிய வாழிய' என்று வாழ்த்தினால்,
வாழிய வாமோ, வாழ்த்துறும் எல்லாம்?

வாழ்த்துதல் நோக்கம் வாழ்வுறும் வழிகளைத்
தாழ்வறக் கண்டு தலைமேற் கொண்டு
செவ்விய செயலில் செய்து காட்டுவதற்கு
ஒவ்வும் வகையில் ஓர்ந்து முடித்தலாம்!

வாழ்த்துதல் என்பது வாழ்வின் கடைப்பிடி;
வாழ்த்துதல் என்பது தாழா முயற்சி;
வாழ்த்துதல் என்பது வாய்த்த துணைமை;
வாழ்த்துதல் என்பது வாழ்பவர் வாழ்வுதம்

வாழ்வெனப் போற்றி வளர்த்திடும் இறைமை!
வாழ்த்தத் தக்கதை வாழ்த்தப் பெறாமை
தாழ்த்தச் செய்யும் தவறென ஆகும்.
நல்லதை வாழ்த்த நயந்து வராமை

அல்லதைப் பரப்பி ஆவெனத் திறக்க
ஆவன செய்யும் அழிசெய லாகும்
நல்லதைப் புரிவார் நயவார் தம்புகழ்
நல்லதைச் செய்வார் நயவார் விளம்பரம்!

நல்லது செய்ததை நான்குபேர் அறிந்து
நல்லது செய்தீர் நன்றுநீர் வாழ்கென
நவிலக் கேட்பினும் குவிமலர் போலக்
கவிழ்முகை யாகிக் காதொடு படாராய்த்

தாம் செய்யும் செயலை நாடியே செல்வர்!
நாம் செயும் செய்கை நயந்திடல் அன்றோ!
ஒடுங்கிரும் ஒதுங்கியும் செல்லும் நல்லவர்
அடங்கிய தன்மையால் அடங்கி மறைந்து

அறிவரா நிலையில் அழிந்தே போன
வரலாற் றுண்மை வாய்க்க வழியெதோ?
வரலாற்றுயர்வின் வானெனத் திகழ்ந்தும்
வரலாற் றியலை வரைந்திடாக் குறையால்

வரைந்தும் பரப்பிட வளராக் குறையால்
அயலவர் சூழ்ச்சியோ டாக்கிய மறைப்பால்
உயர்வெலாம் இழந்தனம்; உய்வெலாம் அற்றனம்;
அல்லவை நீங்கி நல்லவை ஓங்க

வேண்டும் என்னின் ஈண்டொன் றுணர்க!
நல்லவை செய்யும் நயத்தவர் புகழைச்
சொல்லிச் சொல்லிச் சுடர்மிகப் பரப்புக!
அல்லது செய்யும் அழிவினர் எவரும்

வரலாற் றேட்டில் வந்திடா வாறு
உரமாய் ஒதுக்கி ஒழிந்தே விடுக!
நல்லவை வாழ்வுறின் அல்லவை என்பவை
தாமே இறங்கிடும்; தகவுறு தக்கவர்;

வானே யனைய வண்மைச் சுரப்பர்;
ஒத்த தறியும் ஒப்புர வாளர்
பத்தரை மாற்றுப் பைம்பொன் பண்பினர்
அறிவறி தோன்றலாய் ஆக்கம் புரிபவர்

செறிவுறச் செய்யும் செயற்பெரும் செய்கையர்
கலைவளம் யாவும் கவின வாழ்பவர்
மலையன உறுதி மாறாக் கொள்கையர்
இயற்புகழ் பரப்பவை இயல்பாய்க் கொள்க.

வள்ளுவ வள்ளல் வாய்மொழி யாகப்
பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அது வின்றேல்
மண்புக்கு மாய்வது மன்னென் றுரைத்ததும்.
சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்

தாங்காது மன்னோ பொறை" யென் றுரைத்ததும்
புகழ்நிலை யாளர் புகழ்நிலை வழிகளைப்
புகழ்ந்து புகழ்ந்து புகன்று புகன்று
பதியப் பதியப் பதியன் பழமெனப்

பதிதொறும் நட்டுப் பரப்பிடின் அந்தப்
பதியெலாம் பதியும் பதியன் பழமரம்

தாமும் பழுத்துத் தம்பழ வித்துகள்
தாமும் பழுக்கத் தக்கவை ஆய்விடும்!

வள்ளுவ வள்ளல் வகுத்த வாய்மொழி
கொள்ளுத லின்றிக் கொடுத்தலும் இன்றித்
தள்ளிய கேட்டால் தக்கதை விட்டு
வழிவழிக் கேடும் வரவரக் கேடும்

ஒழியா தோங்கி உயர்ந்திட லாயதாம்!
இவ்வியல் நீங்கிச் செவ்விய நல்லறம்
ஒவ்விய செய்கை உண்மை உயர்ச்சி
ஆயவை தம்மைக் கண்டதும் கண்டதும்

தூயவாம் அவற்றைத் துலங்கத் துலங்கப்
பரப்பிட முயல்வோம்! பாராட் டெடுப்போம்!
**குப்பு முத்துவாம் குணநலத் தோன்றல்**
செப்பருஞ் சிறப்பைச் செப்பிய நூலிது

செப்பும் நோக்கம் இதுவே! அறிஞீர்!
ஒப்பிலா உலகம் ஒளியுடன் திகழ
உரியதாம் வழியிதைப் புரிவோம்! மேலும்
விரிக விரிக விரிவர லாறே!

வரலாற் றுலகம் வரலால் நந்தம்
உரமும் ஊற்றமும் உயர்வும் உலகம்
அறிந்திட வாய்க்கும்; ஆயும் ஆர்வலர்
மறந்திடா வகையிலும் மறுத்திடா வகையிலும்

உறுதி செய்தே உலகுக் களிப்பர்.
சிறப்பும் சீர்த்தியும் செம்மையும் தனிமையும்
திறப்பட இருந்ததால் தேர்ந்த கால்டுவெல்
உயர்தனிச் செம்மொழி உயர்தமிழ் என்று

மயர்வற உரைத்து மாண்புறச் செய்தார்
சார்பிலாக் கருத்தொடு சால்பு மிக்கவர்
யார் தமைக் கருதியும் நேர்தரு கருத்தை
மாற்றி உரையார் மயக்கி உரையார்!

ஏற்றம் மிக்கதாம் சிந்து வெளியின்
நாக ரிகந்தான் நம்மவர் கொண்ட
நாக ரிகமென நானிலம் கொள்ளவும்,
கொடுங்கடல் கொண்ட குமரிக் கண்டம்

நெடுந்தமிழ் மாந்தர் நிலைபெறத் தோன்று
நிலமெனும் ஆய்வும் நீணில உலகின்
தலைமொழி தமிழே என்றும் இந்நாள்
துறைதுறை வல்ல நிறைபெரும் அறிஞர்

குறைவர ஆய்ந்து குறித்திடல் அறியின்
மறந்தும் துறந்தும் போதல் இன்றிச்
சிறந்தவை எல்லாம் சிதைவுறா வகையில்
எழுத்தா வணமாய் இருந்திடச் செய்யப்

பழுத்த புலமையர் அழுத்த மாக
உழைத்திடல் வேண்டும் உயர்பெரும் தோன்றல்
விழுத்தகு கிழவர் விழாக் கோட் செல்வர்
குப்பு முத்து கொடையால் எய்தும்

ஒப்பறும் இந்நூல் உரைக்கும் தமிழ்வளம்,
துறைதொறும் துறைதொறும் தமிழ்நூல்
நிறைதர எழுதி நிறைக்குவீர் எனவே.

*முற்றிற்று.*

# குறிப்புகள்

# குணநலத் தோன்றல் குப்பு முத்துஐயா

**வள்ளல் நள்ளி**

ஒரு மலையின் அடிவாரம்

அழகான காட்டுப் பகுதி

சலசலக்கும் ஆறும் அருவியும் அமைந்த சூழல்

வளமான பலாமரம் ஒன்று வாய்ப்பாக இருந்தது.

கால் கடுக்க நடந்து வந்த அந்த முதியவர் அந்த மரத்தின் அடியிலே அமர்ந்து இளைப்பாறினார்.

அவர் மட்டும் வரவில்லை.

அவர்தம் உற்றார் உறவினரும் உடன் வந்தனர்.

அவர்களுக்கும் நடைக்களைப்பு இல்லாமல் இல்லை.

ஆதலால், பெரியவரைச் சார்ந்து அவர்களும் அமர்ந்தனர்.

பகற்பொழுது ஆயினும் பசியும் களைப்பும் சேர அவர்கள் அயர்ந்து கண்ணை மூடிக்கிடந்தனர்.

தம் அயர்வையும் பசியையும் கூட மறந்து தம் உற்றார் உறவினர் பெண்டு பிள்ளைகளின் அயர்வுக்கும் பசிக்கும் பெரியவர் வருந்தினார்.

அந்நிலையில் அவர் முன்னே கட்டிளங்காளை ஒருவன் தோன்றினான். அவனைப் பார்க்கவே வளமான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பது புலப்பட்டது.

வில்லும் கையுமாக நின்றான் அவன்.

வேட்டைக்கு வந்தவன் போலும்!

அவனைக் கண்ட அளவில் பெரியவர் எழுந்தார்.

அவர் முதுமையையும் அயர்வையும் உணர்ந்த இளைஞன் "எழவேண்டாம்" என்று கைகாட்டி அமரச் செய்தான்.